# 100 இந்து கேள்விகளுக்கான பதில்கள்

Christian Private Circulation Only

WWW.NIMMATHI.COM Bro. Agathiyan B.E

**Table of Contents**

1. இயேசு ஒரு மனிதன்தானே. அவரை ஏன் தெய்வமென்று கூறுகிறீர்கள்?......9

2. இயேசு தெய்வம் என்று பைபிளில் எழுதப்பட்டுள்ளதா? ........................15

3. இயேசு தன்னைத்தான் தெய்வமென்று கூறினாரா? ..................................17

4.இயேசுவை யாராவது தொழுததாக வேதத்தில் ஆதாரமுண்டா? .................25

5. இயேசு தெய்வமானால் அவரை எப்படி கொன்றுவிட முடியும்? ...............30

6. மனிதர்கள் தவறு செய்திருக்க, நிரபராதி இயேசு கொல்லப்பட்டது நியாயமா? ..........................................................................................37

7. இயேசுவால் நோய்களை குணப்படுத்த முடியுமானால், கிறிஸ்தவர்கள் மருத்துவமனைகள் தொடங்க வேண்டிய தேவை இல்லையே? .....................43

8. இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார் என்று எப்படி சொல்கிறீர்கள்? ..........52

9.பரலோகத்திற்கு போகும் ஒரே வழி இயேசுவானால், இயேசுவுக்குமுன் இறந்தோரும், அவரைத் தெரியாமல் இறப்போரும் எங்கே போவார்கள்?......54

10. கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரியவர். ....................................62

11.இயேசு எல்லோரையும் நேசித்தால் ஒரே நேரத்தில் எல்லோரையும் இரட்சிக்கலாமே ! ...................................................................................67

12. இயேசு இந்தியாவுக்கு வந்து, இந்துமதக் குருக்களிடம் கற்றுத்தான் இஸ்ரவேலில் ஆன்மீகப்பணி செய்தார் என்பது உண்மைய அல்லவா? ..........69

13. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இயேசு எப்படி உலகத்தைப் படைத்திருக்க முடியும்? ..................................................................72

Top

14. இயேசு கன்னியின் வயிற்றில் எப்படி பிறக்க முடியும்? இது விஞ்ஞான பூர்வமாக சாத்தியமா? ........74
15. இயேசு சீக்கிரம் வருகிறார் என்று பல்லாண்டுகளாகக் கூறுகிறீர்கள். இன்னும் வரவில்லையே ! ........77
16 .கிறிஸ்தவம் வெளிநாட்டு மதம். அதை ஏன் இந்தியாவில் பரப்புகிறீர்கள்? ........81
17.அமெரிக்கா ஒரு கிறிஸ்தவ நாடு. அங்குள்ளவரெல்லாரும் யோக்கியரா? ..88
18.எல்லா கிறிஸ்தவர்களும் நல்லவர்கள் அல்ல. ........92
19.கிறிஸ்தவர்கள் நோயோடிருக்கிறார்களே ! ........97
20.கிறிஸ்தவர்களிடையே ஆயிரக்கணக்கான சபைப்பிரிவுகள் இருக்கின்றன. ........102
21. பண ஆசையை பாவம் என்று கூறும் கிறிஸ்தவர்கள், ஏன் வரதட்சணையைக் கேட்டு கொடுமைப்படுத்துகிறார்கள்? ........104
22. நீங்கள் முதலில் கிறிஸ்தவர்களைத் திருத்திவிட்டு எங்களிடம் வாருங்கள். ........106
23.உங்களுக்கு வேறு வேலையே இல்லையா? ........108
24.உங்களுக்கு பயமே இல்லையா? ........112
25. நீங்கள் மரியா, அந்தோணியார், சவேரியார் என்று பலரை வணங்குவது போல, நாங்களும் பல தெய்வங்களை வணங்குவதில் தவறென்ன? ........116
26.நீங்கள் அமெரிக்காவிலிருந்து பணம் வாங்குகிறீர்கள் ! ........120
27.கிறிஸ்தவர்கள் கீழ் ஜாதி மக்கள். ........124

Top

28. ஏழைகள் மட்டும் தான் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். பணக்காரர்களை உங்களால் மாற்ற முடியுமா? ........................................129

29 . நீங்கள் ஜெபிக்கும்போது ஏன் சப்தமிடுகிறீர்கள்? ................................132

30. பெற்றோர் தனது மகனை எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்கவைக்கிறார்கள். இயேசு என்னை ஊழியத்திற்கு அழைத்தார் என்று கூறி பெற்றோரின் பாடுகளை அலட்சியப்படுத்துவது நியாயமா? ........................................134

31. நீங்கள் உங்கள் கோயில்களுக்குள் செருப்பு அணிகிறீர்களே ! ................139

32. மதமாற்றம் தடை செய்யப்பட்டுள்ளதே ! ..........................................142

33. ஞாயிற்றுக்கிழமை மட்டும்தானே ஊழியம் செய்ய வேண்டும். மற்ற நாட்களிலும் போய் ஏன் மக்களை தொந்தரவு செய்கிறீர்கள்? ......................149

34. இந்துமத தீவிரவாதிகள் ஒரிசாவில் பாதிரியாரை அவரது பிள்ளைகளோடு எரித்தாலும்;;, அவருடைய மனைவி கொலைகாரர்களை பழிவாங்கவில்லையே? ...................................................................151

35. கிறிஸ்தவ போதனைகளின் சிறப்பு என்ன? ........................................155

36. பைபிளை மனிதன்தானே எழுதினான்? ...............................................157

38. நரகம் நிரந்தரமானதல்ல. ...................................................................166

39.பாவம் என்றால் என்ன என்று கூறுகிறீர்கள்? ........................................166

40. பாவம் போக்க ஏன் இரத்தம் சிந்தப்பட வேண்டும்? ............................168

41. இரட்சிக்கப்பட பணம் கொடுக்க வேண்டுமா? ..................................170

42. நான் ஜெபவீட்டிற்கு வந்தால்தான் கடவுளை தொழ முடியுமா? வீட்டில் ஆராதிக்க முடியாதா? ...............................................................171

43. நான் பாவம் செய்ததில்லையே !.........................................................176

Top

44. நான் சுயக்கட்டுப்பாட்டோடு வாழ்கிறேன். எனக்கு கடவுள் தேவையில்லையே ! ....................179

45. நான் எனது தெய்வத்தை வணங்குகிறேன். அதில் சந்தோஷமாய் இருக்கிறேன். அது போதாதா? ....................183

46. நாங்கள் உங்களைப் போல வீடுவீடாக வருவதில்;லை. ஆனால், எங்கள் கோயில்கள் தானாக நிரம்பி வழிகின்றன. நீங்களோ வீடுதோறும் சென்று ஆட்களை தொந்தரவு செய்துதானே உங்கள் சபையை நிரப்புகிறீர்கள் ! ........196

47. என் வீட்டிலுள்ள விக்கிரகங்களை நான் ஏன் அகற்றவேண்டும்? ...........198

48. நாங்கள் உங்களிடத்தில் வந்து ‘மதம் மாறுங்கள்’ என்று சொல்லவில்லை. நீங்கள் ஏன் எங்களை மதமாற்றம் செய்கிறீர்கள்? ....................200

49. எங்கள் கோயில்களிலும் அற்புதம் நடக்கிறதே ! ....................203

50. எங்கள் தெய்வங்கள் எங்களைப் பரலோகம் கொண்டு சேர்க்க முடியாதா? ....................208

51. எங்களுக்கு ஆயிரக்கணக்கில் தெய்வங்கள் உண்டு அவர்களாலேயே செய்யமுடியாத அற்புதத்தையா இயேசு தனியாக செய்துவிடுவார்? ............214

52. அன்னையும் பிதாவும் தெய்வங்கள் தானே. அவர்களை வணங்கினால் போதாதா? ....................217

53. எனக்கு கிறிஸ்துவைப்பற்றி சிந்திக்க நேரமில்லை. படிக்க வேண்டும்....222

54. நான் கடவுளை நம்புகிறேன். ஆனால், எந்த கடவுளையும் பின்பற்றவில்லை. ....................226

55. நீங்கள் எங்களுடைய கோயிலுக்கு வந்தால் நாங்களும் உங்கள் கோயிலுக்கு வருகிறோம்! ....................228

Top

56. கிறிஸ்தவத்தை கடைபிடிப்பது கடினம். என்னால் நிலைத்து நிற்க முடியாது.....237

57. இயேசுவை ஏற்றுக்கொண்டால் எங்கள் தெய்வங்களிடமிருந்து தொந்தரவு வராதா? .....241

58. எல்லா ஆறுகளும் ஒரே கடலில் சேர்கின்றன. எல்லா கடவுள்களும் ஒன்றுதான் ! .....244

59. கிறிஸ்துவை வணங்காமலேயே பலர் நன்றாக இருக்கிறார்களே?.....246

60. எனக்கு வயதாகிவிட்டது ! .....253

61. நான் வேளாங்கண்ணிக்கு வருடம்தோறும் போகிறேன். ஈஸ்டர், கிறிஸ்மசுக்கு தவறாமல் கோயிலுக்கு போகிறேன். .....254

62. நீங்கள் கொடுக்கும் கிறிஸ்மஸ் கேக்கை நாங்கள் சாப்பிடுகிறோம். ஆனால், எங்கள் பிரசாதத்தை நீங்கள் சாப்பிடுவதில்லையே?.....256

63. என்னுடைய நண்பர்கள் என்னைக் கேலி செய்வார்கள் ! .....260

64. எனது தமிழ் பெயரை மாற்றி ஆங்கிலப் பெயரை வைத்து விடுவீர்களே ! .....263

65. நாங்கள் அணிந்திருக்கும் நகையை கழட்டவும், பூ, பொட்டு வைக்கக்கூடாது என்றும் கட்டாயப்படுத்துவீர்களே !.....268

66. எங்கள் தெய்வங்களோடு இயேசுவையும் கும்பிடுகிறேன். இது தவறா? 278

67. என் பெற்றோரும் உறவினரும் என்னை வெறுத்து ஒதுக்கி விடுவார்களே ! .....283

68. என் தொழிலை முதலாவது நிறுவிவிட்டு, அதன் பின் இயேசுவை பின்பற்றுவேன். .....286

Top

69. எனக்கு நிம்மதி இல்லை. பிரச்சனைமேல் பிரச்சனை. ஆனால், எனக்கு ஆராதனைக்கு வர நேரமில்லை. நீங்கள் எனக்காக ஜெபியுங்கள். .................289

70. எனக்கு இயேசுவைப் பிடிக்கும். ஆனால், எதிர்ப்புகளுக்கு பயப்படுகிறேன். ......................................................................................................292

71. நான் மிகவும் இளைஞனாக இருக்கிறேன்.........................................296

72. என் பெற்றோரும் என் பிள்ளைகளும் பக்தியுடையவர்களாக இருந்தால் போதாதா? ....................................................................................298

73. என் ஜாதியையும் ஜனங்களையும் எப்படி புறக்கணிக்க முடியும்? ...........299

74. நான் மிகப்பெரிய பாவி. என்னையும் இயேசு மன்னிப்பாரா? ................304

75. நான் ஏற்கெனவே முயற்சித்து தோற்றுவிட்டேன்.................................307

76. நான் கிறிஸ்தவன் என்று அழைக்கப்பட தகுதியில்லை. .........................309

77. எனக்கு ஞாயிற்றுக்கிழமையும் வேலை உண்டு...................................311

78. நான் ஒரு அரசியல்வாதி. கிறிஸ்தவம் அரசியல்வாதிகளுக்கு ஒத்துவருமா? ......................................................................................................313

79. நான் பின்வாங்கி விட்டேன்..........................................................315

80. எனது விரோதிகளை மன்னிக்க முடியாது. ..........................................317

81. கடவுள் இல்லை..........................................................................319

82. கடவுள் இருந்தால் இவ்வுலகில் மக்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்?........324

83. எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் தானே. இரக்கமுள்ள இறைவன் எப்படி தன் மக்களை நரகத்தில் போடுவார்?.............................................330

84. முஸ்லீம்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பை ஏற்றுக் கொள்கிறார்களா? ........336

Top

85. பழைய ஏற்பாட்டுச் சட்டத்தையும் கடவுள்தானே கொடுத்தார். ஏன் புதிய ஏற்பாட்டை உருவாக்கினார்? ....................339

86. பணமே தெய்வம். ....................346

87. இயேசுவால் என் நோய்களை குணப்படுத்த முடியுமா? ....................354

88. இயேசுவால் என் கடன்களைத் தீர்க்க முடியுமா? ....................357

89. எனக்கு பிள்ளைகள் இல்லை. இயேசுவை நம்பினால் குழந்தை கிடைக்குமா? ....................359

90. எனக்கு அடிக்கடி கெட்ட கனவு வருகிறது. இயேசு என்னை விடுவிக்க முடியுமா? ....................361

91. எனக்கு பல ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்கவில்லை. இயேசுவை நம்பினால் வேலை கிடைக்குமா? ....................362

92. வெற்றிலை, புகை, மது, மாது என்று எல்லா பழக்கங்களும் எனக்கு உண்டு. இவற்றிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்குமா? ....................365

93. என் பிள்ளைகள் படிக்காமல் ஊர் சுற்றுகிறார்கள். கீழ்ப்படியாத இந்த பிள்ளைகள் நிமித்தம் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று நினைக்கிறேன். ....................369

94. எங்கள் மகளுக்கு திருமணம் செய்து கொடுக்க காசு இல்லை. இயேசு எங்களுக்கு உதவி செய்ய முடியுமா? ....................374

95. நாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்ற தொடங்கியபின் எங்களில் யாராவது இறந்தால் புதைக்க இடம் தருவீர்களா? ....................377

96. நாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். எங்கள் பிள்ளைகளுக்கு உயர்வகுப்பிலுள்ள வாழ்க்கைத்துணை கிடைக்குமா? ....................378

Top

97. எங்களுடைய திருமணங்களை நீங்களே நடத்துவீர்களா? ........................384

98. என் மகனுக்கும் மகளுக்கும் திருமணம் தடைபடுகிறது. இயேசு தடைகளை அகற்றுவாரா? ..........................................................................................384

99. எனக்கு மூன்று மனைவிகள். இவர்களிடம் நான் மிகவும் அன்பாக இருக்கிறேன். நாங்கள் நான்குபேரும் இயேசுவை ஏற்றுக்கொள்ள விரும்புகிறோம். என் குடும்ப வாழ்வு இப்படியே மூன்று பேரோடு தொடரலாமா? ..........................................................................................386

100. இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? ................................393

Top

## 1. இயேசு ஒரு மனிதன்தானே. அவரை ஏன் தெய்வமென்று கூறுகிறீர்கள்?

இயேசு 100% மனிதனாக இருந்தபோது 100% கடவுளாகவும் இருந்தார். இயேசு மனித வடிவில் அவதரித்த கடவுள். இயேசுவின் தாய் மரியா ஆண் ஈடுபாடின்றி, சர்வேஸ்வர ஆவியால் கர்ப்பமாகி இயேசுவை பெற்றார் (மத்;.1:18). ஒரு சாதாரண மனிதன் இப்படி பிறக்கமுடியுமா? இவ்வுலகில் பிறக்கும் எவரும் ஒருநாள் இறந்து போகிறார்கள். இறக்கிறவர்கள் உயிரோடு எழும்புவதில்லை.ஆனால், இயேசு இவ்வுலக மக்கள் செய்த பாவங்களுக்கு தண்டனையாக, தானே மரண தண்டனையை ஏற்றுக்கொண்டு உயிர் நீத்து, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் (லூக்.24:1-6). அவர் நல்லவர் என்பதை நிரூபிக்க நமக்காக இறந்தார். அவர் வல்லவர் என்று நிரூபிக்க உயிரோடு எழுந்தார். ஒரு சாதாரண மனிதன் இறந்தபின் தானாக உயிரோடு எழும்ப முடியுமா?

Top

கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்கள் முழுவதும் மனிதனாய் வாழ்ந்தாலும், பாவமின்றி அதாவது குற்றமற்றவராய் வாழ்ந்தார் (யோவா.8:46). இயேசுவை கைதுசெய்து, விசாரித்த ஆட்சித் தலைவர் பிலாத்து, இயேசு குற்றமற்றவரென்று மூன்று முறை சொன்னார் (லூக்.23:4,14,22). இயேசு குற்றமற்றவர் என்று பிலாத்துவின் மனைவி கனவில் கடவுளால் எச்சரிக்கப்பட்டு, இயேசுவுக்கு தீங்கிழைக்கக்கூடாது என்று பிலாத்துவை அறிவுறுத்தினார் (மத்.27:19). அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்கூட இயேசு குற்றமற்றவரென்று கூறினார் (மத்.27:3,4). இயேசு பாவமற்றவரென்று அவரை பின்தொடர்ந்த திருத்தூதர்கள் அறிவித்தனர் (தி.பணி.4:30, 2கொரி.5:21, 1பேது.2:22). இதுவரை வாழ்ந்தவர்களில் அல்லது இன்று வாழ்ந்துகொண்டிருப்போரில் யாராவது தன்னைப் பாவமற்றவரென்று கூறமுடியுமா? புகழ்பெற்ற தத்துவ அறிஞர்களோ, மதத்தலைவர்களோ, சீர்திருத்தவாதிகளோ, சமுதாயச் சிற்பிகளோ யாராவது தங்களைப் பாவமற்றவரென்று கூறமுடியுமா? ‘ஒரு குற்றம்கூட செய்யாத ஒரே ஒரு தெய்வம் இயேசு மட்டும்தான் என்னும் பாடலடங்கிய “எவரும் விரும்பும்

Top

ஓர் இனிய தெய்வம்" என்னும் ஒலித்தட்டை வாங்கிக் கேளுங்கள். (மேற்கண்ட ஒலித்தட்டு வேண்டுமானால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்). இயேசு தன்னைப் பகைத்தவர்களைப் பார்த்து, "நீங்கள் கீழிருந்து (பூமியிலிருந்து) வந்தவர்கள் நான் மேலிருந்து (பரலோகத்திலிருந்து) வந்தவன். நீங்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள்; ஆனால், நான் இவ்வுலகைச் சார்ந்தவன் அல்ல. நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன்" என்றார் (யோவா.8:23, 16:28). ஒரு சாதாரண மனிதன் இப்படி கூறமுடியுமா?

இயேசு, தரையின்மீது நடப்பதைப்போல கடலின்மீது நடந்தார் (மத்.14:25). அவர் பூட்டப்பட்ட வீட்டிற்குள் கடந்து வந்து தன் சீடர்களை தைரியப்படுத்தினார் (யோவா.20:19). இயேசு தொழுநோயாளிகளை தொட்டு, மருந்தில்லாமல் சுகப்படுத்தினார் (மத்.8:2-4, மாற்.1:40-42). தன்னிடம் நம்பிக்கையோடு வந்த எப்படிப்பட்ட நோயாளிகளையும் குணப்படுத்தினார் (மத்.4:23,24, 12:10-13). மரித்த சடலங்களை உயிரோடு எழுப்பினார் (மத்.9:24,25, யோவா.11:1-45). குருடர்களுக்கு பார்வை கொடுத்தார் (மத்.9:27-30, யோவா.9:1-7). ஐந்து

Top

அப்பங்களையும், இரண்டு மீன்களையும் வைத்து ஐந்தாயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு பசியாற்றினார் (மத்.14:15-21). பேயினால் ஆக்கிரமிக்கப்பட்டவர்களை விடுவித்தார் (மாற்.1:23-28). ஒருமுறை இயேசு அழைக்கப்பட்டிருந்த ஒரு திருமண விருந்தில் திராட்சைப் பழரசம் தீர்ந்தவுடன், அம்மக்களின் அவமானத்துயர் துடைக்க, வெறும் தண்ணீரை தன் தெய்வீக வலிமையால் ருசியுள்ள திராட்சைப் பழரசமாக மாற்றி குறைவை நிறைவாக்கினார் (யோவா.2:1-11). தான் எங்கும் வியாபித்திருப்பதை உணர்த்தும்படி இயேசு,"இரண்டு அல்லது மூன்று பேர்; என்னுடைய பெயரில் எங்கே கூடுவீர்களோ, அங்கே நானிருக்கிறேன்" (மத்.18:20) என்றும், "இதோ உலகத்தின் முடிவுவரை நான் உங்களோடிருக்கிறேன்" (மத்.28:20) என்றும் அறிவித்துள்ளார். ஒரு சாதாரண மனிதன் இப்படி

கூறமுடியுமா? இயேசு, தனக்கு சகல அதிகாரமும் உண்டு என்பதை விளக்கிக் காட்ட, "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது (மத்.28:18); தந்தை மகன் (இயேசு) மேல் அன்பு கூர்ந்து அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார் (யோவா.3:35); என் தந்தை (கடவுள்) எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்" (மத்.11:27) என்று அறிக்கையிட்டார். இப்படி ஒரு சாதாரண மனிதன் கூறமுடியுமா? மனிதனாய் வந்த இயேசுதான் இந்த அகிலாண்டங்களைப் படைத்த விஸ்வநாதன் என்று வேதம் கற்பிக்கிறது (யோவா.1:1-3, கொலோ.1:16). இயேசுவே கண்ணுக்கு புலனாகாத கடவுளுடைய வடிவம் என்றும், இயேசு எல்லாவற்றுக்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது என்றும், மொத்த அண்டசராசரங்களும் அவரையே மையமாக வைத்து இயங்குகிறது (கொலோ.1:15-17) என்றும் வேதம் கூறுகிறது. இயேசு பாவம் தவிர மற்றெதையும் செய்து முடிக்கும் வரம்பற்ற வலிமையுடையவர்.

Top

‘கடவுள் மனித உருவில் வரமுடியுமா’ என்று நாம் கடவுளிடம் கேள்வி கேட்க முடியாது. ஆண்டவருடைய மனதை அறிபவர் யார்? அவருக்கு அறிவுரை கூறுபவர் யார்? (1கொரி.2:16, உரோ.11:34) என்று வேதம் நம்மைப் பார்த்து கேள்வி கேட்கிறது.கடவுள் மனித வடிவத்தில் அவதாரமாக பிறக்கமுடியாது என்று கூற நாம் கடவுளைப் படைத்தவர்களா? தெய்வம் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்க நாம் தெய்வத்தின் பெற்றோரா? சர்வேஸ்வரன் தனக்கு விருப்பமானவைகளை தன் சித்தப்படி செய்கிறர் (தி.பா.115:3). இன்று நாம் தேதி குறிப்பிடும்போது கி.பி.2013 என்று கூறுகிறோமே. கி.பி-யின் முழுவடிவம் கிறிஸ்துவுக்குப் பின் என்று நம்மில் பலர் அதன் அர்த்தத்தை உணராமலேயே எழுதுகிறோம். இயேசு ஒரு சாதாரண மனிதனானால் சரித்திரம் ‘கிறிஸ்துவுக்குமுன்’ (கி.மு.) என்றும் ‘கிறிஸ்துவுக்குபின்’ (கி.பி.) என்றும் இரண்டு பாகங்களாக பிரிந்திருக்காதே!

Top

## 2. இயேசு தெய்வம் என்று பைபிளில் எழுதப்பட்டுள்ளதா?

நீங்கள் பைபிளைத் தெளிவாக படித்தால் நிச்சயமாகக் காணலாம். நம் பெருமைமிக்க கடவுளும், மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவின் மாட்சி வெளிப்படப் போகிறது. அவர் நம்மை எல்லா நெறி கேடுகளிலிருந்தும் மீட்டு, நற்செயல்களில் ஆர்வமுள்ள தனக்குரிய மக்களாகத் தூய்மைப்படுத்த தம்மையே ஒப்படைத்தார் (தீத்.2:13,14). ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப்பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும், அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், நித்தியத் தந்தை, அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும் (எசா.9:6). மனிதர் என்னும் முறையில் கிறிஸ்துவும் அவர்களிடமிருந்தே தோன்றினார். இவரே எல்லாவற்றுக்கும் மேலான கடவுள். என்றென்றும் போற்றுதற்குரியவர் (உரோ.9:5). நம் கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவினால் விளைந்த ஏற்புடைமையின் அடிப்படையில் எங்களைப் போன்ற மதிப்புயர்ந்த நம்பிக்கையைப் பெற்றுள்ளோருக்கு, இயேசு கிறிஸ்துவின் பணியாளனும்

Top

திருத்தூதனுமான சீமோன் பேதுரு எழுதுவது (2பேது.1:1). இறைமகன் வந்து உண்மையான இறைவனை அறிந்து கொள்ளும் ஆற்றலை நமக்குத் தந்துள்ளார். இது நமக்குத் தெரியும். நாம் உண்மையான இறைவனோடும், அவர் மகன் கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்கிறோம். இவரே உண்மைக் கடவுள். இவரே நிலை வாழ்வு (1யோவா.5:20). இயேசுவின் நேரடிச் சீடரான தோமா இயேசுவை நோக்கி, “என் ஆண்டவரே, என் கடவுளே” (யோவா.20:28) என்று அழைத்தார். இறைத்தன்மையின் முழுநிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கிறது (கொலோ.2:9). கடவுள் வடிவில் விளங்கிய இயேசு கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை கொள்ளையாடின பொருளாகக் கருதாமல், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (பிலி.2:6,7) என்று பவுல் இயேசுவின் தெய்வத் தன்மையைத் தெளிவுபடுத்துகிறார். கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப்பதிவாகவும் விளங்கும் இவர், தம் வல்லமைமிக்க சொல்லால் எல்லாவற்றையும் தாங்கி நடத்துகிறார். மக்களை

Top

பாவங்களினின்று தூய்மைப்படுத்திய பின், விண்ணகத்தில் இவர் பெருமைமிக்க கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார் (எபி.1:3). தமது சொந்த இரத்தத்தால் தமதாக்கிக் கொண்ட கடவுளின் திருச்சபையை மேய்ப்பதற்கு தூயஆவியார் உங்களைக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தியுள்ளதால், உங்களையும் மந்தை முழுவதையும் கவனமுடன் காத்துக்கொள்ளுங்கள் (தி.பணி.20:28). இயேசுவாகிய கடவுள் தன் சுய இரத்தத்தால் சபையை சம்பாதித்தார் என்று மேற்கண்ட வசனம் தெளிவுபடுத்துகிறது. மேற்கண்ட வசனங்களிலிருந்து இயேசுவே மெய்யான தெய்வம் என்று அறிகிறோம்.

## 3. இயேசு தன்னைத்தான் தெய்வமென்று கூறினாரா?

“நான்தான் கடவுள்; என்னைத்தான் நீங்கள் வணங்க வேண்டும்” என்று இயேசு நேரடியாக கூறியதாக வேதபுத்தகத்தில் எங்குமே எழுதப்படவில்லை. அதனால் அவர் கடவுள் அல்ல என்று கூற முடியாது. இயேசு தன்னைக் கடவுளென்று மறைமுகமாக கூறியிருக்கிறார்.

Top

ஒருமுறை இயேசு யூதர்களிடம் பேசும்போது, “நானும், தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்” (யோவா.10:30) என்றார். அவர் ஒரு சாதாரண இறைத்தூதராக இருந்திருந்தால் இப்படி கூறியிருக்கமாட்டார்.இந்த வசனத்தை நாம் பார்க்கும்போது, இயேசு தன்னை கடவுளுக்கு சமப்படுத்தி பேசியதாக காணப்படாதது போல் தெரியலாம்.ஆனால், இயேசு இப்படி பேசியவுடனேயே யூதர்களுடைய பிரதிபலிப்பைக் கவனியுங்கள். இயேசு அப்படி கூறிய உடனேயே அவர்மேல் எறிய யூதர்கள் மீண்டும் கற்களை எடுத்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, “தந்தையின் சொற்படி பல நற்செயல்களைச் உங்கள் முன் செய்து காட்டியிருக்கிறேன்.அவற்றுள் எச்செயலுக்காக என் மேல் கல்லெறிய பார்க்கிறீர்கள்?” என்று கேட்டார். யூதர்கள் மறுமொழியாக நற்செயல்களுக்காக அல்ல.இறைவனைப் பழித்துரைத்ததற்காகவே உன்மேல் கல்லெறிகிறோம். ஏனெனில், மனிதனாகிய நீ உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய் (யோவா.10:31-33) என்றார்கள். இயேசு அந்த அர்த்தத்தில் சொல்லியிருக்காவிட்டால் யூதர்களிடம் மன்னிப்பு கேட்டிருப்பாரே! நமது பார்வையில் “நானும் தந்தையும் ஒன்றாய்

Top

இருக்கிறோம்” என்னும் அறிக்கை இயேசுவின் தெய்வீகத்தை வெளிப்படுத்தாததுபோல் இருந்தாலும்,இயேசு எந்த அர்த்தத்தில் அப்படி கூறினார் என்று யூதர்கள் புரிந்து கொண்டதால்தான் அவர்மீது கல்லெறிய முயன்றனர். ‘கடவுள் ஒருவரே’ என்று நம்பும் யூதர்களுடைய பார்வையில் இயேசு கடவுளைப் பழித்துரைத்தது போல் இருந்தது. அதனால்தான் அவர்களுக்கென்று கொடுக்கப்பட்ட மதச்சட்டப்படி (லேவி.24:16) அவரைக் கல்லெறிய தீர்மானித்தார்கள். யோவான் 5:18-ல், “இவ்வாறு அவர் ஓய்வுநாள் சட்டத்தை மீறியதோடு இல்லாமல் கடவுளைத் தம் சொந்த தந்தை என்று கூறித் தம்மையே கடவுளுக்கு சமமாக்கியதால்,யூதர்கள் அவரை கொல்ல இன்னும் மிகுந்த முயற்சி செய்தார்கள்” என்று பார்க்கிறோம். இயேசு, தன்னை கடவுளுக்குச் சமமாக்கியிருக்காவிட்டால் யோவான் இப்படி எழுதியிருக்கமாட்டார்.பிலாத்துவிடம் யூதர்கள் பேசும்போது, “எங்களுக்கு ஒரு சட்டமுண்டு.அச்சட்டத்தின்படி இவன் சாகவேண்டும். ஏனெனில், இவன் தன்னையே இறைமகன் என உரிமை கொண்டாடுகிறான்” (யோவா.19:7) என்றனர். ஆக,

Top

‘இறைமகன்’என்று கூறி, இயேசு தன்னை கடவுளுக்கு இணையாக்கி பேசியதால்தான் அவருக்கு மரணதண்டனை கொடுத்தார்கள். தந்தையாம் கடவுள், “என் அன்பார்ந்த மைந்தர் இவரே” என்று இயேசுவைப் பற்றி சான்று கொடுக்கிறார் (மத்.3:17, 15:7). ஒருமுறை இயேசு மதஅறிஞர்களிடம் பேசும்போது, ‘உங்கள் தந்தை ஆபிரகாம் நான் வரும் காலத்தைக் காண ஆசைப்பட்டார். அதனைக் கண்டபோது மகிழ்ச்சியும் கொண்டார் என்றார். யூதர்கள் அவரை நோக்கி, “உனக்கு இன்னும் 50 வயதுகூட ஆகவில்லை! நீ ஆபிரகாமை கண்டிருக்கிறாயா?” என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நானிருக்கிறேன் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன் என்றார். அவர்களுடைய பார்வையில் இயேசு கூறியது இறைவனைப் பழித்துரைத்தது போலிருந்ததால்,இதை கேட்ட அவர்கள் அவர்மேல் கல்லெறிய கற்களை எடுத்தார்கள்(யோவா.8:56-59). தந்தையாம் இறைவனே இயேசுவை நோக்கி, “இறைவனே, என்றும் உள்ளது உமது அரியணை. உம் ஆட்சியின் செங்கோல் வளையாத செங்கோல்” (எபி.1:8) என்றார். பாவிகளுடைய பாவங்களை

Top

மன்னிக்கும் அதிகாரம் கடவுளுக்கு மட்டும்தான் உண்டு (தி.பா.103:3, 2சாமு.12:13, தி.பணி.8:22).ஆனால், கிறிஸ்துவுக்கு அந்த அதிகாரம் இருந்ததென்று அவரே கூறிய ஒரு சந்தர்ப்பத்தைப் பார்ப்போம். ஒருமுறை இயேசுவின் வல்லமையால் குணம் பெற்றுச் செல்ல முடக்குவாதமுள்ள ஒருவரை கட்டிலோடு தூக்கிக் கொண்டு வந்தார்கள். இயேசு ஒரு வீட்டினுள் இருந்தார். திரளான மக்கள் கூட்டம் அவரை சூழ்ந்திருந்ததால் அவரருகில் இவரைக் கொண்டு போக முடியாமல், வீட்டுக் கூரையின் மேலேறி ஓடுகளைப் பிரித்து நோயாளியை இறக்கினார்கள்.அவர்களுடைய நம்பிக்கையைக் கண்ட இயேசு அந்த ஆளைப்பார்த்து, “உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்றார். இதனை கேட்ட மறைநூல் அறிஞரும், பரிசேயரும், “கடவுளைப் பழித்துரைக்கும் இவன் யார்? கடவுள் மட்டுமன்றி பாவங்களை மன்னிக்க யாரால் இயலும்” என்று எண்ணிக் கொண்டனர். அவர்களின் எண்ணங்களை உய்த்துணர்ந்த இயேசு அவர்களைப் பார்த்து, “உங்கள் உள்ளங்களில் நீங்கள் எண்ணுகிறதென்ன? உம் பாவங்கள் உமக்கு மன்னிக்கப்பட்டன’ என்பதா, ‘எழுந்து

Top

நடக்கவும்;' என்பதா, எது எளிது? மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்" என்றார். பின்பு அவர் முடக்குவாதமுற்றவரை நோக்கி, "நான் உமக்கு சொல்கிறேன் நீர் வீட்டுக்கு போம்!" என்றார். உடனே அவர் அவர்கள் முன்பாக எழுந்து தாம் படுத்திருந்த கட்டிலைத் தூக்கிகொண்டு, கடவுளைப் போற்றிப் புகழ்ந்தவாறே தமது வீட்டுக்குப் போனார் (லூக்.5:20-25).

இயேசுவுக்கு மக்களுடைய பாவங்களை மன்னிக்கும் அதிகாரமும் இருந்தது என்று திருத்தூதர்கள் சான்று பகர்ந்தனர். இஸ்ராயேல் மக்களுக்கு மனமாற்றத்தையும், பாவமன்னிப்பையும் அளிப்பதற்காக கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது வலப்பக்கத்திற்கு உயர்த்தினார் (தி.பணி.5:31). கடவுள்தான் எங்கும் நிறைந்திருக்கிறார் (எரே.23:24, நீதி.15:3). ஆனால், இயேசு தானும் எங்கும் நிறைந்தவரென்று தெளிவாக கூறுகிறார். "இரண்டு மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாக கூடியிருக்கின்றார்களோ, அங்கே அவர்களிடையே நான் இருக்கின்றேன் என உறுதியாக

Top

உங்களுக்குச் சொல்கிறேன்" (மத்.18:20); "நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ, உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" என்றார் (மத்.28:20). இயேசு ஆதியிலே கடவுளோடிருந்தார். அவர்; கடவுளாகவே இருந்தார் என்பதற்கான விளக்கங்களைக் கீழே தருகிறேன். தொடக்கத்தில் வாக்கு இருந்தது.அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது.வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அவரிடம் உயிர் இருந்தது. அவ்வுயிர் மனிதருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன்மேல் வெற்றிகொள்ளவில்லை (யோவா.1:1-5). இயேசுவுக்கு 'கடவுளின் வாக்கு' (தி.வெ.19:13) என்றொரு பெயரும் உண்டு.

இயேசு ஒருமுறை தன் தந்தையை நோக்கிப் பிரார்த்தனை செய்யும்போது, "தந்தையே உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப்படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்கு தந்தருளும்" (யோவா.17:5) என்றார். இதன் மூலம் உலகம் தோன்றுவதற்கு முன்பே இயேசு கடவுளோடு

Top

இருந்தார் என்று தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம். இறுதி நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் கடவுளுக்கு மட்டும்தான் இருக்கமுடியும் (எசா.33:22, தி.பா.50:6, 96:10,13). ஆனால், இயேசுவே கடைசி நாளில் நியாயத்தீர்ப்பு செய்வாரென்று அவரே கூறினார். "தந்தை யாருக்கும் தீர்ப்பளிப்பதில்லை. தமக்கு எல்லாரும் மதிப்பு கொடுப்பதுபோல,மகனுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் முழுவதையும் அவர் மகனுக்கு அளித்துள்ளார் (யோவா.5:22). அவர் மானிடமகனாய் இருப்பதால் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தையும் தந்தை அவருக்கு அளித்துள்ளார் (யோவா.5:27).

மேற்கண்ட வசனங்களின்படி, இறுதித்தீர்ப்பு இயேசுவின் அதிகாரத்திலுள்ளது என்றும், தந்தையாம் கடவுளை நாம் எவ்வளவு மதிக்கிறோமோ, அவ்வளவு மதிப்பை அவரது வார்த்தையாகிய மகனுக்கும் கொடுக்கவேண்டும் என்றும் கடவுள் எதிர்பார்க்கிறார். தயவுசெய்து வாசியுங்கள்: மத்.25:31-46. வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நீதிபதியாக கடவுளால் குறிக்கப்பட்டவர் இயேசுதாம் என்று மக்களுக்கு பறைசாற்றவும், சான்றுபகரவும் அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்

Top

(தி.பணி.10:42) என்று திருத்தூதர் பேதுரு கூறினார். தந்தை, தாம் உயிரின் ஊற்றாய் இருப்பதுபோல, மகனும் உயிரின் ஊற்றாய் இருக்குமாறுச் செய்துள்ளார் (யோவா.5:26). இயேசு, தனக்கு அழிவேயில்லை, என்பதை மக்கள் புரிந்து கொள்ளும்படி, “இறந்தேன், ஆனாலும் இதோ என்றென்றும் உயிர்வாழ்கிறேன்; சாவின் மீதும், பாதாளத்தின் மீதும் எனக்கு அதிகாரம் உண்டு” (தி.வெ.1:18) என்று வெற்றி முழக்கமிட்டார்.

## 4.இயேசுவை யாராவது தொழுததாக வேதத்தில் ஆதாரமுண்டா?

இயேசு ஒரு குழந்தையாக இருந்தபோது, அவரை ஒரு தெய்வீக மனிதர் என்று அறிந்து கீழ்த்திசையிலுள்ள மூன்று ஞானிகள் அவரைப் பார்த்து வணங்கப் போனார்கள் (மத்.2:1-2). அந்த குழந்தை இருந்த வீட்டிற்குள் அவர்கள் போய், குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டு நெடுஞ்சாங்கிடையாக விழுந்து குழந்தையை வணங்கினார்கள் (மத்.2:11).

Top

இயேசுவை மக்கள் வணங்கியபோது அதை அவர் ஏற்க மறுக்கவில்லை. அதற்கு சில உதாரணங்களைத் தருகிறேன்.

அப்பொழுது தொழுநோயாளர் ஒருவர் வந்து அவரைப் பணிந்து, "ஐயா, நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்றார் (மத்.8:2)."

அவர்களுடன் இவ்வாறு இயேசு பேசிக்கொண்டிருந்த பொழுது, தொழுகைக்கூடத் தலைவர் ஒருவர் அவரிடம் வந்து பணிந்து, "என் மகள் இப்பொழுதுதான் இறந்தாள். ஆயினும் நீர் வந்து அவள் மீது உம் கையை வையும் அவள் உடனே உயிர் பெறுவாள்" என்றார் (மத்.9:18).

படகிலிருந்தோர் இயேசுவைப் பணிந்து, "உண்மையாகவே நீர் இறைமகன்" என்றனர் (மத்.14:33).
அவளோ வந்து அவரைப் பணிந்து, "ஆண்டவரே, எனக்கு உதவிபுரியும்" என்றாள் (மத்.15:25)
திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி, அவர் காலடிகளை பற்றிப் பணிந்து கொண்டனர் (மத்.28:9,17).

Top

அவர்கள் அவரை வணங்கிவிட்டு பெரு மகிழ்ச்சியோடு எருசலேம் திரும்பச் சென்றார்கள் (லூக்.24:52).

அவர், “ஆண்டவரே நம்பிக்கை கொள்கிறேன்” என்று கூறி அவரை வணங்கினார் (யோவா.9:38). நீ வேறொரு தெய்வத்தை வழிபடலாகாது, ஏனெனில் “வேற்று தெய்வ வழிபாட்டை சகிக்காதவர்” என்பதே ஆண்டவர் பெயர். ஆம், அவர் வேற்று தெய்வ வழிபாட்டைச் சகிக்காத இறைவன் (வி.ப.34:14) என்பதை தெரிந்திருந்த இயேசு,மேற்கண்ட அனைவரும் அவரை வணங்கும்போது அவர்களைத் தடுக்கவில்லை.

திருத்தூதர் பவுல் கொரிந்து சபையை வாழ்த்தும்போது, “இயேசு கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்று,தூயோராக்கப்பட்டு இறைமக்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ள உங்களுக்கும், எல்லா இடங்களிலும் நம் ஆண்டவர் இயேசுவைத் தொழுது கொள்ளும் யாவருக்கும், நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவர் இயேசுவிடமிருந்தும், அருளும் அமைதியும் உரித்தாகுக” (1கொரி.1:2) என்றார். என் மாட்சியை நான்

Top

எவருக்கும் விட்டுக்கொடேன் (எசா.48:11, 42:8) என்று கூறிய தந்தையாம் தெய்வம், “கடவுளின் தூதர் அனைவரும் அவரை (இயேசுவை) வழிபடுவார்களாக” (எபி.1:6) என்றும் கூறினார்.

ஸ்தேவான் என்றும் இறைத்தூதர் இயேசுவின்மேல் வைத்திருந்த அன்பாலும், நம்பிக்கையாலும்,தன் உயிரையே ஒரு பொருட்டென்று நினைக்காமல் வாழ்ந்தார்.மதவெறியுடைய யூதர்கள் அவரைக் கல்லால் எறிந்து கொன்றார்கள்.ஆனால், அவர் இறப்பதற்கு சற்றுமுன், தன்னை கல்லால் எறிந்தவர்களை மனதார மன்னித்தார்,அவர்களை கடவுளும் மன்னிக்க வேண்டி, “கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று ஸ்தேவான் தொழுது கொண்டார்.பின்பு முழந்தாள் படியிட்டு உரத்த குரலில்,ஆண்டவரே இந்த பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று கூறி உயிர்விட்டார் (தி.பணி.7:59,60).இங்கே ஸ்தேவான் இயேசுவைத் தொழுது கொண்டார் என்று தெளிவாக அறிகிறோம்.இயேசு உயிரோடு எழுந்து விண்ணேற்படைந்த பின்பு அவருடைய சீடர் அனனியா இயேசுவை நோக்கி பிரார்த்தனை செய்தார் இயேசு அனனியாவிடம் பேசினார் (தி.பணி. 9:10-17).

Top

இயேசு ஆராதனைக்குத் தகுதியானவர் என்னும் உண்மையை தானியேல் இறைவாக்கினர் கண்ட தரிசனத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.இரவில் நான் கண்ட காட்சியாவது வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் (மகன்) தோன்றினார் இதோ! தொன்மை வாய்ந்தவர் (தந்தை) திருமுன் அவர் கொண்டு வரப்பட்டார்.ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்குகொடுக்கப்பட்டன எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை (மகனை) வழிபட வேண்டும் அவரது ஆட்சியுரிமை என்றும் உள்ளதாகும் அதற்கு முடிவே இராது அவரது அரசு அழிந்து போகாது (தானி.7:13-14).விண்ணுலகிலுள்ள எல்லா உயிர்களும் இயேசுவைத் தொழுகிறார்கள்.அப்பொழுது அந்த நான்கு உயிர்களும், 24 மூப்பர்களும் ஆட்டுக்குட்டி (இயேசு) முன் வீழ்ந்தார்கள் (தி.வெ.5:8). ‘கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டி (இயேசு) வல்லமையும்,செல்வமும், ஞானமும்,ஆற்றலும், மாண்பும்,பெருமையும்,புகழ்ச்சியும் பெறத் தகுதி பெற்றவர்’ என்று அவர்கள் உரத்த குரலில் பாடிக் கொண்டிருந்தார்கள் (தி.வெ.5:12).மேற்கண்ட வசனங்களிலிருந்து இயேசு

Top

தொழுகைக்குரியவர் என்று அறிகிறோம். 'தொழுது','வணங்கி', 'பணிந்து' என்ற தமிழ் வார்த்தைகள் எங்கெல்லாம் வருகின்றனவோ அங்கெல்லாம் கிரேக்கத்தில் 'proskuneo' என்ற மூல வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.இயேசு சாத்தானிடம், "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணிசெய் என்றும் மறைநூலில் எழுதியுள்ளது (மத்.4:10) என்று கூறும் வசனத்திலும் 'proskuneo' என்ற வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 5. இயேசு தெய்வமானால் அவரை எப்படி கொன்றுவிட முடியும்?

கடவுள் என்றாலே வீச்சரிவாள், கடாரி, அம்பு, சூலாயுதம், சக்கரம், ஈட்டி, வேல் போன்ற கொடுமையான கொலைக் கருவிகளை வைத்துக்கொண்டு மிரட்டுகின்ற காட்டுமிராண்டி என்றே நாம் கற்பனை செய்து பழகிவிட்டோம். அதனால் தான் இப்படி ஒரு கேள்வியை கேட்கிறோம். ஆனால், ஒரு தாய் தன் உயிரையே தியாகம் செய்து தன் பிள்ளைகளை காப்பாற்றுவதுபோல, கடவுளே இயேசு என்ற வடிவத்தில்

Top

இம்மண்ணில் பிறந்து, தன் உயிரை நமக்காக தியாகம் செய்து நம்மை காப்பாற்றியிருக்கிறார். கடவுள் என்னும் உயர்ந்த பதவியில் பெருமையோடு இருக்காமல், அவர் நம்மீது அன்பு வைத்து, நம்மை மீட்க தாழ்மையோடு நம் வடிவத்தில் இறங்கி வந்ததை நினைத்து கண்ணீரோடு நன்றி சொல்லவேண்டிய நாம் இப்படி கேள்வி கேட்கிறோமே? இயேசு கைது செய்யப்படுவதற்கு முன்பே மதவாதிகள் பலமுறை அவரைப் பிடிக்க முயற்சி செய்தனர். ஆனால், அப்பொழுதெல்லாம் முன்தீர்மானிக்கப்பட்ட தன் பணிகளை தொடர அவர் மறைந்து போனார் என்று வேதம் கூறுகிறது (யோவா.8:59, 12:36). இயேசு கெத்சமெனேயில் கைது செய்யப்படும்போது, தப்பிக்க நினைத்திருந்தால் மறைந்து போயிருக்கமுடியும். அவர் அப்படி செய்யவில்லை.ஏனெனில், அவர் மரணத்தைப் பார்த்து பயப்பட்ட கோழையல்ல. பாவிகளை மீட்க, அவர் சிலுவையில் பலியாக வேண்டுமென்ற தெய்வீகத் தீர்மானத்தால், இயேசு அவர்களுடைய கைகளில் தன்னைத் தானே முழுமனதோடு ஒப்புக்கொடுத்தார் (லேவி.17:11, எபி.9:22, எசா.53:10, யோவா.1:29, 1யோவா.2:2, 1திமொ.1:15, உரோ.5:8).

Top

இயேசுவிடம் குற்றவிசாரணை மேற்கொண்ட பிலாத்து என்னும் ஆட்சித்தலைவன் இயேசுவிடம், "உன்னை சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டென்றும், உன்னை விடுதலை செய்ய எனக்கு அதிகாரம் உண்டென்றும் உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார். இயேசு மறுமொழியாக, "பரலோகத்திலிருந்து உமக்கு அதிகாரம் கொடுக்கப்படாது இருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது" (யோவா.19:10,11), "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றதல்ல. அது இவ்வுலக ஆட்சி போன்றதாய் இருந்திருந்தால், நான் யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்படாதவாறு என் சீடர்கள் போராடியிருப்பார்கள்" (யோவா.18:36) என்று தெய்வத் திருவுளத்தை வெளிப்படுத்தினார்.

ஒருமுறை இயேசு தன் சீடர்களிடம் பேசும்போது, "என் தந்தை என்மீது அன்பு செலுத்துகிறார் ஏனெனில், நான் என்னுயிரைக் கொடுக்கிறேன். என்னுயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன். உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு அதை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் அதிகாரம் உண்டு" (யோவா.10:17,18)

Top

என்று கூறினார். மேற்கண்ட வசனத்திலிருந்து இயேசுவை கைது செய்ததும், அவரை சிலுவையில் ஏற்றிக் கொன்றதும் இயேசுவே எதிர்பார்க்காமல், எதேத்சையாக நடந்த ஒரு சம்பவமல்ல என்பது தெளிவாகப் புரிகிறது. கடவுள் தம் மெசியா துன்புறவேண்டும் என்று இறைவாக்கினர் அனைவர் வாயிலாகவும் முன்னறிவித்ததை இவ்வாறு நிறைவேற்றினார் (தி.பணி.3:18). மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார் நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார் நாமோ அவர் கடவுளால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டவர் என்றும், சிறுமைப்படுத்தப்பட்டவர் என்றும் எண்ணினோம். ஆனால், அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார் நம்தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார் நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார் அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம். ஆடுகளைப் போல நாம் அனைவரும் வழிதவறி அலைந்தோம் நாம் எல்லாரும் நம் வழியே நடந்தோம் ஆண்டவரோ நம் அனைவரின் தீச்செயல்களையும் அவர்மேல் சுமத்தினார் (எசா.53:4-6). இயேசு ஒரு இலட்சியவாதி. தன்னுடைய வாழ்வில் நடக்கப்போகும்

Top

சம்பவங்கள் எல்லாவற்றையும் அவர் முன்னமே அறிந்திருந்தார். அவருக்கு தெரியாமல் எதுவும் நடக்கவில்லை. எனவேதான், “மானிடமகன் தமக்கென்று குறிக்கப்பட்டபடியே போகிறார்;” (லூக்.22:22) என்று கூறினார்.

அவர் யூதாஸ்காரியோத்தால் காட்டிக்கொடுக்கப்படுவதை அவரே முன்னறிவித்தார் (யோவா.13:21-27). இயேசு, தான் கைதுசெய்யப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, கொல்லப்படுவார் என்றும், மூன்றாம் நாளில் உயிரோடு எழும்புவார் என்றும் தீர்க்கமாய் அறிந்து, “மானிடமகன் (இயேசு) தலைமைக் குருக்களிடமும், மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார் அவர்கள் அவருக்கு மரணதண்டனை விதிப்பார்கள் அவர்கள் அவரை ஏளனம் செய்து, சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி ஒப்புவிப்பார்கள் ஆனால், அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்” (மத்.20:18,19) என்று கூறினார். இயேசுவின் சீடரெல்லாரும் இயேசுவை கைவிடும் காலம் வருமென்று முன்னறிந்த இயேசு, “இதோ காலம் வருகிறது. ஏன், வந்துவிட்டது, அப்பொழுது நீங்கள் சிதறடிக்கப்பட்டு ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்கு

Top

ஓடிப்போவீர்கள் என்னை தனியே விட்டுவிடுவீர்கள் ஆயினும் நான் தனியாய் இருப்பதில்லை தந்தை என்னோடு இருக்கிறார்" (யோவா.16:32) என்றார். மெசியா இயேசு கொல்லப்படுவார் என்று தானியேல் தீர்க்க தரிசியால் இறைவாக்காக அருளப்பட்டது நடந்தேறியது (தானி.9:26). இயேசுவை யூதர்கள் பிடிக்க வந்தபோது இயேசுவின் சீடர்களில் ஒருவரான பேதுரு தன்னிடமிருந்த கத்தியை எடுத்து, தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி, அவருடைய காதைத் துண்டித்தார். அப்பொழுது இயேசு அவரிடம், "உனது வாளை அதன் உறையில் திரும்பப்போடு ஏனெனில், வாள் எடுப்போர் அனைவரும் வாளால் அழிவர். நான் என் தந்தையின் துணையை வேண்ட முடியாதென்றா நினைத்தாய்? நான் வேண்டினால் பன்னிரு பெரும் படைப் பிரிவுகளுக்கு மேற்பட்ட வானதூதரை எனக்கு அனுப்பி வைப்பாரே! அப்படியானால் இவ்வாறு நிகழவேண்டும் என்ற மறைநூல் வாக்குகள் எவ்வாறு நிறைவேறும்?" (மத்.26:51-54) என்றார்.

அங்கே இயேசு மதத்தீவிரவாதத்தை கண்டிக்கிறார். கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல், வெட்டுக்கு வெட்டு, குத்துக்குக்குத்து

Top

என்னும் மிருககுணத்தால் உலகில் அமைதியை உருவாக்க முடியாது என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். எனவே, தனது உயிரை கொடுத்தாவது அகிம்சைக் கொள்கையை நிலைநாட்ட வேண்டும், மதவெறியை ஒழிக்கவேண்டும்,மனிதநேயம் தழைக்க வேண்டும் என்று இறைவன் ஆசைப்பட்டு, தானே தன்னுயிரைக் கொடுக்க முன்வந்தார்.

இயேசு தன்னைப் பிடிக்கவந்த யூதர்களிடம், “யாரைப் பிடிக்க வந்தீர்கள்” என்று கனிவோடு கேட்டபோது அந்த மதவெறிபிடித்த யூதர்கள், “நசரேயனாகிய இயேசுவை” என்று சொன்னார்கள். உடனே, இயேசு பிஞ்சுநெஞ்சோடு, “நான்தான்” என்று கூறினார். அப்போதும், தன் சீடர்களை காப்பாற்ற வேண்டுமே என்னும் ஆதங்கத்தில், “நீங்கள் என்னை தேடி வந்தீர்களானால் இவர்களை (சீடர்களை) விட்டுவிடுங்கள்” (யோவா.18:4-8) என்று கூறி அவர்களை காப்பாற்றினார். அந்த கருணை வடிவத்தின் அன்பை நினைத்தால் கண்கள் கலங்கவில்லையா?

Top

## 6. மனிதர்கள் தவறு செய்திருக்க, நிரபராதி இயேசு கொல்லப்பட்டது நியாயமா?

ஒரு நியாயமான கேள்வியை கேட்டீர்கள். நியாயமாகப் பார்த்தால் இயேசு ஒரு குற்றமும் செய்யாதவராக இருந்ததால் அவர் கொல்லப்பட்டிருக்கக் கூடாது. ஆனால், அந்த நிரபராதி மரணதண்டனை அனுபவித்ததன் காரணம் நாம்தான். "உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும், உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன" (எசா.59:2) என்கிறார் இறைவாக்கினர் எசாயா. "கடவுள் அநீதியைப் பொறுக்காத இறைவன் பழிவாங்குபவர் வெகுண்டெழுபவர். அவர் மிகுந்த ஆற்றலுள்ளவர். அவர் குற்றவாளிகளை எவ்வகையிலும் பழிவாங்காமல் விடமாட்டார்" (நாகூ.1:2,3). ஆனால், மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே உருவான பகைமை இடைவெளியை அகற்ற, மனிதன் செய்த தவறுகளுக்கு தக்க தண்டனையை கடவுள் நமக்குக் கொடுத்தால், இந்த உலகில் நாம் உயிர்வாழ முடியாது. சொல்லாலும்,

Top

செயலாலும், சிந்தனையாலும் கொடுமையான, கேவலமான, அநியாயமான, அசிங்கமான பாவங்களை செய்துவிட்ட நமக்குத் தகுந்த தண்டனையைச் சட்டப்படி, நியாயப்படி கொடுத்திருந்தால் இந்த உலகம் என்றோ அழிந்து போயிருக்கும். குற்றம் செய்தால் தண்டனை நிச்சயம் உண்டு. நம் மரணத்தோடு நம் வாழ்வு முடிந்தால்கூட பரவாயில்லையே! அதன்பின் பரலோகம், நரகம் என்னும் இரண்டு இடங்களில் ஏதாவது ஓரிடத்திற்கு கட்டாயம் சென்றாக வேண்டுமென்று வேதம் கோடிட்டுக் காட்டுகிறது (மத்.25:31-46). நாம் செய்த தவறுகளுக்குத் தக்க தண்டனையை கடவுள் நமக்கு தந்தால்இ நிச்சயமாக நம் ஆன்மா சாந்தியடையாது. கொடுமையான நரகத் தண்டனையைத்தான் நாம் அனுபவிக்க வேண்டும். இது எவ்வளவு கொடுமை என்பது நமக்குத் தெரியாது. ஏனெனில், இன்னும் நாம் நரகத்தைப் பார்க்கவில்லை. அதை உருவாக்கிய கடவுளுக்குத்தான் முழுமையாகத் தெரியும். எனவே, அந்த கொடிய தண்டனையிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்காக, கடவுள் நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனையை அந்த கருணாமூர்த்தி கிறிஸ்துவின்மீது சுமத்தினார்.

Top

கடவுள் எவ்வளவு நீதியுள்ளவரோ அவ்வளவு அன்புள்ளவர். இது சட்டப்படி நியாயமல்ல என்றே தோன்றும். ஆனால், கெட்டுப்போன நம்மை காப்பாற்ற, கடவுள் தன் சொந்த மகனை பாவபரிகார பலியாக அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லாததால் இப்படிச் செய்தார். நம்மீது இறைவன் வைத்திருக்கும் அளவு கடந்த அன்புதான் இயேசுவை சிலுவையில் அறைந்து கொலை செய்யப்பட அனுமதித்தது. ஆண்டவர் சினங்கொள்ளத் தாமதிப்பவர் அருளிரக்கம் காட்டுவதில் அளவு கடந்தவர் குற்றங்களையும் குறைகளையும் மன்னிப்பவர் (எண்.14:18). நீங்கள் உங்கள் சிறுவயது மகனோடு கடைவீதியில் நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்களது கையிலிருந்து சற்றுநேரம் விடுபட்ட சிறுவன் திடீரென்று ஒரு கல்லை எடுத்து விளையாட்டுத்தனமாக ஒரு கடையிலுள்ள கண்ணாடிக் கதவில் எறிந்து கதவு உடைந்துவிட்டது. உடனே, அந்த கடையின் உரிமையாளர் உங்கள் மகனை பிடித்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறார். நீதிமன்றத்தார் உங்கள் மகனிடம் 25000 ரூபாய் அபராதம் செலுத்தவோ அல்லது 6 மாத

Top

சிறைத்தண்டனை அனுபவிக்கவோ சொல்கிறார்கள். உடனே நீங்கள் உங்கள் மகனிடம், “அபராதத் தொகையை நீயே செலுத்து அல்லது 6 மாத சிறைத் தண்டனையை நீயே அனுபவி” என்று கூறுவீர்களா? நிச்சயமாக கூறமாட்டீர்கள். உங்கள் சொந்த பணத்தை கொடுத்து உங்கள் மகனை அந்தத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவீர்கள். உங்கள் மகன் குற்றம் செய்திருக்க குற்றம் செய்யாத நீங்கள் அந்த குற்றத்திற்குரியத் தண்டனையை அனுபவித்தது நியாயமா, அநியாயமா என்று கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? சட்டப்படி மகன்தான் தண்டனை அனுபவிக்க வேண்டும். ஆனால், உங்கள் மகன்மீது நீங்கள் வைத்திருக்கும் மிகப்பெரிய அன்பு தான் உங்களை அப்படி செய்ய வைத்தது. உங்கள் மகன்மீது உங்களுக்கு இவ்வளவு கருணையும் கிருபையும் இருக்குமானால், அந்த காருண்யேஸ்வரன் மொத்த உலகத்தின் மீதும் கருணைப் பிரபுவாக இருப்பதை தவறு என்று நீங்கள் எப்படிக் கூற முடியும்? ஓர் உணவு விடுதிக்கு சென்று நீங்களும் உங்கள் நண்பரும் சேர்ந்து உணவு உண்டபின், நீங்கள் உண்ட உணவுக்கான தொகையையும் சேர்த்து உங்கள் நண்பன்

Top

செலுத்தினால், அவர் செய்ததை அநியாயமென்று கூறமுடியுமா? உங்கள் மேல் வைத்திருக்கும் அன்பினால் உங்களுக்கு அவர் கொடுத்த விருந்தை அநியாயமென்று கூறமுடியுமா? கடவுள் தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையேத் தருமளவுக்குக் கடவுள் உலகின்மேல் (மக்கள்) அன்புகூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார் (யோவா.3:16,17). நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல. மாறாக அவர் நம்மீது அன்புகொண்டு தம் மகனை நம் பாவங்களுக்கு பரிகாரமாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது (1யோவா.4:10). “என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல” என்கிறார் ஆண்டவர் (எசா.55:8).

ஆராதனை தூதன் லூசிபர் குற்றம் செய்து சாத்தானாக மாறிய உடனேயே அவனை கடவுள் அழிக்காமல் விட்டுவைத்ததில் நிச்சயமாக ஒரு நோக்கம் இருந்திருக்கும். அவன் பாம்பின்

Top

உருவில் ஏதேன் தோட்டத்தில் நுழைந்து ஆதாமையும் ஏவாளையும் சோதிக்காதபடி கடவுள் நினைத்திருந்தால் தடுத்திருக்கலாம். அவர் அப்படி தடுக்கவில்லை. கடவுள் அவனை அனுமதித்ததிலும் ஒரு நோக்கம் இருந்திருக்கும். அத்தோட்டத்தில் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான ஒரு மரத்தை கடவுள் வைத்து, "அம்மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே ஏனெனில், அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்" (தொ.நூ.2:17) என்று கூறியதிலும் நிச்சயமாக ஒரு நோக்கம் இருந்திருக்கும். நன்மை தீமை அறியாத ஆதாமுக்கும், ஒரு பச்சைக் குழந்தைக்கும் எந்த வித்தியாசமும் இருந்திருக்காது. என் குழந்தையின் கை எட்டும் தொலைவில் ஒரு விஷபுட்டியை நான் வைப்பேனா? அப்படியே வைத்தால் ஒரு நோக்கத்தோடு தான் வைப்பேன். கடவுள் மனிதனை சுய ஆதீன வடிவத்தில் படைத்ததால், அவன் பாவம் செய்யும்போது கடவுள் அவனைத் தடுத்து நிறுத்தவில்லை. ஆக, மனிதன் குற்றவாளியாக மாறியதற்கு முழு பொறுப்பையும் மனிதன் மேல் கடவுள் சுமத்த முடியவில்லை. அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காகவே

Top

கடவுள் அனைவரையும் கீழ்ப்படியாமைக்கு உட்படுத்தினார் (உரோ.11:32).

## 7. இயேசுவால் நோய்களை குணப்படுத்த முடியுமானால், கிறிஸ்தவர்கள் மருத்துவமனைகள் தொடங்க வேண்டிய தேவை இல்லையே?

உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால், திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர்மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பிவிடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்புப் பெறுவார் (யாக். 5:14,15). இயேசுவை நம்புபவர்களை மட்டும்தான் இயேசுவால் குணப்படுத்த முடியும் (யோவா.11:40). இயேசு மனித வடிவத்தில் வாழ்ந்த நாட்களில் தன்னிடம் வந்த எந்த நோயாளியையும் குணப்படுத்தினார் (மத்.4:23). பிசாசின் ஆக்கிரமிப்பால் பாதிக்கப் பட்டவர்களிடமிருந்து பிசாசை

Top

துரத்தினார் (மத்.8:28-33). அவரைப் பின்பற்றிய சீடர்களும் அவ்வண்ணமே அற்புதங்கள் செய்தனர்; (தி.பணி.3:1-11). பிசாசினால் பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனை அவன் தகப்பன் இயேசுவிடம் கொண்டுவந்து, “நீர் ஏதாகிலும் செய்யமுடியுமானால் எங்கள் மேல் மனதிரங்கி எங்களுக்கு உதவி செய்யவேண்டும்” என்றான். இயேசு அவனை நோக்கி, “நீ நம்பமுடியுமானால் உதவி செய்யமுடியும், நம்புகிறவனுக்கு எல்லாம் முடியும்” என்று உறுதியளித்தார் (மாற்.9:17-23). நோய் குணமாக வேண்டுமென்று விரும்புகிறவர்கள் கடவுளை முழுமையாக நம்பவேண்டும். “நம்பிக்கை இல்லாமல் எவரும் கடவுளுக்கு உகந்தவராய் இருக்க இயலாது” (எபி.11:6) என்று வேதம் கற்பிக்கிறது. முடக்குவாத நோயுடைய ஒருவனை இயேசுவிடம் கொண்டுவந்தபோது, அவர்களுடைய நம்பிக்கையை கண்டு அவனைக் குணமாக்கினார் (மத்.9:2). பன்னிரெண்டு ஆண்டுகளாக இரத்தப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவர் பலரிடம் தமக்குள்ள செல்வம் எல்லாவற்றையும் இழந்து, தன் வாழ்க்கையே ஒரு கேள்விக் குறியாகிப்போய், ஊர்மக்களால் ஊரைவிட்டு விலக்கி

Top

புறம்பாக்கப்பட்ட அபலைப்பெண் ஒருத்தி, இயேசுவின் ஆடையைத் தொட்டால் நலம்பெறுவேன் என நம்பி, அவரது ஆடையின் ஓரத்தை தொட்டவுடனேயே அன்றுவரை அவளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த அந்த கொடூரநோய் அவளை விட்டு விலகியது. உடனே இயேசு அவளிடம், "மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று; அமைதியுடன் போ; நீ நோய் நீங்கி நலமாயிரு" (மாற்.5:25-34) என்றார். இந்த சம்பவத்திலும் இயேசு நம்பிக்கையைத்தான் மெச்சிப் பேசுகிறார்.

ஒருமுறை இரண்டு குருடர்கள் இயேசுவின் பின்சென்று, எங்களுக்கு இரங்கும் என்று பிரார்த்தனை செய்தார்கள். இயேசு அவர்களை நோக்கி, "இதை செய்ய எனக்கு வலிமை உண்டென்று நம்புகிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஆம், நம்புகிறோம் ஆண்டவரே" என்றார்கள். அப்பொழுது அந்த குருடர்களின் கண்களை அவர் தொட்டு, "நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும்" என்றார். உடனே, அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன (மத்.9:27-30). இந்த சம்பவத்திலும் குருடர்களுடைய இறைநம்பிக்கையின் படியே அவர்கள் பார்வையடைந்தனர். இராணுவத்தில் வேலை

Top

பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் இயேசுவிடம் வந்து, “ஆண்டவரே, என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான்” என்று அவரிடம் கூறினான்;. இயேசு அவனை நோக்கி, “நீ போகலாம், நீ நம்பியபடியே உனக்கு ஆகட்டும்” என்றார். அந்நேரமே அவனுடைய வேலைக்காரன் குணமானான் (மத்.8:5-13). இந்த நிகழ்ச்சியிலும் நம்பிக்கை என்னும் அஸ்திபாரத்தின் மீது தான் அற்புதம் என்னும் கட்டடத்தைக் கட்டுகிறார் கடவுள். நோயாளிகள் இயேசுவிடமிருந்து அற்புத சுகத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமானால், அவரை முழுமையாக நம்ப வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். நம்பிக்கை உள்ளவர்களை மட்டும்தான் இயேசு குணப்படுத்தினார். ஆயிரம் பேருந்துகள் ஒரு பேருந்து நிலையத்தில் வந்து நின்றாலும், அதில் எதிலுமே ஏறாமல் இருந்தால் நாம் விரும்பும் இடத்திற்கு போகமுடியாது. அதுபோல கடவுளை (இயேசுவின் நாமத்தில்) முழுமையாக நம்பாமல் குணமடைய முடியாது. குணமாக விரும்பும் அநேகருக்கு இயேசுவை தங்கள் வாழ்வின் தலைவராக ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கிறதே! இயேசு யாருடைய

Top

மதத்தையும் மாற்ற வரவில்லை. அவரை நம்பினால் இலவசமாக புதுவாழ்வு தருகிறார். கடினமாக உழைத்து படிக்கும் மாணவனுக்கு வெற்றி நிச்சயம். படிக்கவேண்டிய நேரத்தில் தூங்கியவர்கள் பரீட்சையில் தோல்வியடைந்து, "எனக்கு அதிர்ஷ்டம் இல்லை" என்று அலட்டுவதில் பயனென்ன?

நமது வீட்டில் இருக்கும் வானொலிப் பெட்டியை ஒரு குறிப்பிட்ட அதிர்வு எண்ணுக்கு இசைவு செய்தால்தான் நிகழ்ச்சியை கேட்கமுடியும். கொஞ்சம் கவனமாக இருந்தால் வாழ்வை நிம்மதியாக வாழலாம். ஒரு குழந்தை தன் தாயை எப்படி நம்புகிறதோ, அதுபோல நாமும் இறைவனை நம்புவோமானால், பதட்டப்படாமல் வாழலாம். எந்த நோய்களையும் குணப்படுத்தும் வலிமை இயேசுவுக்கு உண்டு. ஆனால், "எங்களுக்கு எங்கள் மதம்தான் முக்கியம் செத்தாலும் எங்கள் பாரம்பாரியம்தான் எங்கள் வாழ்க்கையின் லட்சியம்" என்பவர்கள் நிச்சயமாக இயேசுவிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. வருடம் முழுவதும் மழை பெய்தாலும் சமையலுக்கு நீர் இல்லையானால் அதன் காரணமென்ன? மழைத்தண்ணீரை பாத்திரம் வைத்து சேகரிக்கவில்லை என்றுதானே அர்த்தம்! கிறிஸ்துவின்

Top

திருப்பணியாளர்கள் நடத்தும் குணமளிக்கும் கூட்டங்களில் நோயாளிகள் பலர் குணமடைகிறார்கள். ஆனால், இயேசுவிடம் நம்பிக்கை வைக்காததால் ஒருசிலர் குணமடையவில்லை. இயேசு அன்று மனிதவடிவில் அருட்பணி செய்தபோது அவரோடு ஆயிரக்கணக்கான மக்கள் சுற்றித்திரிந்தார்கள். ஆனால், அவர்களில் அநேகர் குணமடையவில்லை. காரணம், அவர்கள் அவரை நம்பவில்லை (மத்.13:58). இயேசு தம்மை நம்பும் எவரையும் கைவிடுவதுமில்லை வெட்கப்படுத்துவதுமில்லை. “நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” (எபி.13:5) என்று உறுதி கூறியிருக்கிறாரே! கர்த்தரை நம்புகிறவர்கள் வெட்கப்பட்டு போவதில்லை (உரோ.10:11) என்று வேதம் நம்மைப் படிப்பிக்கிறது. ஆனால், ஆண்டவர் யாரையும் கட்டாயப்படுத்தி தன்னை பின்பற்ற வைக்கமாட்டார் (தி.வெ.3:20, 2கொரி.9:7). “கேளுங்கள் தரப்படும்” (மத்.7:7) என்று எல்லோருக்கும் பொதுவாகத்தானே கூறியிருக்கிறார்.

ஒரு சிற்பி ஒரு மரத்துண்டை ஒரு அழகிய சிற்பமாகப் பார்க்கிறான். ஆனால், விறகு பொறுக்கும் பெண்ணின்

Top

பார்வையில் அது வெறும் விறகுதான். அதுபோல இயேசுவை புத்தர், காந்தி என்று மனிதர்களின் பட்டியலில் வைத்துப்பார்ப்பவர்களுக்கு, இயேசு எந்த அற்புதங்களையும் செய்யமுடியாது. ஆனால், அவரை கடவுளாகப் பார்ப்பவர்கள் எளிதில் குணமடையமுடியும். ஆண்டவரைப் பற்றி ஒரு போதகர் தெருமுனையில் பிரச்சாரம் செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். இதைக் கேட்டு ஒருவர் “இது மூடநம்பிக்கை” என்று கேலிசெய்கிறார். வேறொருவர் இயேசுவை நம்பி வாழ்வில் மறுமலர்ச்சியடைகிறார். நம்பிக்கையில்லாமல் பலர் கேட்கிறபடியால் கேட்கும் செய்தி அவர்களுக்கு பயனின்றிப் போகின்றது (எபி.4:1). கிறிஸ்தவர்கள் மருத்துவமனைகளை ஆரம்பிப்பது கிறிஸ்தவர்களுக்காக மட்டுமல்ல மற்றவர்களுக்காகவும் தான். “கிறிஸ்தவர்களின் மருத்துவ சேவை கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே” என்று யாரும் சட்டமிட முடியாது. நோயோடு வரும் ஒருவரை, “நீ கட்டாயம் இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்று வற்புறுத்த முடியாது. அவர் முழுமனதோடு இயேசுவை ஏற்றுக்கொள்வது வரை அவருக்கு மருத்துவமனை

Top

தேவையல்லவா! கிறிஸ்தவ மருத்துவமனைகளில் வந்து குணமடைந்தவர்கள் எல்லாரும் கண்டிப்பாக கிறிஸ்தவத்தை தழுவ வேண்டுமென்று கட்டாயப்படுத்தவும் முடியாது. ஜெபத்தின் மூலம் தெய்வீக குணமடைந்தாலும், கிறிஸ்தவ மருத்துவர்கள் தங்களிடம் வரும் இறைநம்பிக்கையே இல்லாத நோயாளிகளுக்கும் மருந்து கொடுத்து காப்பாற்றுவது அவர்களுடைய கடமையல்லவா? "என்னிடம் வருபவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவா.6:37) என்று இயேசு கூறுகிறார். தன்னிடம் வருபவர்கள் எந்த மதத்தினரானாலும் ஏற்றுக்கொண்டு நலவாழ்வு தரும் மதபேதமில்லாத தெய்வம் கிறிஸ்து. "நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் உயிரையே கொடுக்கிறான். நானே நல்ல மேய்ப்பன்" (யோவா.10:11) என்று இயேசு கூறினார். அவரை நம்பாத சந்தேகப் பிராணிகளைப் பார்த்து, "நீங்கள் நம்பாமல் இருக்கிறீர்கள். ஏனெனில், நீங்கள் என் மந்தையைச் சேர்ந்தவர்களல்ல" (யோவா.10:26) என்றும் கூறுகிறார்.

இலாசர் என்னும் ஒருவர் இறந்து கல்லறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இயேசு கல்லறை அருகில் சென்று

Top

அங்கே நிற்பவர்களிடம், “இந்த கல்லறையின் கல்லைப் புரட்டிப் போடுங்கள்” என்று கூறினார். உடனே அவருடைய தெய்வீக சக்தியை நம்பி, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அக்கல்லை புரட்டிப்போட்டனர். உடனே சடலத்தை நோக்கி, “இலாசரே வெளியே வா” என்றார். இலாசர் உயிர்பெற்று, நடந்து வந்தார். கீழ்படிந்தால் அற்புதம் நடக்கும். பெரியவர் இயேசுவின் அறிவுரைக்கு அடிப்பணிந்தால் அதிசயம் நடக்கும். நாகமானுடைய தொழுநோய் நீங்க வேண்டுமானால் யோர்தானில் அவர் ஏழுமுறை மூழ்கி எழவேண்டும் என்று எலிசா இறைவாக்கினர் கூறினார். அவர் கேள்விக்கணை தொடுத்துக் கொண்டிருந்தவரை எதுவும் நடக்கவில்லை. கீழ்படிந்து அவர் சொன்னபடியே ஏழுமுறை மூழ்கியெழுந்தார் தொழுநோய் குணமானது (2அர.5:1-14). இயேசு மனிதனாக இம்மண்ணில் புரட்சிகரமாக ஆன்மீகப்பணி செய்தபோது அவரது பணியின்மீது பொறாமைப்பட்டு, அவரைப் புரிந்துகொள்ளாமல் அவரைப் பார்த்து “பைத்தியக்காரன், பேய்பிடித்தவன்” என்றெல்லாம் பரிகசித்தவர்களால் இயேசுவின் அருளாசியை

Top

பெறமுடியவில்லை. அன்றும் இன்றும் இயேசுவை நம்பினோர் கெட்டுப்போகவில்லை.

## 8. இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார் என்று எப்படி சொல்கிறீர்கள்?

**இயேசுவுக்கு முடிவில்லை என்பதை அவர் அறிந்தபடியால், "இறந்தேன்; ஆனாலும் இதோ என்றென்றும் உயிரோடிக்கிரேன்" (தி.வெ.1.18) என்றும் "உலகத்தின் முடிவுரை நான் உங்களோடு இருக்கிறேன்" (மத்.28:20) என்றும் கூறுகிறார். கிறிஸ்து உயிர்த்தெழுந்து இன்றும் அவர் செய்யும் அற்புதங்கள் மூலம் அவர் உயிரோடுருக்கிறார் என்று நாம் தெளிவாக அறிகிறோம். மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளிகளும் பலர் இயேசுவின் பெயரில் உள்ள சக்தியால் குணமாகிரார்கள். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட கொடுமைவாதிகள், தீவிரவாதிகள், விபச்சாரிகள், கொள்ளைகாரர்கள், இயேசுவின் வல்லமையால் மனம்திரும்பி வாழ்வதை நடைமுறையில் காண்கிறோமே ! மதவெறி, மொழிவெறி, கட்சிவெறி, பணவெறி, ஜாதிவெறி,**

Top

**பிடித்து அலைந்த மனிதமிருகங்கள் இன்று இயேசுவால் தரமான மனிதர்களாக, புனிதர்களாக மாரிக்கொண்டுரிக்கிரார்களே ! இது வியப்பிற்குரியது அல்லவா ! இயேசு இன்றும் உயிரோடிக்கிறார் இதுவும் சான்றல்லவா?**

**இயேசுவைப்பற்றி பவுல், "கிறிஸ்து எழுந்திருகவில்லைஎன்றால் எங்கள் போதகங்கள் முழுவதும் பயனற்றவை" ( 1 கொரி 15:14 ). என்கிறார். "கிறிஸ்து என்றன்றைக்கும் இருக்கிறார். ( யோவா. 12 : 34 ) என்று வேதம் உறுதிப்படுகிறது. இயேசுவுக்கு "நித்யப்பப் பிதா" ( ஏசா.9:6 ) என்று வேறொரு பெயருமுண்டு. அவருடைய அரசாட்சி நித்யமானதென்று வேதம் கூறுகிறது. ( எபி.1:8 ).**

Top

## 9.பரலோகத்திற்கு போகும் ஒரே வழி இயேசுவானால், இயேசுவுக்குமுன் இறந்தோரும், அவரைத் தெரியாமல் இறப்போரும் எங்கே போவார்கள்?

வழியும், உண்மையும், வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவா.14:6) என்று இயேசு கூறினார். இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின்கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எப்பெயரும் கொடுக்கப்படவில்லை (தி.பணி.4:12) என்று பேதுரு கூறினார். ஆனால், நாம் ஒருவரிடம் ஒரு பொருளைக் கொடுக்காமல் அவரிடம் எதையும் திரும்ப கேட்க முடியாது. அதிகமாக ஒருவரிடம் கொடுத்தால் அவரிடம் அதிகமாக திரும்ப எதிர்பார்ப்போம். குறைவாக ஒருவரிடம் கொடுத்தால் குறைவாக திரும்ப எதிர்பார்ப்போம். அதுபோல, எவர்களுக்கு எப்படிப்பட்ட சட்டங்கள் கொடுக்கப்பட்டதோ அவர்கள் அந்த சட்டத்திற்கு கீழ்படியவேண்டும் என்று கடவுள் எதிர்பார்ப்பார்.

Top

ஆதியில் இறைவன் ஏதேன் என்னும் நந்தவனத்தில், மனிதன் உண்ணத்தக்க கனிகளைக் கொடுக்கும் மரங்களை உருவாக்கி இருந்தார். அந்த தோட்டத்தில் குடியமர்த்தப்பட்ட ஆதாம், ஏவாள் என்னும் நம் ஆதிப் பெற்றோரிடம் ஆண்டவர் அந்த எல்லா மரத்தின் கனிகளையும் உண்ணலாம் என்று உரிமை அளித்திருந்தார். ஆனால், தோட்டத்தின் நடுவிலே ‘மனிதன் உண்ணக்கூடாது’ என்று விலக்கப்பட்ட கனி கொடுக்கும் ஒரு மரத்தையும் கடவுள் உருவாக்கி இருந்தார். சாத்தான் ஏவாளை ஏமாற்றி அந்த விலக்கப்பட்ட மரத்தின் பழத்தை உண்ணத் தூண்டினான். அவனது சதி வலையில் அவர்கள் விழுந்தனர். ஆண்டவர் கொடுத்திருந்த ஒரே ஒரு சட்டத்திற்கு கூட ஆதாமும் ஏவாளும் கீழ்படிய முடியாமல் சாத்தானின் தந்திரத்திற்கு இரையாயினர். அன்றே அந்த அழகிய தோட்டத்தைவிட்டு அவர்கள் வெளியேற்றப்பட்டனர். அதன்பின் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் பிறந்தார்கள். அவர்கள் எல்லோருமே ஆதாம் செய்த பாவத்தால் பிறவியிலேயே பாவம் உடையவர்களாக இருந்தனர். அப்பொழுது மனிதனுடைய மனசாட்சிப்படி நல்லது எதுவோ

Top

அதை செய்ய கடவுள் அனுமதித்தார். தங்கள் மனசாட்சிப்படியே தவறென்று உணர்ந்ததை பாவமாக கடவுளும் கருதினார்.

அதன்பின், மோசே என்னும் ஒரு முனிவர் மூலமாக, மனிதன் எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது என்ற திருச்சட்டத்தையும், அவற்றை நிறைவேற்றாவிட்டால் என்னென்ன தண்டனைகள் என்றும் கடவுள் மக்களிடம் பேசினார். பின்பு, பெரும்பான்மையான மக்கள் திருச்சட்டத்தை ஒழுங்காக கடைபிடித்து தூய்மையாக வாழ வலிமையற்ற நிலைமையில் இருப்பதை கடவுள் கண்டார் (தி.பணி.15:10). எனவே, திருச்சட்டத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர நினைத்தார். "விண்ணும் மண்ணும் ஒழிந்து போனாலும் திருச்சட்டம் யாவும் நிறைவேறும் வரை அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.5:18) என்று இயேசு சொன்னார். திருச்சட்டம் நிறைவேறும்வரை ஒழியாது என்பதிலிருந்து நிறைவேறினால் ஒழியும் என்று அறிகிறோம். எனவே, கடவுளே திருச்சட்டத்தை நிறைவேற்றத் திட்டமிட்டார். பிறரிடத்தில் அன்புகூர்பவர் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவர்

Top

ஆவார். ஏனெனில், ‘விபச்சாரம் செய்யாதே, கொலை செய்யாதே, களவு செய்யாதே, பிறருக்குரியதைக் கவர்ந்திட விரும்பாதே’ எனும் கட்டளைகளும், பிற கட்டளைகளும், ‘உன்மீது அன்புகூர்வது போல், உனக்கு அடுத்தவர் மீதும் அன்புகூர்வாயாக’ எனும் கட்டளையில் அடங்கியுள்ளன. அன்பு அடுத்திருப்பவருக்குத் தீங்கிழைக்காது. ஆகவே, அன்பே திருச்சட்டத்தின் நிறைவு (உரோ.13:8-10) என்னும் வசனத்தின்படி, நம்மேல் அன்புவைத்து நமக்காக இயேசு உயிர்நீத்தார். யாராலும் நிறைவேற்ற முடியாத திருச்சட்டத்தை தன் அன்பினால் நிறைவேற்றினார் (மத்.5:17). இயேசு சட்டத்தை நிறைவேற்றினதால் சட்டம் ஒழிந்தது (மத்.5:18, எபே.2:15). இனி, திருச்சட்டத்திற்கு நம்மேல் வலிமையில்லை. இயேசு தன் அன்புக் கொள்கையை மனிதனுக்கு போதித்தார். இறைவனுடைய அன்பால் எல்லா மக்களும் அவரிடம் ஈர்க்கப்படுகிறார்கள்.

ஏதேனில், ‘விலக்கப்பட்ட கனியை உண்ணக்கூடாது’ என்ற சட்டத்தை கடவுள் ஆதாமுக்கு கொடுக்காதிருந்தால் அந்த பழத்தை உண்டாலும் அது பாவமல்ல. களவு செய்யக்கூடாது,

Top

பொய் சொல்லக்கூடாது என்ற சட்டங்கள் கொடுக்கப்படுவதற்கு முன், மனசாட்சிப்படி அவை தவறென்று தெரியாததினால் அவற்றின்படி வாழாதிருந்தாலும் அதை கடவுள் குற்றமாக கருதமுடியவில்லை. எனவே தான், “திருச்சட்டம் தரப்படுமுன்பும் உலகில் பாவமிருந்தது ஆனால், சட்டமில்லாதபோது அது பாவமாகக் கருதப்படவில்லை” (உரோ.5:13) என்று கடவுள் கூறுகிறார்.

இன்று நாம் வாழும் சமுதாயத்தில் அரசாங்கசட்டம், தனிப்பட்டச்சட்டம், சமுதாயச்சட்டம், ஆன்மீகச்சட்டம் என பலவித சட்டங்களுண்டு. வண்டி ஓட்டுபவர் ‘ஓட்டுநர் உரிமம்’ வைத்திருக்க வேண்டுமென்பது அரசாங்கச்சட்டம். அதிகாலையில் எழுந்தவுடன் காலைக்கடன்களை முடித்து சுறுசுறுப்பாய் வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்பது தனிப்பட்டச்சட்டம். ஒருவர் உங்களைப் பார்த்து ‘காலை வணக்கம்’ என்று சொல்லும்போது, நீங்கள் பதிலுக்கு ‘காலை வணக்கம்’ என்று சொல்ல வேண்டியது சமுதாயச்சட்டம். எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளிடம் அன்புகூரவேண்டும்;நம்மை நாம் நேசிப்பதுபோல பிறரையும்

Top

நேசிக்க வேண்டும் என்பது ஆன்மீகச்சட்டம். இந்த எல்லா சட்டங்களின்படியும் நாம் கீழ்ப்படிந்து வாழ வேண்டுமென்று கடவுள் எதிர்பார்க்கிறார். இறைவனுடைய அன்புச்சட்டம் கொடுக்கப்படுவதற்கு முன் அதை அறியாதிருக்கும் நிலையில் தன் மனசாட்சிப்படி தூய்மையாக வாழ்ந்தால், அவனை நரகத்தில் போட கடவுள் அநியாயமானவரல்ல. நிச்சயமாக அவன் இரட்சிக்கப்படுவான். திருச்சட்டத்தைப் பெற்றிராத பிறஇனத்தார், அதிலுள்ள கட்டளைகளை இயல்பாகக் கடைபிடிக்கும்போது அவர்களுக்கு திருச்சட்டம் இல்லாத போதிலும், தங்களுக்குத் தாங்களே சட்டமாய் அமைகிறார்கள். திருச்சட்டம் கற்பிக்கும் ஒழுக்கநெறி, தங்கள் உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் தங்கள் நடத்தையில் காட்டுகிறார்கள். அவர்களது மனச்சான்றே இதற்கு சாட்சி. ஏனெனில், அவர்கள் செய்வது குற்றமா, குற்றமில்லையா என அவரவர் எண்ணங்களே வெளிப்படுத்துகின்றன (உரோ.2:14,15). அதாவது, இறைவனது திருச்சட்டத்தையோ, இயேசுவின் அன்புக்கொள்கையையோ கேள்விப்படாதவர்கள் எது பாவம், எது பாவமல்ல என்னும் அறிவு வந்தபின் பாவம்

Top

செய்து இயேசுவின் இரத்தத்தால் மன்னிக்கப்படாவிட்டால் அவர்களுடைய மனசாட்சியின்படி தீர்ப்பிடப்படுவர். சட்டம் இல்லையேல் பாவத்திற்கு உயிரில்லை. “ஒருகாலத்தில் சட்டமில்லாதபோது நான் உயிருள்ளவனாக இருந்தேன். கட்டளை தரப்பட்டபோது பாவம் உயிர்பெற்றது. ஆனால், திருச்சட்டம் வழியாக அன்றி பாவமென்றால் என்ன என்று நான் அறிந்திருக்க மாட்டேன். எப்படியெனில் ‘பிறருக்குரிய எதையும் கவர்ந்திட விரும்பாதே’ என்று சட்டம் சொல்லாதிருந்தால் அப்படி கவர்வது பாவமென்று நான் தெரிந்திருக்கமாட்டேன்”(உரோ.7:7-9) என்று பவுல் கூறுகிறார்.ஒருமுறை இயேசு மக்களிடம் பேசும்போது, “நான் வந்து அவர்களிடம் பேசியிருக்காவிட்டால் அவர்களுக்கு பாவமிராது.ஆனால், இப்போது அவர்கள் தங்கள் பாவத்திற்கு சாக்குப் போக்குச் சொல்ல வழியில்லை வேறு யாரும் செய்திராத செயல்களை நான் அவர்களிடையே செய்யவில்லையென்றால் அவர்களுக்குப் பாவமிராது. ஆனால், இப்போது அவர்கள் என்னையும் என் தந்தையையும் கண்டு வெறுத்தார்கள்” (யோவா.15:22,24) என்றார். மேற்கண்ட வசனங்களிலிருந்து, இயேசு தன்னைத்தானே நமக்கு

Top

வெளிப்படுத்தாமல் நாம் இயேசுவை அறியமுடியாது நமக்கு தண்டனை கொடுக்க முடியாதென்று அறிகிறோம். அவர் நீதியுள்ள தெய்வம். “கடவுளுடைய விருப்பத்தை அறியாமல், தண்டனைக்கு தகுதியான செயல்களைச் செய்பவன் சில அடிகளை பெறுவான். மிகுதியாகக் கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாக எதிர்பார்க்கப்படும். மிகுதியாக ஒப்படைக்கப்படுபவரிடம் இன்னும் மிகுதியாகக் கேட்கப்படும்” (லூக்.12:48) என்று குருநாதன் கூறியிருக்கிறார். மக்கள் அறியாமையில் வாழ்ந்த காலத்தில் கடவுள் காணாதவர் போலிருந்தார். ஆனால்,இப்போது எங்குமுள்ள மனிதர் யாவரும் மனம்மாற வேண்டுமென்று கட்டளையிடுகிறார் (தி.பணி.17:30). ஒருவரையும் அநீதியாக நியாயம் தீர்க்காத சத்தியமூர்த்தி நிச்சயமாக தவறு செய்யமாட்டார். எனவே, செத்துப்போனவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், இப்போது வாழும் மக்களைப்பற்றி கவனிப்போம். கர்த்தருடைய நியாயதீர்ப்புகள் அளவிடப்படாதவைகள் (உரோ.11:33). உலகிற்கு அவர் நீதியான தீர்ப்பு வழங்குவார் மக்களினத்தார்க்கு நேர்மையான தீர்ப்பு கூறுவார் (தி.பா.9:8,11:7). கடைசி

Top

நாட்களில் நியாயத்தீர்ப்பின் முழுபொறுப்பும் இயேசுவிடமே உள்ளது (யோவா.5:22). ஆனாலும், அவர் மனிதனாய் சுற்றித்திரிந்தபோது யாரையும் நியாயம் தீர்க்கவில்லை (யோவா.12:47). அதுபோல, நாமும் யாரையும் நியாயம் தீர்க்கவேண்டாம். அதை கடவுள் பார்த்துக்கொள்வார்.

## 10. கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரியவர்.

எல்லாருக்கும் நன்மை பயக்கும் ஒரு கொள்கையை ஏன் மூடிவைக்கவேண்டும். திருநெல்வேலி மக்கள் மட்டுமே பலசரக்குக்கடை வைக்க முடியும், கேரளத்து மக்கள் மட்டும் தான் உணவகம் நடத்த முடியும் என்று யாராவது கூறினால் நீங்கள் ஒத்துக்கொள்வீர்களா? காற்று எல்லோருக்கும் பொதுவானது, கடவுளும் அனைவருக்கும் பொதுவானவர். தமிழ் தமிழனுக்கு மட்டுமே சொந்தம் வேறு யாரும் தமிழ் கற்கக்கூடாது என்று கூறமுடியுமா? ஒரு வெள்ளைக்காரன் தமிழ் கற்பது அநியாயமென்று கூறமுடியுமா? இந்தியாவுக்கு ஒரு அமெரிக்கன் வரும்போது அமெரிக்க காற்றை ஒரு சிலிண்டரில் அடைத்து

கொண்டுவந்து சுவாசிக்க வேண்டும் என்று இந்திய அரசு கட்டளையிட முடியுமா? கிறிஸ்துவின் நற்செய்தியை முதல் நூற்றாண்டு யூதர்களும் பிறரும் ஏற்றுக்கொண்டபோது அவர்கள் கிறிஸ்துவின் சீடரானார்கள். அவர்கள் அவருடைய மீட்புக் கொள்கையை தழுவுவதற்குமுன் கிறிஸ்தவர்களல்ல. எந்த ஜாதியினரும், எந்த மொழி பேசுபவர்களும், எந்தநாட்டைச் சார்ந்தவர்களும், எந்த படிப்புடையவரும், எந்த கலாச்சாரத்தை சார்ந்தவர்களும், எந்த நாகரீகத்தை பின்பற்றும் மக்களும் இயேசுவின் மீட்புக் கொள்கையைத் தழுவலாம். இயேசுவின் அன்புக்கொள்கை இன்று பட்டிதொட்டிகள், சந்து பொந்தெல்லாம் பறைசாற்றப்படுகிறது. இயேசுவின் கொள்கையை கடைபிடிக்க ஒரு குறிப்பிட்ட மதத்தை சார்ந்தவராக இருக்கவேண்டுமென்று எந்த நிபந்தனையுமில்லை. ஒரு கிறிஸ்தவர் பிராமணராக மாறமுடியாது. பிராமணராக பிறந்தவர்கள் மட்டும் தான் பிராமணீயத்தைக் கடைபிடிக்க முடியும். ஆனால், ஒரு பிராமணர் கிறிஸ்தவராக மாறலாம். ஆயிரக் கணக்கானோர் மாறியுமிருக்கிறார்கள். கிறிஸ்தவத்தை யாரானாலும் கடைபிடிக்கலாம். இயேசு கிறிஸ்துவுக்கு

Top

எம்மதமும் சம்மதம் என்ற பாடல் அடங்கிய ‘எவரும் விரும்பும் ஓர் இனிய தெய்வம்’ என்னும் குறுந்தகட்டை வாங்கி கேளுங்கள். (மேற்கண்ட ஒலித்தட்டு வேண்டுமானால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்) தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசாங்க கோயில்களிலும் இந்துக்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்னும் பலகை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எந்த கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலங்களிலும் கிறிஸ்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்று எழுதப்பட்ட பலகையை பார்க்கமுடியாது. ஏனெனில், இயேசுவின் பிறப்புச் செய்தியை அறிவித்த வானதூதர், “அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்” என்றனர். இயேசு பொதுமக்களிடம் பேசுகையில், “வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்கள் எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்.11:28) என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன்” (யோவா.6:37) என்று எல்லோரையும் அழைக்கிறார். உயிர்த்தெழுந்த இயேசு தன் சீடரைப் பார்த்து, “நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள்,

Top

தந்தை, மகன், தூயஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத்.28:19,20) என்றார். இங்கு எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்கச் சொல்கிறார். எல்லா மனிதரும் மீட்பு பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார். அனைவரின் மீட்புக்காக அவர் தம்மையே ஈடாக தந்தார் (1திமொ.2:4-6). இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும் (பிலி.2:10,11) என்று திருத்தூதர் பவுல் கூறுவதிலிருந்து, கிறிஸ்தவம் உலக மக்கள் எல்லாருக்கும் பொதுவானது என்று அறிகிறோம். உலகிலுள்ள எல்லா மக்களும் ஒரு நாள் நிஜத்தை புரிந்து கொள்வார்கள். ஒரு கிறிஸ்தவர் கூட இல்லாதிருந்த இந்தியாவில் முதன்முதலாக தோமா என்னும் ஒரு திருத்தூதர் வந்து நற்செய்தியைக் பறைசாற்றி இன்று பலகோடி மக்கள் உண்மையை புரிந்து கொண்டு இயேசுவின் மீட்புக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்று

இந்தியாவிலுள்ள ஏதாவது உயிரோட்டமுள்ள திருச்சபையில் சென்று அங்குள்ளவர்களிடம் கேட்டால் நூற்றுக்கு 90% மக்கள் இந்து பின்னணியிலிருந்து வந்;தவர்களாகத்தான் இருப்பார்கள். இவராலேயன்றி (இயேசு) வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால், நாம் மீட்பு பெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே இவரது பெயரன்றி வேறெந்த பெயரும் கொடுக்கப்படவில்லை (தி.பணி.4:12) என்று பேதுரு கூறுகிறார்.

வழியும், உண்மையும், வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவா.14:6) என்று இயேசு கூறுகிறார். நம் பாவங்களுக்கு பரிகாரம் அவரே. நம் பாவங்களுக்கு மட்டுமல்ல அனைத்து உலகின் பாவங்களுக்கும் பரிகாரி அவரே (1யோவா.2:2) என்று யோவான் தெளிவாக்குகிறார். பரலோகத்தில், எல்லா நாட்டையும், குலத்தையும், இனத்தையும், மொழியையும், சார்ந்தவர்களும் வருவார்களென்று வேதம் தெளிவாக்குகிறது. இதன்பின் யாராலும் எண்ணிக்கையிட முடியாத பெரும் திரளான மக்களைக் கண்டேன். அவர்கள் எல்லா நாட்டையும், குலத்தையும் மக்களினத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள் அரியணைக்கும்,

Top

ஆட்டுக்குட்டிக்கும் (இயேசு) முன்பாக நின்றுகொண்டிருந்தார்கள் வெண்மையான தொங்கலாடை அணிந்தவர்களாக கையில் குருத்தோலைகளை பிடித்திருந்தார்கள் (தி.வெ.7:9). இதில் யூதர்கள் என்றோ, கிரேக்கர் என்றோ வேறுபாடில்லை. அனைவருக்கும் ஆண்டவர் ஒருவரே. அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களை பொழிகிறார்; (உரோ.10:12).

## 11.இயேசு எல்லோரையும் நேசித்தால் ஒரே நேரத்தில் எல்லோரையும் இரட்சிக்கலாமே !

முடியும். ஆனால், அப்படி செய்தால் அது 'மன' மாற்றமாக இருக்காது; 'மத' மாற்றமாகத்தான் இருக்கும். மனிதன் முழுமனதோடு இயேசுவை ஏற்றுக்கொண்டு, எந்த கட்டாயமும் இல்லாமல், முழுவிருப்பத்தோடு அவரைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நாம் விரும்பாத ஒரு கொள்கையை 'தலைவிதி' என்று கடைபிடிப்பதை கடவுள் விரும்பவில்லை.

Top

கடவுள் மனிதனை ஒரு இயந்திரமாக படைக்கவில்லை. அவனை தன்னுடைய சாயலாக படைத்ததால் கடவுளுக்கு அவர் விரும்பியதை செய்யும் உரிமை உள்ளதுபோல், மனிதனுக்கும் அவன் விரும்பியதை செய்யும் உரிமையளித்தார். கடவுள் மனிதனை ஒரு மிருகமாகவோ, பறவையாகவோ படைக்கவில்லை. மிருகங்களுக்கு அதிகபட்சமாக ஐந்து அறிவுகளைக் கொடுத்தார். ஆனால், மனிதனுக்கு ஆறாம் அறிவு என்னும் பகுத்தறிவையும் கொடுத்தார். அந்த ஆறாவது அறிவை தீர்மானம் செய்ய கொடுத்தார். கடவுளை பின்பற்றுவதும் பின்பற்றாததும் மனிதனுடைய விருப்பமே. அந்த உரிமையில் கடவுள் தலையிட்டு அவனுடைய சுதந்திரத்திற்கு ஊறுவிளைவிக்க மாட்டார். யாரையும் கட்டாயப்படுத்தி தன் கொள்கையைத் திணிக்கமாட்டார். இதோ, நான் கதவருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன். யாராவது என் குரலைக்கேட்டு கதவை திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு உண்பேன் அவர்களும் என்னோடு உணவு உண்பார்கள் (தி.வெ.3:20) என்று இயேசு கூறினார்.

Top

ஆனால், கடவுளை அறியாமல், அவரை நம்பாமல், தான்தோன்றித் தனமாக நடக்கும் எவரையும் சாத்தான் விட்டுவைக்க மாட்டான். நாம் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ அதை செய்யவிடாமல் தடைசெய்வான். மனிதன் நிம்மதியாக வாழ்வதற்கு என்னென்ன தடைகளை உருவாக்க முடியுமோ எல்லா சதிவேலைகளையும் அவன் செய்வான். ஆனால், ஞானமாக இயேசுவை பற்றிக்கொண்டால் நிம்மதியாக வாழலாம். அதனால்தான் இயேசு, “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (மத்.11:28) என்று எல்லோரையும் அழைக்கிறார்.

## 12. இயேசு இந்தியாவுக்கு வந்து, இந்துமதக் குருக்களிடம் கற்றுத்தான் இஸ்ரவேலில் ஆன்மீகப்பணி செய்தார் என்பது உண்மைய அல்லவா?

நீங்கள் கூறுவதுபோல் இயேசு இந்தியாவுக்கு வந்து, இங்குள்ள இந்துமத குருக்களிடம் கற்றுத்தான் தனது பணியைச் செய்ய

Top

ஆரம்பித்தார் என்றால் அவரது கொள்கை, நோக்கம், கலாச்சாரமெல்லாம் இந்துமதத்தை சார்ந்தல்லவா இருக்கவேண்டும்! கிறிஸ்துவின் கொள்கைக்கும், இந்துமதக் கொள்கைக்கும் சம்பந்தமே இல்லையே. “இயேசு, கடவுள் ஒருவரே, அவரே வணக்கத்துக்கு தகுதியானவர்” (லூக்.4:8, மாற்.12:29) என்று மக்களுக்கு போதித்தார் என்று பரிசுத்த வேதம் கூறுகிறது. ஆனால் இந்துமதம், ‘எல்லாமே தெய்வம்தான்’ என்றல்லவா கற்பிக்கிறது. இயேசு வாசித்து, போதித்த பழைய ஏற்பாட்டில், பொய் தெய்வங்களை வணங்கக்கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆக, பொய்தெய்வம் என்றும் மெய்தெய்வம் என்றும் வேறுபடுத்திக் கூறுவது தெளிவாக தெரிகிறது. இந்த தத்துவத்தை இந்து மதத்தில் பார்க்கவே முடியவில்லையே. இயேசு, இந்துமத வேதங்களான ரிக், யஜூர், சாம, அதர்வ வேதங்களிலிருந்தோ, இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்களிலிருந்தோ, பகவத்கீதையிலிருந்தோ, எதையும் மேற்கோள்காட்டவோ, இவற்றை புனித புத்தகங்கள் என்று சுட்டிக்காட்டவோ இல்லையே! மாறாக, கிறிஸ்தவர்களின் பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் தன்னைக் குறித்து

Top

எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்கள் எப்படி தன்வாழ்வில் நிறைவேறியது என்பதை அல்லவா கூறினார்! இந்துமத குருக்களிடம் கற்றதை இயேசு போதித்திருந்தால், இந்துக்கள் கடைபிடிக்கும் இந்துமத அடிப்படைத் தத்துவமாகிய 'வருணாசிரமதர்மம்' என்னும் சமூகவிரோத ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை தானும் பின்பற்றி பிறருக்கு பரப்பவும் செய்திருக்க வேண்டுமே! ஆனால், மனிதருக்குள் பிறப்பு அடிப்படையில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்றல்லவா பிரசங்கித்தார். "பிறர் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அதையே நீயும் பிறருக்கு செய்" (மத்.7:12) "உங்களை நீங்கள் நேசிப்பதுபோல பிறரையும் நேசியுங்கள்" (லூக்.10:27) என்னும் உன்னதக் கொள்கைகளை அல்லவா இயேசு நமக்கு கற்றுத் தந்திருக்கிறார்! இந்துமதம் நம்பும் பலபிறவிக் கொள்கையை இயேசு நம்பியிருந்தால்,மனிதர் ஒருமுறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர் இறுதித்தீர்ப்பு வருகிறது. இதுவே அவர்களுக்கென உள்ள நியதி (எபி.9:29) என்று திருத்தூதர் பவுல் எழுதியிருக்கமாட்டாரே! "யூதன் என்றும் கிரேக்கன் என்றும் இல்லை, அடிமை என்றும் உரிமைக்குடிமகன் என்றும்

இல்லை, எல்லோரும் கருணையின் வடிவம்; கிறிஸ்துவுக்குள் ஒரே மனிதகுலமாக இருக்கிறார்கள்" (கொலோ.3:11) என்றல்லவா கிறிஸ்தவம் நம்மை படிப்பிக்கிறது! ஒரு பிராமணன் தன்னை நேசிப்பதுபோல, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களை நேசித்தால் இந்தியாவின் வடிவம் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்! தன் சிறுபருவத்திலிருந்து முப்பது வயதுவரை இயேசு தன் தாய்க்கும் தன் வளர்ப்புத் தந்தைக்கும் கீழ்படிந்திருந்தார் என்றும் ஞானத்திலும் இறைஅருளிலும், மனித தயவிலும் வளர்ந்தார் என்றும் வேதம் தெளிவாக்குகிறது (லூக்.2:51,52). இயேசு தன் வாலிப நாட்களில் ஒரு தச்சு வேலையாளராக பணியாற்றினார் (மாற்.6:3) என்று வேதம் பதிவு செய்கிறது.

## 13. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இயேசு எப்படி உலகத்தைப் படைத்திருக்க முடியும்?

இயேசு கிறிஸ்துவுக்கு தொடக்கமும் முடிவுமில்லை. அவர்தான் தொடக்கமும் முடிவும் (தி.வெ.1:8). கடவுள் எவ்வளவு

Top

பழமையானவரோ அவருக்குள்ளிருந்த வார்த்தையானவரும் அவ்வளவு பழமையானவர். ஆனால், ஆவியாயிருந்த கிறிஸ்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தான் மனிதவடிவில் இம்மண்ணுக்கு வந்தார்(1திமொ.3:16). தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அனைத்தும் அவரால் உண்டாயின. உண்டானது எதுவும் அவராலன்றி உண்டாகவில்லை (யோவா.1:1-3). விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கண்ணுக்குப் புலனாகுபவை, கண்ணுக்குப் புலனானாகாதவை, அரியணையில் அமர்வோர்,தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டார் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர்.அனைத்தும் அவர் வழியாய், அவருக்காகப் படைக்கப்பட்டன.அனைத்திற்கும் முந்தியவர் அவரே (கொலோ.1:16,17). பிதாவாகிய கடவுளுக்கும் தனக்கும் உள்ள தெய்வீக உறவைப்பற்றி கிறிஸ்து விளக்கும்போது, “என்னை அறிந்தீர்களானால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக்

Top

கண்டுமிருக்கிறீர்கள். என்னை காண்பது தந்தையைக் காண்பது ஆகும். நான் தந்தையினுள்ளும், தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? (யோவா.14:7-10).நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோவா.10:30) என்று இயேசு தெளிவுபடுத்துகிறார். இயேசுவை மதிக்கிறவன் இறைவனை மதிக்கிறான். கிறிஸ்தவம் பிதா, மகன், தூய ஆவி என்னும் மூவொரு தெய்வத்தை நம்புகிறது. இயேசு பிதாவாம் கடவுளுக்கு சமமாக இருக்கிறார் (பிலி.2:6, யோவா.5:18) என்று வேதம் கூறுகிறது. மேற்கண்ட வசனங்களிலிருந்து கடவுள் தன் திருமகனாகிய இயேசு மூலமாகத்தான் இவ்வுலகை படைத்தாரென்று தெளிவாக அறிகிறோம்.

## 14. இயேசு கன்னியின் வயிற்றில் எப்படி பிறக்க முடியும்? இது விஞ்ஞான பூர்வமாக சாத்தியமா?

இறைவன் மண்ணிலிருந்து மனிதனைப் படைத்தார் (தொ.நூ.2:7) அவனுடைய விலாவிலிருந்து பெண்ணை உருவாக்கினார் (தொ.நூ.2:21,22); இந்த உலகத்தையும் அதில் உள்ளவற்றையும்

Top

வார்த்தையால் படைத்தார் (தொ.நூ.1); செங்கடலை இரண்டாக பிளந்து தம் மக்களுக்கு வெட்டாந்தரைபோல் நடக்க வழி கொடுத்தார் (வி.ப.14); ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் வைத்து ஐந்தாயிரம் பேருக்கு பசியாற்றினார் (மாற்.6); தண்ணீரை திராட்சை ரசமாக்கினார் (யோவா.2:1-11); செத்த பிணங்களை உயிரோடு எழுப்பினார் (1அர.17:17-24, 2அர.4:32-37); இரும்பைத் தண்ணீரில் மிதக்கப் பண்ணினார் (2அர.6); எலும்புக் கூட்டத்தைப் படைவீரர்களாய் மாற்றினார் (எசே.37); கடலின்மீது தரையைப்போல நடந்தார் (யோவா.6:19); குருடர்களை பார்க்க வைத்தார்; செவிடர்களைக் கேட்கவைத்தார் (லூக்.7); தொழுநோயாளிகளைக் குணப்படுத்தினார் (2அர.5:1-14); மலடிகளை பிள்ளைத் தாய்ச்சி ஆக்கினார் (2அர.4:12-17). இவை எல்லாம் விஞ்ஞான பூர்வமாக சாத்தியமா? இந்த மகா அதிசய தெய்வத்திற்கு, ஒரு கன்னியின் வயிற்றிலே இயேசுவை பிறக்கவைப்பது சாத்தியமற்றதா? நான் முதல் தடவை விமானத்தில் பயணம் செய்தபோது ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன். அழகான வெண்ணிற மேகங்கள் விமானத்திற்குக் கீழே தெரிந்தன.

Top

அதுவரை வானத்து மேகங்களை அண்ணாந்து பார்த்த எனக்கு இது ஆச்சரியமாய் இருந்தது. ஆனால், பல்லாண்டுகளாய் விமானம் ஓட்டும் அந்த விமானிக்கு இது கொஞ்சமும் புதிரானதல்ல. அதுபோல, ஆண்டவர் செய்யும் அற்புதங்களை உங்களுடைய வாழ்வில் ருசிக்க தொடங்கினால் இயேசுவின் பிறப்பை நம்புவது கடினமாயிருக்காது. ஒரு தாயின் வயிற்றில் எலும்பு உருவாவது இன்னும் விஞ்ஞானிகளுக்கு புதிராகத்தான் உள்ளது. நீங்கள் அதை முழுவதும் அறிந்தபின்தான் நம்புவீர்களானால் திராட்சைசெடி, எலுமிச்சைசெடி, ஆப்பிள்செடி, ஆரஞ்சுசெடி. எல்லாவற்றின் மேலும் ஒரே சுவையான மழைநீர் விழுந்தாலும் பழத்தின் சுவை வேறுபடுவது ஏனென்று சிந்தித்தீர்களா? அந்த விஞ்ஞான உண்மையை அறிந்தால்தான் நான் திராட்சைப் பழத்தை உண்பேனென்று கூறமுடியுமா? இயேசு ஒரு கன்னியின் வயிற்றில் பிறப்பாரென்று இறைவாக்கினர்கள் ஏற்கனவே முன்னுரைத்தனர் (எசா.7:14). அதன்படியே நடந்தது (மத்.1:18-25).

Top

## 15. இயேசு சீக்கிரம் வருகிறார் என்று பல்லாண்டுகளாகக் கூறுகிறீர்கள். இன்னும் வரவில்லையே !

இதோ, நான் வருகிறேன். அவரவர் செயலுக்கேற்ப அவரவருக்கு நான் அளிக்கவிருக்கின்ற கைமாறு என்னிடமுள்ளது (தி.வெ.22:12) என்று இயேசு கூறினார். அவர் விரைவில் வருவேன் என்று கூறினாலும், எப்போது என்று நாள் குறிப்பிட்டு கூறவில்லை. இன்னும் தெளிவாக கூறினால், அவர் எப்போது திரும்ப வருவார் என்று ஒருமுறை இயேசுவின் சீடர்கள் கேட்டபோது, “அந்நாள் தந்தை ஒருவருக்கே தெரியும்” என்று கூறினார் (மாற்.13:32). சுனாமி என்ற ஆழிப்பேரலைகளால் தமிழகத்துக்கு சேதம்வரும் என்று 2004-க்கு முன் ஒரு சமுதாய விழிப்புணர்வு பணியாளர் தமிழக கடற்கரை சந்து பொந்துகளெல்லாம் நுழைந்து கூவிக்கொண்டே சென்றால் மக்கள் அவரை, ‘இவன் பைத்தியக்காரன்’ என்று எள்ளி நகையாடுவார்கள்; அல்லவா? அதுபோலவே இயேசுவின் இரண்டாம் வருகையும் பலரால் கிண்டலாக நினைக்கப்படுகிறது. மனிதன் தன்னைப் படைத்த கடவுளோடு இணைய

Top

வேண்டுமென்று கடவுள் காலம் தாழ்த்துகிறார் என்பதை விளக்கும் வேதபகுதியை கீழே வாசியுங்கள். இறுதிக் காலத்தில் ஏளனம் செய்வோர் சிலர் தோன்றித் தங்கள் சொந்த தீய நாட்டங்களுக்கேற்ப வாழ்ந்து உங்களை எள்ளிநகையாடுவர். அவர்கள், “அவரது வருகையைப் பற்றிய வாக்குறுதி என்னவாயிற்று? நம் தந்தையரும் இறந்து போயினர் ஆயினும் படைப்பின் தொடக்கத்தில் இருந்ததுபோல எல்லாம் அப்படியே இருக்கிறதே” என்று சொல்லுவார்கள். அன்பார்ந்தவர்களே, நீங்கள் ஒன்றை மறந்துவிட வேண்டாம். ஆண்டவரின் பார்வையில் ஒருநாள் ஆயிரம் ஆண்டுகள் போலவும், ஆயிரம் ஆண்டுகள் ஒருநாள் போலவும் இருக்கின்றன. ஆனால், அவர் அவ்வாறு காலம் தாழ்த்துவதில்லை, ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலம் தாழ்த்துவதாக சிலர் நினைக்கின்றனர். மாறாக உங்களுக்காக பொறுமையோடு இருக்கிறார். யாரும் அழிந்து போகாமல் எல்லாரும் மனம்மாற வேண்டுமென விரும்புகிறார் (2பேது.3:8-9). இவ்வுலகிலுள்ள எல்லா மனிதரும் ஆண்டவருடைய நற்செய்தியை ஏற்றுக்கொள்ள ஆண்டவர் பொறுமையோடு காத்திருக்கிறார்.

Top

எல்லா மனிதரும் மீட்புப்பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார் (1திமொ.2:4) என்று வேதம் கூறுகிறது. இதை விளக்க இயேசு ஒரு உவமையை தன் சீடர்களுக்கு கூறினார். ஒருவர் தம் திராட்சை தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தார். அவர் வந்து அதில் கனியைத் தேடியபோது எதையும் காணவில்லை. எனவே அவர் தோட்டத் தொழிலாளரிடம், ~பாரும், மூன்று ஆண்டுகளாக இந்த அத்தி மரத்தில் கனியை தேடி வருகிறேன். எதையும் காணவில்லை. ஆகவே இதை வெட்டிவிடும். இடத்தை ஏன் அடைத்துக் கொண்டிருக்க வேண்டும்?' என்றார். தொழிலாளர் மறுமொழியாக, 'ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டுவையும். நான் இதைச் சுற்றிலும் கொத்தி எரு போடுவேன், அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி. இல்லையானால், இதை வெட்டி விடலாம்' என்று அவரிடம் கூறினார் (லூக்.3:6-9).

விண்ணரசைப் பற்றிய இந்நற்செய்தி எல்லா மக்களினத்தாரும் ஏற்றுக்கொள்ளுமாறு உலகமெங்கும் அறிவிக்கப்படும் அப்போது முடிவு வரும் (மத்.24:14) என்று வேதம் தெளிவூட்டுகிறது.

கிறிஸ்து வரும் வேளை நமக்குத் தெரியாததால் எப்போதும் நாம்

Top

விழிப்பாயிருக்க அவர் அறுவுறுத்துகிறார் (மத்.24:42). இயேசு திரும்ப வருவதற்கு சற்று முன்னுள்ள நாட்களில் என்ன நடக்கும் என்று 2திமொ.3 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதை வாசித்து விழிப்பாயிருங்கள்.இதோ! நான் விரைவில் வருகிறேன் இந்நூலில் உள்ள இறைவாக்குகளைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர் (தி.வெ.22:7) என்று கூறினார்.ஆற்றுத் தண்ணீர் போல் அநியாயங்கள் மலிந்துபோன இந்த உலகின் மக்கள் மனம்மாறி அன்புள்ளவர்களாக மாறவேண்டும் என்பதற்காக அந்த கருணாமூர்த்தி காத்திருக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும்.

நீ கற்றதையும் கேட்டதையும் நினைவில் கொள் அவற்றைக் கடைப்பிடி மனம் மாறு நீ விழிப்பாயிரு. இல்லையேல் நான் திருடன் வருவதுபோல வருவேன். நான் எந்த நேரத்தில் உன்னிடம் வருவேன் என்பதை நீ அறியாய் (தி.வெ.3:3). திருடன் இரவில் வருவதுபோல ஆண்டவருடைய நாள் வரும் (1தெச.5:2). ஆயத்தமாயிருப்போம்.மறைவானவை நம் கடவுளாகிய ஆண்டவருக்கு
உரியவை.வெளிப்படுத்தப்பட்டவையோ,இத்திருச்சட்டத்தின்

Top

வார்த்தைகளைக் கடைப்பிடிக்குமாறு, நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவை (இ.ச.29:29).

## 16 .கிறிஸ்தவம் வெளிநாட்டு மதம். அதை ஏன் இந்தியாவில் பரப்புகிறீர்கள்?

உங்கள் வீட்டிலிருக்கும் சுவர் கடிகாரம், Wrist Watch, Mobile Phone, Computer, Printer, Water Heater, TV, Washing Machine, Micro Wave Oven, Cooker, Refrigerator, Air Conditioner, Mixie, Fan, Grinder, Tube Light எதுமே இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டவை அல்ல. இவற்றை உயோகிக்காமல் உங்களால் வாழ முடியுமா? வீட்டை விட்டு வெளியே வந்தால் Bicycle, Auto Rickshaw, Car, Bus, Motor Bike, Train, Aeroplane, Helicopter-ல் பயணம் செய்கிறோமே, இவை எதுவுமே இந்தியர்கள் கண்டுபிடித்தவை அல்ல. உண்மையான தேசபக்தி என்பது இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டவற்றை மட்டும் பயன்படுத்துவதா? அது இனவெறி அல்லவா? ஒரு ஆஸ்பத்திரிக்கு போனால் அதற்குள்

Top

நீங்கள் பார்க்கும் எல்லா பொருட்களையும் கண்டுபிடித்தவர்கள் வெளிநாட்டுக்காரர்கள் அல்லவா! உங்கள் குழந்தைக்கு நோய் வந்தால், அதற்கான மருந்தை வெளிநாட்டுக்காரர்கள் கண்டுபிடித்ததால், அந்த மருந்தே வேண்டாம் என்று தீர்மானிப்பீர்களா? இரத்ததானம் செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர்கள் வெள்ளையர்கள் தான். அதை வெள்ளையர்கள் கண்டுபிடித்ததால் இந்தியர்கள் இரத்ததானம் செய்வது தவறு என்று கூறப்போகிறீர்களா? வெளிநாட்டு மொழியான ஆங்கிலத்தை நீங்கள் உபயோகிக்காமல் ஒரு நாளைத்தாண்ட முடியுமா? Paint, Cement, Rubber, Orange, Apple வாங்கும்போது தமிழில் கேட்டுவாங்கும் பச்சைத்தமிழர்கள் உங்களுக்கு யாரையாவது தெரியுமா? வெள்ளையர்களை வெளியேற்றிவிட்டு, இன்று அந்த வெள்ளையர்களிடமே போய் வயிற்றுப் பிழைப்புக்காக வேலை கேட்டு கெஞ்சி நிற்கிறோமே! நாம் தன்மானம் உள்ளவர்களா? அல்லது மானங்கெட்டவர்களா? பணமுள்ள நீங்கள் உங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளியில்தான் படிக்க வைக்கிறீர்கள், பணம் இல்லாத ஏழைகள் தங்கள் குழந்தைகளை வேறுவழியின்றி தமிழ்ப் பள்ளியில் படிக்க

Top

வைக்கிறார்கள். இங்கிருந்து நம் இளைஞர்கள் அமெரிக்கா, U.K, ஆஸ்திரேலியா என்று வேலைக்குப் போய், அங்குள்ள வெள்ளைக்காரர்களை திருமணமே செய்கிறார்களே! இதை தேசதுரோகம் என்று கூறமுடியுமா? இந்திய அரசாங்கம் கொடுத்த உதவிப் பணத்தைப் பயன்படுத்திப் படித்த லட்சக்கணக்கான இந்தியர்கள் பிழைப்பிற்காக வெளிநாடுகளுக்கு போய் வேலை செய்கிறார்களே, இதை சரி என்கிறீர்களா, தவறு என்கிறீர்களா? அவர்கள் தேசப்பற்று அற்றவர்களா? நின்று நிதானமாக யோசியுங்கள். இன்று இந்தியரில் பெரும்பான்மையானவர்கள் அணியும் Coat, Pant, Tie இவை எல்லாம் இந்திய ஆடையா? இப்படியிருக்க இயேசுநாதருடைய அகிம்சை கொள்கையை, அந்த கருணாமூர்த்தியின் அன்பு ஆலோசனைகளை நாம் ஏன் வெளிநாட்டு சரக்கு என்று புறக்கணிக்க வேண்டும்? நல்ல விஷயத்தை ஒரு குழந்;தை சொன்னாலும் ஏற்றுக்கொள்பவன்தான் பெரிய மனிதன். இன்று இந்துமுன்னணி, பஜ்ரங்தள், பாரதிய ஜனதா கட்சி, சிவசேனா, இந்து மக்கள் கட்சி, இந்து மகா சபை, விஷ்வ ஹிந்து பரிஷத்

Top

என்னும் கட்சியினர் இந்தியாவில் கிறிஸ்தவத்தைப் பரப்பக்கூடாது என்று கூறுகின்றனர். ‘மதமாற்றம் தேசிய குற்றம்’ என்று வாதாடுகிறார்கள். நான் கேட்கிறேன்: இந்தியாவிலிருந்து இந்துக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ளவர்களை இந்துக்களாக மாற்றுவதைத் தவறு என்று இவர்கள் சுட்டிக்காட்டுவார்களா? இந்திய விவேகானந்தர் அமெரிக்க சிக்காகோவில் உரையாற்றியபோது அங்குள்ளவர்கள் “இவன் இந்தியன், இவனை அடித்து துரத்து” என்று கூறினார்களா? பரந்த மனப்பான்மை உடையவனுக்கு யாதும் ஊரே, யாவரும் உறவினர், உலகம் என் சொந்த ஊர் என்பது மூச்சு மந்திரமாயிருக்கும். மதுரை அலங்காநல்லூரில் ஆண்டுதோறும் நடக்கும் ஜல்லிக்கட்டு என்னும் ஆபத்தான, மூடத்தனமான விளையாட்டில் எத்தனை ஆயிரம் வாலிபர்களைக் காவு கொடுத்துவிட்டோம்! எத்தனை லட்சம் இளைஞர்களை ஊனப்படுத்திவிட்டோம்! இந்த அநியாயத்தை தவறென்று எந்த நாட்டுக்காரன் சுட்டிக்காட்டினால் என்ன?

இலங்கை அரசு அங்கிருக்கும் தமிழர்களை வதைத்து, தங்கள் இனவெறிக்கு பல்லாயிரங்களை பலியாக்கிக்கொண்டிருப்பதை

Top

மதுரைத் தமிழன் மீடியாவில் தட்டிக் கேட்பதை தேசத்துரோகம் என்று கூறுகிறீர்களா? ஈரான், ஈராக் என்னும் நாடுகளுக்கிடையே போர் நடந்தபோது செத்து மடிந்த ஆயிரக்கணக்கான மக்களை நினைத்து குமரிமாவட்ட மக்கள் குமுறவில்லையா? ராஜபாளையத்தை சார்ந்த ஆவரம்பட்டியிலுள்ள டிப்ளமோ படிப்பு முடித்த முரளி கிருஷ்ணன் என்ற வாலிபரை ஜீவசமாதி என்ற பெயரில் உயிரோடு புதைத்த சம்பவம் கேட்டு, காவல் நிலையத்தினர் விரைந்து சென்று குழியிலிருந்து அவரை மீட்டனர். இந்த ‘உயிரோடு புதைக்கும்’ கலாச்சாரத்தை தவறென்று எந்த நாட்டுக்காரன் நம்மை அறிவுறுத்தினால் என்ன? தெய்வங்களை திருப்திப்படுத்துவதாக நினைத்து கொண்டு, தாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகளையே நரபலி கொடுக்கும் கொடூர பாரம்பரியத்தை தவறு என்று எந்த நாட்டுக்காரன் குற்றம் சாட்டினாலென்ன? இந்தியாவில் சோதிடர்கள், சாமியார்கள், மந்திரவாதிகளுடைய வார்த்தைகளை தெய்வவாக்காக நினைத்து மூடநம்பிக்கையால் ஆயிரங்கள் மாண்டு போகிறார்களே! இந்த அவலநிலையை இந்தியாவில் பத்திரிக்கைகள்,

Top

அரசியலறிஞர்கள், சமூகஆர்வலர்கள், உரத்த சிந்தனையாளர்கள் ஆயிரமிருந்தாலும் கட்டுப்படுத்த முடியவில்லையே! இதை வெளிநாட்டுக்காரன் சுட்டிக்காட்டுவதில் தவறு என்ன இருக்கிறது?

130 கோடி மக்கள் இருக்கும் நமது பரந்த பாரதத்தில் ஒரு வேளை உணவுகூட சரியாக இல்லாமல் லட்சக்கணக்கான மக்கள் கஷ்டப்படும்போது பாலபிஷேகம், நெய்யபிஷேகம், அன்னாபிஷேகம் என்று கோடிக்கணக்கான பணத்தை வீணாக்குவது அநியாயமென்று யார் சுட்டிக்காட்டினால் என்ன? தவறை யார் செய்தாலும் தவறுதானே!

விவேகானந்தர் என்ற வங்காள பிராமணர் அமெரிக்க சிக்காகோவுக்கு சென்று அங்குள்ள வெள்ளைக்காரர்களை, “சகோதரர்களே, சகோதரிகளே” என்று அழைத்து உரையாற்றினார் என்று பெருமையாக பேசுகிறார்கள். வெள்ளைக்காரர்களை “சகோதரர்களே” என்று அழைத்த விவேகானந்தர், இந்திய நாட்டிலுள்ள தலித் இந்துக்களை “சகோதரர்களே” என்று அழைக்க முடியுமா? ஒரு தலித், ஒரு

Top

பிராமணருடைய வீட்டில் நுழைந்தால் அதை மனதார அனுமதிக்கும் மனப்பக்குவம் இங்குள்ள பிராமணர்களுக்கு உண்டா? அப்படியே அவர்களை உள்ளே அனுமதித்தாலும் அவர்கள் எதுவரைக்கும் போகிறார்களோ அதுவரைக்கும் ஜலம் விட்டு கழுவி விடுகிறார்களே! இதுதான் மனிதநேயமா? இந்த ஈனத்தனமான ஜாதிவெறியை ஒழிக்கவேண்டுமென்று யார் சுட்டிக்காட்டினாலென்ன? மதவெறி பிடித்த இந்துக்கள் இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ ஆராதனைத் தலங்களை சேதப்படுத்தி, பாதிரியார்களைக் கொன்று, கன்னியாஸ்திரீகளைக் கற்பழித்த கொடுமைகள், எல்லா வரலாற்று அறிவுள்ள இந்தியர்களுக்கும் தெரியும். அதனால்தான், இந்துத் தீவிரவாத கட்சிகளுக்கு, பகுத்தறிவும் மனசாட்சியுமுள்ள எந்த இந்துக்களும் வாக்களிப்பதில்லை. இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே உரியது' என்று கூறும் மதவெறியர்களிடம் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். இந்தியாவைத்தவிர மற்ற எல்லா நாடுகளிலுமுள்ள எல்லா இந்தியர்களையும் இந்தியாவிற்கு திரும்பி வரச் சொல்ல

Top

முடியுமா? அவர்கள் வந்தால், இந்திய கிறிஸ்தவர்கள் எல்லாருமே அமெரிக்காவுக்கு போய்விடுகிறோம்.

## 17.அமெரிக்கா ஒரு கிறிஸ்தவ நாடு. அங்குள்ளவரெல்லாரும் யோக்கியரா?

எல்லா நாட்டிலும், எல்லா மதத்திலும் நல்லவர்களுமுண்டு, கெட்டவர்களுமுண்டு. அமெரிக்கா ஒரு கிறிஸ்தவநாடு என்றோ, இந்தியா ஒரு இந்துநாடு என்றோ நான் நம்பவில்லை. 'கிறிஸ்தவ பெற்றோருக்கு பிறந்த எவரும் கிறிஸ்தவர்தான்' என்றோ,'ஆங்கில, கிரேக்க, அல்லது எபிரேய மொழியில் பெயர் வைத்திருப்பவர்கள் எல்லாரும் கிறிஸ்தவர்கள்' என்றோ வேதாகமம் கூறவில்லை.அவன் ஒருமுறை இயற்கையாக பிறந்திருந்தாலும்,மறுபடியும் ஆவியாலும் இறைவனுடைய அன்பாலும் பிறக்கவேண்டும்(யோவா.3:3-5).“நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்”(மத்.18:3)என்றுகுருநாதன் கூறினார்.கிறிஸ்துவின்

Top

இரட்சிப்பை பெற்று, அவரது போதனைகளை பின்பற்றி,அவரது அன்பை வெளிப்படுத்தி,மனத்தூய்மையோடு வாழ்பவனே கிறிஸ்தவன். அமெரிக்காவை கிறிஸ்தவநாடு என்று பொதுவாக மக்கள் நினைக்கிறார்கள். அது தவறு. எல்லா மதத்தினரும் அமெரிக்காவில் உண்டு. ஒருமுறை இயேசு,"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் என் வசனங்களைக் கைக்கொள்கிறான்" (யோவா.14:23) என்று தன் சீடர்களைப் பார்த்து கூறினார். இந்த வசனப்படி இயேசுவிடம் அன்பு வைப்பது ஒரு தனிநபரை சார்ந்தது. ஒருநாட்டை கிறிஸ்தவநாடு, இந்துநாடு, இஸ்லாமியநாடு என்று கூறுவதே தவறு. அரபுநாடுகளில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள்;. ஒரேநாட்டில் பலமத நம்பிக்கையாளர்கள் இருப்பார்கள்.ஏன், நாத்திகர்கள்கூட இருப்பார்கள். அமெரிக்காவில் உள்ள லட்சக்கணக்கான நாத்திகர்களின் பெயர்கள்கூட ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன.இதனால் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று கூறமுடியுமா? இயேசு தன் சீடர்களைப் பார்த்து, "நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாய் இருந்தால், நீங்கள் என்னுடைய சீடர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்"

Top

(யோவா.13:35). “என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் ஆகியோரையும், ஏன் தம் உயிரையும் என்னைவிட மேலாகக்கருதினால் அவர் என் சீடராயிருக்க முடியாது, தம் சிலுவையை சுமக்காமல் (தியாகசிந்தை இல்லாமல்) என் பின்வருபவர் எனக்கு சீடராயிருக்க முடியாது” (லூக்.14:26:27) என்று கூறினார். இப்படித்தான் வாழவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கை தான் கிறிஸ்தவம். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றுதான் அமெரிக்கர்களில் பெரும்பான்மையானோர் நினைக்கின்றனர். இப்படியிருக்க அமெரிக்காவை ஒரு கிறிஸ்தவநாடு என்று எப்படி கூறுகிறீர்கள்? கிறிஸ்தவராக வாழ்வதற்கு சுயக்கட்டுப்பாடு முக்கியம் அல்லவா! இயேசு ஒருமுறை, “இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள் ஏனெனில், அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது வழியும் விரிவானது அதன் வழியே செல்வோர் பலர்.ஆனால் மெய் வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது. வழியும் மிகக்குறுகலானது. இதைக் கண்டுபிடிப்போர் சிலரே”(மத்.7:13,14) என்றார். நாகர்கோயிலிலுள்ள ஒரு

Top

மந்திரவாதியின் பெயர் சாலமோன். அங்குள்ள சாராயக் கடைகளை நடத்துவது பெரும்பாலும் ஆங்கிலப் பெயர் வைத்திருப்பவர்களே.ஏன், சாராயக்கடையின் பெயரையே பெதஸ்தா ஒயின்ஸ் என்று வைத்திருக்கிறார்கள்;.உண்மைக் கிறிஸ்தவன் சாராய வியாபாரம் செய்வானா?தன்னலம் நாடுவோர்,பணஆசை உடையோர், வீம்புடையோர்,செருக்குடையோர்,பழித்துரைப்போர், பெற்றோருக்கு கீழ்ப்படியாதோர்,நன்றியற்றோர், தூய்மையற்றோர், அன்புணர்வற்றோர், ஒத்துப்போகாதோர் புறங்கூறுவோர், தன்னடக்கமற்றோர், வன்முறையாளர், நன்மையை விரும்பாதோர்,துரோகம் செய்வோர், கண்மூடித்தனமாக செயல்படுவோர்,கடவுளை விரும்புவதைவிட சிற்றின்பத்தை அதிகம் விரும்புவோர் பலர் இன்று இறைப்பற்றுடையவர்கள் போல வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் (2திமொ.3:2-5).இவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அரசாங்கத்தால் கணக்கெடுக்கப்படலாம்.ஆனால்,இவர்கள் இயேசுவிடம் அன்புகூராதவர்கள்.தயவுசெய்து கிறிஸ்துவை மட்டும் உங்கள் முன்மாதிரியாக வையுங்கள். கிறிஸ்தவர்களைப் பார்க்காதீர்கள்.

Top

இயேசுவின்மீது கண்களைப் பதிய வைப்போம் (எபி.12:1,2). மனிதன் எப்படி வாழவேண்டுமென்று அவரே வாழ்ந்துகாட்டியிருக்கிறாரே.

## 18.எல்லா கிறிஸ்தவர்களும் நல்லவர்கள் அல்ல.

ஆங்கிலத்தில் பெயர் வைத்திருப்பதாலோ, கழுத்தில் சிலுவை மாலை தொங்கப் போடுவதாலோ, கிறிஸ்மஸ் பண்டிகையை பட்டாசு வெடித்துக் கொண்டாடுவதாலோ, ஆராதனைக்கு ஒழுங்காக போவதாலோ, காணிக்கை கொடுப்பதாலோ, ஒருவரை கிறிஸ்தவரென்று கூறமுடியாது. கிறிஸ்து எதற்காக மனிதவடிவில் வந்து, பாடுபட்டு, சிலுவையில் மரித்து, உயிர்த்தார் என்னும் விபரங்களைத் தெரியாத, அதை அறிந்துகொள்ள விருப்பமில்லாத பாரம்பரிய கிறிஸ்தவர்கள் பலர் இம்மண்ணில் வாழ்கிறார்கள். கொலைவெறி, ஜாதிவெறி, மொழிவெறி, இனவெறியுடைய, லஞ்சம் வாங்கி கோடிக்கோடியாக சம்பாதிக்கும் பலர் கிறிஸ்தவர்களென்ற பெயரில் உலாவருகிறார்கள். வரதட்சணைக் கொடுமையால்

Top

பிரிந்துபோன கிறிஸ்தவ குடும்பங்கள்தான் எத்தனை! இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு வேலைக்காக சென்றவர்களை ஆஸ்திரேலியர்கள் கொடுமைப் படுத்துவதை கேள்விப்படுகிறோம். இயேசுவின் அன்புக்கொள்கையை கடைபிடிப்பவர்கள் இப்படி செய்வார்களா?

புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்ட பிராமண சகோதரன்கூட ஜாதிபார்க்காமல் திருமணம் செய்யமுடிகிறது. ஆனால், பல தலை முறையாக கிறிஸ்தவர்களாக இருக்கும் பலரால் அந்த ஜாதிப்பேயின் கோரப்பிடியினின்று வெளியேற முடியாமல் இருக்கிறார்களே! திருநெல்வேலியில் நாடார்களுக்கென்று தனி சபை, மற்றவர்களுக்கு என்று தனி சபை உள்ளது. நாடார்களுடைய கோயிலில் மற்றவர்கள் சட்டபூர்வமாக நுழையமுடியாது. எனவே, கிறிஸ்தவர்கள் எல்லாரும் யோக்கியமானவர்கள் என்று கூறிவிட முடியாது. நீங்கள் சொல்வது உண்மைதான். யூதன் என்றும் கிரேக்கன் என்றும் இல்லை, ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை, அடிமை என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இருக்கிறார்கள் (கொலோ.3:11) என்று

Top

பைபிள் அறுதியிட்டுக் கூறுகிறது. ஆனாலும், நாங்கள் 'கிறிஸ்தவ நாடார்கள்' 'கிறிஸ்தவ வெள்ளாளர்கள்' 'கிறிஸ்தவ முதலியார்கள்' என்று பீத்திக்கொள்ளும் ஆயிரக்கணக்கானோர் இன்றுமுண்டு. இந்த தரங்கெட்ட வாழ்க்கையை கிறிஸ்தவமென்று நிச்சயம் கூறமுடியாது. கிறிஸ்து உருவாக்கிய வாழ்வியல் அமைப்புடன் இதை ஒப்புமைப்படுத்த முடியாது.உன்னை நீ நேசிப்பதுபோல பிறரையும் நேசி என்னும் உயர்ந்த பண்பாட்டை கற்றுக்கொடுத்து, தானும் அதன்படி வாழ்ந்த இயேசுவின் இதயம் எவ்வளவு உயர்வானது என்பதை சிந்தியுங்கள். தயவுசெய்து கிறிஸ்தவர்களை பார்க்காதீர்கள் ஏன், பாதிரியார்களையே பார்க்காதீர்கள் (மத்.23:3) கிறிஸ்துவை மட்டும் பாருங்கள்.

ஒரு மருத்துவக் கல்லூரியினின்று தேர்ச்சி அடையும் எல்லா மாணவர்களையும் மருத்துவத்தில் தேறியவர்களாக அந்த கல்லூரி எதிர்பார்க்கிறது. ஆனால், அதிலுள்ள ஒருசிலர் தவறாக மருந்து எழுதி, சில நோயாளிகள் பாதிக்கப்பட்டால், அதற்குக் காரணம் மருத்துவக் கல்லூரியாகுமா? அதே கல்லூரியில் படித்த பலர் விஞ்ஞானிகளாக மாறுகிறார்களே! அவர்களைத்தான்

Top

முன்மாதிரியாக பார்க்கவேண்டும். இயேசுவை முழுமையாக நம்பி சரணாகதியான எல்லாரும் வாழ்வில் பிரகாசமாக முடியும். ஒருசிலர் பின்வாங்கினார்கள் என்பதால் இயேசுவே சரியில்லை என்று கருதமுடியாது. எவ்வளவு முதிர்ந்தவர் குற்றம் செய்தாலும் குற்றம் குற்றமே. விசுவாசத்தை தொடங்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஆன்மீக ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுவோம் (எபி.12:1) என வேதம் வழிகாட்டுகிறது. இயேசுவோடு கூட இருந்த ஒரு நண்பன் இயேசுவை முப்பது வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக்கொடுத்தான் என்பதற்காக மற்ற 11 பேரும் இயேசுவைவிட்டு பின்வாங்கி விட்டார்களா? விபத்திற்கு உட்பட்ட ஒருவர் சிகிச்சை பலனின்றி மரித்துவிட்டார் என்பதற்காக, அந்த மருத்துவமனையே சரியில்லை என்று கூறமுடியுமா? இயேசுவின் அன்பு, தூய்மை, சக்தி இவற்றை மட்டும் கண்ணோக்கி ஒடுவோம்.

மனிதனை நம்புவதைப் பார்க்கிலும் கடவுள் பேரில் பற்றுதலாய் வாழ்வதே ஞானம் (தி.பா.118:8). இயேசுவுடைய வலிமையால் பேதுரு கடல்மீது நடந்தார். ஆனால் ஒருநாள், அந்த இயேசுவை

Top

எனக்கு தெரியவே தெரியாது என்று உயிருக்கு பயந்து பொய் சொன்னார். இயேசுவுடன் எப்போதும் சுற்றித் திரிந்து அற்புதங்களை செய்த பேதுருவே பொய் சொல்லிவிட்டார் என்பதற்காக நாமும் பொய் சொல்லமுடியுமா? பேதுருவை பார்க்காமல் இயேசுவின்மேல் கண்களைப் பதிப்போம். அநேக கிறிஸ்தவ சபைகளில் வேதாகமத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், எப்படி வாழவேண்டும் என்று கற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். தரமாக வேதாகமத்தை பிரசங்கிப்பவர்கள் இல்லாவிட்டால் மக்கள் எப்படி கேள்விப்பட்டு முன்னேற்றம் அடைவார்கள்? (உரோ.10:14). வேதத்தின் விளக்கத்தை சரிவர புரிந்துகொள்ள முடியாதிருந்த ஒரு பக்தன், "யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் புரிந்து கொள்ள முடியும்?" (தி.தூ.8:31) என்றான். ஒருகாலத்தில் ஊதாரியாய் திரிந்த அநேகம் பழமைவாதிகள் இப்போது உணர்வடைந்து முன்மாதிரியாய் வாழ்கிறார்கள் என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

இயேசு கூறினார், "என்னிடம் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவற்றின்படி செயல்படும் எவரும் யாருக்கு ஒப்பாவார்

Top

என உங்களுக்கு எடுத்துக்காட்டுகிறேன் அவர் ஆழமாய்த் தோண்டி, பாறையின் மீது அடித்தளம் அமைத்து, வீடு கட்டிய ஒருவருக்கு ஒப்பாவார்.வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து அந்த வீட்டின்மேல் மோதியும் அதை அசைக்க முடியவில்லை ஏனென்றால் அது நன்றாகக் கட்டப்பட்டிருந்தது. நான் சொல்வதைக் கேட்டும் அதன்படி செயல் படாதவரோ, அடித்தளம் இல்லாமல் மண்மீது வீடு கட்டியவருக்கு ஒப்பாவார். ஆறு பெருக்கெடுத்து அதன்மேல் மோதிய உடனே அது விழுந்தது அவ்வீட்டுக்குப் பேரழிவு ஏற்பட்டது" (லூக்.6:47-49).

## 19.கிறிஸ்தவர்கள் நோயோடிருக்கிறார்களே !

இயேசுவின் நாமத்தில் ஆயிரக்கணக்கானோர் குணம் அடைந்துள்ளனர். ஆனால், பல கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு புரியாத புதிராகவே உள்ளது. ஒரு கப்பல் பயணச்சீட்டு வாங்கிவிட்டால் பயண நாட்கள் முழுவதும் உணவு கப்பலிலேயே கிடைக்கும் என்ற தகவல் தெரியாமல் வயதான ஒரு தாயார் 5 நாளைய பயணத்தின் போதும் பட்டினியாய்

Top

இருந்தார்களானால் எப்படியிருக்கும்? தன் கையிலிருக்கும் பயண உரிமைச்சீட்டைக் காண்பித்து, நன்றாக நிம்மதியாக உணவுண்டு பயணிக்க வேண்டியவர் பட்டினி கிடந்ததன் காரணம் தனது அறியாமையல்லவா! “அறிவின்மையால் என் மக்கள் அழிகிறார்கள்” (ஓசே.4:6) என்று ஆண்டவர் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளென்று அறியப்படும் பலருக்கு இயேசுவினால் என்னென்ன நன்மைகள் உண்டென்று தெரியாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. தெய்வீக குணமாக்கலைப் பற்றி பல உறுதிமொழிகளை வேதத்தில் ஆண்டவர் கூறியிருக்கிறார். ஆனால், அவற்றை உணர்வின்றி வாசித்து தங்களுக்கென்று எதையும் எடுத்துக்கொள்ளாமல் இருந்தால் அதற்கு கர்த்தர் பொறுப்பாக முடியுமா? கையிலே நெய்யை வைத்துக் கொண்டு வெண்ணைக்கு அலைபவர்கள் இன்னும் இருக்கிறார்கள். கடவுளுடைய வார்த்தையின் முக்கியத்துவத்தை உணர்ந்த தாவீது எனும் பக்தர், “உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன்” (தி.பா.119:11) என்று கூறுகிறார். தெய்வம் மனிதனிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதனை

Top

மனிதன் தெரிந்து கொள்ளாமல் மனிதன் எப்படி அவருடைய விருப்பப்படி வாழமுடியும்? சில கிறிஸ்தவர்கள் வேத வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட தங்கள் மரபுக்கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதனால், இறைவன் அளித்த வாக்குறுதியைப் பெறமுடியவில்லை. சில கிறிஸ்தவர்கள், இயேசுவால் குணமளிக்கமுடியும் என்ற நம்பிக்கையே இல்லாமல் இருக்கிறார்கள். ஒரு சபையின் ஊழியர் வேதவசனத்தை தவறாக புரிந்து கொள்ளும் போது அனைத்து விசுவாசிகளும் பாதிக்கப்படுகிறார்கள்.

மற்றொரு காரியத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். நாம் சோதிக்கப்படும்போதுதான் சோதிக்கப்படுகிற பிறருக்கு உதவிசெய்யும் ஒரு மனப்பக்குவம் உண்டாகிறது (எபி.2:18). எப்போதாவது நாம் நோயால் பாதிக்கப்படும்போதுதான், நோயில் வாடும் மற்றவர்களுக்கு நியாயத்தீர்ப்பு சொல்லாமல், அவர்களுக்காக தாயுள்ளத்தோடு இறைவனிடம் மன்றாடும் பெரிய மனம் உண்டாகிறது. பிரச்சனைகளே இல்லாவிட்டாலும் பல கிறிஸ்தவர்கள் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். தன்

Top

பிள்ளைகள் தன்னை சுற்றிச் சுற்றியே வாழ வேண்டுமென்ற ஆசையால்தான், கர்த்தர் அவர்களை சோதனைகளுக்கு விட்டுக் கொடுக்கிறார். ஆனால், அவர் கண்ணிமைக்கும் நேரம் நம்மைக் கைவிட்டாலும் அடுத்த நிமிடமே நம்மைத் தாங்குவார், அந்த நோயிலிருந்து நமக்கு விடுதலை தருவார். அநேக கிறிஸ்தவர்கள் எப்போதும் எதிர்மறையாகவே பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்குள் பிசாசு புகுந்து வாழ்வைக் கெடுப்பது மிகவும் எளிது. “உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால், திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர்மீது எண்ணெய்பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பி விடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்புப் பெறுவார். ஆகவே ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கை செய்து கொள்ளுங்கள். ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது குணமடைவீர்கள். நேர்மையாளருடைய வல்லமை மிக்க மன்றாட்டு பயன் விளைவிக்கும் (யாக்.5:14-16). நோயாளி தனியாக அமர்ந்து

Top

பிரார்த்தனை செய்வதைவிட, அவர் பங்கெடுக்கும் சபையின் மூப்பர்களை அழைத்து தனக்காக இறைவனிடம் மன்றாட வேண்டி, அவர்களும் பிரார்த்தனை செய்தால், வைத்தீஸ்வரன் இயேசு விரைவில் குணமளிப்பார். ஒவ்வொரு விசுவாசியும் பிறவிசுவாசிகளையும் சார்ந்துதான் வாழவேண்டுமென்னும் கொள்கையை கடவுள் இங்கே வலியுறுத்துகிறார்.நாம் தனியாக நிற்பது ஆபத்தானது. சிலவேளை நோயாளி பிறரிடம் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்காமலோ, அல்லது பிறர் தனக்கு செய்த தவறுகளுக்காக அவர்களை மன்னிக்காமலோ இருந்தால்கூட குணமாவது கடினமாகலாம். எனவே, இயேசுவால் குணம்பெற விரும்புகிறவர்கள் பிறரை மன்னிக்கவேண்டும். வறட்டு பெருமையில்லாமல் மன்னிப்பு கேட்கவும் வேண்டும்.

ஆண்டவரைப் புரிந்து கொண்டு ஆரோக்கியமாக வாழ்வோம் !

Top

## 20.கிறிஸ்தவர்களிடையே ஆயிரக்கணக்கான சபைப்பிரிவுகள் இருக்கின்றன.

பரிசுத்த வேதாகமத்தை பலரும் பலகோணத்தில் பார்த்து, பலவிதத்தில் புரிந்துகொண்டதாலேயே இவ்வளவு சபைப்பிரிவுகள் உருவாகியுள்ளன. ஆனால்,கிறிஸ்து மனிதனுடைய பாவத்திலிருந்து அவனை மீட்கவந்தார் என்னும் உண்மையை கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஏற்றுக்கொண்டு, நம்பிக்கை வைக்கின்றனர். கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருசிலர் தோற்றத்தில் எளிமையாக இருக்க வேண்டுமென நகை, பூ,பொட்டு அணிவதில்லை. ஒருசிலர் தங்களுடைய ஆன்மீக நம்பிக்கையை பிறர் தெரிந்து கொள்ள வேண்டுமென வெண்ணுடை அணிவர். கிறிஸ்தவர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்த ஒருசிலர் பகட்டான உடையணிவர். ஒருசிலர் அமைதியான முறையில் கடவுளை ஆராதிப்பர். வேறுபலர் ஆரவார ஆர்பாட்டத்தோடு கடவுளை ஆராதிப்பர். ஒருசிலர் கர்நாடக இசையில் பாடல்களைப் பாடுவதில் முனைப்பாக இருக்கின்றனர்.

Top

வேறுபலர் ஆங்கிலேய மொழிநடையில் பாடுகிறார்கள். ஒரு சபையின் ஊழியர் அங்கி அணிகிறார்;. வேறொரு சபையின் ஊழியர் கோட், சபாரி சூட் அணிகிறார். ஒருசிலர் ஜிப்பா, வேட்டி அணிகின்றனர். ஒருசிலர் ஜெபவீட்டுக் கட்டடம் பார்ப்பதற்கு அழகாக இருக்கவேண்டும் என்பதற்காக அந்த கட்டடத்திற்காக லட்சக்கணக்கில் செலவு செய்கிறார்கள். வேறுசிலர் அதே பணத்தில் அலங்காரமில்லாமல் பல சபைகளைக்கட்டி விடுகிறார்கள். பிராமணர்கள் ஜாதிப்பற்றும் ஆச்சார உணர்வும் உடையவர்கள். அவர்களை கர்த்தர் பக்கம் திருப்ப அவர்களுடைய கலாச்சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சிலசபைகள் உருவாகி இருக்கின்றன. அண்மையில் ஒரு சகோதரன் என்னிடம், “பாத்திமாவில் மாதா காட்சியளித்ததை நம்புகிறீர்களா?” என்று அன்போடு கேட்டார். “இது பைபிளில் எழுதப்பட்டுள்ளதா? என்று அவரிடம் கேட்டேன். “இல்லை” என்றார். “ஐயா! வேதத்தில் உள்ளதையே முழுமையாக கடைபிடிக்க முடியாமல் இருக்கிறேன் வேதத்தில் இல்லாததை நான் எப்படி நம்பி கடைபிடிக்க முடியும்? என்றேன். உடனே அவர் சிரித்துக்கொண்டே, “நீங்கள் சொல்வதும் சரி தான்”

Top

என்றார். இப்படி பல்வேறு வித்தியாசங்கள் இருந்தாலும், இயேசுதான் உலக இரட்சகர் என்பதை எல்லோரும் ஒன்றாக நம்புகிறார்கள்;.

## 21. பண ஆசையை பாவம் என்று கூறும் கிறிஸ்தவர்கள், ஏன் வரதட்சணையைக் கேட்டு கொடுமைப்படுத்துகிறார்கள்?

வரதட்சணையைக் கேட்டு துன்புறுத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களிடம் கிறிஸ்துவின் ஆவி இல்லை என்றே கூறுவேன். சிலைவழிபாட்டைத் தவறு என்று நம்பும் அநேகர், கந்துவட்டிக்கு வாங்கியாவது வரதட்சணை தரக்கட்டாயப்படுத்துவது விக்கிரக ஆராதனைக்கு சமமாக இருக்கிறதென்று உணராமல் இருக்கிறார்கள். வீட்டுக்கு வந்த மருமகளை அடிமையைப்போல நடத்துகிறார்கள். ‘நகையணியமாட்டோம் அதற்குப் பதிலாக பணமாக தாருங்கள்’ என்று ‘நாகரீகப்பிச்சை’ எடுக்கும் பெந்தெகோஸ்தே பரிசேயர்களும் உண்டு. லட்சக்கணக்கில் வரதட்சணையைப் பிடுங்கி விட்டு கர்த்தர் ஆசீர்வதித்தார்| என்று பெருமிதமாக

Top

சாட்சி சொல்லும்; கொலைகாரக் கிறிஸ்தவர்களும் உண்டு. பொருளாசைக்காரன் பரலோகத்திற்குள் நுழையமாட்டான் (1கொரி.6:10) என்று இப்படிப்பட்டவர்களை கடவுள்; எச்சரிக்கிறார். வரதட்சணை கேட்டு பெண்வீட்டாரை கொடுமைப்படுத்துவது கிறிஸ்தவப் பண்பாடு அல்ல.'வரதட்சணை வாங்க ஆசை கொள்ளாதே மனமே' என்ற பாடல் அடங்கிய எவரும் விரும்பும் ஓர் இனிய தெய்வம் என்னும் ஒலித்தட்டை நீங்களும் கேட்டு, மாப்பிள்ளை வீட்டாருக்கும் பரிசாக வாங்கி கொடுங்கள். (மேற்கண்ட ஒலித்தட்டு வேண்டுமானால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்). "என்னை நோக்கி,ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர். அந்நாளில் பலர் என்னை நோக்கி, "ஆண்டவரே, ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்கவில்லையா? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா?" என்பர். அதற்கு நான் அவர்களிடம்,

Top

“உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னைவிட்டு அகன்று போங்கள்” என வெளிப்படையாக அறிவிப்பேன்” (மத்.7:21-23) என்று இயேசு கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறார்.

## 22. நீங்கள் முதலில் கிறிஸ்தவர்களைத் திருத்திவிட்டு எங்களிடம் வாருங்கள்.

உங்கள் வாதம் ஏற்றுக்கொள்ளப்படத் தகுந்ததுதான். ஆனால், ‘ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதலாவது நோயாளி முற்றிலும் குணமடையும்முன் இரண்டாவது நோயாளியை அனுமதிக்கக்கூடாது’ என்று கூறமுடியுமா? ‘முதல் நோயாளி பூரண குணமடைந்தபின்தான் அடுத்த நோயாளி அனுமதிக்கப்பட முடியும்’ என்று சட்டம் வைத்தால், ஒவ்வொரு நோயாளிக்கும் ஒவ்வொரு மருத்துவர் தேவை. கிறிஸ்தவர்களுக்கு சொன்னதையே சொல்ல இறைவன் கட்டளையிடவில்லை. “உலகெங்கும் சென்று நற்செய்தியைப்

Top

பறைசாற்றுங்கள்” (மத்.28:19) என்று சர்வலோகநாதன் அன்புக் கட்டளையிட்டிருக்கிறாரே. அவரது உத்தரவின்படி உலகெங்குமுள்ள சந்துகள், பொந்துகள் எல்லா இடங்களிலும் இந்த அன்புச்செய்தி பரப்பப்படுகிறது. 100% சிலை வழிபாட்டினராயிருந்த இந்தியாவில் இன்று ஏறத்தாள 25 கோடி மக்கள் இயேசுவின் ஜீவகாருண்யக் கொள்கையை கடைபிடித்து வாழ அர்ப்பணித்துள்ளனர். இயேசுவின் இரத்தம் ஜாதி, மதம், இனம், மொழி, நாடு என்னும் பேதங்கள் இல்லாமல் எல்லாருக்காகவும் சிந்தப்பட்டது (1யோவா.2:2). கிறிஸ்தவர்களை சீர்படுத்தி வாழவைக்க ‘போதகர்கள்’ என்னும் அதிகாரிகள் சபையில் உண்டு. ஆனால், அதே நேரத்தில் இயேசுவை அறியாத மக்களுக்கு இயேசுவை அறிவிக்கும் பொறுப்பை நற்செய்தி பணியாளர்களிடம் கொடுத்திருக்கிறார் (எபே.2:14). மனம்திரும்புவதும் பாவமன்னிப்பும் எருசலேம் முதல் உலகின் எல்லைவரை பறைசாற்றப்பட வேண்டும் (லூக்;.24:27) என்று வேதம் கூறுகிறது. ‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்னும் பொன்மொழிக்கேற்ப நாங்கள்

Top

பெற்ற நல்வாழ்வை பிறருக்கு அறிமுகப்படுத்துவதில் தவறென்ன இருக்கிறது?

## 23.உங்களுக்கு வேறு வேலையே இல்லையா?

எங்கள் வீட்டு வேலைகள், அலுவலக வேலைகள் அனைத்தையும்; நாங்கள்தான் செய்யவேண்டும். எங்களுக்கு குடும்பங்களும் பொறுப்புகளும் உண்டு. ஆனால், எங்களுக்கு கிடைத்த இரட்சிப்பின் ஆனந்த அனுபவத்தை மற்றவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நல்லெண்ணத்தால் தான் நாங்கள் இயேசுவின் இரட்சிப்புச் செய்தியை மற்றவர்களுக்கு சொல்கிறோம். ஐரோப்பாவிலுள்ள ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்து, செல்வச் செழிப்போடு வாழ்ந்து கொண்டிருந்த அன்னை தெரெசா என்னும் தங்க மங்கை, இந்திய நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு, தொழுநோயாளிகளுக்கு, ஆதரவற்ற அநாதைகளுக்கு பணிசெய்ய இந்தியாவுக்கு வந்ததையும், அதன் விளைவாக அவர் பட்ட பாடுகளையும், அந்த புனிதவதி பெற்ற

Top

நோபல்பரிசையும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவருக்கு வேறு வேலையே இல்லையா? அவர் ஐரோப்பாவிலுள்ள ஒரு பணக்கார இளைஞனைத் திருமணம் செய்து, குழந்தைக் குட்டிகளைப் பெற்றுக்கொண்டு தன் பிழைப்பை நடத்தியிருக்கலாமே! ஏன் இல்வாழ்வைத் துறந்து சமுதாயப்பணி செய்யவேண்டும்? எத்தனை ஆயிரம் வாழ்விழந்தவர்கள் அவர்மூலம் மறுவாழ்வைப் பெற்றுக்கொண்டார்கள்! யோசியுங்கள். அன்னைத் தெரெசாவை இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று எத்தனையோ மதவெறி பிடித்த அரசியல்வாதிகள் முயற்சி செய்தார்கள்! ஆனால், அவர்களுடைய சமுதாயப்பணியை முறியடிக்க முடியவில்லை. யாரோ பெற்றுப்போட்ட வேற்றுநாட்டு அநாதைகளை நான் ஏன் வளர்த்து ஆளாக்க வேண்டுமென்று அந்த தாய் யோசித்திருந்தால், கொல்கத்தா நகரத்தின் நிலைமை எப்படி இருந்திருக்கும்? யோசியுங்கள். அன்னைத் தெரெசாவின் மறைவுக்குப்பின், இயேசுவை ஏற்றுக்கொண்ட நிர்மலா என்னும் ஒரு பிராமண சகோதரி அந்த அமைப்பை நடத்துகிறார்கள். அவர்களுக்கும் வேறு வேலையே இல்லையா என்று

Top

கேட்கப்போகிறீர்களா? இந்தியாவில் பிறந்து வளர்ந்து, வந்தே மாதரம், ஜெய்ஹிந்த், பாரத் மாதாகி ஜெ என்று அடிக்கடி தங்களை தேசபக்தி உள்ளவர்களைப்போல காட்டும் இந்துக்கள் எத்தனைபேர் இந்தியத் தொழுநோயாளிகளுடைய உடலைத் தொட்டு அவர்களுக்கு சேவை செய்வார்கள்? இப்போதைய அவசர தேவை மதவெறியல்ல மனிதநேயம். எனக்கு தெரிந்த எத்தனையோ பட்டதாரிகள், அறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் தங்களுடைய எல்லாவற்றையும் துறந்து இந்த அருட்பணி செய்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்து சமுதாயப்பணி செய்பவர்கள் படிப்பறியாதவர்களோ, ஏழைகளோ அல்ல. மாறாக, பெரிய பணக்காரர்களாக, படிப்பறிவுடையவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும்போது இறைஅழைப்பிற்கு கீழ்படிந்து காடுகள், மேடுகள், ஆபத்தான சூழல்களென்று பார்க்காமல் இறைப்பணியாற்ற அர்ப்பணித்தவர்கள். கிறிஸ்தவப்பணி என்பது வேலை ஒன்றும் இல்லாதவர் பொழுதுபோக்கிற்காக செய்யும் விளையாட்டல்ல. தங்கள் வாழ்வில் எல்லாவற்றையும்விட அதிக மதிப்பையும், அன்பையும் இயேசுவின்மீது வைப்பதால், மேலான மதிப்பையும்

Top

அன்பையும் மக்களுக்கும் கொடுத்து செய்யும் தன்னார்வத் தொண்டு.

இதை எழுதும் நான் பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஒரு பொறியியல் பட்டதாரி. நான் துபாயில் பணிசெய்து கொண்டிருக்கும்போது கடவுளின் தூண்டுதலால் இறைப்பணி செய்ய இந்தியாவுக்கு வந்தேன். எனது பட்டத்தையும், பதவியையும், அதனால் வரும் செல்வாக்கையும் மனதில் வைக்காமல், கடவுளின் பெயரில் மக்களுக்கு தொண்டுசெய்து, ஆன்மீக விழிப்புணர்வூட்டுவதையே பெரிய காரியமாகக் கருதி இந்த பணிக்கு வந்தேன். நான் பிழைப்பதற்காக இறைப்பணிக்கு வரவில்லை வரவேண்டிய தேவையுமில்லை. பவுல் என்னும் இறைத்தொண்டர் இயேசுவின் அன்பால் ஈர்க்கப்பட்டு, தனக்கு லாபமாயிருந்தவைகள் எல்லாவற்றையும் நஷ்டமென்றும் குப்பை என்றும் தூக்கி எறிந்தார். இரத்ததானம் செய்து ஒருயிரைக் காப்பாற்ற நினைக்கும் உங்களிடம், “உங்களுக்கு வேறு வேலையில்லையா என்று உங்கள் நண்பர் கூறினால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

Top

## 24.உங்களுக்கு பயமே இல்லையா?

இந்தியாவின் வீதிகளில் கிடக்கும் தொழுநோயாளிகளை, ஆதரவற்ற அநாதைகளை தூக்கி எடுத்து உணவு, உறைவிடம், உடை, மருந்து இவற்றை இலவசமாக கொடுத்து மறுவாழ்வளிக்க யாருக்கு பயப்படவேண்டும்? அரசாங்கத்தாரின் கண்களுக்கு புலப்படாத குக்கிராமங்களில் எங்கள் செலவில் மருத்துவமனைகளை, பள்ளிக்கூடங்களை கட்டி சேவைசெய்ய யாருக்கு பயப்படவேண்டும்? தற்கொலை செய்யப்போகும் இளைஞர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை இயேசுவின் நற்செய்தியின் மூலம் கொடுக்க யாருக்குக் கணக்கு கொடுக்கவேண்டும்? 'நிம்மதி தரும் ஆலோசனை மையங்களை' நிறுவி விவாகரத்து பண்ணும் நிலையில் மனமுடைந்திருக்கும் மக்களுக்கு ஆலோசனை கொடுத்து, இறைவேண்டலால் இணைத்து வைப்பதை தவறென்று எந்த மதவாதியால் குற்றம் சாட்டமுடியும்? கடன் பளுவை தாங்க முடியாமல் தவிக்கும் மக்களுக்காக கண்ணீரோடு இறைவனிடம் மன்றாடி கடனைத்

Top

தீர்த்தது தவறு என்று யார் கூறமுடியும்? குடிவெறியில் மனைவியை மிதித்து, வீட்டுப் பொருட்களை உடைத்த காட்டுமிராண்டிகளுக்காக கடவுளிடம் மன்றாடி அவர்களை மனிதர்களாக மாற்ற யாருக்கு பயப்படவேண்டும்? லட்சியமற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த இளைஞர்களின் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை கற்றுக்கொடுத்த கிறிஸ்தவ இறைப்பணியாளர்களை எப்படி குறை கூறமுடியும்?

வேலையில்லாமல் கஷ்டப்பட்ட மக்களுக்காக உருக்கமாக மன்றாடி வேலை வாங்கித் தந்தது பாதகமா? ரோகிணிதோஷம், சனிதோஷம், நாகதோஷம், செவ்வாய்தோஷம், மூலநட்சத்திரம் என்று வாழ்க்கையே பாலைவனமாகிவிட்ட விரக்தியில் மூழ்கிப்போன மக்களுக்கு இலவசமாக ஒளிமயமான எதிர்காலத்தை இயேசு கொடுக்கிறார்.குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைப்பதை தவறு என்று சுட்டிக்காட்ட யாருக்கு பயப்பட வேண்டும்? திருமண தடைகளால் திருமணமே ஆகாமலிருந்த மக்களுக்கு இயேசுவின் அருளால் திருமணம் நடந்ததை கொடுமை எனக் கூறமுடியுமா? திருமணமாகி

Top

குழந்தையில்லாமல் பல வருடங்கள் மனஉளைச்சலால் அவதிப்பட்ட தம்பதியருக்காக ஜெபித்து, இறைவன் குழந்தைப் பாக்கியத்தை கொடுத்தது அநியாயமா? பிசாசுத் தொல்லையால் அவதிப்படும் கோடிக்கணக்கான மக்களுக்காக இறைவனை வேண்டி விடுதலை வாங்கித் தந்தது பாவமா? இந்தியாவில் விபச்சாரத்தை விதியாக கொண்டிருந்த அபலைகளுக்கு ஆண்டவரின் அன்பை எடுத்துச் சொல்லி புதுவாழ்வு கொடுத்தது குற்றமா? இந்துக்களாயிருக்கும்போது ‘ஜாதி’ என்னும் பேய்க்காக உயிரையே விட துணிந்தவர்கள், இன்று இயேசுவை ஏற்றுக்கொண்டபின், ஜாதிபார்க்காமல் திருமணத்தையே செய்ய முடிகிறதே. இந்த சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்புவதற்கு யாருக்கு பயப்படவேண்டும்? வரதட்சணையை கேட்டு வாங்குவது பாவம் என்னும் சமுதாய விழிப்புணர்வை உருவாக்க யாருக்கு பயப்பட வேண்டும்?

லஞ்ச சாக்கடையில் ஊறிய அரசு அலுவலர்களுக்கு நேர்மையைப் கற்பிக்க யாருக்கு பயப்படவேண்டும்? கொள்ளைக் கூட்டத்தலைவருக்கு தெய்வீக அன்பை எடுத்து சொல்லி

Top

அவர்களை நாட்டின் நற்குடிமக்களாக மாற்ற யாருக்கு பயப்பட வேண்டும்? கங்காதேவியின் கோபத்தை தணிப்பதாக தங்கள் குழந்தைகளை கங்கையாற்றில் எறியும் கொடூர கலாச்சாரத்தை தவறென்று சுட்டிக்காட்ட யாருக்கு பயப்படவேண்டும்? தீபாவளிக்குக் கோடிக்கணக்கான பணச்செலவில் பட்டாசு வெடித்து எத்தனை குடிசைகள் தீக்கிரையாகிப் போகின்றன? இதைத் தவறென்று சுட்டிக்காட்ட யாருக்கு பயப்படவேண்டும்? சுனாமி, நிலநடுக்கம் வந்து லட்சக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமானபோது, அவர்களுக்கு ஜாதிமத பேதமின்றி மனதுருக்கத்தோடு ஓடிச்சென்று வண்டி வண்டியாக உணவுப் பொருட்களை, துணிமணிகளைக் கொடுக்க யாருக்கு பயப்பட வேண்டும்? இயேசுவின் அன்போடு கிறிஸ்தவ அமைப்புகள் செயலாற்றியதை கண்டு, கிராமம் கிராமமாக மக்கள் இயேசுவின் அன்பை ஏற்றுக்கொண்டதை யார் தடைப்பண்ண முடிந்தது? கிறிஸ்தவர்கள் செய்வது அனைத்துமே சமுதாய முன்னேற்றப்பணிகள் தானே தவிர, சமூக விரோதப்பணிகளல்ல.

Top

## 25. நீங்கள் மரியா, அந்தோணியார், சவேரியார் என்று பலரை வணங்குவது போல, நாங்களும் பல தெய்வங்களை வணங்குவதில் தவறென்ன?

(தந்தை, மகன், தூய ஆவியாராகிய திரித்துவ) தெய்வத்தை தவிர வேறு யாரையும் கடவுளாக வணங்கக்கூடாது என்பது வேத உபதேசம்.உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி செய்| என்று மறைநூலில் எழுதப்பட்டுள்ளது (மத்.4:10). கிறிஸ்தவர்களில் சிலர் இயேசுவின் தாயாகிய மரியாள், வானதூதர்கள், மற்றும் இறந்த புனிதர்களிடமும் வேண்டுதல் செய்கிறார்கள். ஆனால் இது வேதசட்டப்படி தவறு. மரியா, தன் மூலமாகத் தான் கடவுளிடம் போகவேண்டும் என்று கூறியதாக வேதத்தில் எந்த ஆதாரமுமில்லை. கடவுள் ஒருவரே கடவுளுக்கும் மனிதருக்குமிடையே இணைப்பாளரும் ஒருவரே அவரே மனிதவடிவில் வந்த இயேசுகிறிஸ்து (1திமொ.2:5). கடவுளையும் மனிதனையும் இணைக்க தன் உயிரையே கொடுத்த இயேசுவின் அன்புக்கு அருகில் எவரையும் வைக்கமுடியாது. இயேசு இந்த உலக மக்களுக்காக

Top

இறப்பதற்குமுன், தாய் என்ற முறையில் மரியாவிடம் போய்,தாயே இவ்வுலக மக்களை மீட்க என் உயிர் தேவைப்படுகிறது நான் அவர்களுக்காக இறக்க அனுமதி கொடுப்பீர்களா?' என்று கேட்டால் பெற்ற வயிறு சம்மதிக்குமா? எந்த தாயும் தான் பெற்ற குழந்தை தன் கண்ணெதிரே அடித்து கொல்லப்படுவதை சகிக்கமாட்டாள்.ஆக, நரகக் குழியில் நாம் விழக்கூடாது என்று நினைத்து, நாம் அடைய வேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டாரே! அந்த கருணாமூர்த்தியிடம் நாம் ஏன் நேரடியாக பிரார்த்திக்க கூடாது? நமக்காக உயிரையே கொடுக்குமளவுக்கு நம்மீது பாசம் வைத்திருக்கும் அந்த கருணைப்பிரபுவிடம் நாம் ஏன் நேரடியாக பேசக்கூடாது? கொஞ்சம் யோசியுங்கள். ஒருசில கிறிஸ்தவர்கள், மரியா பாவமே இல்லாமல் பிறந்து,வாழ்ந்தவர் என்று கூறுகிறார்கள். ஆனால், மரியா தன்னைப்பற்றி தானே கூறுவதை கவனியுங்கள். “ஆண்டவரை என் உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது” (லூக்.1:47). என் ‘மீட்பராம் கடவுள்’ என்று மரியா கூறுவதிலிருந்து மரியாவுக்கு மீட்பர்

Top

தேவை என்று புரிகிறது. பாவிக்குத்தான் மீட்பர் தேவை மரியா தன் நிலையை வெளிப்படையாக கூறுகிறார். சிலர் மரியாவுக்கு இயேசுவைத் தவிர வேறு பிள்ளைகளேயில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். வேதம் கூறுவதை தெளிவாக கவனியுங்கள். இவர் தச்சரல்லவா? மரியாவின் மகன்தானே. யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரரல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடிருக்கிறார்கள் அல்லவா? (மாற்.6:3) என்று இயேசு மனித வடிவில் வாழ்ந்த நாட்களில் அவரோடு வாழ்ந்தவர்கள் கூறினார்கள்.

மேற்கண்ட வசனத்திலிருந்து, இயேசு பிறந்தபின் மரியாவுக்கு பிள்ளைகளுண்டு என்று அறிகிறோம். கிறிஸ்து மக்களுக்கு பிரசங்கம் பண்ணும்போது, “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே. நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்” (மத்.11:28) என்று கூறினார். தன் தாய் மூலமாகவோ, செத்துபோன புனிதர்கள் மூலமாகவோ, அல்லது வானதூதர்கள் மூலமாகவோ மன்றாடக்

Top

கூறவில்லை. பேதுரு என்னும் திருத்தூதர் கொர்நெலியுவின் வீட்டிற்கு வந்தபோது, கொர்நெலியு அவரை எதிர்கொண்டு போய் அவர்; காலில் விழுந்து வணங்கினார். பேதுரு,'எழுந்திடும், நானும் ஒரு மனிதன்தான்' என்று கூறி அவரை எழுப்பினாhர் (தி.பணி.10:25,26). கால் ஊனமுற்ற ஒருவருக்காக பவுலும் பர்னபாவும் சேர்ந்து பிரார்த்தனை செய்தபோது, அவர் முழுமையாக குணமடைந்தார். உடனே அங்கிருந்த மக்கள், "தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன" என்றனர். உடனே பவுலும் பர்னபாவும், "மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தாம் நீங்கள் இந்த பயனற்ற பொருட்களை விட்டுவிட்டு, விண்ணையும் மண்ணையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிய வாழும் கடவுளிடம் திரும்புங்கள் என்ற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்றனர் (தி.பணி.14:8-15). வானதூதர்களை வணங்குவதை தவறென்று வேதம் எச்சரிக்கிறது (கொலோ.2:19). யோவான் என்னும் திருத்தூதரை கடவுள் மோட்சத்தைச் சுற்றிக் காண்பிக்கக் கொண்டு சென்றார். யோவான் பல கண்கொள்ளாக்

Top

காட்சிகளைக் கண்டு வியந்து போனார். கடவுளால் நியமிக்கப்பட்ட ஒரு வானதூதர்தான் இவை எல்லாவற்றையும் அவருக்கு காண்பித்தார். அதைப்பற்றி அவரே எழுதுகிறார்.

யோவானாகிய நானே இவற்றை எல்லாம் கண்டேன் கேட்டேன். அப்போது இவற்றை எனக்குக் காட்டிய வானதூதரை வணங்கும் பொருட்டு அவருடைய காலடியில் விழுந்தேன். அவரோ என்னிடம், “வேண்டாம் உனக்கும் இறைவாக்கினர்களான உன் சகோதர சகோதரிகளுக்கும் இந்நூலிலுள்ள வாக்குகளை கடைபிடிப்போருக்கும் நான் உடன் பணியாளனே. கடவுளை மட்டுமே நீ வணங்கவேண்டும்” என்றார் (தி.வெ.22:8,9). இங்கே யோவானுடைய மனஐயங்கள் தெளிவடைகின்றன. கடவுளை மட்டுமே வணங்க கற்றுக் கொண்டார்.

## 26.நீங்கள் அமெரிக்காவிலிருந்து பணம் வாங்குகிறீர்கள் !

2004-ஆம் வருடம் இந்தியா சுனாமியால் பாதிக்கப்பட்டபோது வெளிநாடுகளிலிருந்து வந்த நிவாரணநிதியை நாம் ஏற்றுக்

Top

கொள்ளவில்லையா? அல்லது ஜப்பானில் சுனாமி வந்து கோடிக் கணக்கில் பணநஷ்டம் வந்தபோது, இந்தியா அனுப்பிக் கொடுத்த நிவாரண நிதியை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? எந்த நாட்டிலிருந்து நாம் பணம் வாங்கினால் என்ன? அந்த பணத்தை வைத்து நாம் இந்த மண்ணில் என்ன நலத்திட்டங்களை செயல்படுத்தினோம் என்றுதான் பார்க்கவேண்டும். வேறு எந்த நாட்டிலிருந்தும் கடன் வாங்க தேவையில்லாத அளவுக்கு இந்தியா இன்னும் ஒரு தன்னிறைவுள்ள நாடாக மாறவில்லை. உலகிலேயே மிகப்பெரிய பணக்காரர்களுடைய வரிசையில் இந்தியர்கள் இருந்தாலும், மூன்று வேளை உணவில்லாமல் துன்பப்படும் ஏழைகளும் இங்கு கோடிக்கணக்கில் இருக்கிறார்களே! வெளிநாட்டிலிருந்து மறைப்பணி செய்ய வந்தவர்கள் தங்கள் நிலபுலன்கள், உடமைகள் எல்லாவற்றையும் விற்று, அந்த பணத்தை இந்தியாவுக்கு கொண்டுவந்து, நம் அநாதைகள், நோயாளிகளுக்கு புகலிடமளிக்க ஆஸ்ரமங்கள், மருத்துவமனைகளை கட்டிச் சேவை செய்தனர். அமெரிக்கவிலுள்ள கிறிஸ்தவப் பணக்காரர்கள், பிச்சைக்கார

Top

இந்தியர்களை வறுமையிலிருந்து மீட்க, தங்கள் அமெரிக்க சொத்துக்களை விற்று, நம் நாட்டுக்கு அனுப்பி சேவை செய்வதை குற்றம் என்று கூறுகிறீர்களா? நாடு முழுவதும் கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்டு நடத்தப்படும் இலவச அநாதை விடுதிகள் மருத்துவமனைகள், பள்ளிகள், சேவை மையங்கள் எத்தனை என்று நீங்கள் கணக்கு பார்ப்பது நல்லது. இந்தியாவுக்குள் இருக்கும் ஜாதிவெறியால் ஒரு ஜாதிக்காரன் வேறு ஜாதிக்காரனிடம் சண்டை போட்டு வெட்டி சாய்க்கிறான். இப்படி ஒரே நாட்டுக்குள் பிரிந்து கிடக்கும்போது, எங்கோ ராஜவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த அமெரிக்கர்கள் நம்மை தங்கள் சொந்த இரத்தமாக நினைத்து சேவை செய்வதை தவறு என்று கூறுகிறீர்களா?

வறுமையில் வாடும் இந்தியனுக்கு எந்த நாட்டுக்காரன் உதவி செய்தால் என்ன? ஒரு காலகட்டத்தில் 'இந்தியாவில் மேல்ஜாதி மக்கள் மட்டும்தான் கல்வி கற்கவேண்டும் தாழ்த்தப்பட்டவர்கள் கல்வி கற்கக்கூடாது' என்னும் கொடுமையான சட்டமிருந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் கூட

Top

உதவிக்கரம் நீட்டாமல் புறக்கணித்த காலகட்டத்தில், தாயுள்ளத்தோடு உதவியவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்த திருத்தொண்டர்கள்தான். பெண்குழந்தை பிறந்தவுடன் அதை கொன்றுவிடும் பழக்கம் இந்தியாவில் இருந்தது. அப்படிப்பட்ட கொடுமைக் கலாச்சாரத்திலிருந்து ஆயிரக்கணக்கான சிறுமிகளை மீட்டு மறுவாழ்வு கொடுத்த வெளிநாட்டு அருட்பணியாளர்களுடைய அயராத உழைப்புகளை அசட்டை செய்யமுடியுமா? கணவன் இறந்தவுடன் அவரை எரிக்கும் அதே சிதையில் உயிரோடிருக்கும் மனைவியையும் எரிக்கும் கொடூர பழக்கம் (உடன்கட்டை ஏறல்) இந்தியாவில் இருந்தது. அதற்கு இந்துமதத் தலைவர்களும் அறிஞர்களும் துணைபோனார்கள். இந்நிலையில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த வில்லியம் கேரி போன்ற அருட்பணியாளர் தங்கள் பணத்தைச் செலவுசெய்து, இந்த மூடபழக்கத்திற்கு எதிர்த்துநின்று, அரும்பாடுபட்டு முறியடித்தனர். குழந்தைகளுக்கு கல்யாணம் செய்து வைக்கும் மூடபழக்கம் இந்தியாவில் சர்வசாதாரணமாய் வழக்கில் இருந்தபோது, அதை தவறென்று முதலில் எதிர்த்தவர்கள் வெளிநாட்டினர்தான். கிறிஸ்தவத்தை புரிந்து

Top

கொண்டு, அன்றும் இன்றும் கோடிக்கணக்கான மக்கள் கிறிஸ்துவின் கொள்கையை பின்பற்றுகிறார்கள். இந்தியாவில் இருக்கும் மதவாத கோடீஸ்வரர்களுக்கு இல்லாத ஒரு தயாளகுணமும், அன்பும், மனதுருக்கமும் வெள்ளைக்காரர்களிடம் இருப்பதை பாராட்டவேண்டிய நீங்கள் குறைகூறுகிறீர்களா? உங்கள் வீட்டிலுள்ள அனுபவமுள்ள முதியவர்களிடம் கேட்டுப் பாருங்கள். நான் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்பது உங்களுக்கு புரியும்.

## 27.கிறிஸ்தவர்கள் கீழ் ஜாதி மக்கள்.

மேல்ஜாதி கீழ்ஜாதி வேறுபாடு இந்து மதத்திலிருந்து உருவானது. பெரும்பாலும் இந்துக்கள்தான் தங்களுக்குள் 'நான் மேல்ஜாதி,நீ கீழ்ஜாதி' என்று சண்டை போடுகிறார்கள். சதுர் வர்ணம் மயா சிருஷ்டம் (நானே மக்களை நான்கு வர்ணங்களாக பிரித்தேன்) என்று கண்ண பரமாத்மா கூறியதாக பகவத்கீதை கூறுகிறது. உண்மையாகவே கண்ண பரமாத்மா அப்படி

Top

கூறியிருப்பாரா? அப்படியே கூறியிருந்தால் அவரை உண்மையான பரமாத்மா என்று நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். கடவுள் பிரிந்துக்கிடக்கும் உலகத்தை சேர்த்துவைப்பார். தெய்வம், ஜாதி அடிப்படையில் மக்களை பிரித்து சண்டையை மூட்டி வேடிக்கை பார்ப்பவரல்ல. சரி, அது போகட்டும். கிறிஸ்தவர்கள் கீழ்ஜாதி மக்கள் என்று நம்மூர் இந்தியர்கள் கூறுகிறார்கள். கோமணம் கட்டிக் கொண்டிருந்த நமக்கு நல்ல உடையை அணியக் கற்றுக் கொடுத்தானே அந்த வெள்ளைக்காரன் அவன் நம்மைவிட கீழ்ஜாதி என்று கூறுகிறீர்களா? அவனுடைய வாழ்வியல் தரத்தை நம் தரத்தோடு எப்படி ஒப்பிட்டுப் பேசுகிறீர்கள்?

நம் நாட்டில் ஜாதிச்சண்டையின் மூலம் கோடிக்கணக்கான மக்கள் செத்துப் போனார்களே! இந்த காட்டுமிராண்டித்தனமான ஜாதிகொள்கையை தவறென்று சுட்டிக்காட்ட, பரிசுத்த வேதாகமத்தை இம்மண்ணுக்கு கொண்டுவந்த, உயர்ந்த உள்ளமுடையவர்களை கீழ்ஜாதி மக்களென்று கூறப்போகிறீர்களா? அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஐரோப்பா,

Top

இங்கிலாந்து போன்ற நாட்டிலுள்ளவர்கள் இந்தியர்களைவிட கீழ்ஜாதிமக்கள் என்று இந்தியர்கள் கூறும்போதே, இந்தியர்கள் எப்படிப்பட்ட மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். வெளிநாட்டுக்காரர்களை விடுங்கள். இந்தியாவில் லட்சக்கணக்கான பிராமணர்கள் இயேசுவை வணங்குகிறார்களே! அவர்களும் கீழ்ஜாதியா? தமிழ்நாட்டில், கிறிஸ்தவர்கள் கீழ்ஜாதி மக்கள்| என்ற கூற்றை தவறு என்று நிரூபிக்கும் படிக்கு சென்னையில் கிறிஸ்தவ பிராமணர்கள்' சைவ ஆன்மீகக் கூடுகை ஒன்றை உருவாக்கி, அது ஓகோ என்று வளர்கிறதே! தமிழ்நாட்டில் 16,000 பிராமணர்கள் இயேசுவை தங்கள் கடவுளாக ஆராதிக்கிறார்களே!

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபின் forward caste, backward caste என்று எந்த வித்தியாசமும் இல்லாமல் திருமணம் செய்யுமளவிற்கு, அவர்களுடைய மனப்பாங்கும் உயர்ந்துள்ளது. ஆனால், இதே மக்கள் இந்துக்களாக இருந்தால் தங்களால், ஜாதி பார்க்காமல் ஊரறிய கலப்புமணம் செய்யமுடியுமா?

Top

கிறிஸ்துவுக்குள் மேல்ஜாதி, கீழ்ஜாதி, பிராமணன், சூத்திரன், வெளிநாட்டுக்காரன், உள்நாட்டுக்காரன், ஆரியன், திராவிடன், கறுப்பன், வெள்ளையன், ஏழை, பணக்காரன் என்று எந்த வேறுபாடுமில்லை. எல்லோரும் கிறிஸ்து பெருமானின் அன்புக்குமுன் சமமாக இருக்கிறார்கள் (கொலோ.3:11). எல்லோரும் கிறிஸ்துவின் ஒரே இரத்தத்தால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு, சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட கைவிடப்பட்ட, ஒதுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, காயப்படுத்தப்பட்ட ஏழைகள் மீது சிறப்பான பாசம் வைத்திருந்தார். அதனால்தான், அவர், "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், 'சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர்', என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன்" (லூக்.4:18) என்றார். உலகத்தின் அரசர்களாலும் மதத்தலைவர்களாலும் 'தாழ்த்தப்பட்டவர்கள்' (தலித்துகள்) என்று கேவலப்படுத்தப்பட்ட எளிய மக்களை விடுவிக்க ஒரு சமத்துவத் தலைவர் தேவைதானே! அதற்காகத்தான் உலகிலேயே உயர்ந்தவர்கள்

Top

என்று தங்களை கூறிக்கொள்ளும் யூதகுலத்தில் பிறந்த இயேசு ஜாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக்கடந்து எல்லாரையும் நேசிக்கிறார். இந்துமத சனாதன தர்மத்தாரால் வெறுக்கப்பட்டவர்கள் இயேசுவால் அரவணைக்கப்படுகிறார்கள். இதுதான் தெய்வீகம், உண்மையான ஆன்மீகம் என்று லட்சக்கணக்கான இந்து பிராமணர்கள் புரிந்து கொண்டு இயேசுவின் அன்புக் கொள்கையை தழுவுகிறார்கள். “இந்த அபிஷ்டு போன ஜென்மத்தில் பெரிய பாவம் செய்திருப்பான் அதனால்தான் இவன் தாழ்த்தப்பட்ட ஜாதியில் பிறந்திருக்கிறான்” என்று பிராமணர்களால் அவமதிக்கப்பட்டவர்களை தங்கள் சொந்த இரத்தமாக கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இன்று நாம் பயன்படுத்தும் பெரும்பாலான விஞ்ஞான கண்டுபிடிப்புகளை கண்டு பிடித்தவர்களும் கிறிஸ்துவின் கொள்கைக்கு தங்களை அடிபணித்தவர்கள் தான். எனக்கு தெரிந்த ஒரு பிராமணர் கர்த்தரை ஏற்றுக்கொண்டு அருட்பணிக்காக குஜராத்துக்குப் போய், காடுகளுக்குள் வாழும்

Top

நாகரீகமில்லாத காட்டுவாசி மக்களுக்கிடையே சமுதாய முன்னேற்றப் பணி செய்கிறார். இவர் இந்துவாக இருந்தால் நாங்கள் பிராமணாள் என்று கூறி மற்ற மக்களைப் புறக்கணிப்பார். அவர் ஆண்டவருடைய அன்பால் தூண்டப்பட்டு இந்த காருண்யப் பணியைச் செய்கிறார். அன்பை பெரிதாக மதிக்கும் எம்மதத்து மக்களும் ஒரு நாள் இயேசுவே மெய்ப்பொருள் என்று கூறுவார்கள்.

## 28. ஏழைகள் மட்டும் தான் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். பணக்காரர்களை உங்களால் மாற்ற முடியுமா?

உலகிலுள்ள பெரும்பாலான கண்டுபிடிப்புகளையும் கண்டுபிடித்தது கிறிஸ்தவர்கள்தான். உலகளாவிய பெரிய பெரிய உற்பத்தியாளர்களும் கிறிஸ்தவர்கள்தான். உலகத்திலேயே மிகப்பெரிய பணக்காரர்களுடைய வரிசையில் இருப்பவர்களும் கிறிஸ்தவர்கள்தான். உலகிலேயே

Top

கிறிஸ்தவம்தான் மற்ற எல்லாவற்றைவிடவும் அதிக மக்கள்தொகை உடையதாக இருக்கிறது. உலகிலேயே மிக வேகமாக வளரும் மார்க்கமும் கிறிஸ்தவம்தான். கிறிஸ்தவர்கள்தான் ஜாதி, மத, இன பாகுபாடில்லாமல் எல்லோருக்கும் பணஉதவி, பொருளுதவி செய்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள இந்துக்களிடம் கோடிக்கணக்கில் பணமிருந்தாலும் இவற்றால் இந்திய ஏழைகளுக்கு என்ன லாபம்? வெள்ளைக்காரர்கள் இந்தியாவிற்கு வந்திருக்காவிட்டால் இந்தியர்கள் தமது கலாச்சாரப்படி கோமணம் தான் கட்டிக் கொண்டிருந்திருப்பார்கள்.

இன்று இந்தியாவிலுள்ள பட்டணங்களிலிருந்து கிராமங்கள் வரை பணக்காரர்கள் ஆயிரக்கணக்கில் இயேசுவின் கொள்கைகளை பின்பற்ற தொடங்கியிருக்கிறார்கள். இயேசுவின் நற்செய்தியை கிறிஸ்தவர்கள் முதலாவது ஏழைகள், நலிந்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், காயப்பட்டவர்களிடம் போய்சொல்ல ஒரு பிரதான காரணமுண்டு. இயேசு தன் சீடர்களிடம் நற்செய்திப்பணியை பற்றி கூறும்போது,

‘ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்’ (லூக்.4:18,19) என்று கூறினார்.கிறிஸ்து ஒடுக்கப்பட்டோர் மேலும், ஏழைகள் நலிந்தோர் மேலும் மனுதுருகும் தெய்வம் என்பது உலகறிந்த உண்மை. மேல்தட்டுப் பணக்காரர்களின் கோரப்பிடியில் நம்பிக்கையற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருந்த ஏழை எளிய மக்களைக் காப்பாற்றி புதுவாழ்வு கொடுப்பது முக்கியமானது என்று உணர்ந்து முதலாவது ஏழைகளுக்கு நற்செய்தி கூறப்படுகிறது. இந்துமத கோயில்களிலுள்ள சிலைகளை பார்க்கச் செல்லும் ஏழை எளிய மக்கள் வரிசையில் நின்று அவஸ்தைப்படும்போது,பணக்காரர்கள் பணத்தைக் கொடுத்து மிக எளிதில் பார்த்துவிடுகிறார்களே! கடவுள் தன்னுடைய பார்வையில் ஏழைகளையும் பணக்காரர்களையும் ஒன்றாகத்தான் பார்க்கவேண்டும். அதை இந்து மதத்தில் எதிர்பார்க்க முடியுமா?

Top

கிறிஸ்தவர்கள் ஏழைகளை நேசித்து, ஏற்றுக்கொள்வதை நீங்கள் பாராட்ட வேண்டும்.

## 29 . நீங்கள் ஜெபிக்கும்போது ஏன் சப்தமிடுகிறீர்கள்?

ஒரு மாணவன் தேர்வில் வெற்றி பெற்று சப்தமிட்டு தன் வெற்றியைக் கொண்டாடுகிறான். விளையாட்டுப் போட்டியில் ஒரு அணி வெற்றி பெற்றால்,அவ்வெற்றியை ஆனந்த முழக்கமிட்டு கொண்டாடுகிறார்கள். இதை தவறென்று கூறமுடியுமா? கடவுள் மனிதனுக்கு தந்தையானவர். அவரிடம் மகன், மகள் என்னும் உணர்ச்சி பெருக்கோடு பேசும்போது சப்தம் கொஞ்சம் அதிகமாகலாம். அதை குறை என்று கூற முடியுமா? விக்கிரகக் கோயிலில்கூட தினமும் காலையிலும், மாலையிலும் மந்திரம் சொல்லும்போது, அதை ஒலிப்பெருக்கியின் மூலம் அதே ஊரிலுள்ள எல்லா மதத்து மக்களும் கேட்கும்படி செய்வதை தவறு என்று நாங்கள் என்றாவது கூறினோமா? ஆனால், சுத்தமான ஆன்மீகம் பிறருக்கு தொந்தரவாக இருக்காது. தூய அன்புதான் மக்களுக்கு தேவை. எனவே மக்கள் தூங்கும் இரவு வேளைகளில்

Top

அவர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல், அமைதியாக இறைவனை வழிபடுவது நல்லது. அப்படியே பாடல் பாடும் போதும் கடவுளைப் புகழும் போதும் சப்தம் வந்தால், அந்த சப்தம் பிறருக்கு கேடு விளைவிக்காமல், அவர்களது மனஅமைதியை கெடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்போதெல்லாம் A/C பொருத்தப்பட்ட சபைக் கட்டிடங்களில் ஜன்னல்களும், வாசல்களும் பூட்டப்படுவதால் சப்தம் வெளியே வராது. பிரார்த்தனை செய்யும்போது கொஞ்சம் சப்தத்தை உயர்த்தி,கடவுளிடம் மன்றாடும்போது, அது கொஞ்சம்கூட வலிமையுடையதாக பலர் உணர்கின்றனர். இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் தம்மை சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரலெழுப்பி, கண்ணீர் சிந்தி மன்றாடி வேண்டினார் (எபி.5:7). ஆனால், அவர் பிறருக்கு தொந்தரவாக இராமல் தோட்டங்களிலும், மலைகளிலும் பிரார்த்தனை செய்தார்;.

Top

## 30. பெற்றோர் தனது மகனை எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்கவைக்கிறார்கள். இயேசு என்னை ஊழியத்திற்கு அழைத்தார் என்று கூறி பெற்றோரின் பாடுகளை அலட்சியப்படுத்துவது நியாயமா?

இயேசுவுக்கு ஊழியம் செய்ய கடவுளால் அழைக்கப்பட்டால் பெற்றோரை மறந்துவிட வேண்டும் என்று வேதம் கூறவில்லையே! மாறாக, தமது சொந்தக் குடும்பத்தை நடத்தத் தெரியாத ஒருவரால், கடவுளின் சபையை எவ்வாறு கவனிக்க முடியும்? (1திமொ.3:5) என்றல்லவா வேதம் கேள்வி கேட்கிறது! தன்னைத்தான் நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்க வேண்டும் என்றல்லவா கிறிஸ்தவம் கற்பிக்கிறது!

முன்னாள் தமிழக முதலமைச்சர் காமராஜருடைய தாயாரும் தகப்பனாரும் காமராஜரைப் பெற்று, படிக்க வைத்து, வளர்த்து, உணவு, உடை, உறைவிடம் அளித்து எதற்காக வளர்த்தார்கள்? தங்களுக்கு எதிர்காலத்தில் பயனுள்ளவராயிருப்பார் என்ற கனவுகளோடு தானே வளர்த்திருப்பார்கள்! ஆனால் அவர்

Top

அரசியலுக்கு வந்து தனக்கென்றோ, தன் குடும்பத்துக்கென்றோ எதையும் செய்யாமல் தன் வாழ்நாட்கள் முழுவதையும் மக்கள் நலனுக்காகவே செலவிட்டாரே! அவர் செய்தது சரியா? தவறா? அல்லது அவருக்கு சிலைவடித்து, மணிமண்டபம் கட்டி, அவரது பெயரை சொல்லி, மக்களை ஏமாற்றி தங்களுக்கென்றும், தங்கள் குடும்பத்திற்கென்றும் கோடிக்கணக்கில் சேர்த்துவிட்ட அவருடைய "தொண்டர்கள்" செய்வதை சரியென்று கூறப்போகிறீர்களா?

100 ஆண்டுகள் தனக்கென்றும் தன் குடும்ப நலனுக்கென்றும் சுயநலனோடு வாழ்ந்து சாவதைவிட, 35 ஆண்டுகள் 'மக்கள்நலன்' என்னும் லட்சியத்தோடு வாழ்ந்து மடிவதே மேலானது. சராசரி மனிதன், தான் செல்வந்தனாக அதிக ஆயுளோடு வாழவேண்டுமென்று கடவுளிடம் பிரார்த்தனை செய்வான். ஆனால், உயர்ந்த மனிதன் பிறருடைய நலனுக்காக பல இன்னல்களையும், ஆபத்துக்களையும், எதிர்ப்புகளையும், அவமானங்களையும், வேதனைகளையும் சகிப்பான்.

Top

ஒருவன் பொறியியல் படித்து, உயர்பதவியில் உயர்ந்த சம்பளத்தில் வேலை செய்து செத்துப்போகிறான். தனக்காக மட்டும் வாழ்ந்த அவரை தன் குடும்பம் மட்டுமே ஞாபகத்தில் வைத்திருக்கும். அதுவும் இரண்டு தலைமுறை வரைதான். உங்கள் தாத்தாவின் தாத்தாவுடைய பெயரைத் தெரிந்துகொள்ள, உங்கள் தாத்தாவிடம்தான் கேட்பீர்கள். நாட்டு நலனுக்காக வாழ்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களை உங்களால் மறக்கமுடியுமா? எத்தனை தலைமுறைகளானாலும் அவர்களது தியாகம் மக்களால் நினைக்கப்படும். பாவிகளுக்காக 2000 ஆண்டுகளுக்குமுன் இயேசு மரித்ததை மக்கள் மறக்காமல் இருப்பதன் காரணமென்ன? ‘வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்?’ என்று பெரியவர்கள் கேட்டிருக்கிறார்கள். ‘தான் மட்டும் பிழைத்தால் போதும்’ என்னும் உணர்வோடு வாழ்வது ஒரு வாழ்வா? மருத்துவம் படிப்பது பணக்காரன் ஆவதற்காகவா? அல்லது நாட்டு மக்களுக்கு சேவை செய்வதற்காகவா? புனிதமாகக் கருதப்பட வேண்டிய மருத்துவம், கல்வி எல்லாமே இன்று வியாபாரமாகி விட்டது. உயர்படிப்பு படிப்பது நாட்டுக்கு சேவை

Top

செய்வதற்காகத்தான் என்னும் உணர்வு இன்று அகன்றுவிட்டது. மனிதநேயம் மலையேறிப் போய்விட்டது! சுகப்பிரசவமாகும் நிலையிலுள்ள கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து பணத்தைக்கறக்க அறுவை சிகிட்சை செய்தேயாக வேண்டும்' என்று கட்டாயப்படுத்தும் மருத்துவ வியாபாரிகளைத்தான் இன்று நாம் பார்க்கிறோம். 'மனசாட்சியாவது மண்ணாங்கட்டியாவது' என்று நினைக்கும் ஈவு இரக்கமற்ற யுகத்தில் வாழும் நீங்கள் இப்படி ஒரு கேள்வி கேட்டதில் ஆச்சரியமில்லை. காமராஜர், கக்கன் போன்ற தியாகிகள் இருந்த ஆட்சி ஆசனங்களில் இன்று சுயநலவாத, ஜாதி, மத, மொழி வெறிபிடித்தவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். பிறருக்காக வாழ்பவனை பிழைக்கத் தெரியாதவன் என்று சுயநலவாதிகள் கூறுவார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறருக்காக வாழ ஒருவன் தீர்மானிப்பானானால் அவனை இளிச்சவாயன் என்று நையாண்டி செய்வதொன்றும் அதிசயமல்ல

பட்டப்படிப்பை பணத்திற்காக பணயம் வைப்பதைவிட, படிக்காமலேயே இருப்பது மேலானது என்றே நினைக்கிறேன்.

Top

படித்த சுயநலவாதிகள், படிக்காத காமராஜருடைய வாழ்க்கைத் தரத்தைப்பார்த்து வெட்கப்பட வேண்டும். ‘ஒரு கிரிக்கெட் வீரனுக்கு பலகோடி ரூபாய்களை பரிசாகக் கொடுக்கிறது அரசாங்கம். ஆனால், உயிரையே ஒரு பொருட்டாக நினைக்காமல், நாட்டை கண்விழித்து பாதுகாக்க, நாட்டு எல்;லையிலே போராடுகிறார்களே படைவீரர்கள், அவர்கள் நாட்டுக்காக உயிரைவிட்டால் அரசு என்ன கொடுக்கிறது?’ என்று கேள்வி கேட்டு என் அலைபேசிக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது. கிரிக்கெட் விளையாட தியாக உள்ளம் தேவையில்லை. விளையாடத் தெரிந்தால் மட்டும் போதும். அதை யாரும் பழகலாம். ஆனால், தாயகத்தைக் காக்க உயிரையே பணயம் வைத்துப் போராடுவது ஊதியத்திற்கு அல்ல. அது தியாக மனமுடையவர்கள் மட்டுமே செய்ய முடியுமான விஷயம். எனவே, எல்லா பெற்றோர்களும், தங்கள் பிள்ளைகளைப் பணம் சம்பாதிக்கும் எந்திரமாக பார்க்காமல், நாட்டுக்கு பயனுள்ள தலைவனாகப் பார்த்து உயர்ந்த எண்ணங்களை அவர்களுக்குள் வளர்க்க வேண்டும். இங்கிலாந்து அமைச்சரவையில் இருந்த ஒரு பெரிய பணக்காரர் வில்லியம்கேரி. அவர் இந்தியாவுக்கு வந்து,

Top

பல பாடுகள் பட்டு, உடன்கட்டை ஏறும் பழக்கத்தை முறியடித்தார். அவர் தனக்காக மட்டும் வாழ்ந்திருந்தால், இந்த பொருளாதாரத்தில், நாகரீகத்தில் பின்தங்கிய இந்தியாவுக்கு வரவேண்டிய தேவையில்லையே.

## 31. நீங்கள் உங்கள் கோயில்களுக்குள் செருப்பு அணிகிறீர்களே !

கடவுள் கட்டடங்களில் குடியிருக்கமாட்டார். விண்ணகம் என் அரியணை மண்ணகம் என் கால்மணை அவ்வாறிருக்க எத்தகைய கோயிலை நீங்கள் எனக்காக கட்டவிருக்கிறீர்கள்? (தி.பணி.7:49) என்று பரமேஸ்வரன் கேள்வி கேட்கிறார்.

“உன்னை படைத்த தெய்வத்தை நீ படைக்கமுடியுமா? அதை வர்ணம் தீட்டிச் சந்தையிலே விற்க முடியுமா? வார்த்தையாலே உலகைப் படைத்த தெய்வத்தை, ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் பத்திரப்படுத்த முடியுமா?” என்று பூந்தமிழ் பாவலன் பாடினான். நாம் கட்டும் கோயில் கட்டடங்களுக்குள் கடவுள் குடியிருக்கிறார் என்று பலர் நம்பிக் கொண்டிருக்கிறோம். அதனால் தான் அங்கே

Top

செருப்பு அணியக் கூடாது என்று நினைக்கிறோம். ஆனால் அது தவறு என்பதை கீழ்க்காணும் வசனம் தெளிவுபடுத்துகிறது. “உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவர். மனிதர் கையால் கட்டிய கோயில்களில் அவர் குடியிருப்பதில்லை” (தி.பணி.17:24) என்று கடவுள் அறிவுறுத்துகிறார். நம் இதயமே இறைவன் உறையும் திருக்கோயில் என்று நான் முழுமையாக நம்புகிறேன். உங்கள் உடல், நீங்கள் கடவுளிடமிருந்து பெற்;று கொண்ட தூய ஆவியார் தங்கும் கோயில் என்று தெரியாதா?” (1கொரி.6:19) என்று திருத்தூதர் பவுல் அடிகளார் ஆதங்கப்படுகிறார். கடவுளைக் காண நாமிருக்கும் இடத்திலிருந்து ஓர் அடி தூரம்கூட போகவேண்டாம். பரமாத்மா ஜீவாத்மாவோடு இணைந்திருக்கிறார். அவரை அனுதின வாழ்வில் தந்தையாக, தாயாக, அண்ணனாக, தம்பியாக, மகனாக, மகளாக, உதவியாளனாக, எஜமானாக, உறவினராக, நண்பராக காண்பது ஒரு பேரானந்தம். அப்படிப்பட்ட கடவுளைக் காண புண்ணியத் தலங்களைத் தேடி ஓடவேண்டாம். பணச்செலவு தான் மிச்சம். அந்த புண்ணியத் தலங்களையும் கொத்தனார்களும்,

Top

தச்சர்களும்தானே கட்டினார்கள். கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற நாட்களிலும் ஜெபவீட்டுக்கு போய் பிரார்த்தனை செய்கிறார்கள். ஒரே குடும்பமாக, ஒருதாய் பிள்ளைகளாக, ஒரே இரத்தத்திலிருந்து வந்தோம் என்னும் உணர்வோடு கடவுள் கொடுத்த தெய்வீக ஒருமனப்பாட்டோடு, ஈஸ்வரன் செய்த நன்மைகளுக்கு நன்றி சொல்ல, அவரை ஒருமித்து புகழ, அவரிடம் தங்களுக்காகவும் பிறருக்காகவும் மன்றாட ஒருவரை ஒருவர் சந்தித்து, தங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ள கிறிஸ்தவர்கள் ஜெபவீட்டுக்கு போகிறார்கள். மாறாக, கடவுள் ஜெபவீட்டில் குடியிருக்கிறார் என்று நம்பி அவரை பார்ப்பதற்காக போகவில்லை. மனிதனுடைய கற்பனைத்திறனால் ஒரு சிலையை உருவாக்கி, அதற்கு பற்பல வர்ணங்களை தீட்டி அதற்கு பொன், வெள்ளியாலான ஆபரணங்களை அணிவித்து, பட்டுச்சேலையால் சுற்றி வைத்து, அது பாதுகாப்பாக இருக்க பூட்டு போட்டு பூட்டிவைத்தால், இதை கடவுளென்று எப்படி கூறமுடியும்? கடவுளல்லவா மனிதனைப் படைத்தார். கடவுளல்லவா மனிதனை பாதுகாக்க வேண்டும். மனிதன் கடவுளை படைக்க முடியுமா? தரையில்

Top

அமர்ந்து கடவுளை ஆராதிக்கும் சபையார், காலணிகளை வெளியே விடுவது நல்லதென்று சுகாதாரத்தை விரும்பும் எவரும் ஒத்துக்கொள்வர். மகா பரிசுத்த ஸ்தலத்தில் சிறப்பாய் குடியிருந்த கடவுள், இயேசுவின் மரணத்தின் மூலம் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார். கடவுள் இல்லாத இடமே இல்லை. கடவுள் இருக்குமிடத்தில் செருப்பு அணியக் கூடாது என்று சட்டமியற்றினால் நாம் எங்குமே செருப்பு அணிய முடியாது. ஏனெனில் கடவுள் இல்லாத இடமே இல்லை.

## 32. மதமாற்றம் தடை செய்யப்பட்டுள்ளதே !

நான் விரும்பும் ஒரு நல்ல கொள்கையைப் பின்பற்ற யார் தடை செய்ய முடியும்? இந்திய அரசியல் சட்டம் 25-வது பிரிவின் கீழ் இந்தியாவிலுள்ள எந்த மதத்தவருக்கும் பிறமதத்திற்கு மாறவும், யாரையும் தம் மதத்திற்கு மாற்றவும், அதிகாரம் உண்டென்னும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தை எதிர்த்து கிறிஸ்தவர்களுடைய அருட்பணிகளை எதிர்ப்பவர்கள்

Top

அரசாங்கத்தையும் கடவுளையும் எதிர்க்கிறார்கள். முதலாம் நூற்றாண்டிலேயே மதமாற்றம் தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால், இம்மார்க்கம் உண்மைக்கடவுளால் உருவானதால் எந்த பெரிய சக்திகள் அதைத் தடுத்தாலும் தோற்றுபோனார்கள். ஏனெனில், இயேசு ஒருமுறை தன் சீடர்களிடம் பேசும்போது, "என் நாமத்தின் நிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுவரை மனஉறுதியுடன் இருப்பவர்கள் மட்டுமே மீட்கப்படுவர், உங்கள் ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம், ஆன்மாவையும், உடலையும் நரகத்தில் அழிக்க வல்ல கடவுளுக்கே அஞ்சுங்கள்" (மத்.10:22-28) என்றார்.

இயேசு உயிர்த்தெழுந்தபின் தன்னை நம்பி வாழ்ந்த தன் சீடர்களுக்கு, அவர் வாக்குறுதியாய் சொன்ன தூய ஆவியின் அருட்பொழிவைக் கொடுத்தார். அந்த அருட்பொழிவால் இறைவல்லமையை அவர்கள் பெற்றுக் கொண்டனர். தங்கள் உயிரையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாமல், சீடர்கள் இயேசுவைப் பற்றிய ஆன்மீக

Top

உண்மைகளை எல்லா மக்களுக்கும் பரப்பத் தொடங்கினர். இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் மக்களுக்கு அதிசயங்களை செய்தனர். கூட்டம் கூட்டமாக மக்கள் குமாரசுவாமியின் பக்கம் திரும்பினர். இதனால் கோபமடைந்த மதவாதிகளும், அதிகாரவர்க்க அரசியல்வாதிகளும் “நாம் இந்த மனிதர்களை என்ன செய்யலாம்? ஏனெனில், எல்லாருடைய பார்வையில் இவர்கள் அற்புதங்கள் செய்திருக்கிறார்கள் இது எருசலேமில் வாழும் அனைவருக்கும் தெரியும். இதை நாம் மறுக்கமுடியாது. ஆகவே இச்செய்தி மேலும் மக்களிடையே பரவாமல் இருக்குமாறு, இந்த இயேசுவைக் குறித்து யாரிடமும் பேசக்கூடாது என நாம் இவர்களை அச்சுறுத்தி வைப்போம்” என்று கூறினர். அதன்பின்பு தலைமை சங்கத்தார் அவர்களை அழைத்து “இயேசுவைப் பற்றி எதுவும் பேசவோ, கற்பிக்கவோகூடாது” என்று கண்டிப்பாக கட்டளையிட்டனர். அதற்கு பேதுருவும் யோவானும் மறுமொழியாக, “உங்களுக்கு செவிசாய்ப்பதா? கடவுளுக்கு செவிசாய்ப்பதா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும்

Top

கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" என்றனர் (தி.பணி.4:16-20). கிறிஸ்தவர்களிடம் இந்த மறைபரப்பு பணியை செய்யச் சொன்னது கடவுள். எனவே எத்தனை பெரிய அரசியல் சக்திகள் இதை எதிர்த்தாலும், எத்தனைக் கொடுமைக்கார மதவாதிகள் இந்த தார்மீக அமைப்பை அழிக்க நினைத்தாலும், கடவுள் செய்ய நினைத்ததை யாரும் தடை செய்யமுடியாது. இயேசு மண்ணிலுள்ள மக்களுக்கு நன்மைகள் செய்து, தன்னிடமிருந்த இறைசக்தியால் நோயாளிகளை அற்புதமாக குணப்படுத்தி, மனிதர்களுக்குள் இருந்த பேய், பிசாசுகளை துரத்தி நலவாழ்வளித்தார். சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கேவலமாக கருதப்பட்ட மக்களையும் தன் சொந்த இரத்தமாக நினைத்து, அன்புகாட்டி, ஆதரித்து புதுவாழ்வுக்கு வழிகாட்டினார். கொடுமையான பாவிகள், தங்கள் பாவவாழ்விலிருந்து வெளியேறி புனிதவாழ்வு வாழ அடித்தளமிட்டார். எங்கும் ஆனந்தம்! பேரானந்தம்! திவ்யானந்தம்! பெருங்கூட்டம் மக்கள் இயேசுவின் அன்பால் ஈர்க்கப்பட்டு, தங்கள் சுயநல வாழ்வை விட்டு கடவுளுக்காக வாழ ஆரம்பித்தனர். பிறர்நலத்தோடு

Top

எல்லா மக்களுக்காகவும் இறைவனிடம் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தனர். உலகெங்கும் இயேசு என்றாலே ஒரு பரபரப்பு! அவர் மக்களுடைய மனதில் முக்கியமான இடம் பிடித்துவிட்டார்! மக்களைச் சுரண்டி, ஆச்சாரங்களை காரணம்காட்டி மக்களுடைய பொருளாதாரத்தை சூரையாடிக் கொண்டிருந்த மதவாதிகளுக்கு இயேசுவின் வளர்ச்சி எரிச்சலையும் பொறாமையையும் கிளறிவிட்டது. மக்கள் வெள்ளம் இயேசுவின் பின்செல்வதைக் கண்ட அரசியல்வாதிகளும் கலங்கினர். நிலைமை இப்படியே போனால் இயேசு ஒருநாள் இஸ்ரவேலின் ஆட்சியை பிடிப்பார் என்று பயந்துபோய் இயேசுவைக் கொலை செய்யும்படி வலைவிரித்தனர்;.

இயேசு மகாத்மா இந்த உலகில் அவதரித்ததன் நோக்கத்தை அறியாமல், கடைசியாக கருணைவடிவாய் வந்த அந்த பரிசுத்த திருமகனை மதமாற்ற தடைச்சட்டத்தின் உச்சக்கட்ட தண்டனையாக கொலை செய்தனர். ஆனால், இயேசுவை சிலுவையில் அறைந்தவர்கள் அதை அறியாமல் செய்தனர் என்று இயேசுவுக்கு தெரியும். அதனால்தான், பிஞ்சு நெஞ்சோடு,

Top

“தந்தையே இவர்களை மன்னியும், இவர்கள் செய்வது இன்னதென்று இவர்களுக்கு தெரியவில்லை” (லூக்.23:34) என்று மனதுருகி பிரார்த்தித்தார். இயேசுவின் மேல் பொறாமையும், எரிச்சலும் அந்த அரசியல் வாதிகளுக்கும், மதவெறியர்களுக்கும் இருந்தாலும், அவர்கள் செய்த கொடுமைகளை இறைவனுடைய மகனுக்கு செய்தார்கள் என்பது அவர்களுக்கு தெரியாது. அதை மனதிற்கொண்டு, பேதுரு யூதஅதிகாரிகளிடம், “அன்பர்களே, நீங்களும் உங்கள் தலைவர்களும் அறியாமையினாலேயே இப்படி செய்துவிட்டீர்களென எனக்குத் தெரியும்” (தி.பணி.3:17) என்று அந்த கொடியவர்களையும் தேற்றுகிறார். இயேசுவை கொலை செய்தவர்களைப் பற்றி பவுல் கூறுகையில், “இவ்வுலகின் தலைவர்கள் எவரும் அதை அறிந்துகொள்ளவில்லை. அறிந்திருந்தால் அவர்கள் மாட்சிக்குரிய ஆண்டவரை சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள்” (1கொரி.2:8) என்று கூறுகிறார். கிறிஸ்தவ கொள்கைகளை உண்மையாகவே முழுமையாகப் புரிந்துகொள்பவர்கள் முழுநெஞ்சோடு வரவேற்பார்கள். இதுதான் உலக அமைதிக்கு ஒரேவழி என்றும் தெரிந்து

Top

கொள்வார்கள். மன்னிப்பு கொள்கையே உலக நிம்மதிக்கு ஒரேவழி என்பது தெய்வீக தெளிவுடையவர்களுக்கு மட்டுமே தெரியும். மத வெறியுடையவர்களுக்கு புரியாது. பிரான்ஸ் நாட்டு சிந்தனையாளர் வால்ட்டர், தன் ஆயுள் நாட்களிலேயே கிறிஸ்தவத்தை ஒழித்துவிடுவதாக சபதமிட்டார். வேதத்தைப் பார்க்க வேண்டுமெனில், அருங்காட்சியகத்தில் போய்த்தான் தேடிப்பார்க்க வேண்டுமென்று பரிகாசம் பண்ணினார் ஆனால், நடந்தது என்ன தெரியுமா? எந்த வீட்டில் இருந்து இந்த சபதமெடுத்தாரோ, அதே வீட்டை வேதாகமத்தை அச்சிட அவரே கொடுத்தார். இன்று 'ஜெனீவா வேதாகம சங்கம்' என்ற பெயரில் அது இயங்குகிறது. நாத்திக புத்தகங்கள் அச்சடித்த அவரது அச்சு இயந்திரங்கள் இன்று வேதாகமங்களை அச்சடிக்கின்றன. இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார்.

Top

## 33. ஞாயிற்றுக்கிழமை மட்டும்தானே ஊழியம் செய்ய வேண்டும். மற்ற நாட்களிலும் போய் ஏன் மக்களை தொந்தரவு செய்கிறீர்கள்?

கிறிஸ்தவர்கள் செய்யும் அருட்பணியை ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்தான் செய்யவேண்டுமென்று வேதத்தில் எங்குமே எழுதப்பட வில்லை.ஞாயிறு,திங்கள்,செவ்வாய்,புதன்,வியாழன்,வெள்ளி,ச னிஎன்ற நாட்களின் பெயர்கள் எதுவுமே பைபிளில் எழுதப்படவில்லை. “இறைவார்த்தையை அறிவி வாய்ப்பு கிடைத்தாலும்,கிடைக்கா விட்டாலும் இதை செய்வதில் நீ கருத்தாயிரு.கண்டித்துப்பேசு கடிந்துக்கொள் அறிவுரை கூறு மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு” (2திமொ.4:2) என்று பவுல் அறிவுறுத்துகிறார். நேரம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் நற்செய்தி அறிவிக்கவேண்டும் என்கிறார்.

நற்செய்தி பணியாளருக்கு சாகும்வரை விடுப்பு இல்லை. இயேசு கிறிஸ்து நாள்தோறும் மக்களுக்கு போதித்தார் என்று மத்.26:55 கூறுகிறது. இயேசுவின் திருத்தூதர்களும் அனுதினமும்

Top

வீடுகளிலும், கோயிலிலும் தொடர்ந்து கற்பித்தார்கள் (தி.பணி.5:42). உங்கள் வீட்டில் ஒரு நபருக்கு திங்கள்கிழமை பேய்பிடித்து விட்டால் அதை துரத்துவதற்கு ஒரு கிறிஸ்தவ ஊழியர் ஞாயிற்றுக்கிழமைதான் வரவேண்டும் என்று காத்திருப்பீர்களா? உங்கள் குழந்தை எமகண்ட நேரத்தில் ஒரு பாதாள சாக்கடையில் விழுந்துவிட்டால், நல்ல நேரம் வரும்வரை காத்திருப்பீர்களா? யோசித்துப்பாருங்கள். ஒரு நாட்டின் ஒரு அரசியல் கட்சியினரது ஆட்சியால் அநியாயங்கள் அரங்கேற்றப்படும்போது, அதை எதிர்க்கட்சியினர் எந்த கிழமையில் தட்டிக்கேட்டால் என்ன? அனுதினமும் செய்திகளை தொலைக்காட்சி நிலையத்தினரும், வானொலி நிலையத்தினரும் உங்கள் வீட்டு தொலைக்காட்சியிலும், வானொலியிலும் பரப்புவதை தவறு என்று கூறப்போகிறீர்களா?
ஞாயிற்றுக்கிழமை அரசு விடுமுறையானதால், கிடைக்கும் ஓய்வுநேரத்தில் தங்கள் நம்பிக்கையை, தங்களை வாழவைத்த கொள்கையை, கேட்கவிரும்பும் மக்களுக்கு மட்டும் சொல்லிக்கொடுக்கிறார்கள். மற்றபடி ஞாயிற்றுக்கிழமைதான்

Top

ஊழியம் செய்ய வேண்டுமென்று வேதத்தில் எங்குமே எழுதப்படவில்லை.

## 34. இந்துமத தீவிரவாதிகள் ஒரிசாவில் பாதிரியாரை அவரது பிள்ளைகளோடு எரித்தாலும்;;, அவருடைய மனைவி கொலைகாரர்களை பழிவாங்கவில்லையே?

ஆஸ்திரேலிய பாதிரியார் கிரகாம் ஸ்டேன்ஸ் தன் இரண்டு பிள்ளைகளோடு தன் வண்டியில் வைத்து உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார். இதுபோன்று கோடிக்கணக்கானோர் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும் வண்ணம் தங்கள் உயிரையே கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்துள்ளனர். சிலுவையில் இயேசு வலியால் துடிக்கும்போது, “தந்தையே இவர்கள் என்ன செய்கிறார்களென்று அறியாமல் செய்கிறார்கள் இவர்களுக்கு மன்னியும்” (லூக்.23:24) என்று வேண்டினார். புனித ஸ்தேவான் தனது வாழ்வின் கடைசி நிமிடங்களில் தன்னை கல்லெறிந்து கொலை செய்த கூட்டத்தாரை மன்னித்தார். அவர் முழுங்கால்

Top

படியிட்டு, “ஆண்டவரே, இவர்கள் மேல் இந்த பாவத்தை சுமத்தாதிரும்” என்று மன்னித்து உயிரைவிட்டார் (தி.பணி.7:60). இவர்கள் இப்படி செய்த காரணம் இயேசுவின் அன்பு. “நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. என்பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து துன்புறுத்தி உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவை எல்லாம் சொல்லும்போது நீங்கள் பாக்கியவான்கள். மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள் ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்கு கிடைக்கும் கைமாறு மிகுதியாகும். உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள். உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படி செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்களாவீர்கள்” (மத்.5:10,11,44,45). “மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால், உங்கள் விண்ணகத்தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில், உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்” (மத்.6:14,15).

Top

“என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மனஉறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர். ஆன்மாவை கொல்ல இயலாமல் உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்” (மத்.10:22,28) என்று அறிவுறுத்துகிறார் இயேசு. “உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்பட வேண்டாம்” (1யோவா.3:13). “உலகு உங்களை வெறுக்கிறதென்றால், அது உங்களை வெறுக்குமுன்னே என்னை வெறுத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகை சார்ந்தவர்களாக இருந்திருந்தால் தனக்கு சொந்தமானவர்கள் எனும் முறையில் உலகு உங்களிடம் அன்பு செலுத்தியிருக்கும். நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்து விட்டேன். நீங்கள் உலகைச் சார்ந்தவர்களல்ல. எனவே உலகு உங்களை வெறுக்கிறது” (யோவா.15:18,19) என்று ஆண்டவர் தன் மக்களை திடப்படுத்துகிறார். சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்களது தகுதி மெய்ப்பிக்கப்படும்போது, தம்மீது

Top

அன்பு கொள்வோருக்குக் கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றி வாகையினை அவர்கள் பெறுவர் (யாக்.1:12)

“தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம் மாறாக, உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் காட்டுங்கள். ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்கு தொடுத்து உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால், உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக்கொள்ள விட்டுவிடுங்கள். எவராவது உங்களை ஒருமைல் தூரம் வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இருமைல் தூரம் செல்லுங்கள். உங்களிடம் கேட்கிறவருக்குக் கொடுங்கள். கடன் வாங்க விரும்புகிறவர்களுக்கு முகம் கோணாதீர்கள் (மத்.5:39-42)உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிடமகனும் தொண்டு ஏற்பதற்கல்ல, தொண்டாற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம்முயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” (மத்.20:26-28)

Top

என்று இயேசு அறிவுரை கூறினார். 'தீமை செய்தவர்களுக்குத் திரும்ப நன்மை செய்ய வேண்டும்' என்னும் சாத்வீகக் கொள்கைதான் கிறிஸ்தவத்தின் அபார வளர்ச்சிக்கு காரணம் என்றால் மிகையாகாது. நீதிமன்றத்தில் கொலையாளி யாரென்று நிரூபிக்கப்பட்டதும் அவரை மனதார மன்னித்த அந்த தாயார் போல இந்தியக் குடிமக்கள் எல்லோருமே மாறவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆயுதங்களால் யாரையும் திருத்தமுடியாது. ஆனால், அன்பால் முடியுமென்று இயேசுவின் போதனைகள் கற்பிக்கின்றன. மற்ற மதத்தினர் ஆயுதம் தாங்கிப் போராடுவதுபோல இயேசுவின் விசுவாசிகள் போராடினால் உலகு தாங்குமா?

## 35. கிறிஸ்தவ போதனைகளின் சிறப்பு என்ன?

ஒரு பெண்ணை இச்சையோடு பார்ப்பதே விபச்சாரம் (மத்.5:28). தன் சகோதரனைப் பகைப்பதே மனித கொலை பாதகம் (1யோவா.3:15). லஞ்சம் வாங்குவதும் (வி.ப.23:8, யோபு.15:34),

Top

லஞ்சம் கொடுப்பதும் (தி.பணி.24:26,27) குற்றமாகும். விருந்துகளுக்கு செல்வந்தர்களைவிட ஏழைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அழைக்க வேண்டும் (லூக்.14:12-14). எல்லோரையும் மன்னிக்க வேண்டும் (மத்.18:35). தீமை செய்தவர்களையும் ஆசீர்வதிக்க வேண்டும் (உரோ.12:14). வரதட்சணை கேட்டு வாங்குவது குற்றம் (கொலோ.3:5). தற்கொலை செய்வது குற்றம் (1கொரி.6:19). பழிக்குப்பழி வாங்கக் கூடாது அது தெய்வத்திற்குரியது (உரோ.12:19). எதிரி பசியாயிருந்தால் உணவு கொடுக்க வேண்டும் (உரோ.12:20). ஜாதி பார்ப்பது குற்றம் (கொலோ.3:11, யோவா.17:21,22). ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் உயிரை கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை (யோவா.15:13). பிறருக்காக ஜெபிக்க வேண்டும் (மத்.5:44) என்று பல சிறப்பு அம்சங்களை உடையது தான் கிறிஸ்தவம். மேலும் விபரங்களுக்கு புதிய ஏற்பாட்டை வாசியுங்கள். (வாசிக்கவும் மத்.5, உரோ.12). நம்மை நாம் நேசிப்பது போலப் பிறரையும் நேசிக்க வேண்டும் என்னும் ஆன்மீக போதனை எல்லாவற்றிலும் பெரியது.

Top

கடவுளின் ஆசியைப் பெற்றுக்கொள்ள, நாக்கில், கன்னத்தில் அலகு குத்தி,காவடி எடுத்துக்கொண்டு கால் வலிக்க நடக்க வேண்டாம் பரமாத்மாவின் அற்புதங்களை அடைய ஆணிப்படுக்கையில் உருள வேண்டாம் முதுகில் கொக்கி போடும் பறவைக்காவடி வேண்டாம்மண்ணுக்குள் மனிதனை உயிரோடு புதைக்க வேண்டாம் கோடிக்கணக்கில் பணத்தை செலவுசெய்து தங்கச்சிலை, தங்க விமானம், தங்கத்தேர்,தங்கக்கதவு செய்யவேண்டாம். இந்துமதம் மக்களுடைய கோடிக்கணக்கான பணத்தை விரையமாக்குகிறது. இது சிந்தித்தால் தான் தெரியும்.

## 36. பைபிளை மனிதன்தானே எழுதினான்?

அமெரிக்க ஜனாதிபதி தமிழக முதல்வருக்கு ஒரு கடிதம் எழுதினால், உண்மையாகவே அவர் தன் கைப்பட எழுதுவாரா? அவர் அதை வாயால் கூறும்போது, அவரது அலுவலக செயலாளர் விரைவாகக் குறித்து வைத்து அவரது கம்பியூட்டரில்

Top

அச்சிட்டு ஜனாதிபதியின் கையெழுத்து வாங்கி அனுப்புவார். அதுபோல கடவுள் தன் பக்தர்களை வைத்துத்தான் வேதத்தை எழுதினார். வேதாகமம் ஏறத்தாழ 40 இறைவாக்கினர்களால், 1600 ஆண்டுகளாக எழுதப்பட்டிருக்கிறது. மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீராக்குவதற்கும், நேர்மையாக வாழப்பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது. இவ்வாறு, கடவுளின் மனிதர் தேர்ச்சிபெற்று நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதிபெறுகிறார் (2திமொ.3:16,17) என்று பவுல் என்னும் திருப்பணியாளர், தன் நண்பர் திமொத்தேயுவுக்கு எழுதினார்.

ஆண்டவரின் ஆவி என்மூலம் பேசினார். அவரது வார்த்தை என் நாவில் ஒலித்தது (2சாமு.23:2) என்று சாமுவேல் என்னும் இறைவாக்கினர் கூறினார். ஆக, வேதாகமத்தை இறைவனுடைய ஏவுதலோடு அவருடைய பரிசுத்த பிள்ளைகள் எழுதினார்கள் என்று தெளிவாக நாம் அறிகிறோம். பைபிளை கடவுள்தான் எழுதினார் என்பதை சந்தேகப்பட தேவையில்லை. நம்பிக்கையில்லாமல் எவரும் கடவுளுக்கு உகந்தவராய்

Top

வாழமுடியாது (எபி.11:6). நம்பிக்கை கொண்டவன் பதட்டமடையமாட்டான் (ஏசா.28:16). நீங்கள் ஒரு பேருந்திலேறி உட்கார்ந்தபின் பேருந்து ஓட்டுநரை நம்பாமலிருந்தால் உங்களால் நிம்மதியாக பயணம் செய்ய முடியுமா? அதுபோல கடவுளின் தூண்டுதலால்தான் வேதம் எழுதப்பட்டது என்று நம்பாமல் இறைவனை அறியமுடியாது. இந்த பைபிளின் மூலம் இன்று கோடிக்கணக்கானவர்கள் நல்வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கின்றனர். கட்டுப்படுத்த முடியாத பாவவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த கணக்கற்ற குற்றவாளிகள் மனம் மாறி தூய்மையோடு வாழ கிறிஸ்து உதவி செய்வதை நாம் கண்கூடாக காண்கிறோம். மருத்துவரால் கைவிடப்பட்ட நோயாளிகளைக் கூட இயேசு குணப்படுத்தியிருக்கிறார்.

**37. நீங்கள் செய்யும் அருட்பணிகளுக்கு பணம் கொடுக்க வேண்டுமே !**

முழுநேரமும் இறைவனைப் பற்றி போதிப்பதிலும், பிறருக்காகப் பிரார்த்தனை செய்வதிலும் தங்கள் வாழ்நாட்களை

Top

அர்ப்பணித்திருக்கும் அருட்பணியாளருக்கு நம்மைப் போல வயிற்றுப்பசி வருவது இயல்புதானே. நாம் நம் பிழைப்பைத் தேடி எட்டு மணி நேரம் வேலை செய்கிறோம். ஆனால், நமக்கு கடவுளைப்பற்றி போதிக்க, நமக்காக இறைவனிடம் மன்றாட முழுநேரமும் தன்னை அர்ப்பணித்திருக்கும் போதகருக்கு ஊக்கமளிக்க ஒரு தொகையை கொடுப்பது தவறில்லையே! அருட்பணியாளருடைய செலவுகள் எல்லாவற்றையும் சபையாரே பொறுப்பேற்க வேண்டுமென்று வேதம் அறிவுறுத்துகிறது. இறை வார்த்தையைக் கற்றுக்கொள்வோர், அதைக் கற்றுக்கொடுப்போருக்கு தமக்குள்ள நலன்கள் அனைத்திலும் பங்களிக்க வேண்டும் (கலா.6:6). யாராவது எப்போதாவது ஊதியமின்றி படைவீரராக பணியாற்றுவாரா? திராட்சைத் தோட்டம் போட்ட யாராவது அதன் பழங்களை உண்ணாதிருப்பாரா? மந்தையை மேய்க்கும் ஆயன் அதன் பாலை அருந்தாதிருப்பாரா? (1கொரி.9:7). சபைகளை நன்முறையில் நடத்தும் மூப்பர்கள் சிறப்பாக இறைவார்த்தையை அறிவிப்பதிலும், கற்பிப்பதிலும் ஈடுபட்டு உழைப்பவர்கள், இருமடங்கு ஊதியத்திற்கு உரியவர்களாக கருதப்பட வேண்டும்.

Top

ஏனென்றால், போர் அடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே என்றும், வேலையாள் தம் கூலிக்கு உரிமை உடையவரே (1திமொ.5:17) என்றும் பவுல் அடிகளார் சபைக்கு அறிவுறுத்துகிறார். நாம் நம் மூளை அறிவை, உடல் பெலத்தை பயன்படுத்தித் தான் சம்பாதிக்கிறோம். ஆனால், கடவுளின் அருளில்லாவிட்டால் அது வாய்க்காது என்பதுதான் தெய்வீகத் தத்துவம். எத்தனையோ மூளை அறிஞர்கள் பலர், எல்லாம் இருந்தாலும் எதுவுமே இல்லாததுபோல் விரக்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்மை பொருளாதாரத்தில் உயர்த்திய கடவுளுக்கு நன்றி செலுத்த அவர் நமக்கு கொடுத்ததிலிருந்து ஒரு பாகத்தை அவருக்கு முழுமனதோடு கொடுப்பது மகிழ்ச்சி அல்லவா?

ஒரு தகப்பனார் தன் குழந்தையின் கையில் ஒரு பெட்டி சாக்லேட் வாங்கி கொடுத்துவிட்டு அந்த குழந்தையிடம் ஒரு சாக்லேட் கேட்கிறார். அது தவறு என்று கூறமுடியுமா? அவர் நினைத்தால் அதுபோல வேறொரு பெட்டி சாக்லேட் வாங்கி சாப்பிடமுடியும். ஆனால் தன் குழந்தையின் கையிலிருந்து வாங்கி சாப்பிடுவது

Top

தனிசுவை தானே! இறைவனுக்கு கொடுக்காமல் கஞ்சத்;தனம் செய்த பழைய ஏற்பாட்டு மக்களைப் பார்த்து கடவுள் என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள். “மனிதர் கடவுளைக் கொள்ளையடிக்க முடியுமா? நீங்கள் என்னை கொள்ளையடிக்கிறீர்கள். எவ்வாறு நாங்கள் உம்மைக் கொள்ளையடிக்கிறோம் என்று கேட்கிறீர்கள். நீங்கள் தரவேண்டிய பத்திலொரு பங்கிலும் காணிக்கையிலும் தான். நீங்களும் உங்கள் இனத்தார் அனைவரும் என்னைக் கொள்ளையடித்ததால் சாபத்துக்கு உள்ளானீர்கள். என் இல்லத்தில் உணவு இருக்கும் பொருட்டு, பத்திலொரு பங்கு முழுவதையும் கொண்டு வந்து அங்கே களஞ்சியத்தில் சேருங்கள், அதன்பிறகு நான் வானத்தின் வாசல்களைத் திறந்து உங்கள்மேல் ததும்பி வழியுமாறு ஆசி வழங்குகிறேனா இல்லையா எனப் பாருங்கள்” என்கிறார் ஆண்டவர் (மல்.3:8-10).

‘பத்திலொரு பங்கு’ என்னும் பழைய ஏற்பாட்டுக் கட்டாயக் கொள்கைப்படி இன்று கடவுளுக்கு கொடுக்க வேண்டிய தேவை இல்லாவிட்டாலும், கடவுளுக்கு கொடுத்தால் கடவுள் நிச்சயமாக

Top

பல மடங்காக திரும்பத் தருவார் என்பதே இன்றும் நிதர்சனமான உண்மை.

கொடுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் (லூக்.6:38). ஈகைக் குணமுள்ளோர் வளம்பட வாழ்வர் குடிநீர் கொடுப்போர் குடிநீர் பெறுவர் (நீதி.11:25).கடவுள் திரும்ப தருவார் என்னும் இலாப நோக்கில் கடவுளுக்கு கொடுப்பதைவிட, அவர் நம்மேல் அன்பு வைத்து நமக்காகப் பட்ட பாடுகளை நினைத்து நன்றியுணர்வோடு கொடுப்பதே அர்த்தமுள்ளது. ஒரு ஊழியரிடம் கொடுத்தாலும் சரி, அல்லது காணிக்கைப் பெட்டியில் இட்டாலும் சரி, அதைக் கடவுளுக்குத்தான் கொடுக்கிறோம்.

இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட மக்கள் கடவுளை ஆராதிக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள். அப்படி இயேசுவை ஏற்றுக்கொண்ட எல்லாரும் ஓரிடத்தில் கூடி ஆராதிக்க ஒரு ஜெபவீடு தேவை. அதை கட்ட பணம்

Top

தேவையல்லவா! அதற்கு பணம் எங்கிருந்து வரும்? லட்சக்கணக்கில் பணத்தை வங்கியில் வைத்திருக்கும் ஒரு பணக்கார விசுவாசி, எனக்கென்று எதுவும் இல்லை, இப்பூமி சொந்தம் இல்லை என்று இசை நயத்தோடு பாடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? ஆஸ்பத்திரிக்கு கொடுக்க வேண்டுமானால் அவசர அவசரமாக கடன் வாங்கிக் கூட பணத்தை செலுத்தி விடுகிறோம்.ஆனால், நமக்காக உயிரையே தந்த கடவுளுக்குக் கொடுக்க நாம் ஏன் கஞ்சத்தனமாக இருக்கவேண்டும்? சமுதாயப் பணியாற்றிய தியாகிகள் பலர் சாகும்போது தங்களுக்கென்று எதையும் வைத்துச் செல்லவில்லை. பலர் திருமணம் கூட செய்யாமல் மக்களுக்கு பணியாற்றினார்கள். இதெல்லாம் நான் சொன்னாலும் கட்டாயப்படுத்தி நிதிதிரட்டவோ, நிர்பந்தத்தின் பேரில் கொடுக்கவோ கூடாது. திருப்பதி விக்கிரகத்தை பார்க்க கட்டணம் செலுத்துவதுபோல, நீங்கள் கண்டிப்பாக, கட்டாய கட்டணம் செலுத்தவேண்டும் என்று சொல்லவில்லை. ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மனவருத்தத்தோடோ, கட்டாயத்தினாலோ கொடுக்க

Top

வேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்குரியவர் (2கொரி.9:7).

மற்றவர்களின் சுமையைத் தணிப்பதற்காக நீங்கள் துன்புற வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. மாறாக, எல்லோரும் சமநிலையில் இருக்கவேண்டுமென்றே சொல்லுகிறோம். இப்போது உங்களிடம் மிகுதியாய் இருக்கிறது. அவர்களுடைய குறையை நீக்குங்கள். அவ்வாறே அவர்களிடம் மிகுதியாக இருக்கும்போது உங்கள் குறையை நீக்குவார்கள். இவ்வாறு உங்களிடையே சமநிலை ஏற்படும் (2கொரி.8:13,14) என்று வேதம் அறிவுறுத்துகிறது. குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வார். நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வார் (2கொரி.9:6). இதை தயவு செய்து ஞாபகத்தில் வைத்து கொள்ளுங்கள்.

Top

## 38. நரகம் நிரந்தரமானதல்ல.

நரகத்தில் எறியப்படுபவரைத் தின்னும் புழு சாகாது அந்த நெருப்பு அவியாது (மாற்.9:46-48). கடவுள் தீப்பிழம்பின் நடுவே தோன்றி கடவுளை அறியாதவர்களையும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்காதவர்களையும் தண்டிப்பார். இவர்கள் ஆண்டவருடைய சீர்மிகு மாட்சியைக் காணஇயலாது. அவருடைய திருமுன்னிலிருந்து அகற்றப்பட்டு, முடிவில்லாத அழிவைத் தண்டனையாகப் பெறுவர் (2தெச.1:8,9). அவர்களை வதைத்த நெருப்பிலிருந்து எழுந்த புகை என்றென்றும் மேலே எழுந்தவண்ணம் உள்ளது (தி.வெ.14:11) என்று வேதம் கூறுகிறது. மேற்கண்ட வசனங்களிலிருந்து நரகம் நிரந்தரமானது என்று அறிகிறோம்.

## 39.பாவம் என்றால் என்ன என்று கூறுகிறீர்கள்?

சட்டத்தை மீறுவது பாவம் (1யோவா.3:4). கடவுள் குடியிருக்கும் ஆலயமாகிய நம் உடலை கெடுக்கும் எந்த செயல்பாடுகளும்

Top

பாவமே. அதுபோல நம் செயல்கள் மூலம் பிறருடைய உள்ளமோ உடலோ கெடுக்கப்பட்டாலும், அவையெல்லாம் பாவம்தான். அதற்கு சில எடுத்துக்காட்டுகளைக் கீழே தருகிறேன்.

பொய் சொல்வது, சிலைவழிபாடு, சூனியம் செய்வது, (தி.வெ.21:8), களவு செய்வது, கொலை செய்வது, விபச்சாரம் செய்வது (வி.ப.20:13-15), கெட்டவார்த்தை பேசுவது (எபே.4:29), பேராசை, பொறாமை, கடவுளை வெறுப்பது, தற்பெருமை, பெற்றோருக்கு கீழ்ப்படியாமை, சொல் தவறுவது, இரக்கம் இல்லாமை (உரோ.1:29-31), முறுமுறுப்பது (பிலி.2:14), கீழ்படியாமை (கொலோ.3:6), பொருளாசை, வரதட்சணை கேட்டு கொடுமை செய்வது, லஞ்சம் வாங்குவது (கொலோ.3:5), கோள் சொல்வது (நீதி.16:28,17:9), இரண்டகம் சதி பண்ணுதல்; (1சாமு.15:23),ஜாதி பிரிவினைகளை உருவாக்குவது (கொலோ.3:11),திட்டுவது, நன்றியின்மை (2திமொ.3:2), வெளிவேஷம் (2திமொ.3:5), பொய் தெய்வங்களை வணங்குவது (வி.ப.20:3), வீண் பேச்சு (1திமொ.2:16), மனித பாராட்டை விரும்புவது (மத்.23:17), வேலை செய்யாமல் சாப்பிடுவது

Top

(2தெச.3:10), மன்னியாமை (கொலோ.3:13, மத்.18:35), மதுபான வெறிகொள்வது (எபே.5:18), பிறருக்கு இடறலாயிருத்தல் (1கொரி.8:13), புத்திமதியைத் தள்ளிவிடுவது (நீதி.15:32), ஏழைகளை ஒடுக்குவது (நீதி.14:31) இவை எல்லாமே பாவம்தான். நன்மை செய்ய ஒருவருக்கு தெரிந்திருந்தும் அவர் அதை செய்யாவிட்டால், அதுவும் பாவம் தான் (யாக்.4:17). தயவு செய்து புதிய ஏற்பாட்டை வாசியுங்கள்.

## 40. பாவம் போக்க ஏன் இரத்தம் சிந்தப்பட வேண்டும்?

சாத்தானுடைய சூழ்ச்சியால், ஆதிமனிதன் கடவுளால் விலக்கப்பட்ட கனியை உண்டு ஆன்மீக உயிரை இழந்தான். அதைத் திரும்பவும் கடவுளிடமிருந்து பெற்றுக்கொள்ள பரிசுத்தமான ஓர் உயிர் விலையாக கடவுளுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்ற தெய்வீகத் தீர்மானத்தால், தன் தூயதிருமகனையே இயேசு என்னும் பெயரில் இவ்வுலகிற்கு மனிதவடிவில் அனுப்பி, நம் பாவங்களுக்கு பரிகாரமாக அவரது

Top

உயிரையே செலுத்தப்பட ஒப்புக்கொடுத்தார் (மத்.26:28). இயேசு தன் உயிரை சிலுவையில் தியாகம் செய்தார். ஓர் உயிரியின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. இதனால்தான், இரத்தம் சிந்துதலின்றி பாவமன்னிப்பில்லை (எபி.9:22, லேவி.17:11) என்று கடவுள் கூறினார்.

நம்மைப் படைத்த மஹேஸ்வரனுக்குத்தான் நம்மைப்பற்றியும், பாவம் செய்த நம்முடைய வீழ்ச்சியிலிருந்து நம்மை மீட்க என்ன செய்ய வேண்டுமென்றும் தெரியும். உங்கள் மூதாதையரிடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தையினின்று உங்களை விடுவிக்கக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது பொன்னும் வெள்ளியும் போன்று அழிவுக்குட்பட்டது அல்ல மாறாக, மாசுமறுவற்ற ஆட்டுக்குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள இரத்தமாகும் (1பேது.1:18,19).

Top

## 41. இரட்சிக்கப்பட பணம் கொடுக்க வேண்டுமா?

இரட்சிப்பு முற்றிலும் இலவசமானது. நாமனைவரும் கிறிஸ்து நிறைவேற்றிய மீட்புச்செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகிறோம் (உரோ.3:24). “நலம் குன்றியவரைக் குணமாக்குங்கள் இறந்தோரை உயிர் பெற்றெழச் செய்யுங்கள் தொழுநோயாளரை நலமாக்குங்கள் பேய்களை ஓட்டுங்கள் இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய் வழங்குங்கள்” (மத்.10:8) என்று கிறிஸ்து அறிவுரை கூறினார். பணம் கொடுத்தால் பரலோகம் போய்விடலாம் என்னும் தத்துவம் உண்மைக்கடவுள் இயேசுவிடம் பலிக்காது. இயேசுவின் கொள்கையை கடைபிடிப்பதும், இரட்சிக்கப்படுவதும், உங்கள் தனிப்பட்ட விருப்பம். அதற்கு எந்த ஆன்மீகத் தலைவர்களும் பணம் வசூலிக்க முடியாது. ஆனால், இயேசுவின்மீது வைக்கும் அன்பின் பொருட்டு தங்கள் நிலபுலன்கள் எல்லாவற்றையும் கடவுளின் அருட்பணிக்கென்று கொடுப்பதை கடவுள் மேலான அனுபவமாக சுட்டிக்காட்டுகிறார்; (மத்.19:21).

Top

## **42.** நான் ஜெபவீட்டிற்கு வந்தால்தான் கடவுளை தொழ முடியுமா? வீட்டில் ஆராதிக்க முடியாதா?

கடவுள் எங்கும் நிறைந்தவர்தான் (எரே.23:24 மத்.18:20). அவர் மனிதனுடைய கைகளினால் கட்டப்பட்ட திருக்கோயில்களில் குடியிருப்பதில்லை மனிதர்களின் கைகளால் வனையப்பட்டு, வடிவமைக்கப்பட்ட சிலைகளுக்குள் அவர் வசிப்பவருமல்ல. உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவர். மனிதர் கையால் கட்டிய திருக்கோயில்களில் அவர் குடியிருப்பதில்லை (தி.பணி.17:24) என்று வேதம் தெளிவாக கூறுகிறது. கடவுளுக்கு ஒரு சிலையைச் செய்து அது இருக்குமிடத்தை ஒரு புண்ணியத் தலமாக அறிவிக்க கடவுள் கட்டளையிடவில்லை. கடவுளை வீட்டிலிருந்தே ஆராதிக்கலாம்.ஆனால், ஒருவர் தனியாக பிரார்த்தனை செய்வதைவிட பலர் சேர்ந்து ஒற்றுமையாக கடவுளிடம் விண்ணப்பித்தால் நிச்சயமாக பதில் கிடைக்கும்.இயேசு தன் சீடர்களிடம் கூறினார், “உங்களுக்குள் இருவர் மண்ணுலகில்

Top

தாங்கள் வேண்டும் எதைக்குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகிலிருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார். ஏனெனில் இரண்டு அல்லது மூன்றுபேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்" (மத்.18:19-20). மனிதர்கள் கடவுளை நினைப்பது மட்டுமல்ல,சகமனிதர்களோடும் நல்லுறவோடிருக்கும்படிக்கே இப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தத்தை கடவுள் செய்திருக்க வேண்டும். 'நோய்வாய்ப்பட்டால் நேரடியாக இறைவனை நோக்கி மன்றாடு' என்று கூறாமல், திருச்சபையின் மூப்பர்களை வரவழைத்து, அவர்கள் உங்களுக்கு எண்ணெய்பூசி இறைவேண்டல் செய்ய யாக்கோபு ஆலோசனை கூறுகிறார் (யாக்.5:14).

ஊழியருக்கும் விசுவாசிக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தத்தான் கடவுள் அப்படி செய்திருப்பார் என்று முழுமையாக நம்புகிறேன். தனியாக வீட்டில் அமர்ந்து பிரார்த்தனை செய்தால் உங்கள் பிரார்த்தனையைக் கடவுள் கேட்கமாட்டார் என்று கூறமுடியாது. ஆனால், உங்கள் வாழ்வு

Top

சகவிசுவாசிகள் பலரோடு இணைந்துள்ளது. அவர்களோடு இணைந்து ஒருதாய் பிள்ளைகளாய் வாழ வேண்டியது முக்கியமென்று கருதியே தனியாக பிரார்த்தனை செய்வதைப் பற்றி பெரிதுபடுத்தி பேசாமல் கூட்டுப்பிரார்த்தனையை முக்கியப்படுத்திப் பேசுகிறார் ஆண்டவர்.

நீங்கள் தனியாக அமர்ந்து உங்களது தேவைக்காக நீங்கள் மட்டுமே ஜெபித்து ஒரு அற்புதம் நடந்துவிட்டால் நான் என்னும் தற்பெருமை மேலோங்கி அழிந்துவிடுவீர்கள் என்னும் தெய்வீக ஞானத்தால்தான் பலராக இணைந்து பிரார்த்தனை செய்யக் கூறினார். எல்லாருக்காகவும் பிரார்த்தனை செய்யும் பவுல், தனக்காக ஜெபிக்க சபை மக்களை வேண்டுகிறார் (எபி.13:18, 2தெச.5:25). ஆக, ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் ஒருவர் பாரத்தை ஒருவருக்குப் பகிர்ந்து, கிறிஸ்துவின் அன்பால் வளர்ந்து, ஒருவரையொருவர் சார்ந்து வாழ வேண்டுமென்றால் நாம் சபையாகக் கூட வேண்டும். இருவர் திருமணம் செய்ய, சாட்சி கையெழுத்துப் போடும் மற்றிருவர் மட்டும் போதுமே! எதற்காக திருமண மண்டபம் நிரம்ப ஆட்களைக் கூப்பிட்டு,

Top

சாப்பாடு போட்டுப் பணத்தை செலவு செய்ய வேண்டும்? சிந்தியுங்கள். பல நாட்களாக, மாதங்களாக, வருடங்களாக, யுகங்களாக அகன்றுபோயிருந்த பழமைப்பட்ட உறவுகளை புதுப்பிக்க, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து தங்கள் சங்கடங்களையும், சந்தோஷங்களையும் பகிர்ந்துகொள்ள, எல்லாரும் சேர்ந்து திருமணத் தம்பதியரை ஆசீர்வாதம் பண்ண அத்தருணம் பயனுள்ளதாக இருக்கும்.

பல நாட்களாக தொலைபேசியின் மூலம் தொடரும் உறவுகள் நேருக்குநேர் சந்திப்பதால் வளருமல்லவா! பள்ளிக்கு வராமலேயே ஒரு மாணவன் வீட்டிலிருந்தவாறே படிக்க முடியாதா? முடியும். ஆனால், பள்ளி மாணவரிடம் இருக்கும் பொதுஅறிவும், புத்திக்கூர்மையும் வீட்டு மாணவனிடம் எதிர்பார்க்க முடியாது. சபைக்கூடுகையில் மற்றுமொரு முக்கியத்துவமுண்டு. நாம் வாசிக்க நம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கும் வேதாகமத்தை நாம் வாசிக்கும்போது அதன் விளக்கங்களைப் புரிந்துகொள்ள, சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள, வேத போதகர்களிடம் அணுகி வேதஅறிவை

Top

வளர்த்துக் கொள்ள, நாம் சபைக்கு செல்லவேண்டும். எத்தியோப்பிய மந்திரி ஒருவர், தான் வாசித்துக் கொண்டிருந்த வேதபகுதியின் விளக்கத்தை உணராமலேயே வாசித்துக் கொண்டிருந்தார். திருத்தூதர் பிலிப்பு அவரை சந்தித்து அவரிடம் “நீர் வாசிப்பதன் கருத்து உமக்கு தெரியுமா?” என்று கேட்டவுடன், “யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துகொள்ள முடியும்?” என்று மந்திரி பதிலளித்தார். உடனே பிலிப்பு மந்திரிக்கு அந்த வேதபகுதியின் விளக்கத்தை கூற, மந்திரியார் திருமுழுக்கு பெற்றுக்கொண்டார் (தி.பணி.8:30,31). பிலிப்பு போன்ற ஊழியக்காரர்களுடைய உதவி சபையாருக்குத் தேவை. இதை மனதில் கொண்டுதான் திருத்தூதர் பவுலடிகளார், “சிலர் வழக்கமாகவே நம் சபைக்கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை, நாம் அவ்வாறு செய்யலாகாது. ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் ஊக்கம் ஊட்டுவோமாக” (எபி.10:25) என்கிறார். சபை கூடிவரும்போது, உங்கள் பார்வையில் தவறு செய்யும் ஒருவரை நீங்கள் கண்டித்து புத்திமதி சொல்லமுடியும். சபையிலுள்ள ஏழைகளுக்கு அவர்களது தேவை தெரிந்து உதவி செய்யமுடியும் (கலா.6:1-10).

Top

காயப்பட்ட மனதோடு வரும் மற்றோரை சந்தித்து அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைப் பேசமுடியும்.

பணம் இருந்தால் நம் பிள்ளைகளை அமெரிக்காவுக்கானாலும் அனுப்பிப் படிக்கவைக்கிறோம். ஆனால், கடவுளை வணங்க, அவரைப்பற்றி கற்றுக்கொள்ள சக ஆன்மீக நண்பர்களோடு ஆவிக்குரிய நட்புறவு வைத்துக்கொள்ள ஜெபவீட்டுக்கு வர நாம் ஏன் சோம்பல்பட வேண்டும்? சபைக்கூடிவருதலின் நன்மைகளை எழுதினால் ஒரு புத்தகமே எழுதலாம்.

## 43. நான் பாவம் செய்ததில்லையே !

உலகில் பிறந்த, பிறக்கின்ற மனிதர்கள் எல்லாருமே பாவிகள் தான். அதை உறுதிப்படுத்தும் வசனங்களை கீழே தருகிறேன் வாசியுங்கள்.

குற்றமே செய்யாமல் நல்லதையே செய்யும் நேர்மையானவர் உலகில் இல்லை (ச.உ.7:20). நம்மிடம் பாவமில்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வோம்.

Top

உண்மையும் நம்மிடத்தில் இராது. மாறாக, நம் பாவங்களை ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து, குற்றங்கள் அனைத்திலுமிருந்து நம்மை தூய்மைப்படுத்துவார். ஏனெனில், அவர் நம்பிக்கைக்கு உரியவர் நேர்;மையுள்ளவர். நாம் பாவம் செய்யவில்லை என்போமென்றால் அவரை பொய்யராக்குவோம். அவருடைய வார்த்தை நம்மிடத்தில் இல்லை என்றாகும் (1யோவா.1:8-10). நேர்மையாளரே இல்லை ஒருவர்கூட இல்லை மதிநுட்பம் உள்ளவர் ஒருவருமில்லை. கடவுளை தேடுபவர் எவராவது உண்டோ?எல்லாரும் நெறிபிறழ்ந்தனர் ஒருமிக்க கெட்டு போயினர் நல்லது செய்பவர் யாருமில்லை. ஒருவர்கூட இல்லை (உரோ.3:10-12). எல்லா மனிதரும் பாவம் செய்தனர் (உரோ.5:12). பாவம் செய்யாத மனிதன் ஒருவனுமில்லையே (1அர.8:46). தம் குற்றப்பழிகளை மூடிமறைப்பவரின் வாழ்க்கை வளம்பெறாது. அவற்றை ஒப்புக்கொண்டு விட்டுவிடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவார் (நீதி.28:13). மேற்கண்ட வசனங்களிலிருந்து பாவமற்ற ஒருவனும் இவ்வுலகில் இல்லை என்பது புலனாகிறது. ஒருவன் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும்போது பாவத்தோடே பிறக்கிறான்.

Top

தாவீது அதைப்பற்றி விளக்கும்போது, “இதோ தீவினையோடு என் வாழ்க்கையை தொடங்கினேன். பாவத்தோடே என் அன்னை என்னை கருத்தாங்கினாள்” (தி.பா.51:5) என்கிறார். ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று (மத்.5:28) என்று கிறிஸ்து கூறினார். பார்வையிலேயே பாவம் செய்துவிடுகிறீர்களாம். தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள் (1யோவா.3:15) என்று யோவான் கூறினார். தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத்தீர்ப்புக்கு ஆளாவார் தம் சகோதரரையோ சகோதரியையோ ‘முட்டாளே’ என்பவர் தலைமைச் சங்கத்தீர்ப்புக்கு ஆளாவார் ‘அறிவிலியே’ என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார் (மத்;.5:22). இந்த வசனங்களின்படி நீங்கள் தூய்மையாய் இருக்கிறீர்களா? அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காகவே கடவுள் அனைவரையும் கீழ்படியாமைக்கு உட்படுத்தினார் (உரோ.11:32) என்று பவுல் கூறினார். பாவமில்லாமல் பிறந்து வாழ்ந்தது இயேசு மட்டும்தான் என்று வேதம் தெளிவாக்குகிறது.

Top

## 44. நான் சுயக்கட்டுப்பாட்டோடு வாழ்கிறேன். எனக்கு கடவுள் தேவையில்லையே !

வெறும் கண்ணால் ஒரு குறிப்பிட்ட தூரம் வரைதான் தெளிவாக பார்க்கமுடியும் ஆனால், அதிக தூரம் பார்க்க வேண்டுமானால் தொலைநோக்கியைப் பயன்படுத்த வேண்டும். அதேபோல, கடவுளின் துணையில்லாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் தூய்மையாக வாழமுடியும். கடவுளின் உதவி இல்லாமல் நாம் பரிசுத்தமாக வாழ ஆசைப்பட்டாலும் முழுமையாக வாழமுடியாது. நம்மை சுற்றிலுமுள்ள மக்களுக்கு நம்மை ஒரு மகான்போல காட்டலாம். ஆனால், நம் உண்மை நிலை என்னவென்று நமக்குத்தானே தெரியும். தன் சுயவலிமையால் மனத்தூய்மையோடு வாழநினைக்கும் மக்களைப்பார்த்து ஆண்டவர் கீழ்க்காணும் வசனங்களால் அறிவுரை கூறுகிறார். எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்ற முடியுமா? முடியுமானால் தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மை செய்ய முடியும் (எரே.13:23). ஆப்பிரிக்காவின்

Top

எத்தியோப்பிய மக்கள் சாதாரணமாக கறுப்பாக இருப்பார்கள். அந்த கறுத்த உடலை வெள்ளை நிறமாக மாற்ற அவர்களால் முடியாது. அதுபோல பாவத்தோடு வாழும் மனிதனும் பரிசுத்தமாக வாழ இயேசு இல்லாமல் முடியாது. இந்தியாவின் தேசப்பிதா எனப்படும் காந்தியடிகள் உலகத்தின் பெரிய தலைவர்களின் பட்டியலில் இருக்கிறார். ஆனால், அவருடைய தனிப்பட்ட வாழ்வில் பாவத்தோடு எவ்வளவு போராடியும் வெற்றிபெற முடியாமல், ஒழுக்கமில்லாமல், கட்டுப்பாடற்று வாழ்ந்த சூழ்நிலைகளை அப்பட்டமாக அவருடைய நூல்களிலே எழுதியிருக்கிறார். தான் செய்த தவறுகளை வெளிப்படையாக எழுதிய காந்தியின் அந்த மனப்பான்மையைப் பாராட்டுகிறேன்.

உள்ளத்தில் முடைநாற்றமெடுக்கும் கேவலமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தாலும் வெளியே யோக்கியன் போல வாழ்ந்துகொண்டிருந்த மக்களைப் பார்த்து, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையே என்று இயேசு கூறினார். நீங்கள் உங்களை மக்களுக்கு முன் நேர்மையாளராக காட்டிக்கொள்கிறீர்கள். கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார்.

Top

நீங்கள் உங்களை மக்களுக்கு முன் உயர்ந்தவர்களாக காட்டிக் கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும் (லூக்.16:15) என்று இயேசு எச்சரிக்கிறார்;. கடவுள் இல்லையென்றும், கடவுளின் உதவி தேவையில்லை என்றும் வாழும் அதிமேதாவிகள் அநேகரை எனக்குத் தெரியும். ஆனால் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்வில் சுயநலவாதிகளாக, கட்டுப்படுத்த முடியாத இரகசிய பாவங்களை செய்பவர்களாகவும் வாழ்கிறார்கள். இன்று உலகத்தில் பல நட்சத்திர தலைவர்கள் குடிகாரராகவும், விபச்சாரம் செய்கிறவர்களாகவும், பொறாமையினால் எதிரிகளை கொலை செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், இயேசுவின் சத்திய வழியை அறிந்து பின்பற்றினால் தூய்மையாக வாழலாம். நான் தூய்மையாக வாழ்வது போல நீங்களும் தூய்மையாக வாழுங்கள் (1பேது.1:17) என்று கடவுள் கூறியிருக்கிறார். கடவுள் நம் வாழ்க்கையை ஒரு கண்டிப்பான தகப்பனைப்போல கண்காணிக்கிறார் என்னும் ஓர் உணர்வு நமக்குள் இருந்தால் தான் நம்மால் தூய்மையாக வாழமுடியும் என்பது தான் நிதர்சனமான உண்மை. தன் தகப்பன் தன்முன்

Top

உட்கார்ந்திருக்கிறார் என்னும் உணர்வு ஒரு மகனுக்கு இருந்தால்தான் குற்றம் செய்யாமல் இருப்பான். அதேபோலத்தான் ‘ஆணுறையை பயன்படுத்துங்கள்’ என்று விளம்பரப்படுத்தும் அரசாங்கம், ‘விபச்சார தடுப்புச் சட்டம்’ என்ற ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாதது ஏன்? அவ்வளவு புனிதமான ஒரு தூய வாழ்க்கையை அரசாங்கத்தால் உருவாக்க முடியாது. கடவுளால்தான் முடியும். இயேசுதான் இந்த உலகில் ஒரு குற்றம்கூட செய்யாமல் வாழ்ந்த ஒரே மனிதன். அவர் இன்றும் தூய்மையாக உயிரோடு இருக்கிறார். அவர் மட்டும்தான் பாவிக்கு உதவி செய்யமுடியும். குற்றம்புரிவோரைப் பார்த்து ‘குற்றம் செய்யாதே!’ என்று கூறத் தகுதியுடையவரும் அவர் தான். இயேசுவாகிய குமாரசுவாமி உங்களை விடுதலை செய்தால், அது மெய்யான விடுதலையாக இருக்கும் (யோவா.8:32-36). தூய்மையின் ஆவியானவர் மட்டும்தான் நம்மை பவித்திரமாக பாதுகாக்க முடியும். முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே. நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனத்தில்

வைத்துச் செய் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார் (நீதி.3:5,6).

## 45. நான் எனது தெய்வத்தை வணங்குகிறேன். அதில் சந்தோஷமாய் இருக்கிறேன். அது போதாதா?

கடவுள் அனைவருக்கும் பொதுவானவர். மனிதனை இன, மொழி, ஜாதி அடிப்படையில் பிரிக்கமாட்டார். இன்று இந்து அறநிலையத் துறைக்குட்பட்ட எல்லா அரசாங்க கோயில்களிலும், இந்துக்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்ற பலகை வைக்கப்பட்டிருக்கிறதே! இந்த பலகையைப் பார்த்தால் கடவுள் மதவெறி பிடித்தவர் போலல்லவா அறிவிக்கிறார்கள்! உண்மையான இறைவன், அனைத்து மதத்து மக்களுக்கும் பொதுவான காருண்யேஸ்வரன், இந்துமக்களை மட்டும்தான் ஏற்றுக்கொள்வாரா? உண்மையாகவே இறைவன் இப்படி கேவலமான, வெறித்தனமான சட்டத்தை மனிதர்களுக்கு கொடுத்திருப்பாரா? இதுதான் நீங்கள் பின்பற்றும்

Top

ஆன்மீகமானால் நீங்கள் போகும் வழி சரியானதா? சிந்தித்து பாருங்கள்.

மேற்கண்ட சம்பவங்களை மேற்கோள்காட்டி, இந்து சகோதரர்கள் ஆயிரக்கணக்கானவர்களிடம் நான் பேசி இருக்கிறேன். எல்லாரும் இது அநியாயம்தான் என்று தங்கள் ஆதங்கங்களை என்னிடம் பதிவு செய்திருக்கிறார்கள். இந்து அறநிலையத் துறையின் சட்டப்படி, ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம், மகாபாரதம், இராமாயணம், ஷாமிளா கிரந்தம், பகவத்கீதை, சிவபுராணம், சைவசித்தாந்தம், சிவஞானபோதம், நாலாயிர திவ்யபிரபந்தம், தாண்டீய மகாபிராமணம், பாகவதம், திருமந்திரம், பவிஷ்ய புராணம் என்ற எல்லா மதநூல்களையும் மனப்பாடமாக கற்றாலும், ஒரு பிராமணர் அல்லாதவர் அர்ச்சகராக மாறமுடியாது. இந்த சமுதாய ஏற்றத்தாழ்வு கொள்கையை நிஜமாகவே கடவுள் சொல்லியிருப்பாரா? அல்லது ஜாதிவெறிபிடித்த மதவாதிகளால் தந்திரமாக புகுத்தப்பட்டிருக்குமா? யோசித்துப் பாருங்கள். இந்துக்களது வாழ்வியல் வடிவத்தை நிர்ணயிக்கும் மனுஸ்மிருதி

Top

என்னும் புத்தகத்தில் எழுதப்பட்டதை அவர்கள் அறிந்தோ அறியாமலோ பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். ‘மநு’ என்னும் ஒரு பிராமணன் எழுதி வைத்த இப்புத்தகம்தான் இந்தியாவிலுள்ள எல்லா சமுதாயப் பிரிவினைகளுக்கும் காரணமென்பதை இப்போதுதான் இந்துக்கள் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். “பிரம்மாவுடைய முகத்திலிருந்து தோன்றியவர்கள் பிராமணர்கள் என்றும், அவருடைய தோள்பட்டையிலிருந்து தோன்றியவர்கள் சத்ரியர்கள் என்றும், அவருடைய தொடையிலிருந்து தோன்றியவர்கள் வைஷ்யவர்கள் என்றும், அவருடைய பாதத்திலிருந்து தோன்றியவர்கள் சூத்திரர்கள் என்றும் மக்களை நான்கு வர்ணங்களாக கடவுளே பிரித்திருக்கிறார்” என்னும் பொய்யை எழுதி மக்களை நம்பவைத்து விட்டார்கள் ஆதிக்கவர்க்கத்தினர். சூத்திரன் மற்ற ஜாதி மக்களுக்கு அடிமை வேலை செய்யவேண்டும் என்று மனுதர்மம் கூறுகிறது.

இதை வாசிக்கும் இந்துசகோதரரே, உங்களை என் சொந்த ‘சகோதரன்’ என்று அழைக்க இயேசு கூறினார். அதாவது,

Top

என்னை நான் நேசிப்பது போல உங்களையும் நேசிக்க கூறினார் (லூக்.10:27). தற்போதைய இந்துமத போதகத்தில் இப்படி ஒரு கொள்கையை காட்டமுடியுமா? கிறிஸ்து தன்னிடம் வரும் எவரையும் ஏற்றுக் கொள்கிறார் (யோவா.6:37) என்று வேதம் தெளிவாக்குகிறது. மனிதர்களுக்குள், யூதர்களென்றும் கிரேக்கர்களென்றும் வேறுபாடு இல்லை ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்னும் பாகுபாடில்லை; அடிமை, உரிமைக் குடிமகன் என்னும் உணர்வுகள் கடவுளின் சாம்ராஜ்யத்தில் இல்லை. மேல்ஜாதி-கீழ்ஜாதி, இந்தியர்-வெளிநாட்டுக்காரர், தமிழன்-மலையாளி, ஆரியன்-திராவிடன் என்னும் எந்த ஏற்றத்தாழ்வுகளும் பரமாத்மாவுக்கு முன் செல்லுபடியாகாது. இறைவன் இந்த எல்லா பிரிவினைகளையும் கடந்தவர்.

ஆரியன் தன்னை நேசிப்பதுபோல பிறரையும் நேசித்தால், திராவிடர்கள் இந்த மண்ணில் பிராமணர்களால் ஒடுக்கப்பட்டிருக்க மாட்டார்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிராமணருக்கும், தலித்துகளுக்கும் எந்த வித்தியாசமுமில்லை.

Top

‘ஒருதாய் மக்கள் நாமென்போம் ஒன்றே எங்கள் குலமென்போம் தலைவன் ஒருவன் தானென்போம் சமசரம் எங்கள் வாழ்வென்போம்’ என்ற பாடலை இயற்றியவர்களும் பாடியவர்களும் மறைந்து போகலாம். ஆனால், அந்த வரிகள் இன்னும் என் நெஞ்சைவிட்டு மறையாமல் பதிவாகி இருக்கின்றன. நாம் எல்லோரும் ஒருதாய் மக்களென்னும் உணர்வை மனுதர்ம கோட்பாட்டால் உருவாக்கமுடியுமா? ஒன்றே குலமென்று பாடுவோம் ஓருவனே தேவனென்று போற்றுவோம், என்ற பாடலை இயற்றியவரும் பாடியவரும் அதற்காக சம்பளம் வாங்கிச் சென்று விட்டார்கள். ஆனால், அந்த வாசகத்தைச் செயல்வடிவத்திற்கு கொண்டுவருவது எப்படி என்று என்றைக்காவது யோசித்தீர்களா?

இந்த பாரதமண்ணில் ஒரு வேளை சாப்பாடு இல்லாமல் எத்தனை மக்கள் வறுமையில் வாடுகிறார்கள்? இந்த அவல நிலையில் கோடிக்கணக்கான பணத்தை செலவுசெய்து தங்கத்தில் சிலைகள், விமானங்கள், தேர்கள் செய்து பணத்தை விரயம் செய்கிறார்களே! இதை நியாயமென்று நீங்கள் கூறமுடியுமா?

Top

ஆந்திராவிலுள்ள ஒரு கோயிலின் கதவை ஒரு டன் எடையுள்ள தங்கத்தில் செய்திருக்கிறார்கள். ஆனால், அதே மாநில மக்கள் பலர் வேலைவாய்ப்பு இல்லாமல், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு, பசி பட்டினியால் மடிந்து கொண்டிருக்கிறார்கள். கோயிலின் சிலைக்கு கோடிக்கணக்கான பணச்செலவில் வைரக்கீரிடம் செய்து வைக்கிறார்கள். தயவுசெய்து மதவெறி இல்லாமல், நடுநிலை சிந்தையோடு பொதுநல உணர்வோடு யோசியுங்கள்.மனிதநேயத்தோடு சிந்தியுங்கள். உலகத்திலேயே மிகப்பெரிய பணக்காரர்கள் இருக்கும் இந்தியாவில்தான் உலகிலேயே மோசமான நிலைமையில் இருக்கும் பிச்சைக்காரர்களும் இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு காரணம் என்னவென்று சற்று நிதானமாய் யோசியுங்கள். 1947-ல் ஆங்கிலேயருடைய கையிலிருந்து நாம் அரசியல் விடுதலை அடைந்து விட்டோம். ஆனால், வறுமை, தீவிரவாதம், வழிப்பறிக்கொள்ளை, கற்பழிப்புகள் என்னும் சமூக அவலங்களிலிருந்து விடுதலையடைந்து விட்டோமா? ஜாதி, இன, மொழிப் போர்களிலிருந்து விடுதலை அடைந்துவிட்டோமா? இந்திய

Top

கிராமங்களில் ஒருவர் கிறிஸ்துவின் அன்புக்கொள்கையை கடைபிடிக்க ஆரம்பித்துவிட்டால், அவரை ஈவு இரக்கமின்றி ஊரைவிட்டே விலக்கி வைத்துவிடுகிறார்கள். அவருடைய வீட்டில் ஒரு திருமணவிருந்து ஏற்பாடு செய்தால் அந்த ஊரார் ஒருவருமே அதில் கலந்து கொள்ளமாட்டார்கள். அவருடைய வீட்டில் யாராவது இறந்துவிட்டால், ஊரார் யாருமே அந்த இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளமாட்டார்கள். ஊர் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று தடைவிதிக்கிறார்கள்.

அவர் ஒரு வாடகைவீட்டில் குடியிருந்தால் அவருடைய வீட்டு உரிமையாளரிடம் வற்புறுத்தி அவரை வீட்டை விட்டே துரத்தி விடுகிறார்கள். ஊரிலுள்ள கடைகளில் பொருட்களை வாங்கமுயன்றால் அவருக்கு மட்டும் கொடுக்கமாட்டார்கள். இந்த மிருகத்தனமான பண்பாட்டை நியாயமென்று நீங்கள் கூறமுடியுமா? ஒருவன் கிறிஸ்துவின் அன்புக்கொள்கையை பின்பற்றுவது தேசதுரோகமா? அதற்கு இந்த மண்ணில் உரிமையில்லையா? நாட்டு நலனை கருத்தில் கொண்டவர்கள்

Top

கிறிஸ்துவின் கொள்கையை தடை செய்யமாட்டார்கள். இந்தியாவிலுள்ள எத்தனையோ கிறிஸ்தவ ஆலயங்களை இந்துக்கள் தீவைத்து கொளுத்தியிருக்கிறார்கள்! எத்தனையோ கன்னியாஸ்திரிகள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள்! எத்தனையோ கிறிஸ்தவ மக்களுடைய வீடுகளை தீக்கிரையாக்கி இருக்கிறார்கள்! எத்தனை கிறிஸ்தவர்கள், அவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிற ஒரே காரணத்துக்காக தங்கள் சொந்த குடும்பத்தாரே அவர்களை வீட்டைவிட்டு துரத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய குடும்ப சொத்தைக்கூட தாங்கள் அபகரித்து பங்கிட்டு கொள்கிறார்கள்.

பாகிஸ்தானிலுள்ள இந்துக்களை அங்குள்ள இஸ்லாமியர்கள் கொடுமைப்படுத்துகிறார்களென்று இந்திய இந்துக்கள் கொதித்து குமுறுகிறார்களே! இந்திய கிறிஸ்தவர்களை இங்குள்ள இந்துக்கள் கொடுமைப்படுத்துகிறார்களே! இது நியாயமா? இந்த கொடுமைவாதத்தை தட்டிக்கேட்க உங்களுக்கு

Top

முதுகெலும்பிருக்கிறதா? அல்லது, இதெல்லாம் நியாயம்தான் என்று அநியாயத்துடன் கைகோர்த்து நிற்கப் போகிறீர்களா?

‘தமிழன் வந்தாரை வாழவைப்பவன். எவரையும் ஏற்றுக் கொள்பவன்’ என்றெல்லாம் பேச ஆரம்பித்துவிட்டால் தொண்டை கிழிய கத்துவோம். ஆனால், நடைமுறை வாழ்க்கையில் மிருகத்தைவிட கேவலமாகத்தானே வாழ்கிறோம். ஒரிசாவிலுள்ள ஆதிவாசி மக்கள் தொழுநோயாளிகள், சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்களிடையே சமுதாய சேவை செய்யும் எண்ணத்தோடு, ஆஸ்திரேலியாவிலிருந்து கிரஹாம் ஸ்டேன்ஸ் மற்றும் அவருடைய குடும்பத்தார் நம்மண்ணுக்கு வந்தனர். இரவும் பகலும் நமக்காக சேவைசெய்த அவர்களுக்கு நம் மண்ணின் தர்மப்படி என்ன செய்தோம் என்று உங்களுக்குத்தான் தெரியுமே! அவரையும் அவருடைய இரண்டு மகன்களையும் ஒரு வண்டிக்குள் வைத்து உயிரோடு கொளுத்தினார்கள் இந்துதர்மத்தார். இந்தியாவிலுள்ள நலிந்தோருக்கு உதவிசெய்து அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி, முன்னேற்ற வந்த அந்த புனித குடும்பத்துக்கு நாம்

Top

கொடுத்த பரிசு எவ்வளவு கொடுமையானது என்பதை யோசித்துப் பாருங்கள். சனாதன தர்மம் என்று கூறிவரும் மதவெறியர்களுக்கு கண்மூடித்தனமாக நாம் ஆதரவளிக்கக் கூடாது என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். தன் சொந்தகுடும்பத்தை தீயில் எரித்து சாம்பலாக்கிய கொடுமைவாதிகளை அந்த அம்மா நீதிமன்றத்தில் மன்னித்தார்களே. அதுதான் தர்மம். “பரித்ராணாய சாதூநாம், விநாசாயச துஷ்கிருதாம், தர்ம சம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே” என்று கீதையில் வாசிக்கிறோம். “சாதுக்களை (நல்லவர்களை) பரிபாலனம் (ஆதரவு) செய்வதற்காகவும், துன்மார்க்கர்களை அழிப்பதற்காகவும் தர்மத்தை நிலைநாட்டும்படி ஒவ்வொறு யுகங்களிலும் கடவுள் அவதரிப்பார் என்பதுதான் இதன் பொருள்.

இதை வாசிப்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், துஷ்டர்களை அழிப்பதுதான் தர்மமென்று கீதை கூறுவதுபோல இயேசு கூறவில்லை. பாவிகளை (தன் அன்பினால்) இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகிற்கு வந்தார் (1திமொ.1:15)

Top

என்று வேதம் கூறுகிறது. இந்த கருணாமூர்த்தியின் நோக்கத்தில் எவ்வளவு அன்பு இருக்கிறது!

பாவிகளை அழிக்க முற்படுவோமானால், இவ்வுலகில் ஒருவரும் உயிரோடிருக்க முடியாது. ஏனெனில், எல்லாரும் பாவத்தில் பிறந்து வளர்ந்த பாவிகள்தான் (உரோ.3:23) என்று வேதம் கோடிடுகிறது. நம்முடைய பார்வையில் நாம் நல்லவர் போலிருந்தாலும், அந்த மஹேஸ்வரனுக்குத்தானே தெரியும் நாம் யாரென்பது! இன்று கிராம கோயில்களில் மதுபானம் அருந்தினால்தான் பூசாரிக்கு சாமி வரும் என்னும் தரந்தாழ்ந்த நிலைக்கு சென்று விட்டார்களே! இதை நியாயமென்று ஒத்துக்கொள்கிறீர்களா? கிறிஸ்துவின் கொள்கைகளுக்குள் மிகவும் முக்கியமான அன்பு, சகிப்புத்தன்மை கிறிஸ்தவர்களுக்குள் இருந்ததால்தான் கிறிஸ்தவ தேவாலயங்கள் இந்துக்களால் தகர்க்கப்பட்டாலும், கிறிஸ்தவர்கள் இந்துக்கோயில்களை ஒன்றும் செய்யவில்லை. காவிவேட்டி கட்டிவிட்டால் அவர் கடவுளின் தொண்டனென்று எல்லோராலும் கருதப்படுகிறார். இந்நம்பிக்கை பொதுவாக

Top

எல்லா இந்துமக்களிடத்திலும் இருப்பதால்தான் இன்று காவி உடையணிந்து சமுதாயத்தை ஏமாற்றுவோரின் கூட்டம் அதிகரித்துவிட்டது.

ஒரு கிறிஸ்தவ நம்பிக்கையாளர் இன்ன நிற ஆடைதான் அணியவேண்டும் என்றோ, அல்லது ஒரு குறிப்பிட நிற ஆடையணிந்தவர்கள் பக்திமான்கள் என்றோ வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. சுத்தமான ஆன்மீகமென்பது வெளிப்புறத் தோற்ற மாற்றமல்ல அது உள்மனமாற்றம் என்பது எல்லா ஆன்மீக சிந்தனையாளருக்கும் தெரியும். நம் மரணத்திற்கு பின் ஒரு வாழ்க்கை உண்டு. அதைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? என்று ஆயிரக்கணக்கான இந்து சகோதரர்களிடத்தில் கேட்டேன். எல்லாருமே தெரியாது என்றுதான் பதில் சொல்கிறார்கள். ஆனால், கிறிஸ்தவ வேதத்தை வாசித்துப் பாருங்கள். அதிலே, மனிதனை கடவுள் எப்படி படைத்தார், அவன் எப்படி வாழவேண்டும், அதன்படி வாழ்ந்தால் என்ன நன்;மைகள், வாழாவிட்டால் என்ன தண்டனை என்பவை பற்றித்தெளிவாக எழுதப்பட்டுள்ளது. ஆனால், இந்துமதம்,

Top

ஒருவன் இந்த ஜென்மத்தில் குற்றம் செய்தால் அடுத்த ஜென்மத்தில் பூச்சியாகவோ, பறவையாகவோ, மிருகமாகவோ பிறப்பான் என்று நம்புகிறது. எனவே இந்த ஜென்மத்தில் பாவம் செய்பவன், பாவம் செய்ய அஞ்சமாட்டான். இது ஒரு பெரிய தண்டனையாகத் தோன்றாததால், தவறு செய்பவர்கள் திரும்பத் திரும்ப செய்வார்கள். மாறாக இந்த வாழ்க்கையில் நாம் பரிசுத்தமாக வாழாவிட்டால், நமது மரணத்திற்குபின் முடிவில்லா நரகவாழ்க்கை அனுபவிக்க வேண்டும் என்னும் கொள்கையை கிறிஸ்தவம் கூறுவதால், இக்கொள்கை தவறுகள் செய்பவர்களை அஞ்சவைக்கிறது.

இயேசு ஒரு ஆச்சாரமான யூத இனத்தில் பிறந்தாலும், அவர் அந்நாளைய ஜாதி, மத, இன, மொழிவெறி பிடித்த, மக்களுக்கு நேர் எதிராய் வாழ்ந்தவர். தீண்டத்தகாதவர்கள் என்று அக்காலத்தில் கருதப்பட்ட சமாரியர் என்னும் இனத்துப்பெண் ஒருத்தி ஒரு கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். யூதர்கள் அவர்களுடன் பழகமாட்டார்கள். ஆனால், அவ்வழியாகச் சென்ற சமத்துவத் தந்தை இயேசு தன்னைப்

Top

போல் பிறரையும் நேசிக்க வேண்டும் என்னும் உணர்வோடு அப்பெண்ணிடம், தாகத்திற்கு தண்ணீர் தருவாயா என்று பணிவோடு கேட்டார். இயேசுவின் மனத்தாழ்மையைக் கண்ட சமாரியர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அதன்பின் இயேசு அவ்வூரில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து அம்மக்களோடு பழகி, உண்டு, மகிழ்ந்து அம்மக்களிடையே சமத்துவ சிந்தையையும், சமுதாய எழுச்சியையும், ஆன்மீக அறிவையும் தூண்டி அற்புதங்கள் பல செய்து அவ்வூரை விட்டுச்சென்றார் (யோவா.4:1-42). ஒரு படிப்பறிவற்ற இந்து, கிறிஸ்தவராக மாறிய சிலநாட்களில் வேதத்திலுள்ள சில வசனங்களை மனப்பாடமாகச் சொல்கிறான். ஆனால், பல தலைமுறையாக இந்துவாயிருக்கும் மதப்பற்றுள்ள ஒரு பட்டதாரிக்கு இந்துமத வேதங்களிலிருந்து ஒரு வசனம் கூடத் தெரிய வில்லையே!

**46.** நாங்கள் உங்களைப் போல வீடுவீடாக வருவதில்;லை. ஆனால், எங்கள் கோயில்கள் தானாக நிரம்பி வழிகின்றன.

Top

## நீங்களோ வீடுதோறும் சென்று ஆட்களை தொந்தரவு செய்துதானே உங்கள் சபையை நிரப்புகிறீர்கள் !

குடிகாரர்கள் ஊருக்கு வெளியே இருக்கும் சாராயக்கடையை தேடி கண்டுபிடித்து, அவர்கள் கடினமாக உழைத்து கிடைத்த சம்பள பணத்தை கொடுத்து அங்கு கிடைக்கும் மதுபானத்தை வாங்கி குடிக்கிறார்கள். எந்த விளம்பரமுமின்றி அங்கே மதுபான வியாபாரம் மும்முரமாக நடப்பதால் அங்கே நடப்பதை நியாயமென்று கூறமுடியுமா? உழவன் வயலில் நெற்பயிரை மட்டும்தான் நடுகிறான். ஆனால், இரண்டு மாதங்கள் கடந்தபின், நெற்பயிரோடு களைகளும் முளைத்து வளர்ந்து நிற்கின்றன. நீங்கள் நடாமலேயே களைகள் முளைத்து வளர்வதால் களைதான் நல்லதென்று கூறமுடியுமா? நெற்பயிர் தானாக எந்த வயலிலும் முளைப்பதில்லை. நீங்கள் விரும்பாத களைகள்தான் நீங்கள் விதைக்காமலேயே முளைத்து வளர்கின்றன. எனவே, உங்கள் கோயில் தானாக நிரம்பி வழிவதால், அதுதான் சத்தியமென்று நியாயப்படுத்த முடியாது. இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள் ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில்

Top

அகன்றது வழியும் விரிவானது அதன் வழியே செல்வோர் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது வழியும் மிகக் குறுகலானது இதைக் கண்டுபிடிப்போர் சிலரே (மத்.7:13,14).

## 47. என் வீட்டிலுள்ள விக்கிரகங்களை நான் ஏன் அகற்றவேண்டும்?

விக்கிரக வணக்கம் கடவுளுக்கு அருவருப்பானது. கடவுள், சிலை வழிபாட்டைப் பற்றி என்ன கூறுகிறார் என்று கவனியுங்கள். மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ, ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதை சகித்துக் கொள்ளமாட்டேன்.என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல், மூன்றாம்,

Top

நான்காம் தலைமுறை மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன். மாறாக என்மீது அன்பு கூர்ந்து என் விதிமுறைகளைக் கடைபிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன். (வி.ப.20:4-6). நீங்கள் உங்களுக்கென சிலைகளையும், படிமங்களையும், கல்தூண்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டாம். வணங்குவதற்கு என கற்சிலைகளை நாட்டில் நாட்ட வேண்டாம். ஏனெனில், நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர் (லேவி.26:1). கடவுள் தன் புகழை சிலைகளுக்கு விட்டுக் கொடுக்க மாட்டார் (ஏசா.42:8). வேதத்தின் பல இடங்களிலும் கடவுள் சிலைவழிபாட்டை கண்டித்துப் பேசியிருக்கிறார். கீழ்காணும் வசனங்ளை வாசியுங்கள். இ.ச.5:8, இ.ச.4.32, தி.பா.115:4-8 97:7, 135:15-18, 1கொரி.10:14, 2கொரி.6:16, 1யோவா.5:21. வசனங்களை வாசிக்கிறவர்களாக மட்டுமல்ல, அவற்றை கைக்கொள்கிறவர்களாயும் இருப்போம் (யாக்.1:21,22).

Top

## 48. நாங்கள் உங்களிடத்தில் வந்து 'மதம் மாறுங்கள்' என்று சொல்லவில்லை. நீங்கள் ஏன் எங்களை மதமாற்றம் செய்கிறீர்கள்?

உங்கள் மதச்சட்டப்படி, பிறருக்கு உங்கள் மதக்கொள்கைகளை பரப்ப வேண்டிய தேவையில்லை. ஆனால், கிறிஸ்துவைப் பின்பற்றும் எல்லாருமே அவருடைய மீட்புச் செய்தியைப் பற்றி பறைச்சாற்ற வேண்டுமென்று வேதம் கூறுகிறது. இயேசு கூறினார், “நீங்கள் உலகெங்கும் போய் எல்லா மக்களினத்தாரையும் என் சீடராக்குங்கள் தந்;தை, மகன், தூய ஆவியானவர் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள் நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள்” (மத்.28:19,20). “நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும், அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்யவேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!” (1கொரி.9:16) என்று பவுல் என்னும் இறைத்தூதர் நற்செய்திப் பிரகடனத்தின் முக்கியத்துவத்தை

Top

விளக்குகிறார் “இறைவார்த்தையை அறிவி நேரமும், வாய்ப்பும் கிடைத்;தாலும், கிடைக்காவிட்டாலும், இதை செய்வதில் நீ கருத்தாயிரு கண்டித்துப்பேசு கடிந்துகொள் அறிவுரை கூறு மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு” (2திமொ.4:2) என்று பவுல் கூறுகிறார். நற்செய்தி அறிவிப்பதின் அவசரத்தை உணர்ந்த பேதுரு என்னும் திருத்தூதர், “நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூயமக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள் எனவே, உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி” (1பேது.2:9) என்கிறார். “தூய ஆவி உங்களிடம் வரும்போது, நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று, எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும், உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்” (தி.பணி.1:8) என்று சர்வேஸ்வரன் பரமேறுவதற்கு முன் தன் அன்புச்சீடரிடம் கூறினார். ஆபத்தான சாங்கியங்களும் வேடிக்கையான மூடநம்பிக்கைகளும் மலிந்துபோன பாரதத்தை இயேசுவின் சீர்திருத்தக்

Top

கொள்கையினால் காப்பாற்றியே ஆகவேண்டும். அவர் கூறிய அந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் சீடர்கள் இயேசுவின் அன்பைப் பற்றியும் அவர் தரும் புதுவாழ்வைப் பற்றியும் மக்களிடையே பேசுகிறார்கள். ஒருவர் தனது எண்ணங்கள் பிறருக்கு நன்மை தருமானால் அவற்றை பிறரிடம் பகிர்ந்து கொள்வதில் என்ன தவறிருக்கின்றது? இங்குள்ள விவேகானந்தர் அமெரிக்காவுக்குப் போய் அங்குள்ள ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களை இந்துமத சிலைவழிபாட்டினராக மாற்றினாரே! அதைத் தவறு என்று உங்களால் ஒத்துக்கொள்ள முடியுமா? மூச்சுக்கு மூச்சு "இந்துக்களுக்கு எல்லா கடவுளும் கடவுள் தான் இந்துக்கள் பெருந்தன்மையுடையவர்கள்" என்று கூறும் நீங்கள் விவேகானந்தர் செய்ததை தவறு என்று ஒத்துக்கொள்ள முடியுமா?

Top

## 49. எங்கள் கோயில்களிலும் அற்புதம் நடக்கிறதே !

இதில் வியப்பு என்ன? சாத்தான் கூட ஒளியைச் சார்ந்த தூதனாக நடிக்கிறானே?(1கொரி.11:14).சாத்தானால்கூட அற்புதம் செய்ய முடியும் என்று பைபிள் கூறுகிறது. கீழ்காணும் வேதவசனங்களை கவனமாக வாசியுங்கள்.

அவை அரும் அடையாளங்கள் புரியும் பேய்களின் ஆவிகள் (தி.வெ.16:14).போலி மேசியாக்களும்,போலி இறைவாக்கினர்களும் தோன்றி முடியுமானால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களையே நெறிதவறச்செய்ய பெரும் அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் செய்வார்கள். இதை முன்னதாகவே நான் உங்களுக்கு சொல்லிவிட்டேன் (மத்.24:24,25) என்று இயேசு கூறினார். மேற்கண்ட வசனங்களிலிருந்து பிசாசுகள் கூட அற்புதங்கள் செய்ய முடியுமென்று தெளிவாக அறிகிறோம்.

ஒரு சம்பவத்தை கவனியுங்கள். ஒருநாள் நாங்கள் இறைவேண்டல் செய்யுமிடத்துக்குச் சென்று

Top

கொண்டிருக்கும்போது, குறிசொல்லும் ஆவியை தம்முள் கொண்ட அடிமைப்பெண் ஒருவர் எங்களுக்கு எதிரே வந்தார். அவர் குறிசொல்லி, அதனால் தம்மை அடிமையாக வைத்திருப்பவர்களுக்கு மிகுதியான வருவாய் கிடைக்கச்செய்து வந்தார். அவர் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து, “இவர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள், மீட்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறவர்கள்” என்று உரக்க கூறினார். பல நாட்களாக அவர் இவ்வாறு செய்து வந்தார். பவுல் எரிச்சல் கொண்டு அவர் பக்கம் திரும்பி, “நீ இவரைவிட்டு போகுமாறு இயேசு கிறிஸ்துவின் பெயரால் உனக்குக் கட்டளை இடுகிறேன்” என்று அந்த ஆவியிடம் கூறினார். அந்நேரமே அது அவரைவிட்டு சென்றுவிட்டது (தி.பணி.16:16-18).

குறிசொல்லும் ஆவியை விரட்டியவுடன் போய்விட்டது. தெய்வத்தின் ஆவியைத் துரத்தமுடியுமா? குறி சொல்வதை தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் ஒரு தீயஆவியால் பீடிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதிலிருந்து அது உண்மையாகவே தெய்வ ஆவியல்ல என்பது தெளிவாகிறது.

Top

அது தீயஆவியாக இருந்தாலும், அந்த ஆவி கூறுவதில் சில உண்மையாக இருப்பதால், மக்களும் நம்பி ஏமாந்து விடுகிறார்கள். ஆனால், வானத்தின் கீழே, பூமியின் மேலே எல்லா அதிகாரங்களும் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டு இருந்தபடியால் இன்றும் இயேசுவின் நாமத்தில் துரத்தும்போது, எவ்வளவு பெரிய பிசாசும் அகல்கிறது. ஆதியில் சகல ஆராதனையையும் இறைவன் பெற்றுக் கொண்டிருந்தபோது அவரை ஆராதிக்கும் தூதர்களில் முக்கியமாக இருந்த லூசிபர் என்பவன் அந்த ஆராதனைகளை அபகரிக்க விரும்பினான். அந்நிமிடமே உன்னத நிலைமையிலிருந்து விழுந்து சாத்தானாக மாறினான். அன்றுமுதல் தன்னை வணங்கும் மக்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதிலேயே சாத்தான் குறியாயிருக்கிறான். அதில் அவன் வெற்றியடைய சிலைவழிபாடு செய்யும் இந்தியர்கள் அவனுக்கு பேருதவியாயிருக்கிறார்கள். அப்பாவி மக்களின் மனக்கண்களைக் குருடாக்கி ஆங்காங்கே தெய்வங்கள் என்ற பெயரில் அவர்களுடைய ஆராதனையை உறிஞ்சுகிறான்.

Top

ஆனால், இன்று கோடிக்கணக்கான மக்கள் அவற்றை அடையாளம் கண்டு, அவற்றுடைய கோரப்பிடியிலிருந்து, இயேசுவின் வல்லமையால் விடுதலையாகிக் கொண்டிருக்கிறார்கள். பூசாரிகள், மந்திரவாதிகள், தர்மகர்த்தாக்கள் பலரும் இயேசுவால் மீட்கப் படுகிறார்கள். மதவெறியர்களுக்கு இந்த இரகசியம் தெரியாது.

ஒரு கிறிஸ்தவ ஊழியர் ஓர் இந்து பெண்மணியின் தலையில் கைவைத்து ஜெபித்தார். உடனே அப்பெண்மணிக்குள்ளிருந்த பேய்,“நான் நாகவல்லி என் புற்றுக்கு இவள் பாலூற்றுவதை நிறுத்திவிட்டாள். எனவே, இவள் உயிரை எடுக்கவந்தேன்” என்று உரக்கக் கத்தியது. இவர் பத்திரகாளி, நீலி, நாகவல்லி, சுடலைமாடன், இசக்கி என்ற பெயர்களில் ஆராதனை செய்து வந்த காரணம் என்ன? இவை ஒருசில அற்புதங்களை செய்து இவர்களை ஏமாற்றி இருக்கலாம். இவர்கள் வழிபட்டது உண்மையான தெய்வமாக இருந்தால் தன்னை வழிபட்ட பக்தர்களின் உயிர்களை குடிக்க முற்படுமா? யோசியுங்கள்.

Top

பேய்களால் கூட அற்புதங்களை செய்யமுடியும் என்பதற்கு இன்னுமொரு எடுத்துக்காட்டை கீழே தருகிறேன்.

மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் சென்று ஆண்டவர் இட்ட கட்டளைக்கு இணங்கச் செயல்பட்டனர். ஆரோன் தமது கோலை பார்வோன் மற்றும் அவனுடைய அலுவலர் முன்னிலையில் விட்டெறிந்ததும் அது பாம்பாக மாறியது. பார்வோன் தன் ஞானிகளையும் சூனியக்காரரையும் வரவழைத்தான். எகிப்திய மந்திரவாதிகளாகிய அவர்கள் ஒவ்வொருவனும் தன் கோலை கீழேயிட அவை பாம்புகளாக மாறின. ஆனால், ஆரோனின் கோல் அவர்கள் கோல்களை விழுங்கிப் போட்டது (வி.ப.7:10-12). மேற்கண்ட சம்பவத்தினின்று பிசாசுக்கும் அற்புதங்கள் செய்யும் சக்தியுண்டு என்றும், கடவுளின் சக்தி அதைவிட பெரியது என்றும் அறிகிறோம். ஆனால், பிசாசு அற்புதங்களை செய்தாலும் கடைசியில் தன்னை நம்பி வாழும் ஒவ்வொருவரையும் நரகத்துக்கே கொண்டு செல்வான். யோசித்து விழிப்புணர்வடைவோம். இவராலேயன்றி (இயேசு) வேறு எவராலும் மீட்பில்லை. ஏனென்றால், நாம் மீட்புப் பெறுமாறு

Top

வானத்தின்கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறெந்த பெயரும் கொடுக்கப்படவில்லை (தி.பணி.4:12)

## 50. எங்கள் தெய்வங்கள் எங்களைப் பரலோகம் கொண்டு சேர்க்க முடியாதா?

உங்கள் தெய்வங்களென்று நீங்கள் யாரைக் கூறுகிறீர்கள்? ஒருமுறை ஒரு இந்து சகோதரி என்னிடம் வந்து, “ஐயா, என் கணவர் என்னைவிட்டு வேறொரு பெண்ணோடு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்” என்று அழுதுகொண்டே கூறினார். உடனே, “உங்கள் பெயர் என்ன? என்றேன். அவர், “தெய்வானை” என்று கூறினார். “நீங்கள் யாரை தெய்வமாக வழிபடுகிறீர்கள் அம்மா?” என்று கேட்டேன். உடனே அவர் இரண்டு மனைவிகளையுடைய ஒரு கடவுளுடைய பெயரை (முருகன்) கூறினார். “நீங்கள் வழிபடும் இந்த தெய்வத்திற்கு எத்தனை மனைவிகள்” என்று கேட்டேன். “இரண்டு” என்று பவ்வியமாக பதிலளித்தார். உடனே நான் அவரிடம், “அம்மா,

Top

நான் தெரியாமல் தான் கேட்கிறேன், நீங்கள் வழிபடும் கடவுளுக்கு மட்டும் இரண்டு மனைவிகள் இருக்கலாம், உங்கள் கணவனுக்கு இருக்கக்கூடாதா?" என்று கேட்டேன். உடனே அந்த அம்மா, "அப்படி என்றால் என் கணவர் செய்வது சரியென்று சொல்கிறீர்களா?" என்று கேட்டார். நான், "இல்லை தாயே உங்கள் கணவர் செய்வது சரியென்று நான் நியாயப்படுத்த வரவில்லை. ஆனால், உங்கள் கணவர் செய்வது தவறானால், உங்கள் கடவுள் செய்வதும் தவறென்று ஒத்துக்கொள்ள வேண்டும். அல்லது உங்கள் கடவுள் செய்தது சரியானால் உங்கள் கணவன் செய்வதும் சரி என்று ஒத்துக்கொள்ள வேண்டும்" என்று கூறினேன். உடனே அந்த அம்மா, "என்ன சொல்றீங்க" என்று கேட்டார்கள். நான் சொன்னேன், "அம்மா, உண்மையாகவே முருகக் கடவுளுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள் என்று நம்புகிறீர்களா? அப்படியே அது உண்மையானால் அந்த கேவலமான வாழ்வியலை தமிழ்க் கலாச்சாரம் என்று எப்படி ஏற்றுக்கொண்டு தமிழ்கடவுளாக மனப்பூர்வமாக வணங்க முடியும்?" என்று கேட்டேன். அப்பொழுது அந்த தாய், "எல்லோரும் கும்பிடுறாங்க

Top

அதனால் நானும் கும்பிடுறேனுங்க” என்று புன்சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

மனிதன் தன் வாழ்வில் தவறுகள் செய்வது இயல்பு. ஆனால், அதுபோல கடவுளும் தவறுகள் செய்தால், மனிதனுக்கும் கடவுளுக்கும் என்ன வேறுபாடு? கடவுளின் வாழ்க்கை தரம், மனிதனுடைய வாழ்க்கைத் தரத்தை விட உயர்வாக இருக்க வேண்டாமா!

ஒருநாள் ஒரு பிராமண பெண்மணியிடம், “மாமி, கங்கை கரைத்தோட்டத்து பொம்முனாட்டிங்க குளிச்சுண்டேயிருக்கச்ச, அவா புடவையை எடுத்துண்டு, பக்கத்தில இருக்கிற மரத்தில உக்காந்து கண்ண பரமாத்மா வேடிக்கை பாத்துண்டிருந்தார்னு புராணம் சொல்றது. சாக்ஷாத் பகவான் இப்படி எல்லாம் பண்ணுவாரா? அப்படி யாராச்சும் பண்ணினா அவ்வாள பகவான்னு சொல்ல முடியுமா? சத்து யோஜன பண்ணிப் பாருங்கோ” என்று கேட்டேன். உடனே மாமி, “நேக்கு சின்ன வயசில இருந்தே சந்தேகம் தான். ஆனா, இதை எல்லாம்

Top

மாமாகிட்ட சொன்னா என்னை divorce பண்ணிடுவாரோல்லியோ என்றார்.

உங்கள் தங்கை, அக்கா அல்லது அம்மா இவர்களில் யாராவது ஒருவர் ஓர் ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். திடீரென்று ஒருவன் வந்து அப்பெண்மணி ஆற்றங்கரையில் வைத்திருந்த துணிகளை எடுத்துக்கொண்டு அருகிலிருக்கும் மரத்தின்மீது ஏறியிருந்து, ஆற்றில் அரைகுறை ஆடையோடு குளித்துக்கொண்டிருக்கும் நபரை காமக்கண்ணோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால், அப்படிப்பட்ட கேவலமான பண்பாடுடைய நபரை நீங்கள் யாரென்று நினைப்பீர்கள்? சமுதாயம் அப்படிப்பட்ட ஒருவரை ஒரு முன்மாதிரி மனிதனாக ஏற்றுக்கொள்ளுமா? நிச்சயமாக நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். கண்ணபரமாத்மா அப்படி வாழ்ந்திருப்பாரா? கங்கைக் கரைத்தோட்டம், கன்னிப்பெண்கள் கூட்டம், கண்ணன் நடுவினிலே என்று பாடி கண்ண பரமாத்மாவை கேவலப்படுத்துகிறார்கள். இதை அறிந்தும் இது

Top

தவறென்று நீங்கள் எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்கிறீர்களே! நிஜமாகவே கண்ணபிரான் அவ்வளவு அசிங்கமான லீலைகளில் ஈடுபட்டிருப்பாரா? அவர் அப்படித்தான் வாழ்ந்திருப்பாரானால் அவரை பரமாத்மா என்று கூறமுடியுமா? 'கண்ணன் வெண்ணை திருடினார்' என்று கூச்சமில்லாமல் கூறுகிறார்களே. நிஜமாகவே கண்ணன் வெண்ணெய் திருடியிருப்பாரா? அப்படியே அவர் திருடியிருந்தால், அவரை கடவுளென்று எப்படி அழைக்கமுடியும்? தயவுசெய்து இக்கேள்விக்கு பதில் கூறுங்கள். இதை தட்டிக் கேட்காமல் கண்மூடித்தனமாக நம்புகிறீர்களே! அப்படிப்பட்ட ஒருவரை கடவுள் என்று நீங்கள் உங்கள் பெற்றோரின் பரம்பரை மதநம்பிக்கையால் நம்புகிறீர்கள்.

ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்' என்று சந்தேகத்தோடு வாழ்ந்தது போதும். தனிமனிதனாய் நின்று எது சரி, எது தவறு என்று யோசிப்பதல்லவா பகுத்தறிவு! 'கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு' என்ற அறிஞர் அண்ணாவின் அறிவுரைப்படி யோசியுங்கள்.

பிள்ளையார் முருகரை ஏமாற்றினார், சிவபெருமான்

Top

விஷ்ணுவுடன் தவறு செய்தார், இராமர் மறைந்திருந்து
வாலியைக் கொன்றார் என்றெல்லாம் கூறி கடவுளை
அசிங்கப்படுத்துவது நியாயமா?
கடவுளுக்கு பெண்டேது பிள்ளையேது?
காமகுணலீலை முதலானதேது?
கடவுளுக்கு பகடிச்சீட்டு தாயமேது?
காடுகளில் வேட்டைக்குத் திரிவதேது?
கடவுளுக்கு காமிகளின் தொழிலில்லை
காருண்யத் தொழிலொன்றே கடவுள் பாரம்
என்று ஞானவெட்டியான் என்னும் தமிழ்ச்சித்தர் பாடினார்.
கடவுள் களவு, விபச்சாரம், பொய், ஏமாற்றல், வேசித்தனம்,
காமவிகாரம் என்னும் கீழ்தரமான பாவங்களை செய்வாரா?
நீங்கள் யோசித்துப் பாருங்கள். இந்நிலையில், உங்கள்
கடவுள்கள் உங்களை சொர்க்கத்துக்கு கொண்டு சேர்க்கும்
என்பது காமெடியாகத் தெரியவில்லையா?

Top

**51.** எங்களுக்கு ஆயிரக்கணக்கில் தெய்வங்கள் உண்டு அவர்களாலேயே செய்யமுடியாத அற்புதத்தையா இயேசு தனியாக செய்துவிடுவார்?

உங்களுக்கு பலகோடி தெய்வங்கள் இருந்தாலும், அவைகளை உண்மையாக வணங்கி அற்புதம் பெறமுடியாமல் கடைசியாக இயேசுவை நம்பி அற்புதங்ளைப் பெற்ற கோடிக்கணக்கான மக்களுண்டு. அதற்கு நாங்களும் சாட்சிகளாய் இருக்கிறோம். அண்மையில் ஒரு பெண்ணிடமிருந்த பேயை விரட்டும்படி ஒரு அருட்பணியாளர் பிரார்த்தனை செய்தார். அந்த பிசாசு, “நான்தான் இவளுக்குள் குடியிருந்து இவளுடைய கருவை அழித்துக் கொண்டிருக்கிறேன்” என்று கூறியது. “உன் பெயரென்ன?” என்று கேட்டார். உடனே அது இந்துக்கள் வணங்கும் ஒரு கடவுளின் பெயரை (பத்திரகாளி) சொன்னது. ஒருவர் தன் எதிரி ஒருவரை அழிக்க நினைக்கும்போது, ஒரு மந்திரவாதியிடம் சென்று பணம் கொடுத்து பில்லிசூனியம் செய்கிறார். அந்த மந்திரவாதி இந்துக்கடவுள்களை’ தான் ஏவிவிட்டு அந்த குடும்பத்தை கெடுக்கிறான். பாதிக்கப்பட்ட நபர்

Top

ஒரு கிறிஸ்தவ போதகரிடம் வரும்போது, அவர் அவருக்காக பிரார்த்தனை செய்கிறார். உடனே பிசாசு ‘சுடலைமாடன்’ வந்திருக்கிறேன், ‘இசக்கிஅம்மன்’ வந்திருக்கிறேன், இந்த உயிரை எடுக்காமல் போகமாட்டேன்’ என்றுகூறி அலைக்கழித்து அந்த உடலைவிட்டு வெளியேறுவதை சர்வ சாதாரணமாகப் பார்க்கிறோம். பிசாசினால் பாதிக்கப்பட்டவர் யாராவது, “நான் இயேசு வந்திருக்கிறேன், இந்த உயிரை எடுக்காமல் போகமாட்டேன்” என்று எங்காவது கூறியிருப்பார்களா? அவர் மனிதர்களுடைய உயிரை வாங்க வந்தவர் அல்ல மனிதர்களைக் காப்பாற்ற தன் உயிரையே தந்த தியாகராஜன் அல்லவா? உண்மையான கடவுளை பக்தன் ஏவிவிட்டு பிறரை அழிக்க முடியுமா? இயேசுவின் நாமத்தில் பிரார்த்தனை செய்யும்போது ஆரோக்கியம், செழிப்பு, தொழில்வளர்ச்சி, நம்பிக்கை, நிம்மதி, புத்துணர்ச்சி, தைரியம், உற்சாகம் வரும். ஆனால், நீங்கள் கடவுள்கள் என்று சொல்பவர்கள் ஒருவனுடைய உடலுக்குள் புகுந்தால் அது எலும்புருக்கியாக அல்லவா மாறிவிடுகிறது! இறைவன் கருணை நிறைந்தவன் தம்மை நம்புவோருக்கு அருள் பாலிப்பவன். எல்லாவற்றையும் இழந்தவர்கூட இயேசுவை

நம்பினால் எதையுமே இழக்காதவர் போல நிம்மதியோடு வாழமுடியும். இதை வாசிக்கும் சிலருக்கு என்மீது கொஞ்சம் கோபம் வரலாம். ஆனால், உண்மை எது என்பதை தயவுசெய்து கொஞ்சம் நிதானித்து அறியுங்கள். உங்கள் மதநம்பிக்கையை ஒருமுறை மறுபரிசீலனை செய்யுங்கள். சத்தியத்தை மட்டும் நம்புங்கள். உங்கள் மனசாட்சி சொல்வதற்கு கீழ்படியுங்கள். மொத்த உலக மக்களையும் பாவத்திற்குள், குற்ற மனசாட்சிக்குள் மூழ்கடித்து வைத்திருக்கிறான் சாத்தான். அவனுடைய கோரப் பிடியிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வலிமை இயேசுவிடம் மட்டும் தானுண்டு. எத்தனை கோடி தீயசக்திகள் படையெடுத்து வந்தாலும் தன்னந்தனியாக நிற்கும் இயேசுவின் தெய்வீக சக்திக்குமுன் நிற்கமுடியாது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

ஒருமுறை 6000 பிசாசுகளால் ஒரேநேரத்தில் பாதிக்கப்பட்டிருந்த ஒரு மனிதனை இயேசு சந்தித்து ஓரே வார்த்தையால் அத்தனை பிசாசுகளையும் ஒரேயடியாக துரத்தினார் (மாற்.5:1-13). இவ்வுலகின் எல்லா அதிகாரங்களுக்கும் மேலான அதிகாரம்

Top

இயேசுவின் அதிகாரம் என்று வேதம் தெளிவாக்குகிறது (பிலி.2:11).

### 52. அன்னையும் பிதாவும் தெய்வங்கள் தானே. அவர்களை வணங்கினால் போதாதா?

ஒரு ஆதரவற்ற குழந்தைக்கு ஒவ்வொரு மாதமும் எவ்வளவு செலவாகுமோ, அவ்வளவு பணத்தையும் வெளிநாட்டிலுள்ள தயாள குணமுள்ள ஒருவர் மாதம்தோறும் அனுப்புகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த பணத்தை வாங்கி, காப்பக முதல்வர் இந்த குழந்தைக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுத்து பாராமரிக்கிறார். அந்த குழந்தையின் பார்வையில் ஆசிரம முதல்வர்தான் முக்கியம். அந்த குழந்தைக்கு அவர்தான் ஏறத்தாழ தாயும் தந்தையும். தன்னுடைய உயர்வுக்கு அடிப்படையில் காரணமாயிருந்தவர் யாரென்று தெரியாமல் அந்த குழந்தை வளர்ந்து, வாலிபனாகி, தகப்பனாகி, தாத்தாவாகி விட்டது. தன்னை நேசித்து பணம் அனுப்பும் நபருடைய

Top

சத்தத்தை கேட்காமல், அவருடைய முகத்தை பார்க்காமலேயே 90 வருடங்கள் வாழ்ந்தபின், இந்த ஆசிரம முதல்வர்தான் என் முழு அன்புக்கும் தகுதியான தெய்வம் என்று இவர் கூறினால் நீங்கள் எப்படி உணர்வீர்கள்? கடைசிவரை தன்மீது அக்கரை வைத்திருந்த அந்த அன்பு நெஞ்சத்தை பார்க்கவேயில்லை. அவரை வாழவைத்த வெளிநாட்டுக் காரனுடைய பாசம் மறக்கப்படலாமா? நம் பார்வையில் நம் தாயும் தந்தையும் முக்கியமானவர்கள் தான். ஆனால், நம் தாயையும் தந்தையையும் படைத்த அனைத்தையும் அறிந்த அகிலாண்டேஸ்வரன் பார்வையில் யார் முக்கியமானவரோ அவரே ஆராதனைக்கு தகுதியானவர்.

உடலில் நம் கண்களுக்கு தெரியும் நிலையிலிருக்கும் உடல் உறுப்புகள் நம் பார்வைக்கு முக்கியமானவையாக தெரியலாம். காலில் அடிபட்டு இரத்தம் வடிந்தால் ஆபத்து என்று உடனேயே காயத்தில் மருந்து வைத்து கட்டு போடுகிறோம். ஆனால், இதயகோளாறு, இரத்தப் புற்றுநோய் வந்தால் அதை கண்டுபிடிப்பது நமக்கு அவ்வளவு சுலபமல்ல. அதை கண்டு

Top

கொள்ளாமலேயே வாழ்வோம். ஏனென்றால், எந்த பிரச்சனை எங்கே வந்திருக்கிறது என்று கண்டுபிடிக்கும் திறன் நமக்கில்லை.திடீரென்று வயிற்றுவலி வந்தால் சிறுநீரகக் கோளாறு என்றோ, குடல்புண் என்றோ நாம் யூகித்தாலும் அதன் உண்மையான நிலையை அறிய மருத்துவமனைக்கு செல்கிறோம். அங்கு மருத்துவர் கூறுவதை கருத்தாய் கவனித்து மருத்துவத்திற்கு நம் உடலை ஒப்படைக்கிறோம். அதுபோல தாயும் தந்தையும் நம் கண்ணுக்கும் உணர்வுகளுக்கும் முக்கியமானவர்களாக இருந்தாலும், நம்மைப் படைத்து பராமரிக்கும் தெய்வத்தை, நம் கண்களுக்கு தெரியாத அந்த அன்பு ஆவியானவரை நாம் மறக்கமுடியாது.

நாம் நம் தாயின் வயிற்றில் இருக்கும்போது நம்மை பெயர் சொல்லி அழைத்தவர் தெய்வம். தனது தன்மையும், வடிவமும் உடையவனாக மனிதனை உருவாக்கினவர் கடவுள். நமது தலையில் எத்தனை முடியிருக்கின்றதோ அந்த எண்ணிக்கையை கடவுள் தன் ஞாபகத்தில் வைத்திருக்கிறார். நம் பாதம் கல்லில் இடறாதபடிக்கு ஈஸ்வரன் தன் தூதர்களை அனுப்பி

பாதுகாக்கிறார். நாம் ஒரு தவறு செய்யும்போது அதைத் தவறென்று சுட்டிக்காட்டுவது தாயுள்ளம் கொண்ட அந்த பரமேஸ்வரன்தான். நாம் பெற்ற பிள்ளைகளை அன்புடன் பராமரிக்கவேண்டும் என்னும் அன்புள்ளத்தை தந்தவர் கடவுள்தான். நம்மைப் பற்றி நமக்கு இருக்கும் அக்கரையைவிட அதிகமாக அக்கரைப்படும் ஒருயிர்தான் தெய்வம். நாம் நம் கண்களால் பார்க்காவிட்டாலும் நம்மை கண்காணிக்கும் ஆன்மீக சக்தியே தெய்வம்.

சிறுவயது முதலே உங்கள் பெற்றோர் உங்களுக்கு அன்புகாட்டி உணவூட்டி, உடையுடுத்தி, சீராட்டி, பாராட்டி, பராமரித்து வளர்த்ததால் உங்களுக்கு தெரிந்தவரையில் அவர்களது அன்பே பிரதானமாக தெரியலாம். ஆனால், அவர்களுடைய மரணத்திற்கு பிறகும் உங்களை பாதுகாக்கும் உறவே நிரந்தர உறவு. ஒருவரிடம் மிகவும் பாசமாயிருப்பவர் திடீரென்று அவரை வெறுத்துவிட்டால், மன வேதனையடைந்து கடைசியாக தற்கொலையே செய்துவிடுகிறார். ஆனால், உலகிலுள்ள எல்லா உறவுகளையும்விட அதிகமாக அன்புக்காட்டும் கடவுளின்

Top

நிதர்சனமான அன்பை நீங்கள் கண்டுபிடித்துவிட்டால், தைரியமான மனதோடு எத்தனை பெரிய எதிர்காற்றையும் சமாளிக்கும் ஆற்றலை பெற்றுவிடுவீர்கள்.
ஒரு மனிதனுடைய எதிர்காலத்தை தைரியமாக இரும்பு இதயத்தோடு சந்திக்கத் தேவையானது அவனை சூழுந்திருக்கும் மக்களிடமிருந்து கிடைக்கும் அன்புதான். ஆனால், யார் என்னை வெறுத்தாலும் என் தாய் என்னை மறக்கமாட்டார் என்னும் உணர்வோடு நம்பி வாழ்ந்து கொண்டிருந்த அநேகர் இன்று தாயின் அன்பையே ஒரு மாயை என்று வாழ்வின் ஒரு காலக்கட்டத்தில் உணர்ந்துவிட்டார்கள். ஆனால், அவர்களுக்கும் ஒரு நற்செய்தியாக இயேசு காட்சி தருகிறார்.

உன் தகப்பனும், தாயும் உன்னைக் கைவிட்டாலும் கர்த்தர் உன்னை கைவிடமாட்டார் (தி.பா.27:10) என்று பரிசுத்த வேதம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. பால் குடிக்கும் மகனைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன் (எசா.49:15) என்று கடவுள் வாக்குறுதி

Top

கூறுகிறார். தன் குழந்தையைப் பற்றி தாய்க்கு தெரிவதைவிட கடவுள் அதிகமாக தெரிந்திருக்கிறார்.

### **53.** எனக்கு கிறிஸ்துவைப்பற்றி சிந்திக்க நேரமில்லை. படிக்க வேண்டும்

ஒரு தாய் எவ்வளவுதான் சுறுசுறுப்பாக இருந்தாலும் தன் குழந்தைக்குப் பால் கொடுக்க அவள் மறப்பதில்லை. ஒரு அலுவலர் எவ்வளவுதான் அவசரமாக அலுவலகத்திற்கு போக வேண்டியதாக இருந்தாலும் பல் துலக்காமல் போவதில்லை. நீங்கள் எவ்வளவுதான் படிக்க முயற்சி செய்தாலும் உங்களை ஜெயிக்கவைப்பது கடவுள்தான். படிக்க நினைத்தும் படிப்பதற்குத் தேவையான பொருளாதாரம் இல்லாததால் படிப்பை பாதியில் விட்டவர் பலருண்டு. படித்து முடித்தபின் வேலையின்றி திண்டாடிக் கொண்டிருப்போர் பலருண்டு. வேலையிருந்தாலும் அவ்வேலையில் சரியான சம்பளமில்லாமல் திருப்தியின்றி அவதியுறுவோர் பலருண்டு. படித்து நல்ல

Top

சம்பளத்தில் வேலை கிடைத்தாலும், திருமணம் ஆகவில்லையே என்று பலர் சோகமாயிருக்கிறார்கள். திருமணமானாலும் வாழ்க்கைத்துணை சரியாக அமையவில்;லையே என்று கூறுவோர் பலருண்டு. நல்ல இடத்தில் திருமணமானாலும், குழந்தையில்லையே எனும் ஏமாற்றத்தில் காலம்தள்ளும் பலருண்டு, குழந்தையைப் பெற்றெடுத்தாலும், அந்த குழந்தை கீழ்படியவில்லையே, நோயோடு இருக்கிறதே என்று அலங்கலாய்க்கும் பலருண்டு. கணவன் அன்போடிருந்தாலும், கொஞ்சம்கூட அன்பில்லாமல் கொடுமைப்படுத்தும் மாமனார், மாமியாரிடம் சிக்கிக் கொண்ட பலருண்டு. இப்படி இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகும். ஆனால், வாழ்வில் எல்லா கட்டங்களிலும் எது இருந்தாலும், இல்லாமலிருந்தாலும் மன அமைதியோடு வாழ உங்களுக்கு இறையருள் தேவை. கடவுளில்லாத வாழ்வு அமைதியில்லாத வாழ்வு. எனவே, எவ்வளவுதான் அவசரமான வேலைகள் இருந்தாலும் படைத்த பரமாத்மாவை மறந்துவிடாமல் நன்றியுணர்வோடு வாழ்வது மேன்மையானது. ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு

Top

கிடைக்கும் பயனென்ன? அவர்தம் வாழ்வுக்கு ஈடாக எதைக்கொடுப்பார்? (மாற்.8:36,37) என்று வேதநாயகன் இயேசுகிறிஸ்து கேட்கிறார்.

படகோட்டி ஒருவர் தன் படகின் மூலம் ஆற்றின் ஒருகரையிலிருந்து மறுகரைவரை பயணிகளை கொண்டுபோய்விட்டு பணம் சம்பாதித்து வந்தார். ஒருநாள் கல்விமான் ஒருவர் இப்படகின் மூலம் மறுகரைக்கு போக விரும்பி அப்படகிலேறி உட்கார்ந்தார். படகு கொஞ்சதூரம் போனபின் இவர் படகோட்டியிடம், “உமக்கு தர்க்கசாஸ்திரம் தெரியுமா?” என்றார். அதற்கு படகோட்டி, “தெரியாது ஐயா” என்றார். “அப்படியானால் உம் வாழ்க்;கையில் கால்பகுதியை வீணடித்துவிட்டீரே!” என்று கல்விமான் கூறினார். படகு இன்னும் கொஞ்சம் தூரம் நகர்ந்தபின் கல்விமான் படகோட்டியிடம், “உமக்கு கணிதசாஸ்திரம் தெரியுமா?” என்று கேட்டார். அதற்கு அந்த படகோட்டி மனவேதனையுடன், “தெரியாது ஐயா” என்றார். உடனே கல்விமான் படகோட்டியிடம், “உம் வாழ்வில் பாதியை இழந்துவிட்டீரே!”

Top

என்றார். அப்படி அவர்கள் பயணம் செய்து கொண்டிருக்கும்போது, திடீரென்று ஆற்றில் நீர்சுழற்சி உண்டானது. படகு கவிழும் நிலையில் படகோட்டி அந்த கல்விமானைப் பார்த்து, “ஐயா உங்களுக்கு நீச்சல்சாஸ்திரம் தெரியுமா?” என்று கேட்டான். அதற்கு கல்விமான், “தெரியாதே” என்றார். உடனே படகோட்டி, “உம் முழுவாழ்வையும் இழந்துவிட்டீரே” என்று கூறினார். “என்ன சொல்லுகிறீர்?” என்று கல்விமான் படகோட்டியிடம் கேட்டுக்கொண்டிருக்கும் போதே படகு கவிழ்ந்து. அறிஞருக்கு நீச்சல் தெரியாததால் அவர் நீரில் மூழ்கி இறந்துபோனார். ஆனால், படகோட்டிக்கு நீச்சல் தெரிந்திருந்ததால் நீந்தி கரைசேர்ந்தான்.

இறையருள் என்னும் நீச்சல்சாஸ்திரம் தெரியாமல் உலகத்தின் சுழற்காற்றுகளை சமாளிக்க முடியாது. கல்விமான்கள் பலருக்கு எப்படி வாழவேண்டுமென்று தெரியாமல் தற்கொலை செய்துகொண்ட விபரம் உங்களுக்கு தெரியுமே! வாழ்வில் எவ்வளவு பெரிய பல்கலைக் கழகங்களில், எத்தனை வருடங்கள் கற்றிருந்தாலும், நிம்மதியாக வாழ்வது எப்படி என்னும்

Top

நுணுக்கமான கலையை கற்காவிட்டால் எல்லாமே வெறும் குப்பைதான். முதலாவது இறையருளை நாடினால் மீதியுள்ள எல்லா செல்வங்களும் ஆசிகளும் உங்களைத் தொடர்ந்து வரும்.

**54.** நான் கடவுளை நம்புகிறேன். ஆனால், எந்த கடவுளையும் பின்பற்றவில்லை.

கடவுளை அறியாமலிருக்கும் நிலையில் அவரை பின்பற்றாமல் இருப்பது தவறல்ல. ஆனால், கடவுள் என்று ஒருவருண்டு, இயேசுதான் அந்த உலக இரட்சகரென்று மனதார அறிந்தபின், தான் பாவியாக இருப்பது தெரிந்தும், அந்த பாவ நிலைமையிலிருந்து விடுதலையடைய வேண்டுமென்னும் உணர்வில்லாமல் அவரைப் பின்பற்றாமல் இருப்பது தவறு. எந்த கடவுளையும் என்று கூறுகிறீர்கள். ஆனால், பல கடவுள்கள் இல்லையே, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் திருமூலருடைய திருவாக்கை வேதாகமம் முழுமையாக ஒத்துக்கொள்கிறது. கடவுளை பின்பற்றும்போது, இந்த உலகில்

Top

எந்த பிரச்சனைகள் வந்தாலும், நிம்மதியாக வாழலாம். இயேசு தன் சீடர்களைப் பார்த்து, "அமைதியை (சாந்தி) உங்களுக்கு விட்டுச் செல்லுகிறேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்கு தரும் அமைதி, உலகம் தரும் அமைதி போன்றதல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்" (யோவா.14:27) என்று கூறினார். இதனால்தான் இயேசுவை சாந்தீஷ்வரன் (சமாதானத்தின் தேவன்) என்று கூறுகிறோம். பிறந்தது முதல், இறப்பது வரை பலவிதமான வேதனைகள், ஏமாற்றங்கள், எதிர்ப்புக்கள், வெறுப்புக்கள், மிரட்டல்கள், வெறுமைகள் பதட்டங்கள் வழியாகத்தான் மனிதன் கடந்து செல்கிறான். ஆனால், எந்த நிலைமையிலும், இயேசு நம்மோடிருந்தால் ஒரு மனஅமைதி (சாந்தி) நம் உள்ளத்தை எப்போதும் பற்றிக்கொண்டிருக்கும். இதுதான் பரமானந்தம், நித்யானந்தம், பேரானந்தம்.

ஜாதி, மதம், இனம், கட்சி, மொழி எதையும் பார்க்காமல் இயேசுவை இன்றே பின்பற்ற ஆரம்பியுங்கள். உங்களால் இதுவரை விடமுடியாதிருக்கும் பாவ பழக்கவழக்கங்களிலிருந்து

உங்களுக்கு விடுதலை கிடைக்கும். முறிந்து போன உறவுகள் ஒன்றாகும். பழைய பாவ வாழ்க்கையால் உருவான குற்ற மனசாட்சி மறையும். ஒரே ஒரு வாழ்க்கைதான் ஒரு மனிதனுக்கு உண்டு. அதை ஏன் அர்த்தம் இல்லாமல் வீணடிக்க வேண்டும்? மனிதன் எப்படி முழுமையாக வாழ வேண்டும் என்று கற்றுக்கொடுத்த சத்குருவே இயேசு தானே! இராமர் கோயிலை முஸ்லீம்கள் இடிப்பதும், பாபர் மசூதியை இந்துக்கள் இடிப்பதும் ஆன்மீகமாகாது. அது மதத்தீவிரவாதம். சன்மார்க்க, சமரச, சுத்த, சுவிசேஷ, தெய்வீக ஞானஒளி மார்க்கத்தை தெரிந்தெடுங்கள். பரமாத்மா உங்களை ஆசீர்வதிப்பார்.

**55.** நீங்கள் எங்களுடைய கோயிலுக்கு வந்தால் நாங்களும் உங்கள் கோயிலுக்கு வருகிறோம்!

உங்கள் கோயிலுக்கு என்னை அழைக்கிறீர்களே இந்துக்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்னும் பலகையை என்ன செய்ய போகிறீர்கள். பிரபல பாடகர் யேசு தாஸ் ‘புரட்சி செய்வதாக’

Top

நினைத்து சபரிமலை மற்றும் குருவாயூரப்பன் கோயிலில் நுழைய முயன்றபோது அவரையே அனுமதிக்கவில்லையே!

இந்திராகாந்தியின் கணவர் பெரோஸ்காந்தி இந்து அல்லாததால், அவரை பூரி ஜெகநாதர் கோயிலில் நுழைய அனுமதிக்கவில்லை. மீரா ஜாஸ்மின் என்னும் நடிகை, கேரளாவிலுள்ள ராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு போய் வெளியே வந்தவுடன் பல்லாயிரக்கணக்கான ரூபாய் அபராதம் விதித்திருக்கிறார்கள். ராஜிவ்காந்தியும், சோனியாகாந்தியும் சேர்ந்து திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குள் நுழைய முயன்றபோது ராஜிவ் காந்தியை உள்ளே அனுமதித்தார்கள் ஆனால், சோனியாகாந்தி 'கிறிஸ்தவர்' என்ற காரணத்தால் அவரை உள்ளே விட மறுத்து விட்டார்கள். திருவனந்தபுரம் அனந்த பத்மநாபர் கோயிலுக்கு ஜெயில்சிங் என்ற அப்போதைய கவர்னர் நுழைய முயன்றபோது அவரை உள்ளே போகவிடவில்லை. தற்போதைய இந்து மதத்திலுள்ள அநியாயங்கள் தலைக்குமேல் போய்விட்டதால் கோடிக்கணக்கான இந்து சகோதரர்கள் உண்மையான தெய்வீக பேரொளியாம் இயேசுவிடம் தங்கள் வாழ்க்கையை

Top

ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார்கள். புரையோடிப் போன மூடநம்பிக்கைகளையும், முடைநாற்றமெடுக்கும் சாங்கியங் களையும், ஆபத்தான பாரம்பரியங்களையும் விட்டுவிட்டு நீங்கள் உண்மையை தழுவிக் கொள்ளாமல், என்னையும் இருளுக்குள் அடைக்கப் பார்க்கிறீர்களே! இது உங்களுக்கே அநியாயமாகத் தெரியவில்லையா?

இரவு 12 மணிக்கு, கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனை ஸ்தலத்துக்கு போகப் பயப்படமாட்டார்கள். ஆனால், இந்துக்கள் தாங்கள் கடவுள்கள் என்று கூறும் சிலைகளை பார்க்க நடுஇரவில் போகமுடியுமா? இதை வாசிக்கும்போதே உங்களுக்கு பயமாக இருக்கிறது அல்லவா? வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும்போது, ஒரு தடவைக்கு பலதடவை சோதித்துப் பார்க்கிறீர்கள். ஆன்மீக காரியத்தில் மட்டும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்கிறீர்களே!

இந்துமத பக்தர்கள், பாபர்மசூதியை இடித்தார்கள். ஆயிரக் கணக்கான கிறிஸ்தவ ஆலயங்களை கொளுத்தினார்கள். அண்மையில் ஒரிசாவிலுள்ள கந்தமால் மாவட்டத்தில் நடந்த ஈவு

Top

இரக்கமற்ற மதவெறியாட்டத்தின் விளைவுகள் என்னவென்று உங்களுக்கு விலாவாரியாகத் தெரியுமே! இந்த நிலையிலிருக்கும் மனிதநேயமற்ற மத வெறியாளர்களோடு, நாங்கள் கைகோர்த்து நிற்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பது மனசாட்சியுள்ள உங்களுக்கு அநியாயமாகத் தெரியவில்லையா? இந்துக்களால் எத்தனை கன்னியாஸ்திரீகள் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ளனர். எத்தனை அப்பாவிக் கிறிஸ்தவர்களுடைய வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன!யோசித்துப் பாருங்கள். அவர்களிடம் கேட்டால், இராமர் அம்பால் கொன்றார். நாங்கள் தீக்கொளுத்திக் கொல்கிறோம், அவ்வளவுத்தான் வித்தியாசமென்று மெத்தனமாக கூறுகின்றனர். இந்த கொடுமைவாதிகள் பின்பற்றும் மிருகத்தனத்தை பின்பற்ற நான் ஆறறிவற்ற விலங்கினமா என்ன? திருடனிடம், “நீ ஏன் திருடுகிறாய், இது உனக்கு அசிங்கமாகத் தெரியவில்லையா?” என்று கேட்டால், அவன், “அந்த கடவுளே வெண்ணை திருடியிருக்கிறார். நான் திருடினால் மட்டும் ஏன் தவறென்று குற்றம் சாட்டுகிறீர்கள்?” என்று கேட்கிறான். உன் மனைவி உயிரோடிருக்கும்போது, வேறொரு பெண்ணோடு சகவாசம்

Top

வைத்திருப்பது அநியாயமல்லவா? என்று கேட்டால், “அந்த பரமாத்மாவே இஷ்டத்துக்கு லீலை பண்ணிருக்கும்போது, என்னை ஏன் கேள்விகேட்டு துன்புறுத்துகிறீர்கள்?”என்று நொந்து கொள்கிறான்.

இப்படிப்பட்ட குற்றவாளிகளுக்கு அறிவுரை கூறி, நாட்டின் நற்குடிமக்களாக வாழவைக்க நீங்கள் ஆசைப்படுவீர்களானால், கட்டுக்கதைகளையும், புராணப்பொய்களையும் விட்டு வெளியேறுங்கள். மதவெறி இல்லாமல் தெளிந்த சிந்தையோடு,நாடு முன்னேறவேண்டும் என்னும்முற்போக்குக் கொள்கையை பின்பற்ற தைரியமாய் வெளியே வாருங்கள். சந்தனமரம் திருடிய வீரப்பனை ‘திருடன்’என்று கொன்று விட்டார்கள். ஆனால், வெண்ணை திருடியவரை தெய்வமாக ஆராதனை செய்கிறார்கள். இது நியாயமென்று கூறப்போகிறீர்களா?

“அசத்தோமா சத்கமய; தமஸ்ஸோமா ஜியோதிர்கமய; மிருத்தியோர்மா அம்ருதம்கமய;” என்று பிருகதாரண்யக உபநிஷத்து முழங்குகிறது. ‘அசத்யா’ என்றால் பொய் என்றும்

Top

'சத்யா' என்றால் சத்தியமென்றும் அர்த்தம். இயேசுவே தன் சீடர்களைப் பார்த்து, "நானே சத்தியம்" (யோவா.14:6) என்று உறுதியாக கூறினார். இயேசுவைத் தவிர இவ்வுலகில் வந்த வேறெந்த மாமனிதர்களோ, அவதாரங்கள் என்று அழைக்கப்படுபவர்களோ இப்படி ஒரு அறிக்கையை கூறவில்லை. என் மூலமாக அல்லாமல் வேறெந்த வழியாலும் பரப்பிரம்மத்தை அடைய முடியாது (யோவா.14:6) என்று இயேசு அறுதியிட்டு கூறினார். வேறு யாருமே இப்படி ஒரு கூற்றை கூறி நான் கேள்விப்பட்டதில்லை. இயேசுவே சத்தீஸ்வரன்.

தமஸ்', என்றால் இருளென்றும்ஜோதி',என்றால் ஒளியென்றும் அர்த்தம். இயேசுதான் இந்த மொத்த உலகத்தையும் வழி நடத்தும் வலிமையுடைய ஜோத்தீஸ்வரன்.அவர்தான் இருளில் கிடக்கும் மக்களை ஒளிக்குள் கொண்டுவரும் அருட்பெரும் ஜோதி என்பதை வேதம் கோடிட்டுக் காட்டுகிறது. ஒருமுறை இயேசு தன் சீடர்களிடம். "உலகின் ஒளி நானே. என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" (யோவா.8:12) என்று திருவாய் மலர்ந்தார்.

Top

இன்று ஒளியாம் இயேசுவிடம் இருளின் மக்கள் பலரால் வரமுடியாத காரணமென்ன என்று உங்களுக்கு தெரியுமா?இந்த கேள்விக்கான பதிலை பரமேஷ்வரன் தன் அருளுரையில் தெளிவாக்குகிறார்."தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர்.தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடுமென அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை.உண்மைக்கேற்ப வாழ்பவர்கள், ஒளியிடம் வருகிறார்கள்"; (யோவா.3:20,21) என்று பரமாத்மா கூறினார். இயேசுவை ஏற்றுக்கொண்டால் மட்டும்தான் ஒருவன், தான் பாவியாக வாழ்ந்தவன் என்பதை ஒத்துக்கொள்கிறான். இயேசுவை சந்திப்பதுவரை ஒரு 'பத்தரைமாற்று தங்கம்' என்றே வெளியுலகிற்குக் காட்டுகிறான். மனிதனுடைய உள்மனம் எவ்வளவு பாவமாசு படிந்துள்ளது என்பதை இவ்வுலக மக்களுக்கு தெளிவாக எடுத்தரைத்து, வெளிப்படுத்தியது ஜோதிஸ்வரன் இயேசு மட்டும்தான். கடவுளுக்கும் சாத்தானுக்கும் உள்ள பகைமை நிலையை உலகிற்கு இயேசுவே வெளிப்படுத்தினார். 'மிருதா' என்றால்மரணமென்றும் 'அம்ருதா' என்றால் ஜீவனென்றும் அர்த்தம். இயேசு தன் சீடர்களைப் பார்த்து, "நானே ஜீவன்"

Top

(யோவா.14:6) என்று கூறினார்.“கிறிஸ்துவை உடையவர் ஜீவனை உடையவர் அவரைக் கொண்டிராதவர் ஜீவனைக் கொண்டிராதவர்” (1யோவா.5:12) என்று யோவான் சுட்டுகிறார். இயேசுவை ஏற்றுக்கொண்டு மீட்புப் பெறாதவர் ஆன்மீக மரணத்தில் நிலைகொண்டிருக்கிறார்;. “என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை நம்புவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள். ஏற்கெனவே சாவைக்கடந்து வாழ்வுக்குள் வந்து விட்டார்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்”(யோவா.5:24) என்று இயேசு முத்திரையிட்டு பேசுகிறார்.

இயேசுதான் நமக்கு நல்வாழ்வு தரும் ஜீவேஸ்வரன். இதுவரை வாழ்ந்த எவருமே ‘நான்தான் ஜீவன், என்று கூறவில்லை. இயேசு,“என்னிடம் பாவமுண்டு என்று உங்களில் யாரென்னைக் குற்றம் சாட்டமுடியும்?”என்றுதைரியமாய் கேட்டார்.“நான் பரிசுத்தமாய் வாழ்ந்ததுபோல் நீங்களும் பரிசுத்தமாய் வாழுங்கள்” என்று தன் மக்களுக்கு அறிவுரை கூறிய புருஷோத்தமன்

Top

இயேசுவை புறக்கணித்துவிட்டு 'குற்றவாளிக் கதாபாத்திரங்களை' நான் எப்படி கடவுளென்று மனதார ஏற்றுக்கொள்ள முடியும்? எனக்காக உயிரைக்கொடுத்த என் ஆருயிர் நண்பன் இயேசுவை வெறுத்து நான் வேறுவழியை தேர்ந்தெடுத்தால் நான் நன்றி கெட்டவனாய் இருப்பேன். கடவுள் செய்த குற்றத்தை சகிக்க முடியாமல் நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று நக்கீரன் என்னும் பக்தர் குற்றம் சாட்டுகிறார். நிஜமாகவே கடவுள் குற்றம் செய்ய முடியுமா? 'சிவம்' என்றால் 'அன்பு' என்று அர்த்தம்.'பரமசிவம்' என்றால் பரலோக அன்பு(உன்னத அன்பு) என்று அர்த்தம். 'சதாசிவம்' என்றால், 'எப்போதும் அன்பாயிருப்பவர்' என்று அர்த்தம்.அப்படிப்பட்ட சதாசிவபெருமானை குற்றவாளி என்று ஒருவர் குற்றம் சாட்டமுடியுமா?கடவுளை குற்றவாளியாக, திருடனாக, காமக்கண்ணனாக, ஏமாற்றுக்காரனாக, கொலைகாரனாக இந்துக்கள் பார்ப்பதுபோல் என் மனதுக்குள் நினைத்தே பார்க்க முடியவில்லை. கடவுள் 'அருட்பெரும் ஜோதியாக, தனிப்பெரும் கருணையாக இருக்கிறார்' என்று ஸ்ரீஇராமலிங்க அடிகளார் கூறினார். அதையே நானும்

Top

நம்புகிறேன். பாலபிஷேகம், நெய்யபிஷேகம், அன்னாபிஷேகம் என்று லட்சக்கணக்கான பணத்தை விரயமாக்குவதற்கு நான் எப்படி துணைபோக முடியும்.

**56.** கிறிஸ்தவத்தை கடைபிடிப்பது கடினம். என்னால் நிலைத்து நிற்க முடியாது.

“பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே, என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது, என் சுமை எளிதாயுள்ளது” (மத்.11:28-30) என்று இயேசு கூறினார். எனவே, கிறிஸ்துவை பின்பற்றுவது கடினம்போல் இருந்தாலும் உண்மையிலேயே அது கஷ்டமல்ல.

Top

10-வது வகுப்பு படிக்கும் ஒரு மாணவனிடம் ஒரு அறுவை சிகிட்சை கத்தியைக் கொடுத்து ஒரு நோயாளியைக் காட்டி அறுவை சிகிட்சை செய்ய கூறினால், அவனால் முடியாது. ஆனால், அதே மாணவன் சில ஆண்டுகள் படித்து, மருத்துவத்தில் தேர்ந்து அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அறுவை சிகிட்சை நிபுணர் ஆகிறான். அன்று முடியாதென்று பிரமித்தவன், இன்று சாதாரணமாக அந்த காரியத்தை சாதித்து விடுகிறான். ஓட்டுநர் பள்ளியில் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் கூட ஒருநாள் மாணவராய் இருந்தவர் தானே! ஓட்டுநருடைய இருக்கையில் ஏறி அமர்ந்தவுடன், ‘இது என்னால் முடியாது’ என்று கூறுவது வாழ்க்கையில் தோல்விக்கு வழிவகுக்கும். செயற்கரிய செய்வார் பெரியார். சாதாரண மனிதர்களால் முடியாத காரியங்களை கடவுளோடு இணைந்த மனிதர்கள் சாதிப்பார்கள். உயர்ந்த உள்ளம் வேண்டும் என்னும் ஏக்கம் கொண்டவர்கள் கஷ்டத்தைப்பற்றி கவலைப்படமுடியாது. உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது. நமக்கு பெரிய விஷயமாகத்தெரிவது கடவுளுக்கு மிகச்சிறிய விஷயமாகத்தெரியும். நம்முன் மலைபோல் நிற்பது கடவுளுக்கு முன் தூசியாகத் தெரியும்.

Top

லட்சியவாழ்வு என்பது ரோஜாமலர் படுக்கையாக இருக்காது. பாதைகள் முட்கள், மேடுகள், பள்ளங்கள் எல்லாம் வரலாம். கிறிஸ்துவின் அன்புக்கொள்கையை கடைபிடிக்க நீங்கள் ஆரம்பிக்கும் போது ஜாதி, மத, இனவெறிபிடித்த கொடியவர்களுக்கு பிடிக்காது. இருள் நிறைந்த மக்களுக்கு ஒளியின் பிள்ளைகளைப் பிடிக்காது. திருடர்களுக்கு நல்லவர்களை பிடிக்காது. நல்ல விஷயத்தில் ஈடுபடப்போகும் உங்களை சிலர் கிண்டல் பண்ணுவார்கள் எதிர்ப்பார்கள், திட்டுவார்கள். ஆனால் எல்லாவற்றையும் தாங்கும் சக்தியை கடவுள் உங்களுக்கு தருவார். மன உறுதியோடு கடவுள் மீது நம்பிக்கை வைப்போரை கடவுள் மனஅமைதியால் உறுதிப்படுத்துகின்றார் (எசா.26:3). கடவுள் மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்துக்கு உள்ளாகமாட்டார் (உரோ.10:11).

உங்கள் சுயசக்தியாலும், அறிவாலும் இதை சாதிக்க முடியாமலிருக்கலாம். ஆனால், கடவுள் உங்களோடு இருந்தால் எல்லா தொல்லைகளையும் எளிதில் சமாளிக்கலாம். இன்று கடினம் என்று நினைக்கும் காரியங்கள் நாளடைவில் எளிதாக

Top

மாறிவிடும். நம்பினோர் கைவிடப்படுவதில்லை. ஆண்டவர் மேல் உன் கவலையைப் போட்டுவிடு. அவர் உனக்கு ஆதரவளிப்பார். அவர் நேர்மையாளரை ஒருபோதும் வீழ்ச்சியுற விடமாட்டார் (தி.பா.55:22) என்னும் உறுதிமொழியை நம்புங்கள். இயேசு தாமே சோதனைக்கு உள்ளாகி, துன்பப்பட்டதால், சோதிக்கப்படுவோருக்கு உதவிசெய்ய அவர் வல்லவராய் இருக்கிறார் (எபி.2:18) என்று வேதம் தெளிவாக்குகிறது. கிறிஸ்துவின் நிமித்தம் நாம் பாடுபடும்போது அந்த காட்சியைப் பார்த்து வேடிக்கை பார்க்கும் ஈவு இரக்கமற்ற தெய்வமல்ல இயேசு. உங்களுக்கு ஏற்படுகின்ற சோதனை பொதுவாக மனிதருக்கு ஏற்படும் சோதனையே அன்றி வேறல்ல. கடவுள் நம்பிக்கைக்குரியவர். அவர் உங்களுடைய சக்திக்குமேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார் சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார் அதிலிருந்து விடுபட வழிசெய்வார் (1கொரி.10:13) என்று பவுல் திருச்சபையை திடப்படுத்துகிறார்.

Top

## 57. இயேசுவை ஏற்றுக்கொண்டால் எங்கள் தெய்வங்களிடமிருந்து தொந்தரவு வராதா?

'உங்கள் தெய்வம், எங்கள் தெய்வம்' என்று பல தெய்வங்கள் கிடையாது. இந்துக் கடவுள்;, கிறிஸ்தவக் கடவுள், இஸ்லாமியக் கடவுள், தமிழ்க் கடவுள், மலையாளக் கடவுள், தெலுங்குக் கடவுள் என்று பல கடவுள்கள் இல்லை. கடவுள் ஒருவரே உண்மை தெய்வம் ஒருவரே அவரை தெய்வமாக வணங்கும் எல்லாருக்கும் கடவுள் சிறப்புப் பாதுகாப்பு அளிக்கிறார். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் வரும்போது உங்களது உயிரும் அவரது உயிரும் ஒன்றாக இணைந்து விடுகிறது (1கொரி.6:17). பயப்படாதீர்கள் நீங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டீர்கள். இனி மேல் எந்த துஷ்ட ஆவிகளுக்கும் உங்கள் மீது அதிகாரம் இல்லை. நீங்கள் கொஞ்சமும் சந்தேகப்படப் வேண்டாம். உங்களுக்கு விரோதமாக எழும்பும் எந்த தீய சக்திகளும் உங்களைத் தாக்காது. உன்னைத் தாக்குமாறு (பிசாசினால்) உருவாக்கப்பட்ட எந்த போர்க்கருவியும் நிலைத்திராது (ஏசா:54:17) என்று வேதம் உறுதியாக கூறுகிறது.

Top

நம்பிக்கையோடிருங்கள் உங்கள் இறைநம்பிக்கையே உலகிலுள்ள அனைத்து சாத்தானிய வல்லமைகளையும் வெல்லும் (1யோவா.5:4). ஆன்மீகமாக பிசாசை எதிர்க்கும் சக்தியுடைய ராஜாவாக நீங்கள் மாறியிருக்கிறீர்கள் (தி.வெ.1:6).

இயேசு கிறிஸ்து உங்களை விட்டு விலகுவதுமில்லை, உங்களை கைவிடுவதும் இல்லை (யோசு:1:5). உங்களுக்கு விரோதமாக யாராவது மந்திரம், பில்லிசூனியம் செய்தாலும் அது உங்களைப் பாதிக்காது (எண்.23:33). உங்கள் உடல் இறைவன் குடியிருக்கும் ஆலயம் (1கொரி.3:16). உங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் பரமாத்மாவின் பாதுகாப்பு வளையத்துக்குள் வந்துவிட்டன. கடவுள் தன் வானதூதர்களை வைத்து உங்களைப் பாதுகாக்கிறார் (எபி.1:13,14) என்று பைபிள் சுட்டிக்காட்டுகிறது. நீங்கள்தான் இந்த உலகிலேயே முதலாவது இயேசுவை ஏற்றுக் கொள்ளும் நபர் அல்ல. இந்திய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 20% மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு பின்தொடர்கிறார்கள். அவர்களும் வாழவில்லையா?;இயேசுவோடு இணைந்து வாழ்பவர்களை பிசாசு தொடமுடியாது. எந்த வேளையில் பிசாசு

உங்களை சோதிக்க வந்தாலும் இயேசுவின் நாமத்தில் நம்பிக்கை வைத்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் (யாக்.4:7)என்றுவேதம் வழிகாட்டுகிறது. எத்தனையோ அர்ச்சகர்கள்;, குருசாமிகள், சாஸ்திரிகள், மந்திரவாதிகள் இயேசுவை ஏற்றுக் கொண்டு நலமுடன் வாழ்கிறார்கள். மந்திரவாதிகளுக்கு சக்கரவர்த்தியாயிருந்த 'தொட்டண்ணா' என்னும் மந்திரவாதி மனம் திரும்பி ஊழியம் செய்யவில்லையா?

உங்களுக்காக உங்கள் கிறிஸ்தவ நண்பர்கள் நிச்சயம் பிரார்த்தனை செய்வார்கள். அந்த கூட்டுப் பிரார்த்தனைகளுக்கு பலனில்லாமல் போய்விடுமா? பிசாசு தங்கியிருக்கும் வீட்டில் நீங்கள் தங்கியிருந்தாலும், இயேசு உங்களுக்குள் இருப்பதுவரை உங்களை எதுவும் அணுகமுடியாது. நீங்கள் இயேசுவோடு கூட சிங்காசனத்தில் ஆன்மீக அதிகாரத்தோடு அமர்ந்திருக்கிறீர்கள். பிசாசும் அவன் படைகளும் எத்தனை திரளாய் வந்தாலும், அந்த வல்லமைகள் எல்லாவற்றையும் மேற்கொள்ளும் சக்தி உங்களுக்கு உண்டு. நீங்கள் கஷ்டப்பட்டால் 'பூர்வஜென்ம

Top

பாவம்' என்று அவ்வாள் கிண்டல், நையாண்டி செய்வது போல் கிறிஸ்துவை உடைய கிறிஸ்தவர்கள் கூறமாட்டார்கள். மாறாக முழுமனதோடு உங்களுக்காக இறைவனிடம் வேண்டுதல் செய்வார்கள்.

## 58. எல்லா ஆறுகளும் ஒரே கடலில் சேர்கின்றன. எல்லா கடவுள்களும் ஒன்றுதான் !

எல்லா ஆறுகளும் ஒரே கடலில்தான் கலக்கின்றன என்பது ஓரளவு சரியாக இருக்கலாம். ஆனால், எல்லா கடவுள்களும் ஒன்றே! என்ற சொற்றொடரே தவறு. பல கடவுள்கள் இல்லை. தெய்வம் ஒருவரே. கடவுள் சொன்ன அறிக்கைகளை கவனியுங்கள். தொடக்கமும் நானே முடிவும் நானே என்னையன்றி வேறு கடவுளில்லை (எசா.44:6).

என்னையன்றி கடவுள் வேறு எவருமில்லை நீதியுள்ளவரும் மீட்பளிப்பவருமான இறைவன் என்னையன்றி வேறு எவருமில்லை (எசா.45:21). நானே ஆண்டவர் வேறு

Top

எவருமில்லை என்னையன்றி வேறு கடவுளில்லை (எசா.45:5). கருப்பையில் உன்னை உருவாக்கிய உன் மீட்பரான ஆண்டவர் கூறுவது இதுவே.அனைத்தையும் படைத்த ஆண்டவர் நானே. யாருடைய துணையுமின்றி நானாக வானங்களை விரித்து மண்ணுலகைப் பரப்பினேன் (எசா.44:24).கடவுள் ஒருவர்தான் என்று நிரூபிக்க நூற்றுக்கணக்கான வசன ஆதாரங்களைஉங்களுக்கு நான் கூறமுடியும்.இயேசு கிறிஸ்து, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" (யோவா.14:6) என்று உறுதியாகக் கூறினார். பரமேஸ்வரனை பற்றிய தெளிவான வெளிப்பாடு பெற்ற பேதுரு, "இயேசுவாகிய இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால், நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே இவரது பெயரன்றி வேறெந்த பெயரும் கொடுக்கப்படவில்லை" (தி.பணி.4:12) என்று தெளிவாக்குகிறார். "நானே வாயில்,என் வழியாய் நுழைவோருக்கு மீட்புண்டு ஆபத்தில்லை" (யோவா.10:9) என்று இயேசு குறிப்பாக கூறுகிறார். நீங்கள், "வாப்பா, போப்பா என்று செல்லமாக யாரையும் பார்த்து அழைக்கலாம். ஆனால், உங்கள்

Top

அப்பா யார்? என்று யாராவது கேட்டால் நிச்சயமாக ஒரே ஒரு நபரைத்தான் கூறமுடியும். அதுபோல, மொத்த உலக மக்களுக்கும் தந்தை ஒருவராகத்தான் இருக்கமுடியும். இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள் ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது வழியும் விரிவானது அதன் வழியே செல்வோர் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது வழியும் மிகக் குறுகலானது இதைக் கண்டுபிடிப்போர் சிலரே (மத்.7:13,14)

## 59. கிறிஸ்துவை வணங்காமலேயே பலர் நன்றாக இருக்கிறார்களே?

இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வது இந்த மண்ணுலக வாழ்விற்காக மட்டுமல்ல மரணத்திற்கு பின்வரும் நித்திய வாழ்க்கைக்காகவும் தான். கடவுள் நம்பிக்கையே இல்லாதவர்களுக்கும் உணவூட்டி, உடை, உறைவிடம்

Top

கொடுப்பதும் கடவுள்தான். அவ்வளவு தூரம் கடவுள் இரக்கமும், தயவும், அன்பும் உள்ளவர்.

ஒரு தகப்பனுக்கு நல்லவன், கெட்டவன் என்று இரண்டு மகன்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். தான் பெற்ற நல்ல மகனுக்கு கொடுக்கும் உணவை, கெட்ட மகனுக்கும் கொடுப்பார். மனிதனுடைய மனதினில் அவ்வளவு அன்பிருக்குமானால் அதைவிட எவ்வளவு அதிகமாக இறைவன் அன்புக்காட்டுவார். இயேசு கூறினார், “உங்கள் பகைவரிடமும் அன்புகாட்டுங்கள். உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படி செய்தால், நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில், அவர் நல்லோர்மீதும் தீயோர்மீதும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும், நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்” (மத்.5:44,45). ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர் தாம் உண்டாக்கிய அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர் தடுக்கி விழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகின்றார். தாழ்த்தப்பட்ட

Top

யாவரையும் தூக்கி விடுகின்றார். எல்லா உயிரினங்களின் கண்களும் உம்மையே நோக்குகின்றன தக்க வேளையில் நீரே அவற்றிற்கு உணவளிக்கின்றீர். (தி.பா.145:9,14,15). நல்லவர்களை மட்டும் காப்பாற்றிவிட்டு, தீயோரை அழிப்பதற்காக கடவுள் மனித உருவில் வரவில்லை. தீயோரைத் தன் அன்பின் வலிமையால் நல்லோராக மாற்றவே அந்தக் கருணா மூர்த்தி மனிதனாய் அவதரித்தார். சிலுவையில் தன்னை அறைந்தவர்கள், தாங்கள் செய்தது இன்னதென்று அறியாமல் செய்ததால் அவர்களுக்கு மன்னிப்பு அருளும்படி பரமபிதாவிடம் மன்றாடினார். இயேசுவை இரட்சகராக கண்டடையாத ஏராளமான மக்கள் வேண்டுமென்றே இயேசுவை புறக்கணிக்கவில்லை.

ஓர் இந்துசகோதரர், தான் வணங்கும் விக்கிரகங்களுக்கு முன் நின்று வணங்கினாலும் அவைகளை உண்மையான கடவுள் என்று எண்ணியே தொழுகிறார். கடவுள் இந்துக்களுடைய உள்ளத்தைப் பார்க்கிறார். இயேசு மட்டும் தான் கடவுளோடு மக்களை இணைக்கும் ஒரே பாலம் என்னும் உயர்ந்த

Top

உண்மையை ஏற்றுக்கொள்வது எல்லா மக்களுக்கும் எளிமையானதல்ல. ஏனென்றால், ஆதியில் உலக நாதனாய் இருந்த ஆதாமை சாத்தான் ஏமாற்றி, ஆதாமிடமிருந்த உலகளாவிய அதிகாரத்தை தன் வயப்படுத்தி அபகரித்து கொண்டான். அவனுக்கு இப்பிரஞ்சத்தின் தெய்வம் என்றொரு பெயருமுண்டு (2கொரி.4:4). அவன் ஆதாம் தொடங்கி எல்லா மக்களின் அறிவுக் கண்களையும் குருடாக்கி ஆதிமுதல் ஏமாற்றிக்கொண்டிருக்கிறான்.

சாத்தான் ஒருமுறை இயேசுவுக்கு உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் காட்டி அவரிடம், “இவற்றின் மேல் முழு அதிகாரத்தையும், இவற்றின் மேன்மையையும் உமக்குக் கொடுப்பேன். இவையாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நான் விரும்பியவருக்கு இவற்றை கொடுப்பேன். நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையதாகும்” என்றான். இப்படி அவன் கேட்ட கேள்விக்கு பதிலாக இயேசு, உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி

Top

செய்வாயாக என்று மறைநூலில் எழுதியுள்ளது என்றார். (லூக்.4:5-8) சாத்தான் அந்த சோதனை கேள்வியை இயேசுவிடம் கேட்டதால் அப்படி ஒரு ஞானமான பதிலை சொன்னார். ஆனால், மண்ணாசையுடைய ஒருவரிடம் அப்படிப்பட்ட கேள்வியை கேட்டால் நிச்சயமாக அவர் சாத்தானை வணங்கிவிடுவார். உலகமே அவரிடம் வந்துவிடும். ஆனால், சாத்தானுக்கு பூரண அடிமையாகிவிடுவார். எம்மதத்து மக்களானாலும், நாத்திகரானாலும் அவர்கள் மீது பரமாத்மா வைத்திருக்கும் பொதுவான கிருபையால்தான் இன்று வளமாய் வாழ்கின்றனர். ஆனால், உண்மை தெய்வத்தை பின்பற்றுபவர்களுக்கு வரும் செல்வப்பெருக்கு அவர்களுக்கு தீங்கு விளைவிக்காது என்பதுதான் நிதர்சனமான உண்மை. கடவுளுக்கு பிசாசின்மீது முழு அதிகாரமுமுண்டு. ஆதாமை ஏமாற்றிய உடனேயே அவனை அழிக்க நினைத்திருந்தால் அழித்திருக்கலாம். ஆனால், எந்த மனுக்குலத்தை சாத்தான் ஏமாற்றினானோ, அந்த மனிதர்களை வைத்தே சாத்தானைப் புறக்கணித்து, அவனுடைய தந்திரங்களை உலகத்திற்கு வெளிச்சமாக்கி, மக்களை வைத்தே அவனை மனதார வெறுத்து,

Top

நியாயம் தீர்த்து, அழிக்க கடவுள் காத்திருக்கிறார். ஆதாமை ஏமாற்றிய உடனேயே சாத்தானை செயலிழக்கச் செய்வதால் கடவுளுக்கு கிடைக்கும் மகிமையைவிட, எல்லா மக்களும் சாத்தான் யார்? அவனுடைய திட்டம் என்ன? அவனுடைய குணம் என்னவென்பதை புரிந்துகொண்டு அவனை அடையாளம் கண்டு, முழுமனதோடு அவனை வெறுத்து, கடைசியாக அவனை நரகத்திற்கு அனுப்புவதன் மூலம் கிடைக்கும் மகிமை அதிகமாக இருக்கும்.

பெரும்பான்மையான இந்துக்களுக்கு 'சாத்தான்' என்று ஒரு சக்தி இருப்பது தெரியாது. அற்புதம் எங்கு நடந்தாலும் கடவுள்தான் செய்கிறார் என்று இந்துக்கள் நம்புகிறார்கள். காரணம், அவர்களுக்கு சாத்தானுக்கும் கடவுளுக்கும் வித்தியாசம் தெரியாது. கடவுள்தான் தன்னைப்பற்றி மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். நான் இப்படி எல்லாம் எழுதினாலும் இயேசுவின் கொள்கைகளை முழுமையாகக் கடைபிடிப்போர் தங்கள் கிறிஸ்துவைப் போன்ற பண்பாட்டின் மூலம் இவ்வுலகில் தங்களுக்கும், பிறருக்கும் உள்ள வித்;தியாசத்தை

Top

உருவாக்குவார்கள். எல்லா மக்களும் ஒருநாள் இயேசுவின் கொள்கைகளின் முக்கியத்துவத்தை உணர்வார்கள். இயேசுவை முழுமையாக அறிந்து பின்தொடரும் ஒரு விசுவாசிக்கு வரும் எந்த சூழ்நிலையிலும் ஒரு தெய்வீக அமைதியை அனுபவிப்பார். ஆனால், இறைவனை அறியாதவர்களுக்கு கோடிக்கணக்கில் பணம், அழகான வீடு, மனைவி, பிள்ளைகள் எல்லாம் இருந்தாலும், ஒரு பிரச்சனை வரும்போது, தாங்க முடியாமல் பலர் தற்கொலைகூட செய்து விடுகிறார்கள். மனஅமைதி என்பது சாந்திஸ்வரன் இயேசுவின் அமைதிக் கொள்கைகளின் மூலம் கிடைக்கும் ஈவு. இன்று விளையாட்டு வீரர்கள், தொழிலதிபர்கள், திரைப்பட நடிகர்கள், அரசியல்வாதிகள் எத்தனை பேர் நிம்மதியாக வாழ்கின்றார்கள்? படிப்பு மனிதனுக்கு நிம்மதியைத் தருமானால், பேராசிரியர்கள் தற்கொலை செய்யவேண்டிய தேவையில்லையே. அழகு மனஅமைதியைத் தருமானால், நடிகைகள் தற்கொலை செய்ய வேண்டியதில்லையே! பணம் சமாதானத்தைத் தருமானால், தொழிலதிபர்கள் தற்கொலை செய்யவேண்டிய தேவையில்லையே. படிப்பு, பதவி, அதனால் உருவாகும் புகழ்

Top

எதுவும் நிரந்தரமல்ல. “நானே ஆண்டவர் வேறு எவருமில்லை. என்னையன்றி வேறு கடவுளில்லை. நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு வலிமை அளித்தேன்” (எசா.45:5) என்று எல்லாம் வல்ல தெய்வம் தன்னை அறியாதவர்மீதும் அருள் பாலிப்பதைப் பார்க்கிறோம்.

## 60. எனக்கு வயதாகிவிட்டது !

வயதாகி விட்டதால் மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், இந்த பெலவீன பருவத்தில் என்ன சாதித்துவிடப் போகிறோம் என்றும் நினைக்கிறீர்கள். பாரதப்பிரதமர் இந்த தள்ளாத வயதிலும் ஒரு பெரிய நாட்டை ஆட்சிசெய்கிறாரே! தன் வயதைப் பற்றி அவர் வருத்தப்பட்டால் சாதனை புரியமுடியுமா? நேரம் பிந்திவிட்டது என்று சாப்பிடாமல் தூங்கி விடுவீர்களா? மரணம் ஒரு மனிதனுடைய முடிவு அல்ல அது மறுமையின் தொடக்கம். இவ்வுலகில் பிறந்த எந்த மனிதனும் இறந்து, பின் நியாயத்தீர்ப்பு பெறுவது தெய்வீக சட்டம். நீங்கள் இளைஞராக

Top

இருந்தாலும், வயதானவராக இருந்தாலும் இந்த ஆன்மீகச் சட்டத்திலிருந்து விடுபடமுடியாது. நீர் இன்று இறந்;தால் உம் ஆன்மா மோட்சத்தை சேர வேண்டுமானால், இயேசுவின் இரட்சிப்பைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு நல்ல தீர்மானத்தை எடுத்து அதன்படி வாழ்ந்து தனக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும்படி இறைவனை வணங்க வயது ஒரு தடையில்லை. வயதாகி விட்ட தென்று கருதி உங்களுக்குள் இருக்கும் பாவங்களிலிருந்து விடுதலை தேவையில்லை என்று நினைக்காதீர்கள். நீங்கள் உங்கள் மரணத்திற்குப்பின் சொர்க்கத்திற்கு போவதும், நரகத்திற்கு போவதும் உங்கள் கையில்தான் இருக்கிறது.

**61.** நான் வேளாங்கண்ணிக்கு வருடம்தோறும் போகிறேன். ஈஸ்டர், கிறிஸ்மசுக்கு தவறாமல் கோயிலுக்கு போகிறேன்.

வேளாங்கண்ணி வரை போகும் உங்களுக்கு அருகிலிருக்கும் வேதத்தை நம்பும் ஒரு ஆவிக்குரிய திருச்சபைக்கு செல்வது

Top

பெரிய சிரமமல்ல என்று நினைக்கிறேன். இந்திய அரசு ஞாயிற்றுக்கிழமையில் விடுப்பு கொடுக்கிறது. பெரும்பாலான தனியார் நிறுவனங்களும் அந்த நாளை ஓய்வுநாளென்று அறிவித்திருக்கின்றன. எனவே திருச்சபைகளும் ஞாயிற்றுக்கிழமைகளில் கடவுளை ஆராதிக்க கூடிவருகின்றன. எல்லா ஞாயிற்றுக்கிழமையும் கடவுளைப்பற்றிய இறைச்செய்தியை அங்குள்ள அருட்பணியாளர் கொடுக்கிறார். இறைமக்களிடையே கடவுளைப்பற்றிய அறிவை வளர்க்கிறார். இறைமக்கள் ஒருவரையொருவர் சந்தித்து தங்கள் அன்பைப் பகிர்ந்துகொள்ள, ஒருவருக்காக ஒருவர் கடவுளிடம் பிரார்த்திக்க இந்த நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்களும் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் திருச்சபையில் கூடி வருதல் மேன்மையானது. "சிலர் வழக்கமாகவே நம் சபைக்கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை. நாம் அவ்வாறு செய்யலாகாது. ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுவோம். இறுதிநாள் நெருங்கி வருவதைக் காண்கிறோம். எனவே, இன்னும் அதிகமாக ஊக்கமூட்டுவோம்" (எபி.10:25) என்று பவுல் கூறுகிறார்.

Top

## 62. நீங்கள் கொடுக்கும் கிறிஸ்மஸ் கேக்கை நாங்கள் சாப்பிடுகிறோம். ஆனால், எங்கள் பிரசாதத்தை நீங்கள் சாப்பிடுவதில்லையே?

இவ்வுலகில் சிலை என்பது ஒன்றுமே இல்லை. கடவுள் ஒருவரென்றும் வேறு தெய்வங்கள் இல்லை என்றும் நமக்கு தெரியும். விண்ணிலும் மண்ணிலும் தெய்வங்கள் என்று சொல்லப்படுபவை பல இருக்கலாம். தெய்வங்கள் பலவும் ஆண்டவர்கள் பலரும் உள்ளனர். ஆனால், நமக்குக் கடவுள் ஒருவரே. அவரே நம் தந்தை அவரிடமிருந்தே அனைத்தும் வருகின்றன. அவருக்காக நாம் இருக்கிறோம்.அவ்வாறே நமக்கு ஆண்டவரும் ஒருவரே. அவரே இயேசு கிறிஸ்து. அவர் வழியாக அனைத்தும் வருகின்றன. அவர் மூலமாகவே நாம் வாழ்கிறோம். ஆனால், இவ்வறிவு எல்லோரிடமுமில்லை. இதுவரை சிலைகளை வழிபட்டு பழக்கப்பட்ட சிலர் அவற்றிற்கு படைக்கப்பட்டவற்றை படையல் பொருள் என எண்ணி உண்கிறார்கள். அவர்களின் மனச்சான்று

Top

வலுவற்றதாயிருப்பதால், அது கறைபடுகிறது. நாம் உண்ணும் உணவு நம்மைக் கடவுளிடம் கொண்டு சேர்க்காது. உண்ணாதிருப்பின் அதனால் ஒரு குறைவுமில்லை. உண்பேமாயின் அதனால் ஒரு நிறைவுமில்லை. ஆனால், உங்களுக்கு இருக்கும் உரிமை, மனவலிமையற்றவர்களுக்கு தடைக்கல்லாய் இராதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். அறிவு கொண்டுள்ள நீங்கள் சிலைவழிபாட்டுக் கோயிலில் பந்தியமர்ந்திருப்பதை வலுவற்ற மனச்சான்றுடைய சகோதரர், சகோதரிகளுள் ஒருவர் காண்பாரானால் அவரும் சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றை (படையல் பொருள் என எண்ணி) உண்ணத் தூண்டப்படுவாரல்லவா? இவ்வாறு இந்த அறிவு வலுவற்றவரின் அழிவுக்குக் காரணமாகிறது. அவர் சகோதரர், சகோதரிகளுள் ஒருவரல்லவா? அவருக்காகவும் கிறிஸ்து இறந்தாரல்லவா? இவ்வாறு நீங்கள் வலுவற்ற மனச்சான்றைக் காயப்படுத்தி சகோதரர்களுக்கு எதிராகப் பாவம் செய்தால் அது கிறிஸ்துவுக்கே எதிரான பாவமாகும் (1கொரி.8:4-12). நம்பிக்கை கொள்ளாதவருள் ஒருவர் உங்களை உணவருந்த அழைக்கும்போது நீங்கள் அவரோடு செல்ல விரும்பினால், அவர்

Top

உங்களுக்குப் பரிமாறும் எதையும் உண்ணுங்கள் கேள்விகள் எழுப்பி உங்கள் மனச்சான்றைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். எவராவது உங்களிடம், “இது படையல் உணவு” என்று சொன்னால் அவ்வாறு தெரிவித்தவரை முன்னிட்டும் மனச்சான்றை முன்னிட்டும் அதை உண்ண வேண்டாம். உங்கள் மனச்சான்றை முன்னிட்டல்ல, மற்றவருடைய மனச்சான்றை முன்னிட்டே இதைச் சொல்கிறேன். “ஏன், எனது தன்னுரிமை மற்றவருடைய மனச்சான்றின் தீர்ப்புக்கு உள்ளாக வேண்டும்? நான் நன்றியுடன் உணவருந்தினால், நன்றி கூறி அருந்திய உணவைக் குறித்து ஏன் பழிப்புரைக்கு ஆளாக வேண்டும்?” என்று ஒருவர் கேட்கலாம். அதற்கு நான் சொல்வது: நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள். யுதருக்கோ கிரேக்கருக்கோ கடவுளின் திருச்சபைக்கோ இடையறாய் இராதீர்கள். நானும் அனைத்திலும், அனைவருக்கும் உகந்தவனாய் இருக்கிறேன். நான் எனக்குப் பயன்தருவதை நாடாமல், பலரும் மீட்படையும்படி அவர்களுக்குப் பயன் தருவதையே நாடுகிறேன் (1கொரி.10:27-33) என்று பவுல்

Top

கூறினார். ஆக, ஆன்மீக வலுவற்றவரின் பொருட்டு சிலைகளுக்கு படைக்கப்பட்டதை இயேசுவின் சீடர்கள் உண்பதை தவிர்ப்பதே நல்லது (தி.பணி.15:20, 1கொரி.10:28) என்று வேதம் கூறுகிறது.

விக்கிரகங்களுக்கு படைக்கப்படாத உணவை நீங்கள் தந்தால் மூக்கு பிடிக்க நாங்கள் சாப்பிடுவோம். நீங்கள் கிறிஸ்மஸ் கேக் சாப்பிடக்கூடாது' என்னும் சட்டம் உங்களுக்கு இல்லை. அதனால்தான் உங்களுக்கு கிறிஸ்மஸ் கேக் தருகிறோம்.எல்லாவற்றையும் செய்ய உரிமையுண்டு ஆனால் எல்லாம் நன்மை தரக்கூடியவை அல்ல.

எல்லாவற்றையும் செய்ய உரிமையுண்டு ஆனால் எல்லாம் வளர்ச்சிதரக் கூடியவை அல்ல (1கொரி.10:23) என்று பவுல் கூறினார்.கடவுளின் ஆசி உங்களோடு இருக்கட்டும்.

Top

## 63. என்னுடைய நண்பர்கள் என்னைக் கேலி செய்வார்கள் !

நீங்கள் ஒரு கிராமத்தில் வளர்க்கப்பட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்கள் ஏழைத்தந்தை உங்களை கொடிய வறுமையின் மத்தியில் படிக்கவைத்தார். உங்களது கடின உழைப்பும், உங்கள் பெற்றோரின் பொருளாதார உதவியும் சேர்ந்து நீங்கள் படித்து மருத்துவராகி விக்கு குடிபெயர்ந்து போகிறீர்கள். உங்கள் தாயும், தகப்பனும் உங்கடுகிறீர்கள். இதன் நிமித்தம் நீங்கள் கிராமத்தைவிட்டு பட்டணத்துளோடு வரவிரும்புகிறார்கள். கிராமவாசிகளான, படிப்பறிவற்ற உங்கள் பெற்றோரை உங்கள் பட்டணத்து வீட்டிற்கு அழைத்து சென்றால், உங்கள் நாகரீக நண்பர்கள் உங்களை தரக்குறைவாக நினைப்பார்கள் என்று பயப்படுவீர்களா? உங்களை பெற்று, ஆளாக்கி, படிக்கவைத்து, இவ்வுயர் நிலைக்கு கொண்டுவந்த அந்த தியாக நெஞ்சங்களை புறக்கணிப்பீர்களா? நிச்சயமாகவே புறக்கணிக்க மாட்டீர்கள். அதுபோல நம்மை படைத்து நம் நாசியில் சுவாசத்தை வைத்து, சிந்தித்து செயல்பட

Top

ஆறறிவுகளைக் கொடுத்து, ஆரோக்கியமாக வைத்திருக்கும் தெய்வத்தை ஆராதிக்க நாம் ஏன் கூச்சப்பட வேண்டும்?

நீங்கள் சிறுவனாக இருந்தபோது உங்களுக்கு உணவுகொடுத்து பராமரிக்க உங்கள் நண்பர்கள் யாரும் வரவில்லை. பாக்கட்டிலே பத்து பணமிருந்தால் உந்தன் பின்னே நண்பனுண்டு. வயிற்றுக்கு வழியின்றி தவிக்கையிலே எந்த நண்பன் கூட உண்டு? உங்கள் பணப்பை நிறைந்திருக்கும் வரை உங்களை சுற்றி நண்பர்கள் நிறைந்திருப்பார்கள். நீங்கள் காசு இல்லாமல் கஷ்டப்படும் போது, நகமும் சதையும் போலிருந்தவர்கள் கூட நன்றி மறந்து போகிறார்கள். நீங்கள் பணக்காரராக இருக்கும்போது, 'என் உயிர் நண்பனே' என்று சொன்னவர்கள் எல்லாருமே உண்மையான நண்பர்களா, இல்லையா என்பது உங்கள் கஷ்டநேரத்தில் தான் தெரியும். இந்த மாறுபாடான உலகில் நிலையற்ற நண்பர்களுக்காக இறைவனைப் புறக்கணிப்பது நல்லதல்ல. செல்வமுள்ளவருக்கு நண்பர்கள் பலர் இருப்பர் (நீதி.14:20). ஆனால், கடவுள் உங்களுக்கு செய்த நன்மைகளை நண்பர்களுக்காகப் புறக்கணிப்பது அறிவல்ல. "மக்கள்

முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை, விண்ணுலகிலிருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக் கொள்வேன். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகிலிருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்” (மத்.10:32,33) என்று இயேசு கூறினார். இயேசு வாழ்ந்த நாட்களில், தலைவர்களில் கூட பலர் இயேசுவை நம்பினர். ஆனால், பரிசேயருக்கு (மதத்தீவிரவாதிகளுக்கு) அஞ்சி அவர்கள் அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி ஒப்புக்கொண்டால் அவர்கள் தொழுகைக் கூடத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். அவர்கள் கடவுள் அளிக்கும் பெருமையை விட மனிதர்கள் அளிக்கும் பெருமையை விரும்பினார்கள் (யோவா.12:42,43). பயந்தாங்கொள்ளி வாழ்க்கை வாழ்ந்து எதை சாதிக்க போகிறோம்? தைரியமாய் உங்களுக்காக உயிர்கொடுத்த இயேசுவின் பக்கம் நில்லுங்கள். கடவுள் உங்களுக்கு அருள்புரிவார்.

Top

## 64. எனது தமிழ் பெயரை மாற்றி ஆங்கிலப் பெயரை வைத்து விடுவீர்களே !

கடவுள் மொழிவெறி பிடித்தவரல்ல. அவர் ஆங்கிலேயர் களுக்கென்ற சிறப்புக் கடவுளுமல்ல. அவர் எல்லா மொழி மக்களுக்கும் பொதுவானவர். இயேசு தன் கொள்கைகளை மக்களுக்கு போதிக்கும்போது, நாம் பழைய பெயர்களை மாற்றி கண்டிப்பாக புதுப்பெயர் வைக்க வேண்டுமென்றோ, புதுப்பெயரை வைக்கக்கூடாது என்றோ கூறவில்லை. அது நம் விருப்பம். அவர் நமது பெயரை மாற்றுவதற்காகவோ, உணவு பழக்கத்தை மாற்றுவதற்காகவோ ஆடை அணிகலன்களை மாற்றுவதற்காகவோ வரவில்லை. சுருக்கமாக சொன்னால், இயேசு ஒரு மனிதனுடைய கலாச்சாரத்தை மாற்ற வரவில்லை. மாறாக அவனுடைய பண்பாட்டை மாற்ற வந்தார்.

அன்பழகன் என்ற அர்த்தமுள்ள பெயரை எடுத்துவிட்டு சிம்சோன் என்று பெயர்வைப்பது மதவெறிக் கிறிஸ்தவர்களின் கண்டுபிடிப்பு. கிறிஸ்துவின் தூண்டுதலினால் உருவானதல்ல. என் பெயர் அகஸ்டின். என் தந்தையின் பெயர்

Top

திரு.ஜோசப்.ஆனால், என் அருட்பணிக்கு என் ஆங்கில பெயரே தடையாக இருந்ததால் என் பெயரை அகத்தியன் என்று மாற்றிக்கொண்டேன். என் பழைய பெயரை மக்கள் கேட்டவுடனே, நான் பேசப்போகும் உயிரினும் மேலான மீட்புக்கொள்கையை அவர்கள் புறக்கணித்ததை நான் உணர்ந்திருக்கிறேன். ஒருவன் தமிழில் பெயர் வைத்திருப்பதால் அவன் புனிதன் என்றோ, ஆங்கிலத்திலோ அரபு மொழியிலோ பெயர் வைத்திருந்தால் அவன் மோசமானவன் என்றோ கருதமுடியாது.

நான் எந்த மொழியையும் உயர்ந்ததென்றோ தாழ்ந்ததென்றோ கூறமாட்டேன். அவரவர் மொழி அவரவருக்கு உயர்வாக தெரியும். ஒருசிலருக்கு தங்கள் தாய்மொழி பிடிக்காது. பலர் தங்கள் பெயரை தமிழில் வைத்திருந்தாலும், ஆங்கிலத்தில் பேசுவதை விரும்பி, அதை மதிப்புக்குரிய மொழியாக மனதளவில் ஏற்றுக்கொண்டு ஆங்கிலேயரைப் போல பேச ஏங்குவதும், Spoken English Course படிக்க பிள்ளைகளை அனுப்புவதும் எல்லோருக்கும் தெரியுமே! அன்னை தெரேசா தன் பெயரை

ஆங்கிலத்தில்தான் வைத்திருந்தார்கள். அவர்களுடைய பண்பாடுதான் அம்மையாரை உலக உயரத்திற்கு கொண்டு சென்றது. ஜாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி எல்லார் மனதிலும் அந்த தாய் இடம் பிடித்திருக்கிறார்களே! ஒருவர் எம்மொழியிலும் பெயரிடலாம். ஆனால், அவர் மக்களுக்கு எவ்வளவு பயனுள்ளவர் என்பதை பொறுத்தே மக்கள் மனதில் இடம் பிடிக்கமுடியும்.

இயேசு, சீமோனுடைய பெயரை பேதுரு என்று மாற்றினார். ‘சீமோன்’ என்ற வார்த்தையின் அர்த்தம் செவிகொடுப்பது. அந்த பெயரை எடுத்துவிட்டு பாறை என்னும் அர்த்தமுடைய ‘பேதுரு’ என்ற பெயரை வைத்தார். அங்கே மொழிமாறவில்லை அர்த்தம் மாறியது. சவுல் தன்னைத்தானே பவுல் என்றும் அழைத்துக்கொண்டார். ‘ஏமாற்றுக்காரன்’ என்னும் அர்த்தமுடைய ‘யாக்கோபு’ என்னும் பெயரை எடுத்துவிட்டு இஸ்ரவேல் என்ற பெயரை தேவன் கொடுத்தார். உயர்ந்த தகப்பன் என்னும் அர்த்தமுடைய ‘ஆபிராம்’ என்னும் பெயரை எடுத்துவிட்டு, ‘பெருங்கூட்ட மக்களுக்கு தகப்பன் என்னும்

Top

அர்த்தமுடைய ‘ஆபிரஹாம்’ என்னும் பெயரை சூட்டியது அர்த்தமுள்ளதாய் இருக்கிறதல்லவா? குழந்தை இல்லாதிருந்த ஆபிராமுக்கு, ‘பெருங்கூட்டத்திற்கு அப்பன் என்று பெயரிட்டது அவனது நம்பிக்கையை வளரச் செய்வதற்காக இருக்கலாம் அல்லவா?

ஒரு நாள் ஒரு ஊழியர், ஒரு பெண்ணின் தலையின் மீது கைவைத்து பிரார்த்தனை செய்தபோது அப்பெண், பத்திரகாளி வந்திருக்கிறேன் உயிரை வாங்காமல் போகமாட்டேன்’ என்று கூறினாள். உயிரை வாங்க ஏவி விடப்பட்டது கடவுளல்ல. எனவே, அப்படிப்பட்ட பெயர்களை கிறிஸ்தவ ஊழியர் மாற்றுவது இயல்பு. அதற்காக ஆங்கில பெயர்களைத்தான் வைக்கவேண்டும் என்று ஊழியர் அடம்பிடிப்பது தவறு. ‘ரோஜா’ என்றால் இந்து பெயர், ரோஸ் என்றால் கிறிஸ்தவ பெயர் என்று மனநோயாளிகளாயிருக்கும் பிரிவினைவாதிகள் கூறுவார்கள். மல்லிகா என்னும் பெயரில் இயேசுவை ஏற்றுக்கொண்ட பெண்ணின் பெயரை ஜாஸ்மின் என்று மாற்றுவது கோமாளித்தனமாக உள்ளது. வெளிமாற்றங்களை

Top

உருவாக்குவதைவிட மனதினுள் மாற்றத்தை உருவாக்குவதே அர்த்தமுள்ளது. இயேசு ஒருமுறை தன் சீடர்களிடம் பேசும்போது, உங்கள் வெளிப்புறம் சுத்தமாகும்படி முதலாவது உட்புறத்தை சுத்தமாக்குங்கள் (மத்.23:25,26) என்று உபதேசித்தார். திருமுழுக்கு கொடுக்கும்போது கட்டாய பெயர்மாற்றம் செய்வது இயேசுவால் கூறப்படாத காரியம். அது பாஸ்டர்களின் கண்டுபிடிப்பு. அப்படியே அவர் மாற்றினாலும் உங்கள் அனுமதி இல்லாமல் மாற்றக்கூடாது.

பொருத்தமற்ற, அர்த்தமற்ற பெயரை எடுத்துவிட்டு, அர்த்தமுள்ள, நடைமுறை வாழ்வுக்கு பயனுள்ள பெயரை வைப்பது தவறில்லையே. ஒரு கிறிஸ்தவன் தமிழிலோ, சமஸ்கிருதத்திலோ ஆங்கிலத்திலோ, அரபுமொழியிலோ, கிரேக்கத்திலோ, எபிரேயத்திலோ பெயர்வைப்பான். ஆனால், ஒரு இந்துவால் ஆங்கிலத்தில் பெயர் வைக்கமுடியுமா?

Top

**65.** நாங்கள் அணிந்திருக்கும் நகையை கழட்டவும், பூ, பொட்டு வைக்கக்கூடாது என்றும் கட்டாயப்படுத்துவீர்களே !

மனிதனுக்கு நகையை கொடுத்தது யாரென்பதை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். கடவுள் தன் தீர்க்கதரிசி எசேக்கியேல் மூலம் மக்களுக்கு சொல்வதை கவனியுங்கள். “அணிகலன்களால் உன்னை அழகு செய்தேன். உன் கைகளுக்கு காப்புகளும், கழுத்துக்கு சங்கிலியும் இட்டேன், மூக்குக்கு மூக்குத்தியும், காதுகளுக்கு தோடுகளும், தலையில் அழகிய மணிமுடியும் அணிவித்தேன். பொன்னாலும், வெள்ளியினாலும் நீ அணிசெய்யப் பட்டாய்” (எசே.16:11-13) என்று கடவுள் கூறுகிறார். கடவுள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேல் மக்களை மீட்டு கொண்டுவர தீர்மானித்தபோது, “ஒவ்வொருத்தியும் தனது அண்டை வீட்டுக் காரியிடமும், தன் வீட்டிலுள்ள அந்நிய பெண்ணிடமும், வெள்ளி அணிகலன்களையும், தங்க அணிகலன்களையும் கேட்டு வாங்கி உங்கள் புதல்வருக்கும், புதல்வியருக்கும் அணிவியுங்கள்” (வி.ப.3:22) என்று தேவன் கூறினார். நாம் நகை அணிவதை

Top

கடவுள் தவறென்று நினைத்திருந்தால் மக்களுக்கு காப்பு, சங்கிலி, மூக்குத்தி, தோடு, மணிமுடி என்னும் அணிகலன்களை கொடுத்திருப்பாரா? பேதுரு என்னும் திருத்தூதர், “முடியை அழுகுபடுத்துதல், பொன் நகைகளை அணிதல், ஆடைகளை அணிதல் போன்ற வெளிப்படையான அலங்காரம் உங்களுக்கு அலங்காரமாயிராமல், மனித உள்ளத்தில் மறைந்திருக்கும் பண்புகளாகிய பணிவும், அமைதியுமே உங்களுக்கு அழியாத அலங்காரமாக இருக்கட்டும். கடவுள் பார்வையிலே அதுவே விலையுயர்ந்தது” (1பேது.3:3,4) என்று கூறுகிறார்.

பேதுரு, முடியை அழுகுபடுத்துவதோ, நகையணிவதோ, ஆடையணிவதோ தவறெனக் கூறாமல் உட்புறத்தின் அழகுதான் வெளிப்புற அழகைவிட மேலானதென்று அழுத்தமாக கூறுகிறார். “முற்காலத்தில் கடவுள்மேல் நம்பிக்கை கொண்டிருந்த தூயபெண்களும் இவ்வாறுதான் தங்களை அணி செய்துகொண்டார்கள். தங்கள் கணவருக்கும் பணிந்திருந்தார்கள். அவ்வாறே சாரா ஆபிரகாமை ‘தலைவர்’ என்று அழைத்து கீழ்படிந்திருந்தாள்” (1பேது.3:5,6) என்று

பேதுரு விளக்குவதிலிருந்து பழைய ஏற்பாட்டு நாட்களில் இறைவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பக்தியுள்ள பெண்மணிகளைப் போலத்தான் உள்ளும் புறமும் இக்காலப்பெண்களும் இருக்கவேண்டும் என்கிறார்.

முற்காலத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பெண்கள் யார்? சாரா, ரெபேக்கா, ராகேல், ரூத், எஸ்தர், தெபோரா போன்றோர் ;தானே. இந்த பரிசுத்தவாட்டிகள் நகை அணிந்திருந்தார்கள். பழைய ஏற்பாட்டில் பரிசுத்தவான்கள் (ஆண்களும்) நகை அணிந்திருந்தார்கள். எ.கா: யோசேப்பு (தொ.நூ.41:42), தானியேல் (தானி.5:22), மொர்தேகாய் (எஸ்.8:2), எசேக்கியா (2குறி.32:22), யோபு (யோபு.42:11). இயேசு தங்கம் அணிவதற்கு விரோதியல்ல. அவர் அணிகலன்களை விட, பண்பாட்டு மாற்றமே பெரியது என்று பேதுருவின் மூலம் விளக்குகிறார். எனக்கு தெரிந்த எத்தனையோ நகையணியாத கிறிஸ்தவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் பேசமாட்டார்கள். ஏனென்று கேட்டால் ‘சொற்களின் மிகுதியினால் பாவமில்லாமல் போகாது’ என்கிறார்கள். இயேசு

Top

ஒருமுறை தனது போதனையின் போது மனம்மாறி வந்த மைந்தனுக்கு மோதிரம் அணிவிப்பதை பற்றி (லூக்.15:22) கூறுகிறார். தி.வெ.1:13 நாம் வாசிக்கும் போது, “மானிட மகன் இயேசு, மார்பு அருகே பொன்பட்டை அணிந்திருக்கிறார்” என்று யோவான் குறிப்பிடுகிறார். இயேசு மட்டும் தங்கம் அணியலாம், அவரது பிள்ளைகள் அணியக்கூடாது என்று கூறமுடியுமா? அவர் அவ்வளவு கொடியவரா?

இஸ்ராயேல் மக்களுக்கு கடவுள்; அணிவித்த அணிகலன்களை அவர் கழட்டவும் சொன்னார். “நான் உங்களோடு வரப்போவதில்லை ஏனெனில், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள் ஆதலால், வழியில் நான் உங்களை அழித்தொழிக்க நேரிடும்” என்றார். இத்துயரச் செய்தியை கேட்டபோது மக்கள் அழுது புலம்பினர். யாருமே அணிகலன்களை அணிந்து கொள்ளவில்லை. ஏனெனில், ஆண்டவர் மோசேயிடம், “நீங்கள் வணங்காகழுத்துள்ள மக்கள் நொடிப்பொழுதில் நான் உங்களிடையே வந்து உங்களை அழித்தொழிக்க போகிறேன். உடனடியாக உங்கள் அணிகலன்களை கழட்டிவிடுங்கள்.

Top

உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பது எனக்கு தெரியுமென இஸ்ராயேல் மக்களுக்கு அறிவி" என்று கூறியிருந்தார். அவ்வாறே இஸ்ராயேல் மக்கள் ஓரேபு மலையை விட்டு புறப்பட்ட பின்பு தங்கள் அணிகலன்களை அணியவே இல்லை (வி.ப.33:3-6). மேற்கண்ட வேதபகுதியை நீங்கள் கவனமாக வாசித்தால், ஏன் அணிகலன்களை கழட்ட சொன்னார் என்று புரிந்துகொள்ளலாம். விடுதலை பயணம் 3-ஆம் அதிகாரத்தில் நகை அணியச் சொன்ன கடவுள் 33-ஆம் அதிகாரத்தில் கழட்டச் சொன்ன காரணம் என்ன? அதுவரை ஏன் அணிய அனுமதித்தார்? 32-ஆம் அதிகாரத்தில், இஸ்ராயேல் மக்கள் கடவுள் மிகவும் வெறுத்த சிலைவழிபாடு செய்து வணங்காகழுத்துள்ள மக்களாய் மாறிப்போனதால் தான் இந்த விபரீதத்தை சந்தித்தனர். தான் அணிவித்த அணிகலன்களை கடவுள் கழட்ட வைத்த வேறொரு சம்பவத்தை பார்ப்போம். சீயோன் மகளிர் செருக்கு கொண்டுள்ளார்கள், தங்கள் கழுத்தை வளைக்காது நிமிர்ந்து நடக்கிறார்கள், தம் கண்களால் காந்தக்கணை தொடுக்கிறார்கள், தங்கள் கால்களிலுள்ள சிலம்பு ஒலிக்கும்படி ஒய்யார நடை நடந்து உலாவித் திரிகிறார்கள்.

Top

ஆதலால், ஆண்டவர் சீயோன் மகளிரின் உச்சந்தலைகளில் புண்ணை வருவிப்பார். வழுக்கை தலையர்களாய் அவர்களை ஆக்குவார். ஆண்டவர் அவர்களின் மானத்தை குலைப்பார்.

அந்நாளில், அவர்களுடைய அணிகலன்களாகிய கால்சிலம்புகள், சுட்டிகள், பிறைவடிவமான அணிகலன்கள், ஆரங்கள், கழுத்து பொற்சங்கிலிகள், கழுத்துத் துண்டுகள், கைவளையல்கள், தலையணிகலன், கூந்தல் கட்டும் பட்டுநாடாக்கள், அரைக்கச்சைகள், நறுமணச்சிமிழ்கள், காதணிகள், மோதிரங்கள், மூக்கணிகள், வேலைப்பாடுகளுள்ள அழகிய ஆடைகள், மேலாடைகள், போர்வைகள், கைப்பைகள், கண்ணாடிகள், மெல்லிய சட்டைகள், குல்லாக்கள், முக்காடுகள் ஆகியவற்றை ஆண்டவர் களைந்துவிடுவார்.

நறுமணத்தற்கு பதிலாக அவர்கள்மேல் துர்நாற்றம் வீசும். கச்சைக்கு பதிலாக கயிற்றைக்கட்டி கொள்வார்கள். வாரிமுடித்த கூந்தலுக்குப் பதிலாக அவர்கள் வழுக்கைத் தலையை கொண்டிருப்பர். ஆடம்பர உடைகளுக்கு பதிலாக அவர்கள் சாக்குடையை உடுத்துவார்கள். அழகிய உடல்கொண்ட

Top

அவர்கள் மானக்கேடு அடைவர் (எசா.3:16-24). இஸ்ராயேல மக்கள் கடவுளுக்கு எதிராக செருக்குற்று தவறு செய்யும் போதெல்லாம் கடவுள் அணிகலன்களை அகற்றுகிறார். ஒருமுறை யாக்கோபு தன் மக்களிடம், “உங்களிடம் உள்ள வேற்று தெய்வங்களின் சிலைகளை அகற்றிவிட்டு, உங்களை தூய்மைப்படுத்தி, உங்கள் உடைகளை மாற்றிக் கொள்ளுங்கள்” என்றார். உடனே, அவர்கள் தங்களிடமிருந்த வேற்றுதெய்வங்களின் சிலைகளையும், தங்கள் காதணிகளையும் யாக்கோபின் கையில் கொடுக்க, அவர்; அவற்றை செக்கேம் அருகிலிருந்த ஒரு கருவாலி மரத்தினருகே புதைத்தார் (தொ.நூ.35:2-4). மேற்கண்ட வேதபகுதியில் யாக்கோபு நகைகளை கழட்டச் சொல்லவில்லை. மாறாக, கடவுள் வெறுக்கும் சிலைகளை அகற்றி, தூய்மையாக்கி, உடைகளை மாற்றச் சொன்னார். ஆனால், கம்மல்களை அவர்கள் அகற்றிய காரணத்தை யோசியுங்கள். அந்த கம்மல்களில் பொய்தெய்வங்களின் வடிவமைப்புகள் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் அம்மக்கள் காதணிகளையும் அகற்றினார்கள். ஒரு கிறிஸ்தவன் நகையணியவே கூடாதென்றோ, அல்லது

Top

கண்டிப்பாக அணியவேண்டுமென்றோ கட்டாயம் செய்யமுடியாது. கட்டாயப்படுத்துவது எல்லாமே மதப்பிரமாணமாக மாறிவிடும்.

நகையணியாத அன்னை தெரேசாவுக்கு மக்கள் கொடுக்கும் மதிப்புக்குமுன், அணிகலன்கள் ஒன்றுமேயில்லை. ஆனால், இந்தியாவில் திருமணம் செய்யாதவர்களோ, விதவைகளோ நகையணியாமல் இருக்கலாமென்ற ஐதீகமுண்டு. இந்நிலையில் நகையில்லாமல் நடமாடி மக்களால் தவறாக புரிந்துகொள்ளப்படுவது கிறிஸ்துவுக்கு பெருமையைக் கொண்டுவராது. ஆனால், அளவுக்கு மிஞ்சி நகையணிந்து வெளியே நடமாடுவது கொள்ளையர்கள் வாழும் இந்தியாவில் ஆபத்தானது. அண்மையில் நகையணிந்த ஒரு வயதான தாயார் சாலையில் நடந்து கொண்டிருக்கும்போது, அவரிடம் கத்தியைக்காட்டி மிரட்டி அவ்வளவு நகைகளையும் பறித்துச் சென்றார்களாம் திருடர்கள். அவ்வகையில் நகையணிவது சிக்கலானது தான். மற்றபடி நகை அகற்றினால்தான் பரலோகம் போகமுடியுமென்று சட்டமிடமுடியாது. ஏனெனில்,

பரலோகத்தில் தரை தங்கமயமாயிருப்பது மட்டுமல்ல, தலையிலும் தங்ககிரீடம் வைக்கப்படும் (தி.வெ.4:4). தலையில் பூ வைக்கக்கூடாது என்று யாரும் சட்டமிட முடியாது. வேதம் இதைப்பற்றி எதையும் கூறவில்லை. தலையில் மலரணிவது தமிழர் கலாச்சாரம்.

அதுபோல பொட்டு வைக்கக்கூடாது என்று சட்டமியற்ற முடியாது. ஒருமுறை பால் தினகரன் அவர்களிடம் நான் பேசும்போது, “அண்ணா, கிறிஸ்தவ பெண்கள் பொட்டு வைக்கக்கூடாது என்று வேதம் கூறுகிறதா?” என்று கேட்டேன். “வேதத்தில் எங்குமே ‘பொட்டு வைக்கக்கூடாது’ என்ற வார்த்தையில்லை” என்றார். “பொட்டு வைப்பதற்கு எதிராக ஆண்டவர் என்றாவது உங்களிடம் ஏதாவது பேசியிருக்கிறாரா?” என்று கேட்டேன். “இல்லை, தேவன் பொட்டு சம்பந்தமாக எதையும் என்னிடம் பேசியதில்லை” என்று தெளிவாக்கினார். என் மனதை அரித்துக் கொண்டிருந்த அந்த சந்தேகத்திற்கு தெளிவு கிடைத்த மகிழ்ச்சியில் நான் பார்க்கும் எல்லா ஊழியரிடமும் இந்த விஷயத்தை தெளிவாக்கி

கொண்டிருக்கிறேன். கிறிஸ்தவத்தைத் தழுவிய பிராமண சகோதரர்களிடம் விசாரித்தபோது, இந்து பெண்கள் தங்கள் கணவர் உயிரோடிருப்பதற்கு அடையாளமாக பொட்டு வைக்கிறார்கள் என்றனர். ஒரு பெண் பொட்டு இல்லாமல் நடமாடினால், அவரது கணவர் இறந்துவிட்டார் என்று பொதுமக்கள் புரிந்துகொள்வார்கள். ‘பொட்டு வைக்கக்கூடாது’ என்று வேதமறிந்த அறிஞர்களும் கூறியதில்லை. பாரம்பரியவாதிகள் வசன ஆதாரமில்லாமல் பேசி கல்வியறிவில்லாத மக்களை குழப்பி, அவர்களது மனசாட்சியை புண்படுத்துகிறார்கள். கிறிஸ்தவர்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

80 லட்சம் ரூபாய் வங்கிக்கணக்கில் வைத்திருப்பதை பற்றி யாரும் பாவமென்று கூறமாட்டார்கள்;RC, CSI பெந்தகோஸ்தே என்று ஓநாய்களைப்போல சண்டை போடுவதை யாரும் பெரிதுபடுத்த மாட்டார்கள்! 25000 ரூபாய்க்கு கைக்கடிகாரம் அணிவதை ‘கர்த்தருடைய ஆசீர்வாதம்’ என்று கூறுகிறார்கள். ஆனால், பொட்டு வைப்பதை புறஜாதிப் பழக்கம் என்று மூச்சு

இறைக்க முழங்குகிறார்கள். இந்திய கிறிஸ்தவப் பெண்கள் புடவை கட்டுவது எந்த ஜாதிப் பழக்கம்? யோசியுங்கள். மூன்று தலைமுறைக்கு தேவையான பணத்தை சேர்த்து வைத்துவிட்டு, "எனக்கென்று எதுவுமில்லை" என்று பாரம்பரிய கிறிஸ்தவர்கள் பாட்டு பாடுகிறார்கள். நாங்கள் ஒரு கிராம்கூட நகை போடமாட்டோமென்று இவர்கள் பெருமையாக பேசுவது, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளிலிருந்து வரும் வறட்டு வேதாந்தமல்லவா?

## **66.** எங்கள் தெய்வங்களோடு இயேசுவையும் கும்பிடுகிறேன். இது தவறா?

உங்களது பெருந்தன்மையான உள்ளத்தைப் பாராட்டுகிறேன். ஆனால், நீங்கள் நினைப்பது போல இந்துக்களுக்கு ஒரு கடவுள், கிறிஸ்தவர்களுக்கு ஒரு கடவுள், இஸ்லாமியருக்கு ஒரு கடவுளில்லை. ஒரே கடவுள் மட்டுமே கடவுளாயிருக்கிறார். உண்மையான கடவுளைப் பின்பற்றும்போது பொய்

Top

தெய்வங்களை (போலிக்கடவுள்களை) வணங்கக்கூடாது என்று வேதம் எச்சரிக்கிறது.

“நீங்கள் இந்த பயனற்ற பொருட்களை விட்டுவிட்டு, விண்ணையும் மண்ணையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிய வாழும் கடவுளிடம் திரும்புங்கள்” (தி.பணி.14:15, 1தெச.1:9) என்று பவுல் கூறுகிறார். “என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தல் ஆகாது” (வி.ப.20:3) என்று சர்வேஸ்வரன் கூறியிருக்கிறார். “உங்களிடையே வேற்று தெய்வம் இருத்தலாகாது. நீங்கள் அந்நிய தெய்வத்தை தொழலாகாது” (தி.பா.81:9, 34:14) என்றும் வேதம் நம்மை எச்சரிக்கிறது. “உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி செய்” (மத்.4:10, தி.வெ.22.9) என்று வேதம் அறிவுறுத்துகிறது. “நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்புகூர்வாயாக” (இ.ச.6:4) என்று கர்த்தர் கூறினார். “நானே ஆண்டவர். அதுவே என் பெயர், என்

மாட்சியை பிறருக்கோ, என் புகழைச் சிலைகளுக்கோ விட்டுக்கொடேன்" (எசா.42:8) என்று மொத்த உலகத்துக்கும் பொதுவான தெய்வமாகத் தன்னையே வெளிப்படுத்தியுள்ளார் கர்த்தர்.

கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் என்ன உடன்பாடு? கடவுளின் கோவிலுக்கும் சிலைவழிபாட்டுக் கோவிலுக்கும் என்ன இணக்கம்? (2கொரி.6:15-16). எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே அவர் எல்லாருக்கும் மேலானவர் எல்லார் மூலமாகவும் செயலாற்று பவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர் (எபே.4:6). ஒரு தந்தைக்கு 5 பிள்ளைகள் இருக்கலாம். ஆனால், ஒரு பிள்ளைக்கு 5 தந்தைகள் இருக்க முடியுமா? உங்களை பெற்ற தந்தை உயிருள்ளவராய் இருக்கும்போது வேறொரு நபரைத் தந்தை என்று நீங்கள் கூறுவதை உங்கள் தந்தை கேள்விப்பட்டால் அவர் மனம் எவ்வளவு புண்படும்! அதுபோலவே உண்மையான கடவுளை விட்டுவிட்டு, வேறு எதையாவது பார்த்து தெய்வம் என்று கூறுவதை பார்த்து நிஜதெய்வம் மகிழ்ச்சியடைவாரா? உங்கள் பழைய பொய்

Top

தெய்வ விக்கிரகங்களை விட்டுவிட்டு நிஜதெய்வத்தை ஏற்றுக்கொள்வது ஆரம்பத்தில் நிச்சயமாகவே கடினமாகத்தான் இருக்கும். கஞ்சா புகைக்கும் பழக்கத்துக்கு அடிமையானவனர் ஒருவரிடம் போய், 'கஞ்சா உடல் நலத்திற்கு தீங்கானது' என்று அறிவுரை கூறினால், அதை அவ்வளவு சுலபமாக அவரால் புரிந்து கொள்ள முடியாது. புகைபிடிப்பது உடல் நலத்திற்கு தீங்கானது என்று சுவரில் விளம்பரம் எழுதுபவர், புகைபிடித்துக்கொண்டே எழுதுகிறார். ஒரு குடிகாரனிடம் அவரது மனைவி தயவு செய்து குடிக்காதீர்கள் என்று சொன்னால் அவர் மனைவி கூறிய நல்ல அறிவுரையை புறக்கணித்து, அவரை அடித்து உதைக்கிறார். குடிப்பதில் தவறில்லை, குடிப்பதால் நிம்மதி உருவாகிறது என்ற குடிகாரனுடைய மூடநம்பிக்கையே அதற்கு காரணம்.

ஒரு தமிழ்ப்பெண் தான் உயிரோடிருக்கும்போது தனது கணவர் வேறொரு பெண்ணை மணந்தால், அதை நிச்சயமாக சகிக்கமாட்டார். ஒரு சாதாரண மனிதனே ஒரு மனைவியோடு நல்லொழுக்கம் உடையவராய் வாழவேண்டுமென்று சமுதாயம்

Top

எதிர்பார்க்கிறது. அப்படியிருக்க, அந்த அழகேசனுக்கு இரண்டு மனைவிகளுண்டு என்னும் மூடநம்பிக்கையை எப்படி ஏற்றுக்கொள்கிறீர்கள்? இது தவறு என்பது உங்கள் மனசாட்சிக்குத் தெரியும். ஆனாலும் மதவைராக்கியம் உங்கள் கண்களை மறைக்கிறது. ‘பரிசுத்தமாய் வாழும் பவித்திர பரமேஷ்வரன் இயேசு மட்டுமே தெய்வம்’ என்று ஏற்றுக்கொள்வது உங்களுக்கு இப்போது கடினமாயிருந்தாலும் நிச்சயமாக ஒருநாள் உணர்வீர்கள். இருமனமுள்ள நிலையற்ற போக்குடையவர் ஆண்டவரிடம் ஏதாவது பெறமுடியுமென நினைக்காதிருக்கட்டும் (யாக்.1:8). “எத்தனை நாள் இருமனத்தோராய் தத்தளித்துக்கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஆண்டவர்தாம் கடவுளென்றால் அவரைப்பின் பற்றுங்கள், பாகால்தான் கடவுளென்றால் அவன் பின்னே செல்லுங்கள்” (1அர.18:21) என்று இறைவாக்குரைஞர் எலியா கூறினார்.

Top

## **67.** என் பெற்றோரும் உறவினரும் என்னை வெறுத்து ஒதுக்கி விடுவார்களே !

நீங்கள் இந்தியாவில் படித்து முடித்து அமெரிக்காவில் வேலை பார்க்கிறீர்களென்று வைத்துக்கொள்வோம். உங்கள் உறவினருடைய மகன் படித்து முடித்து வேலை இல்லாமலிருக்கிறார். அவருடைய வீட்டார் உங்கள் மீது பொறாமைப்படுகிறார்கள். உங்கள் உறவினர்கள் நீங்கள் அமெரிக்காவில் வேலைபார்ப்;பதை விரும்பவில்லை என்பதால், அவர்கள் நிமித்தம் உங்கள் அமெரிக்க வேலையை விட்டுவிடுவீர்களா? உங்கள் உறவினர்களின் பொறாமை உணர்வுக்கு உங்கள் எதிர்காலத்தை பலியாக்க முடியுமா? நாம் கஷ்டப்பட்டு பத்து ருபாய்கூட இல்லாமல் நடுத்தெருவில் நிற்கும்போது எந்த உறவினர்களும் உதவமாட்டார்கள். இன்று அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்;காக உங்கள் வேலையை விட கூறுவதால் விட்டுவிடுவீர்களா? யாரை எப்போது கவிழ்க்கலாம் என்னும் எண்ணத்தில்தான் இன்று பெரும்பாலான மனிதர்கள் வாழ்கின்றார்கள். மனிதர்மீது நம்பிக்கை வைப்பதைவிட

Top

ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம் (தி.பா.118:8). பிறர் என்ன சொல்வார்களோ என்று அஞ்சிக்கொண்டு நடப்பவர் கண்ணியில் சிக்கிக் கொள்வர். ஆண்டவரை நம்புகிறவருக்கோ அடைக்கலம் கிடைக்கும் (நீதி.29:25) என்றும், ஆண்டவரிடம் கொள்ளும் அன்பு கலந்த அச்சமே ஞானத்தின் தொடக்கம் (நீதி.9:10) என்றும் வேதம் கூறுகிறது. கம்பியூட்டர் இல்லாத உங்கள் வீட்டில் ஒரு கம்பியூட்டர் வாங்கியிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதைப்பார்த்து உங்கள் அண்டை வீட்டார் பொறாமைப்பட்டால் அவர்களுக்கு பயந்து கம்பியூட்டரை திரும்ப கொடுத்துவிடுவீர்களா? மனிதனுக்கு கீழ்படிவதைவிட இறைவனுக்கு கீழ்படிவதே அவசியமாக உள்ளது (தி.பணி.5:29).

உங்களுக்குதலைவலி வந்தால், அதை வேறு யாரை வைத்தும் சுமக்க வைக்க முடியாது. யாரோ கட்டிய அஸ்திபாரத்தில் நீங்கள் வீடுகட்டாதீர்கள். நீங்கள் கட்டிய அஸ்திபாரத்தல் வேறு யாரையும் வீடுகட்ட விடாதீர்கள். உங்கள் வாழ்க்கையை நீங்கள் வாழவேண்டும். வேறு யாரும் உங்கள் வாழ்வை வாழவிடாதீர்கள். உங்களைப் பெற்ற தாய், தகப்பன், உற்றார்,

Top

உறவினர், நண்பர்கள், அண்டைவீட்டார் யார் உங்களைக் கைவிட்டாலும் இயேசு கைவிட மாட்டார். உங்கள் பெற்றோருடைய மரணம்வரைதான் அவர்கள் உங்களோடு வருவார்கள்.அவர்களுடைய மறைவுக்கு பிறகும் கடவுள் உங்களோடு வருவார்.பெற்றோர் உயிரோடிருந்தாலும் நீங்கள் போகுமிடமெங்கும் உங்களுக்கு பாதுகாப்பு தரமுடியாது. அங்கெல்லாம் கடவுள்; பாதுகாப்பார். நிலையில்லாத மனிதர்கள்மேல் நம்பிக்கை வைக்காதீர்கள். கடவுளை முழுமையாக நம்புவோர் மனநிம்மதியோடு வாழ்வார்கள். இயேசுவுக்காக யாரை வேண்டுமானாலும் இழக்கலாம் யாருக்காகவும் இயேசுவை இழக்கக்கூடாது. 'வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசிவரை யாரோ? என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு பதில் சொல்லாமலேயே போய்விட்டார் கவிஞர் கண்ணதாசன். ஆனால் அந்த கேள்விக்கான பதில், "உன்னை விட்டு விலகுவதும் இல்லை உன்னைக் கைவிடுவதும் இல்லை" என்று சொன்ன சகாதேவன் இயேசு என்று நான் கண்டுபிடித்துவிட்டேன்.

Top

## 68. என் தொழிலை முதலாவது நிறுவிவிட்டு, அதன் பின் இயேசுவை பின்பற்றுவேன்.

இன்று தொழில் செய்து கொண்டிருக்கும் பலர் வாழ்வதா,சாவதா என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், எல்லாம் நல்லபடியாக இருக்குமென்று நம்பி தங்கள் சுயஅறிவை, மதிநுட்பத்தை, பணத்தை, நண்பர்களை நம்பி தொழிலைத் தொடங்கினார்கள். இன்று பலர் நடுத்தெருவில் நிற்கிறார்கள்.காரணம்,இறைவனுடைய வழிகாட்டுதலுக்கு முக்கியத்துவம் தரவில்லை.கடவுளின் பாதை என்பது பொழுது போக்குக்கான ஒரு விளையாட்டல்ல.வாழ்வாதாரமே தெய்வம்தான்.

ஒரு காட்டுப்பாதையில் தன்னந்தனியாக இருட்டில் நடந்து கொண்டிருக்கும் ஒருவர் தன் கையிலிருக்கும் மின்கல விளக்கை உபயோகிக்காமல் தத்தி தடுமாறி வீடு போய் சேர்ந்தால் அவர் செய்தது சரியா? பாதுப்பாக நடந்துசெல்ல அந்த விளக்கை

Top

ஞானமாக உபயோகித்திருக்கலாமே. எளிதாக நடந்து வந்திருக்கலாமே! மழுங்கிபோன கத்தியை வைத்து ஒரு கடினமான பொருளை கஷ்டப்பட்டு வெட்டிவிட்டு அதன்பின் அந்த கத்தியைத் தீட்டுவதில் என்ன பயன்? வெட்டும்முன் கத்தியைத் தீட்டியிருந்தால் வெட்டுவது எளிதாகி இருக்குமே! மழைவருமுன் அணை கட்டாமல் தண்ணீர் முழுவதையும் விட்டுவிட்டபின் பெரிய அணையைக் கட்டி பயனென்ன? "அனைத்துக்கும் மேலாக கடவுளுடைய ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்பொழுது இவை அனைத்தும் உங்களுக்கு சேர்த்து கொடுக்கப்படும்" (மத்.6:33) என்று இயேசு கூறினார். நீங்கள் இயேசுவை மனதார நம்பினால் அவர் உங்களுக்கு செய்யும் அதிசயங்கள் அளவிட முடியாததாக இருக்கும். கர்த்தர் உங்களுக்காக யாவற்றையும் செய்து முடிப்பார். இயேசுவாகிய வண்டிக்குள் ஏறியபின் அவரே உங்கள் பாரங்களைச் சுமப்பார்.வீடு கட்டுவதற்கான பொறியியல் கல்வியைக் கற்றபின் வீடுகட்ட ஆரம்பிப்பது தானே புத்திசாலித்தனம்.ஒரு விமானத்தை ஓட்டக் கற்று கொள்ளாமல் விமானத்தை ஓட்ட முடியாது அப்படியே ஓட்டினாலும் அது

Top

ஆபத்தில்தான் முடியும். அதுபோல் கடவுளைப் புறக்கணித்து விட்டு நீங்கள் செய்யும் முயற்சிகளும் தோல்வியிலேயே முடியும்."ஆண்டவரே நம் வீட்டைக் கட்டவில்லையெனில்அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும். ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்" (தி.பா.127:1) என்று வேதம் அறிவுறுத்துகிறது.

ஆண்டவர் மீது உன் கவலையைப்போட்டு விடு.அவர் உனக்கு ஆதரவளிப்பார்(தி.பா.55:22) என்று வேதம் நம்மை உர்ச்சாகப் படுத்துகிறது. அஸ்திபாரமில்லாமல் வீடு கட்டமுடியாது. அதுபோல கிறிஸ்துவாகிய அஸ்திபார மூலைக்கல் இல்லாமல், மனிதன் தன் வாழ்வை முழுமையாக கட்டி எழுப்ப முடியாது.உங்கள் தொழிலில் என்ன செய்யவேண்டும், என்ன செய்யக் கூடாது என்பதை சொல்லித்தர பரமாத்மா கூட இருப்பார். உங்கள் வாழ்வில் கடவுளுக்கு முதல் மரியாதை கொடுத்துப் பாருங்கள். வாழ்க்கை தானாக வசந்தமாகும். உடலுழைப்பு ஓரளவுதான் பயன் தரும். ஆனால், இறைப்பற்று

Top

எல்லா வகையிலும் பயன்தரும். இம்மையிலும் மறுமையிலும் பயன் தரும்.

**69.** எனக்கு நிம்மதி இல்லை. பிரச்சனைமேல் பிரச்சனை. ஆனால், எனக்கு ஆராதனைக்கு வர நேரமில்லை. நீங்கள் எனக்காக ஜெபியுங்கள்.

மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை. இது துரதிர்ஷ்டமானது. உங்களுக்காக நாங்கள் நிச்சயம் ஜெபிப்போம். அது எங்கள் மேல் வைக்கப்பட்ட கடமை. ஆனால், "நகம் நனையாமல் நத்தை எடுக்கமுடியாது" என்பதை நினைவில் கொள்ளுங்கள். அனலுமின்றி குளிருமின்றி இருந்தால் ஆண்டவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது (தி.வெ.3:16).

நீங்கள் இயேசுவை நம்புவது உண்மையானால் அதை செயலில் காட்டவேண்டும். "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.10:28) என்று கிறிஸ்து

Top

அறிவுறுத்துகிறார். சுமை சுமக்கும் நீங்கள் முதலாவது இயேசுவிடம் வரவேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். நிம்மதி இல்லாதவர்கள் ‘அமைதியின் அரசர்’ இயேசுவிடம் மன்றாட வேண்டும்.கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள் என்று வேதம் கூறுகிறது. நீங்கள் நேசிக்கும் ஒரு நபரை சந்தித்துப்பேச நேரமும் மனமும் இல்லாதிருந்தால் நீங்கள் நிஜமாகவே அன்புள்ளவர் என்று எப்படி நம்பமுடியும்? ‘அழுதப்பிள்ளைக்குத் தான் பால் கிடைக்கும்’. நீங்கள் பணம் இல்லாமல் கடனில் முழ்கியிருக்கும்போது, திடீரென உயர்ந்த சம்பளத்தில் ஒரு வேலைக்குரிய ஒப்பந்தப் பத்திரம் உங்கள் முகவரிக்கு வந்தால், அதை வாங்கி வாசிக்கக்கூட உங்களுக்கு நேரமில்லாமல் உங்கள் மனம்போல வாழ்ந்து கொண்டிருந்தால் வாழ்வில் முன்னேற முடியுமா? ஆண்டவர் யாருடைய வாழ்க்கையிலும் வலுக்கட்டாயமாக நுழையமாட்டார். “இதோ, நான் கதவருகில் நின்று கதவை தட்டுகிறேன். யாராவது எனது குரலைக் கேட்டு கதவை திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவருந்துவேன். அவர்களும் என்னோடு உணவருந்துவார்கள் (தி.வெ.3:20) என்று இயேசு கூறுகிறார். அவரால் கதவை

Top

பெயர்த்துக்கொண்டு உள்ளே போகமுடியும். ஏன்! கதவு பூட்டியிருக்கும்போது அதை திறக்காமலேயே ஊடுருவிப்போக முடியும் (யோவா.20:19). ஆனால், அப்படி யாருடைய வாழ்விலும் அத்துமீறி நுழையமாட்டார். நாம் உத்தரவு கொடுத்தால்தான் நம் வாழ்வில் நுழைவார். பூட்டப்பட்ட வீட்டுக்குள் இருக்கும் நீங்கள் வீட்டுக்கு வெளியே பணத்தோடு நிற்கும் நண்பரிடமிருந்து பணத்தை வாங்க வேண்டுமானால் கதவை திறக்க வேண்டுமல்லவா? இவ்வுலகில் தானாக எதுவும் நடக்காது. இயேசுவுக்கு உங்கள் வாழ்வை திறந்து கொடுக்காமல் ஒருபோதும் அவரது அருளுக்கு உட்பட முடியாது.

ஒரு படகு பாதுகாப்பாக கரைசேர வேண்டுமானால், படகோட்டத் தெரிந்த ஒரு படகோட்டி வேண்டும். உங்கள் வாழ்க்கைப் படகில் இயேசுவை படகோட்டியாக ஏற்றுக்கொள்ளுங்கள். வெட்கம், பயம் எல்லாவற்றையும் விட்டு, சமூக அந்தஸ்து என்னும் வெங்காயங்களை கருதாமல் இயேசுவை முழுமையாக ஏற்றுக்கொள்ளுங்கள். இயேசுவை

Top

ஏற்றுக்கொண்டு அவருடைய அருளாசியைப் பெற்றுக்கொள்ள பணச்செலவு ஏதுமில்லை. தைரியமாக முன்னேறுங்கள்.

## **70.** எனக்கு இயேசுவைப் பிடிக்கும். ஆனால், எதிர்ப்புகளுக்கு பயப்படுகிறேன்.

ஆற்றில் ஓடும் உயிருள்ள மீன் எதிர்நீச்சல் போடும். அது செத்துவிட்டால் ஆற்றுநீரின் திசையிலே போகும். துன்பத்தைக்கண்டு துவண்டு போவது கோழைத்தனம்.சவாலற்ற வாழ்க்கை சலிப்பு தட்டும் வாழ்க்கை. தற்போதைய தமிழக முதல்வர் லஞ்சம் வாங்கும் எந்த அதிகாரியையும் கடுமையாக தண்டிக்கிறார் என்று பத்திரிக்கையில் வாசிக்கிறோம். சிலர் தன்னை பகைப்பார்கள் என்று பயந்து, இந்த நடவடிக்கையை தைரியமாக எடுக்காமல் இருந்தால் நாட்டுக்காக எதையும் செய்ய முடியாது. நாட்டுக்கு ஒரு நல்ல காரியம் செய்யமுற்படும்போது, சில சமூகவிரோதிகள் நம்மை எதிர்க்கத்தான் செய்வார்கள். சோதனைகளே இல்லாமல் எப்படி சாதிக்க முடியும்?

Top

சாதனையாளர்களுக்கு சோதனைகள் பெரிய வேதனைகள் அல்ல என்றே கருதுகிறேன்.

ஜாதி வெறிபிடித்த மனித மிருகங்கள் நடமாடும் இந்த மண்ணில் ‘பெரியார், அம்பேத்கர்’ என்பவர்கள் ஜாதிவெறிக்கு விரோதமாக பிரச்சாரம் செய்தனர் பலர் எதிர்த்தனர்; ஆனால், அவர்கள் அவற்றை பொருட்படுத்தவில்லை சோதனைகளை சகித்து தொடர்ந்து போராடினர் லட்சக்கணக்கான சிந்தனையாளர்கள் ஒன்று திரண்டனர். மூடநம்பிக்கைகள் புரையோடிப்போன சமுதாயத்தில் சீர்திருத்த நறுமணம் வீசக் காரணமானார்கள். அன்று அவர்கள் பயந்திருந்தால் இந்தியாவுக்கு பயனுள்ளவர்களாக இருந்திருக்க முடியாது. மனிதனுடைய கைகளால் கட்டப்பட்ட கோயில்களில் கடவுள் குடியிருக்க மாட்டார் மனிதனுடைய உள்ளத்தில்தான் குடியிருப்பார் என்னும் உண்மையை தைரியமாய் சொல்லும்போது, பழமைவாதிகள் எதிர்ப்பார்கள். ஆனால், கவலைப்படாதீர்கள்! உங்களோடு பரமாத்மாவும் நிற்பார். தலையில் தேங்காய் உடைத்து தலையைக் காயப்படுத்தினால் தான் பரமேஷ்வரன்

Top

அருள்புரிவார் என்பது மூடநம்பிக்கை என்று சமுதாயத்திற்கு சுட்டிகாட்ட முதுகெலும்போடு நில்லுங்கள். கன்னத்தில், நாக்கில் அலகு குத்தாமல், வெறும் பிரார்த்தனை மூலமே நலமாய் வாழலாம் என்று தைரியமாக கூறுங்கள். பகுத்தறிவு உணர்வாளர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது. உங்களோடு நாங்களும் நிற்கிறோம்.

காந்தியடிகள் அறவழியில் போராடினார். அதை சுளுளு இயக்கத்தினர் எதிர்த்தார்கள். காமராஜர் தனக்கென்று எதையும் சேர்த்து வைக்காமல் நாட்டுக்காகவே வாழ்ந்தார். பயப்படாமல் சோதனைகளை எதிர்கொண்டார். இன்னும் நாடு போற்றும் நல்லோர்களின் வரிசையில் இருக்கிறார். ராஜாராம் மோகன்ராய், பண்டித ரமாபாய் அம்மையார் போன்றவர்கள் உடன்கட்டை ஏறும் பழக்கம், தேவதாசிமுறை என்னும் சமுதாய சீர்கேடுகளுக்கு விரோதமாக நின்றனர். பல மதவாதிகளுடைய எதிர்ப்புகளை சந்தித்தாலும் சோர்ந்து போகவில்லை. உலகில் உங்களுக்கு துன்பங்கள் வரலாம். ஆனால், நமக்கு முன்செல்லும் பரமேஷ்வரன் துன்பங்களை மேற்கொண்டு நமக்கு

Top

முன்னோடியாயிருக்கிறார்.உலக மக்கள் உங்களைப் பகைப்பதற்கு முன், கடவுளைப் பகைத்துவிட்டார்கள் (யோவா.15:18) என்று முதலாவது அறியுங்கள். இப்போது சிறிது காலம் நீங்கள் பல்வகை சோதனைகளால் துயருறவேண்டி இருப்பினும் அந்நாளிலே (இறுதிநாளில்)பேருவகை கொள்வீர்கள் (1பேது.1:6). கிறிஸ்து இயேசுவிடம் இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் துன்பத்துக்குள்ளாக நேரிடலாம் (2திமொ.3:12).ஆன்மாவைக்கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள் (மத்.10:28). கனிகளற்ற மரத்தில் யாரும் கல்லெறிய மாட்டார்கள். கனி கொடுக்கும் மரத்திற்கு சோதனைகளுண்டு. உங்கள் ஒவ்வொரு சோதனையின் நிமிடங்களிலும் கடவுள் உங்களோடிருந்து, அவற்றை தாங்கும் சக்தியைத் தருவார். உங்களால் தாங்க முடியாத அளவுக்கு சோதனைகளை கடவுள் உங்கள் வாழ்வில் அனுமதிக்கமாட்டார் (1கொரி.10:13). எனவே எதிர்ப்புகளுக்கு பயப்படாதிருங்கள். கடவுள் கூட நிற்பார். பேதுருவும் யோவானும் கல்வியறிவற்றவர்கள் என்பதைத்

Top

தலைமைச் சங்கத்தார் அறிந்திருந்ததால், அவர்களது துணிவைக் கண்டு வியப்படைந்து, அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதையும் உணர்ந்து கொண்டனர் (தி.பணி.4:13). இயேசுவை ஏற்றுக்கொண்டால் தைரியம் தானாக வரும். இயேசு கூறினார், “என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம். என்மீது அன்பு கொண்டிராதவர் நான் சொல்வதைக் கடைபிடிப்பதில்லை” (யோவா.14:23,24).

## **71.** நான் மிகவும் இளைஞனாக இருக்கிறேன்.

சாமுவேல் எனும் பக்தன் மிகவும் இளைஞனாக இருந்தபோது கடவுளுக்குப் பணியாற்ற தன்னை ஒப்படைத்தார். கடவுள் அவனோடு பேசினார். ஒரு பெரிய தீர்க்கதரிசியாக மாறினான்.தாவீது என்றஇளைஞன் கடவுளின் பார்வையில் கருணை பெற்று அந்நாட்டுக்கு அதிபதியானான். செயற்கரிய

Top

செய்வார் பெரியார் எனும் சொற்றொடருக்கு ஏற்ப பெரிய காரியங்களை சாதனைகளைச் செய்யும் இளைஞனும் பெரியவன்தான்.சாலமோன் என்னும் இளையராஜாவுக்கு இறைவன் கொடுத்த ஞானத்தால் நாட்டிலுள்ள பெரிய ஞானிகளே பாராட்டும் வண்ணம் நாடாண்டார் (1அர.3:7-11).

வயதானபின் சாதிக்க நினைப்பதைவிட இளம்வயதிலேயே பெரிய சாதனைகளைச் செய்ய முயல்வதில் தவறில்லையே. ஆபத்திலிருக்கும் ஒருவருக்கு பெரியவர் உதவினாலென்ன, இளைஞன் உதவினாலென்ன! கிறிஸ்தவ வாழ்க்கையின் சாராம்சமே பிறருக்கு தூயவழியில் தொண்டு செய்வது தான். சிறுவர்களை அவர்களுடைய தோற்றத்தை வைத்து எடைபோட முடியாது. எனவே, நீங்கள் இளைஞனென்று கவலைப் படாமல் தைரியமாக களமிறங்குங்கள். கடவுள்கூட இருப்பார். பரமாத்மாவுக்கு முன் இளைஞனென்றோ,முதியவரென்றோ பாகுபாடில்லை.

Top

## 72. என் பெற்றோரும் என் பிள்ளைகளும் பக்தியுடையவர்களாக இருந்தால் போதாதா?

உங்கள் தந்தையும், உங்கள் மகனும் வயிறு நிரம்ப உணவு உண்டால் நீங்கள் உணவு உண்ட திருப்தி உங்களுக்கு உண்டாகுமா? வயிற்றுவலி வந்தவனுக்குத்தான் தெரியும் அதன் கொடூரம். ஒரு நோய்க்காக உங்களுக்கு ஊசி போடவேண்டுமென்று மருத்துவர் கூறினால், உங்களுக்கு வலிக்கும் என்பதற்காக உங்கள் மகனுக்கு போட முடியுமா? அப்படிப் போட்டால் உங்கள் நோய் குணமாகுமா? "நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய்" (யோவா.11:40). "இதோ நான் விரைவில் வருகிறேன் அவரவர் செயலுக்கேற்ப அவரவருக்கு நானளிக்கும் கைம்மாறு என்னிடமுள்ளது" (தி.வெ.22:12) என்று இயேசு கூர்மையாக கூறினார். ஒருவர் தாம் விதைப்பதையே அறுவடை செய்வார் (கலா.6:7). கடவுள் அவரவர் செயல்களுக்கு தக்கவாறு அவரவருக்குப் பலனளிப்பார் (உரோ.2:6). நம்முள்

Top

ஒவ்வொருவரும் தம்மைக்குறித்து கடவுளுக்குக் கணக்கு கொடுப்பார் (உரோ.14:12).

நாம் அனைவருமே கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன்பு நின்றாக வேண்டும்.அப்போது உடலோடு வாழ்ந்தபோது நாம் செய்த நன்மை தீமைக்குக் கைமாறுபெற்றுக் கொள்ளுமாறு ஒவ்வொருவரின் செயல்களும் வெளிப்படும் (2கொரி.5:10). கிறிஸ்துவின் வருகையில் ஒரே படுக்கையில் படுத்திருக்கும் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார். ஒருவர் கைவிடப்படுவார் (லூக்.17:34). தயவுசெய்து கீழ்காணும் வேதவசனங்களை வாசியுங்கள் (யோபு.34:11, தி.பா.18:20).

## **73.** என் ஜாதியையும் ஜனங்களையும் எப்படி புறக்கணிக்க முடியும்?

பிறர் என்ன சொல்வார்களோ என்று அஞ்சிக்கொண்டு நடப்பவர் கண்ணியில் சிக்கிக்கொள்வார். ஆண்டவரை நம்புகிறவருக்கோ அடைக்கலம் கிடைக்கும் (நீதி.29:25). மனிதர்மீது நம்பிக்கை

வைப்பதைவிட ஆண்டவரின் தஞ்சம் புகுவதே நலம் (தி.பா.118:8). உங்கள் வீட்டாரிடமிருக்கும் நோய்களைக் குணப்படுத்த, தீராத கடன்களை ஆன்மீக முறையில் தீர்க்க, தலைமுறை சாபங்களை அழித்து வாழ்வில் உயர்வு பெற, தொடர் தோல்விகளை நிறுத்தி நலவாழ்வு பெற, கெட்ட சொப்பனங்கள், குடும்ப பிளவுகளை மாற்ற உங்கள் ஜாதிமக்கள், ஜாதித்தலைவர்களால் முடியுமா? நீங்கள் ஒரேஜாதியாக ஒற்றுமையாக இருப்பது நல்லதுபோல் தோன்றினாலும் அந்த தவறான ஒற்றுமைதான் எல்லா ஜாதிப்போர்களுக்கும் காரணமென்று அறியாமல் இருக்கிறீர்களா? உண்மையைச் சொன்னால் ஜாதித் தலைவர்களுக்கு ஜாதி உணர்வில்லை. மாறாக, தங்களுக்குக் கீழுள்ள தங்களையே நம்பியிருக்கும் மக்களிடம், தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை பயன்படுத்தி ஜாதி வெறியூட்டி பணம் சம்பாதிக்கிறார்களே தவிர, ஜாதித்தலைவர்களால் மக்களுக்கு எந்த பயனுமில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. உலக வழக்கில் நான் முதலியார் வகுப்பைச் சார்ந்தவன். ஆனால், நான் ஜாதி பார்க்காமல் திருமணம் செய்திருக்கிறேன். நான் ‘முதலியார்’

என்பதில் பெருமையில்லை. மாறாக, என்னை 'மனிதன்' என்பதில் சந்தோஷப்படுகிறேன். தன்னை 'உயர்ஜாதி' என்று கூறிக்கொள்பவனும், கீழ்ஜாதி என்று ஏற்றுக்கொள்பவனும் மனநோயாளிகள் என்று டாக்டர் அம்பேத்கர் கூறினார்.

மக்கள்தொகை கணக்கெடுக்க வீட்டுக்கு வரும் அதிகாரிகள், உங்கள் ஜாதி என்ன என்று உங்களிடம் கேட்டால் 'மனிதன்' என்று கூறுங்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிராமணர்கள் பலர் பிராமணர் அல்லாதவர்களை திருமணம் செய்து நலமோடு சுமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஒரு ஜாதியை சார்ந்தவர் என்று கூறினால் பலரை உங்களை விட கீழ்ஜாதி என்றும் பலரை உங்களை விட மேல்ஜாதி என்றும் கூறுகிறீர்கள். உங்களைப்பார்த்து கீழ்ஜாதி என்று வேறு யாராவது கூறினால் உங்கள் மனம் புண்படுமல்லவா?அதுபோலத்தான், நீங்கள் வேறு ஒருவரைப்பார்த்து கீழ்ஜாதி என்று கூறினால் அவருடைய மனமும் புண்படும் அல்லவா? ஒரு மனிதனை பிறப்பால்; உயர்ஜாதி என்றும் கீழ்ஜாதி என்றும் கூறுவது மனிதநேயமல்ல.

Top

தொழில் அடிப்படையில் ஜாதி பிரிக்கப்பட்டிருந்தால் சட்டப்படி பிராமணர்கள் இறைப்பணி செய்யவேண்டுமே!ஆனால், இக்கால பிராமணர்கள் எல்லோரும் கடவுள்பணிதான் செய்கிறார்களா? ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு குலதெய்வத்தை வைத்து கும்பிடுகிறார்கள். அங்கு பூசாரியாக அந்த ஜாதியைச் சார்ந்தவர்தான் இருக்கிறார். அவர் கடவுள்பணி செய்கிறார் என்பதால் அவரை பிராமணர் என்றல்லவா அழைக்க வேண்டும்! நாட்டைக் காக்கும் படையில் வேலை செய்பவர்கள் 'சத்தியர்கள்' என்று அழைக்கப்பட்டனர். ஆனால், இன்று சத்தியர்கள் என்று ஒரு ஜாதி இருக்கிறதா? அப்படியே இருந்தாலும் அவர்கள் சத்திரிய பணியைத்தான் செய்கிறார்களா? 'வைஷ்யர்கள்' என்றால் வியாபாரிகளென்று அர்த்தம். வைஷ்ய ஜாதியைச் சார்ந்தவர்கள்தான் வியாபாரம் செய்கிறார்களா? 'சூத்திரர்கள்' மேற்கண்ட மூன்று தரப்பினருக்கும் மனம் கோணாமல் அடிமையைப்போல் சேவை செய்யவேண்டும் என்று மனுதர்மம் கூறுகிறது. இது நியாயமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? மேல்ஜாதிக்காரன், கீழ்ஜாதிக்காரன் என்னும் பாகுபாடுகளை

பரமாத்மா உருவாக்கியிருப்பாரா? ஜாதி வெறிபிடித்த அதிகாரமோகம் கொண்ட மக்களால் தான் உருவாக்கப்பட்டது.

ஒருவரை ஒருவர் கடித்துக் குதறும் வெறிநாய்க் கலாச்சாரம் விலகி சமத்துவக்காற்று வீசினால், இந்தியா இவ்வளவு பின்தங்கிய நாடாக இருக்காது. வேறெந்த நாட்டிலும் இல்லாத இந்த ஜாதிப் பேயை நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து விரட்டியடிக்க வேண்டும். கல்வி அறிவுள்ள உங்களிடம், ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதியார் என்னும் மகாகவி எழுதிய வரிகளை உங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்த கெஞ்சிக் கேட்கிறேன். ஜாதி என்னும் பேயால் உயிரிழந்தோர், ஊனமுற்றோர் லட்சக்கணக்கானோர். அவர்கள் வறுமையை ஒழிக்கவோ, உயிர்கொல்லி நோயை ஒழிக்கவோ, சுதந்திர போராட்டத்திலோ தங்கள் உயிர்களை இழந்தவர்களல்ல. சாதிச்சண்டைகளில் செத்துப் போனவர்கள். இதை சொல்வதற்கு எவ்வளவு அசிங்கமாக இருக்கிறது! காந்தி பிறந்த மண்ணை கலவர பூமியாக்கலாமா? சமத்துவ தோட்டமாக்குவோம் இறைவன் நமக்கு துணைநிற்பார்.

Top

## **74.** நான் மிகப்பெரிய பாவி. என்னையும் இயேசு மன்னிப்பாரா?

உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருந்தாலும் உறைந்த பனிபோல அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன எனினும் பஞ்சைப்போல் அவை வெண்மையாகும் (எசா.1:18) என்று வேதம் கூறுகிறது.

இயேசு பரிசுத்தமாக வாழ்ந்தார். ஆனால், அவர் பாவிகளிடம் அன்போடு பேசினார்.அப்போது யூதமதவாதிகள் இயேசுவின் சீடரைப்; பார்த்து, “உங்கள் போதகர் வரி வசூலிப்பவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?” என்று கேட்டார்கள். இயேசு இதை கேட்டவுடன், “நோயற்றவருக்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. ‘பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்’ என்பதன் கருத்தை நீங்கள் போய் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நேர்மையாளரை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன்”(மத்.9:11-13).
“இழந்துபோனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்”

Top

(லூக்.19:10) என்று இயேசு சொன்னார். நாம் செய்த பாவங்களின் நிமித்தம், தந்தையாம் கடவுளிடமிருந்து தூரம் போய்விட்ட நம்மை, கடவுளோடு ஒப்புரவாக்கத்தான் கடவுளின் மகன் மனித வடிவில் வந்தார். சின்னபாவி, பெரியபாவி என்ற வேறுபாடின்றி எல்லா பாவிகளையும், எவ்வளவு அசிங்கமான, கொடுமையான, கேவலமான பாவம் செய்தவரையும் மீட்கும் வலிமை கிறிஸ்துவுக்கு உண்டு. அவர் உயிர்த்தெழுந்தது தான் பெரியவன் என்ற வறட்டுப் பெருமைக்காக அல்ல. பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து உலகத்திற்கு வந்தார் (1திமொ.1:15) என்று வேதம் கூறுகிறது. நாம் பாவிகளாயிருக்கும் போது கிறிஸ்து நமக்காக உயிர் நீத்தார் (உரோ.5:8) என்று பவுல் கூறுகிறார்.

கிறிஸ்துவிடம் வந்த விபச்சாரியை மன்னித்து புதுவாழ்வு வாழ வலிமையையும் கொடுத்தார் (யோவா.8:3-11).
பொருளாசைக்காரனும், ஏமாற்றுக்காரனுமாய் இருந்த சகேயு என்னும் பெரும்பாவியை மன்னித்து தூய்மையான புதுவாழ்வு வாழ இயேசு அருள்பாலித்தார் (லூக்.19:1-10). தன்னை

மறுதலித்த (லூக்.22:54-62), பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுடைய காதை வெட்டிய பேதுருவை (மத்.26:51-53) இயேசு மன்னித்தார். இயேசுவை பழித்துப்பேசி, கிறிஸ்தவர்கள் பலரை கொலைசெய்து, சபையைத் துன்புறுத்திய சவுலை மன்னித்து, ஒரு பக்தியுள்ள புனிதனாக மாற்றவில்லையா? (தி.பணி.26:9-11). விபச்சாரம், கொலை போன்ற பாவங்களைச் செய்த தாவீதை மன்னித்து "ஈசாயின் மகனான தாவீதை என் இதயத்துக்கு உகந்தவனாகக் கண்டேன் என் விருப்பம் அனைத்தையும் அவன் நிறைவேற்றுவான்" என்று கடவுள் கூறவில்லையா? (தி.பணி.13:22). இயேசுவால் மன்னிக்க முடியாத அளவுக்கு பெரும்பாவமென்று ஒன்றுமில்லை. சிலுவையில் தன்னை அறைந்த கொலைகாரக் கும்பலைக்கூட மன்னித்த பாசமுள்ள தெய்வம் உங்களையும் மன்னிக்கமாட்டாரா? (லூக்.23:27). ஒரு காலத்தில் இயேசுவின் ஊழியங்களுக்கு விரோதமாய் எழும்பி, அவருடைய அடியவர்களைத் துன்புறுத்திய ஆயிரக்கணக்கான பாவிகள், இன்று இயேசுவின் அன்பை விளக்கும் நற்செய்திக் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தைரியமாக இயேசுவிடம்

Top

வாருங்கள் அவர் உங்கள் வாழ்வை மாற்றி புனிதனாக மாற்றுவார். தன்னைத் தாழ்த்தி இறைவனிடம் ஒப்படைத்த எவரையும் இயேசு நிராகரிப்பதில்லை தாழ்மையுள்ளவர்களை இயேசு புறந்தள்ளமாட்டார் (யோவா.6:37).

நம் பாவங்களை நாம் ஒப்புக்கொண்டால் கடவுள் நம் பாவங்களை மன்னித்;;து, குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார் (1யோவா.1:9). முன்பு நடந்தவற்றை மறந்து விடுங்கள் முற்கால நிகழ்ச்சிபற்றிச் சிந்திக்காதிருங்கள் (எசா.43:18)

## **75.** நான் ஏற்கெனவே முயற்சித்து தோற்றுவிட்டேன்.

நீங்கள் ஒருமுறை தேர்வு எழுதி தோற்றுவிட்டால் திரும்பவும் எழுதி வெற்றிபெற முடியாது என்று நினைக்கிறீர்களா? ஒருமுறை ஒரு தொலைபேசி எண்ணுக்கு அழைக்க முயன்று தொடர்பு கிடைக்காமல் திரும்பவும் சுநனயைட செய்யவில்லையா? கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி, அவர்

Top

வாக்களித்தப் பேரின்ப வாழ்வை பெற்றுக்கொள்ளமனஉறுதியோடிருங்கள் (எபி.10:36).ஒரு முறை நீங்கள் திருச்சபைக்கு வந்து பிரார்த்தனை செய்திருக்கலாம். அன்று நீங்கள் தனியாக பிரார்த்தனை செய்தீர்கள். இன்னும் ஒருமுறை கூட உங்கள் மனதை இறைவனுக்கு விட்டுக்கொடுங்கள். உங்களுக்காக சபையார் அனைவரும் பிரார்த்தனை செய்வார்கள்.ஏனென்றால் ‘பிறருக்காக கடவுளிடம் விண்ணப்பித்தால் தான் பிறரை நேசிக்கிறோம் என்று அர்த்தம்’ என்னும் உண்மை ஒவ்வொரு விசுவாசியும் தெரிந்திருக்க வேண்டும். உங்களுக்காக நாங்கள் பிரார்த்தனை செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்.

இந்து மதத்தை பொறுத்த வரையில் எல்லாமே ஜாதகப்படி தலைவிதிப்படிதான் நடக்கும் என்பார்கள். ஆனால், இயேசுவால் உங்கள் தலைஎழுத்தை மாற்றி எழுதமுடியும். சோர்ந்து போகாதீர்கள். எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.காணாமல் போன உங்கள் நிம்மதி தழைக்கும்படி உங்களுக்காக இலவசமாக பிரார்த்தனை செய்ய காத்திருக்கிறோம். ‘முயற்சி

Top

திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்’என்றுதிருவள்ளுவர் நம்மை உர்ச்சாகப்படுத்துகிறார். உங்களது தற்போதைய சூழ்நிலைகள் முழுவதும் எதிர்மறையாக இருக்கலாம். ஆனால், கடவுளின் பார்வையில் எல்லாம் துணியில்பட்ட தண்ணீர் போன்றது. தண்ணீர் மீது தரையைப்போல் நடந்தவர் உங்களையும் நடக்கப் பண்ணுவார். நாம் மனம் சோர்ந்து போகாதிருக்க இயேசு ஒரு உவமையை சொன்னார். அதை லூக்.18:1-7 வரையுள்ள வசனங்களில் வாசியுங்கள். நீங்கள் கடவுளுக்கு முக்கியமானவர். பெற்ற தாயினும் மேலான அன்புக்கு சொந்தத்காரர் இயேசு நிச்சயம் உங்கள் நிலையை மாற்றுவார்.

## **76.** நான் கிறிஸ்தவன் என்று அழைக்கப்பட தகுதியில்லை.

கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு குறிப்பிட்ட வயது, ஜாதி, கல்வி, தேசம், நிறம், பணம் என்னும் எந்த தகுதியும் தேவையில்லை. எந்த நாட்டை சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்த மதத்து,

Top

இனத்து மக்களானாலும், வெள்ளையர்கள் கறுப்பர்கள் என்ற பாகுபாடின்றி, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றி யாரானாலும் கிறிஸ்துவின் கொள்கைளைப் பின்பற்றலாம். படித்தவரும் படிக்காதவரும் கிறிஸ்துவைப் பின்பற்றலாம். யாரானாலும் இயேசுவின் அன்பை அனுபவிக்கலாம்.

ஒருமுறை, "நான் இரட்சிக்கப்பட வேண்டுமானால் என்ன தகுதி வேண்டும்?" என்று ஒரு போதகரைப் பார்த்து ஒருவர் கேட்டார். "இரட்சிக்கப்பட வேண்டுமானால் பாவியாக இருக்கவேண்டும்" என்று போதகர் பணிவாகப் பதிலுரைத்தார். இயேசு பரிசுத்தவான்களைத் தேடி வரவில்லை பாவிகளை தேடியே வந்தார். இயேசு உலகத்தில் மனிதவடிவத்தில் வாழ்ந்த நாட்களில் பாவிகளோடு செலவு செய்த நேரம்தான் அதிகம். அதனால்தான் பரிசேயர்கள் என்னும் மத அடிப்படைவாதிகள் இயேசுவை இகழ்ந்து பேசும்போது,அவர் ஆயக்காரர்களோடும் (வரிவசூலிப்பவர்கள்) பாவிகளோடும் உணவு உண்கின்றாரே என்றனர். அவர்களிடம் இயேசு, "நோயற்றவருக்கு அல்ல,நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை" (மத்.9:11,12)

Top

என்றார். ஆக, இயேசுவின் மீட்பைப் பெற்றுக்கொள்ள என்ன தகுதி தேவையோ அந்த தகுதி உங்களிடம் உள்ளது. கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றை தெரிந்து கொண்டார். வலியோரை வெட்கப்படுத்த வலுவற்றவன் என உலகம் கருதுபவனை தெரிந்துகொண்டார். கடவுளுக்கு திறமைசாலிகளும், பணக்காரர்களும் தேவை தான்.ஆனால், அவர் முட்டாள்களை திறமைசாலிகளாக மாற்றும் வலிமையுடையவர். எந்த தகுதியும் இல்லாதவர்களையும் பயன்படுத்தி பெரியவைகளை சாதிக்கும் தெய்வமே தெய்வம்.

## 77. எனக்கு ஞாயிற்றுக்கிழமையும் வேலை உண்டு.

ஞாயிறு ஆராதனையை முன்னிட்டு நீங்கள் வேலை செய்யும் நிறுவனத்தாரிடம் விடுப்பு கேட்டு விண்ணப்பிக்கலாம். விடுப்பு கிடைக்காத பட்சத்தில் சபையில் நடக்கும் இடைக்கூட்டங்களில் பங்கெடுங்கள். அப்படியே ஞாயிற்றுக்கிழமை ஒழுங்காக விடுப்பு கிடைக்கும் ஒரு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்க

Top

பிரார்த்தனை செய்து முயற்சி செய்யுங்கள். பரமேஸ்வரன் உங்கள் இதயத்தைப் பார்க்கிறார். கடவுளை ஞாயிற்றுக்கிழமைதான் ஆராதிக்க வேண்டும் என்றோ, சனிக் கிழமைதான் ஆராதனை நாள் என்றோ வேதாகமத்தில் எந்த வசனக் குறிப்புகளும் இல்லை. கடவுளை என்றும் எப்போதும் எங்கும் தொழுது கொள்ளலாம். வாரத்தில் ஒரு நாள் மட்டும்தான் கடவுளை ஆராதிக்க வேண்மென்றொ மற்ற நாட்களில் ஆராதிக்கக் கூடாது என்றோ சட்டம் இல்லை. ஓய்வு நாளை மனிதனுக்காக படைத்தாரே தவிர மனிதனை ஓய்வு நாளுக்காக படைக்கவில்லை. முதல் நூற்றாண்டில் விசுவாசிகள் அனுதினமும் சபையில் கூடினர் (தி.பணி.2:41-47, 5:1-17). உங்களுக்கு புதிய வேலை தேடுவதில் சிக்கல் இருந்தால் உங்கள் சபை ஊழியரை அணுகுங்கள். நிச்சயமாக அவர்கள் உங்களுக்கு உதவி செய்யவேண்டும்.

Top

## **78.** நான் ஒரு அரசியல்வாதி. கிறிஸ்தவம் அரசியல்வாதிகளுக்கு ஒத்துவருமா?

நிச்சயமாக ஒத்துவரும். இன்று 90% அரசியல்வாதிகளும் உண்மையற்று தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு தொண்டு செய்வதாக தங்களை மக்களுக்கு வெளிக்காட்டினாலும், தங்கள் பணப்பைகளை தந்திரமாக நிரப்புவது தான் அவர்களுடைய முக்கிய நோக்கமாக உள்ளது. இந்நிலையில் ஒருவசனத்தை நினைப்பூட்ட ஆசைப்படுகிறேன்.பணஆசை உள்ளவர்களிடம் இயேசு பேசும்போது “ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கி கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?”(மாற்:8:36,37). உயிரையே பணயம் வைத்து அநியாயமாக சம்பாதிக்கிறார்கள். ஆனால், உண்மையான மன அமைதியை இழந்துவிடுகிறார்கள். என்ன நோக்கத்தோடு அரசியலுக்கு வருகிறார்களோ அந்த நோக்கம் நிறைவேறினாலும்,சம்பாதித்த பணத்தை அனுபவிக்க உயிர்

Top

தேவை அல்லவா? சட்டத்திற்கு புறம்பாக பணம் சம்பாதிக்கும் அரசியல்வாதிகள் எல்லாருமே அன்னா ஹசாரே போன்ற தேசப்பற்றாளர்களுக்கு விரோதமாய் நிற்கிறார்கள். நாம் கோடிக்கணக்கில் சம்பாதித்துவிட்டு அவற்றை ஆனந்தமாய் அனுபவிக்கமுடியாமல், செத்துச்செத்து பிழைப்பதெல்லாம் ஒரு பிழைப்பா?

நான் இப்படியெல்லாம் கூறினாலும் காமராஜர்,கக்கன் போன்ற தியாகிகளும் இந்த மண்ணில் வாழ்ந்த முன்னுதாரணமான அரசியல்வாதிகள்தான். தங்களுக்கென்று வாழாமல், நாட்டுக்காகவே வாழ்ந்த உயர்ந்த மனிதர்கள் இன்று எங்கே போய்விட்டர்கள்? பிறர் நலத்தோடு மக்களுக்காக உழைக்க, உண்மையோடு உயர்ந்த நோக்கங்களோடு சுயநலமில்லாமல் பாடுபட அரசியல்வாதிகள் ஆயிரக்கணக்கில் தேவை. அப்படிப்பட்டவராக நீங்கள் ஏன் இருக்க கூடாது? மக்கள் நலன் ஒன்றே உங்கள் இலட்சியமானால், உங்களுக்கு இயேசுவின் கொள்கை எப்போதுமே முட்டுக்கட்டையாக நிற்காது.எனவே நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு தேவ மக்களோடு வாழ

ஒப்புக்கொடுங்கள். நிம்மதியாக வாழும் ஒரு சாதாரண மனிதன், நிம்மதியில்லாத பணக்காரனைவிட பெரியவன் என்பதை நினைவில் கொண்டு பரமாத்மாவிடம் உங்கள் வாழ்வை ஒப்புக்கொடுங்கள். கடவுள் உங்களை வழி நடத்தட்டும்.

## 79. நான் பின்வாங்கி விட்டேன்.

நீங்கள் பின்வாங்கி விட்டீர்களென்று சோர்ந்து போக வேண்டாம். இஸ்ரயேல் மக்கள் பாவம் செய்தபின் திரும்பவும் அவர்களை ஆண்டவர் மன்னித்து மறுவாழ்வு கொடுத்தார். “என் பிள்ளைகளே, உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை, உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்” (கலா.4:19). “சகோதர சகோதரிகளே, ஒருவர் ஏதேனும் குற்றத்தில் அகப்பட்டால் தூயஆவியைப் பெற்றிருக்கும் நீங்கள் கனிந்த உள்ளத்தோடு அவரைத் திருத்துங்கள்” (கலா.6:1) என்று கலாத்திய சபையாருக்கு பவுல் கடிதம் எழுதினார். மேற்கண்ட வசனங்களிலிருந்து, பின்வாங்கியவர்கள் திரும்பவும்

Top

மறுவாழ்வடைய முடியுமென்று அறிகிறோம். கிறிஸ்துவோடு மூன்றரை ஆண்டுகள் பணிசெய்த பேதுரு தன் உயிருக்கு பயந்து இயேசுவை எனக்கு தெரியாதென்று மதவாதக் கொலைகாரர்களிடம் பொய் சொன்னார். ஆனால், இயேசு அவனை மன்னித்து மறுவாழ்வு கொடுத்தார். தாவீது உரியாவின் மனைவியிடம் விபச்சாரம் செய்து, உரியாவைக் கொன்றான். ஆனால், அவன் மனம்வருந்தி மன்னிப்புக் கோரியவுடன் தேவன் மன்னித்தார்;. இவர்களெல்லாரும் ஆண்டவரைத் தெரியாதவர்களல்ல மிகப்பெரிய ஆன்மீகத் தலைவர்கள் என்று வேதம் கூறுகிறது. நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் மீண்டும் எழுந்து விடுவான் (நீதி.24:16). கவலைப்பட வேண்டாம். பரமேஸ்வரன் உங்களுக்கு கருணை காட்டுவார். நீங்கள் செய்த எல்லா குற்றங்களையும் தேவனிடம் அறிக்கையிட்டு விட்டுவிட்டால் அவர் திரும்பவும் உங்களை புதுப்படைப்பாய் மாற்றுவார் (1யோவா.1:8,9).

“நீ எந்நிலையிலிருந்து தவறி விழுந்துவிட்டாய் என்பதை நினைத்துப்பார். மனம்மாறு. முதலில் நீ செய்துவந்த செயல்களை

Top

இப்பொழுதும் செய். நீ மனம்மாறத் தவறினால், நான் உன்னிடம் வந்து, உனது விளக்குத்தண்டை அது இருக்கும் இடத்திலிருந்து அகற்றிவிடுவேன்" (தி.வெ.2:5) என்று இறைவன் எச்சரிக்கிறார். "இறுதி வரை மனஉறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர்" (மத்.10:22). கடந்ததை ஒரு கெட்ட கனவாக நினைத்து மனம்திரும்புங்கள். மேலும் ஆலோசனைகள் தேவையானால் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

## 80. எனது விரோதிகளை மன்னிக்க முடியாது.

உங்களால் முடியாததுதான். ஆனால், கடவுளால் முடியும் (மத்.19:26) என்று இறைவன் சொல்கிறார். மனிதனால் எல்லாம் முடியுமானால் கடவுளே தேவையில்லையே. என்னை விட்டு பிரிந்து உங்களால் எதுவும் செய்யமுடியாது (யோவா.15:5) என்றும் நம்புகிறவனுக்கு எல்லாம் முடியும் (மாற்.9:23) என்றும் இயேசு தெம்பூட்டுகிறார் நம்மை வலுவூட்டும் தூயஆவியார் நம்மோடு இருந்தால் நம்மால் எதையும் சாதிக்க முடியும்

Top

(பிலி.4:13). பிறரை மன்னிக்கும் அன்பை இயேசு நமக்குத் தருவார் (உரோ.5:5). அந்த அன்பின் ஆவியானவர் நமக்குள் வரும்போது மன்னிக்கும் வல்லமையைப் பெற்றுக்கொள்வோம் (தி.பணி.1:8).

மத்.18:23-35 வரையுள்ள வசனங்களை வேதத்தில் வாசித்துப் பாருங்கள். நாம் பிறரை மன்னிக்காவிட்டால் ஆண்டவரும் நம்மை மன்னிக்க முடியாது என்று வேதம் கூறுகிறது. எங்களுக்கு எதிராக குற்றம் புரிந்துள்ளோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும் (மத்.6:12) என்று நாம் கடவுளிடம் ஜெபிக்க வேண்டுமென்று இயேசு கற்றுக்கொடுத்தார். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். கடவுள் உங்களை மன்னித்ததுபோல நீங்களும் மன்னிக்கவேண்டும் (கொலோ.3:13). ஒருவருக்கொருவர் நன்மைசெய்து பரிவுகாட்டுங்கள். கடவுள் உங்களை கிறிஸ்து வழியாக மன்னித்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள் (எபே.4:32) என்று திருத்தூதர் பவுலடிகள் அறிவுறுத்துகிறார்.

Top

விவேகமுடையோர் எளிதில் சினமடையார். குற்றம் பாராதிருத்தல் நன்மதிப்பைத் தரும் (நீதி.19:11) என்று சாலமோன் ஞானி கூறுகிறார். நாம் ஒரு தவறு செய்யும்போது பிறர் நம்மை மன்னிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். இப்படியிருக்க பிறரை நாம் மன்னிக்க முடியாமல் இருப்பது தவறல்லவா? இயேசு கூறினார், பிறர் உங்களுக்கு செய்ய வேண்டுமென நீங்கள் விரும்புகிறவற்றை எல்லாம், நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள் (மத்.7:12). உங்கள் சுயபெலத்தால் மன்னிக்க முடியாது. ஆனால், நீங்கள் ஆண்டவரோடு இணையும்போது அது எளிதாகிவிடும்.

## 81. கடவுள் இல்லை

மனித இயல்பை மட்டும் உடைய ஒருவர் கடவுளின் ஆவிக்கு உரியவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. அவை அவருக்கு மடமையாய்த் தோன்றும். அவற்றை அவரால்

Top

அறிந்துகொள்ளவும் முடியாது. ஏனெனில் அவற்றைத் தூய ஆவியின் துணைகொண்டே ஆய்ந்துணர முடியும் (1கொரி.2:14)

ஒருமுறை ஒரு நாத்திகரிடம், நீங்கள் ஏன் கடவுளை நம்புவதில்லை? என்று கேட்டேன். கடவுளை நான் இதுவரை கண்டதில்லை அதனால் எனக்கு கடவுள் நம்பிக்கையில்லை என்று பதிலளித்தார். 'என் கண்ணால் கடவுளைக் கண்டால் மட்டும்தான் நம்புவேன்' என்று கூறுவோர் நம்மிடையே பலருண்டு. நம் உடலுக்குள் குடல், நுரையீரல், இதயம், மூளை இவையெல்லாம் உண்டு என்று கண்களால் பார்க்காமலேயே நாம் எப்படி நம்புகிறோம்? நம் கண்களால் நம் மூளையை இதுவரை பார்க்கவில்லை என்பதால் நமக்கு மூளையே இல்லை என்று கூறமுடியுமா?

ஒருமுறை ஒரு நாத்திகர், "என் தாய், தந்தைதான் என் தெய்வம்" என்று கூறினார். உடனே நான், "உங்கள் அப்பா என்று ஒரு நபரை உங்கள் தாய் சுட்டிக்காட்டினார்கள் அதை நீங்கள் நம்பி ஏற்றுக்கொண்டீர்கள். ஆனால், நிஜமாகவே அவர்தான் உண்மையான தந்தை என்று எப்படி கண்டுபிடித்தீர்கள்? மரபணு

Top

பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தித்தான் தந்தையாக ஏற்றுக் கொண்டீர்களா? உங்கள் அம்மாதான் உண்மையான தாய் என்று எப்படி நம்புகிறீர்கள்? நீங்கள் உங்கள் தாயின் வயிற்றினின்று வெளியே வரும்போது பார்த்தீர்களா? கண் திறக்கவே பலமணி நேரமாகி விடுகிறதே" என்றேன். அந்த நாத்திகரால் ஒரு பதிலையும் சொல்ல முடியவில்லை. பெரியார் என்று ஒரு நபர் உயிரோடு இருந்ததாக வரலாறு கூறுவதை நாத்திகர்களும், ஆத்திகர்களும் நம்புகிறார்கள். பெரியாரை நான் பார்க்கவில்லை என்பதற்காக, 'பெரியார் என்று ஒருவர் பிறக்கவோ வாழவோ இல்லை' என்று நான் கூறினால் வரலாற்று அறிஞர்கள் என்னைப் பார்த்து என்ன கூறுவார்கள்?

நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும், தனிப்பட்ட முறையில் தெய்வ நம்பிக்கை இல்லாமல்தான் இருந்தேன். ஒரு நாள் என் தந்தை மரணத்துக்கு நெருக்கமான ஒரு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு என் தந்தையாரை எடுத்துச் சென்றும் விடுதலை கிடைக்கவில்லை. மருத்துவர்களால் நோயை கண்டுபிடிக்கவே முடியவில்லை.

Top

அப்போது ஒரு ஆவிக்குரிய சபையின் போதகர் தன் மனைவியோடு வந்து என் அப்பாவுக்காக இறைவனிடம் கண்ணீரோடு ஜெபித்தார்கள். அவர்களுடைய ஜெபத்தைக்; கேட்ட கடவுள் அந்நேரமே அப்பாவை முழுமையாகக் குணமாக்கினார். மருத்துவர்களால் கைவிடப்பட்டு, நம்பிக்கையிழந்த எங்கள் குடும்பத்துக்கு ஒரு புத்துயிர் கிடைத்தது. அந்த சந்தோஷத்தை எப்படி விளக்குவதென்றே தெரியவில்லை. கடவுளில்லை என்று அறைகுறை அறிவோடு பிதற்றிக்கொண்டிருந்த நான் வாயடைத்துப் போனேன். கடவுள் உயிரோடிருக்கிறார் அவர் மக்களுக்கு நன்மை செய்கிறார் என்னும் கொள்கையை சந்துகள் பொந்துகள் எல்லாம் நுழைந்து பேச ஆரம்பித்தேன். அநேகர் கடவுளை கண்டடைந்தார்கள். கடவுளைக் கண்களால் காணமுடியாமல் இருந்தாலும் அவருடைய வல்லமையை நாம் உணரமுடியும். மின்சாரம், காற்று இவைகளை கண்ணால் பார்க்க முடியவில்லை என்பதால் அவைகள் தேவையில்லை என்று ஒதுக்க முடியுமா?

Top

சென்னை சகோதரர் தினகரன் என்ற இறைப்பணியாளரின் பிரார்த்தனைப் பெருவிழாவிற்கு லட்சக்கணக்கான மக்கள் கூடிவருவார்கள். பலர் அற்புதங்களைப் பெற்றுக்கொண்டு தங்கள் சொந்த பந்தங்களிடமும் நண்பர்களிடமும் சென்று தங்கள் புதுவாழ்வைப் பற்றி சாட்சியம் சொல்லும்போது ஆயிரக்கணக்கான புதிய மக்களும் அக்கூட்டங்களில் பங்கெடுத்து அற்புதங்களை பெற்று இன்றும் ஆண்டவரைப் புகழ்கிறார்கள். அற்புதங்களை கண்கூடாக கண்ட மக்களிடம் போய் ‘கடவுள் இல்லை’ என்று கூறமுடியுமா? சகோதரர் மூலமாக அற்புதங்களை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் உயர்ந்ததைப் பார்த்த தமிழக அரசு, அவர் செய்த சமுதாய சேவையை பாராட்டி, அவரது மறைவுக்குப்பின் சென்னை அடையாரில் உள்ள ‘கிரீன்வேஸ் சாலை’ யின் பெயரை Dr. DGS தினகரன் சாலை’ என்று மாற்றியது. ஒரு மனிதனால் மக்களுக்கு எந்த லாபமுமில்லாமல் அவருடைய பெயரை அரசு மேன்மைப் படுத்துமா?
‘பெரியார்திடல்’ என்று சென்னை எழும்பூரில் ஒரு அரங்கமுண்டு. அங்கு நாத்திகர்கள் கூட்டம் நடத்துகிறார்கள். கிறிஸ்தவர்களும்

Top

கூட்டம் நடத்த அனுமதி அளித்துள்ளார் பெரியார். மற்றவர்களுக்கு பெரியார் அனுமதிக்கவில்லை. ஏன்? பெரியார் தனிப்பட்ட முறையில் மதவாதிகளுடைய சுயநலப்போக்கையும் கடவுளின் பெயரால் நடக்கும் அராஜகங்களையும், மூடநம்பிக்கைகளையும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் எதிர்த்துப்பேச நாத்திகத்தை ஒரு கருவியாக பயன்படுத்தினாரே தவிர, கிறிஸ்துவின் அன்புக்கொள்கையை ஒருபோதும் குறை கூறியதில்லை. கண்ணைமூடிக் கொண்டு 'உலகமே இருட்டாக இருக்கிறது' என்று கூறுவது புத்திசாலித்தனமா? கடவுளில்லை என்று மூடன் கூறுகிறான்; (தி.பா.14:1) என்று புனித வேதம் கூறுகிறது.

## **82.** கடவுள் இருந்தால் இவ்வுலகில் மக்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்?

முடிவெட்டும் அழகு நிலையங்கள் ஆயிரக்கணக்கில் இருந்தாலும், நாட்டில் பலர் பறட்டைத் தலையோடு

Top

அலங்கோலமாய் சுற்றுவதன் காரணம் என்னவென்று கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்களோ, அதுதான் இந்த கேள்விக்கும் பதில். வாழ்வையும் சாவையும், நன்மையையும், தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன் (இ.ச.30:15) என்கிறார் கடவுள். இதில் வாழ்வையும் நன்மையையும் தெரிந்து கொள்ள வேண்டியது நம் பொறுப்பு. இன்று உங்கள் முன்பாக ஆசியையும் சாபத்தையும் வைக்கிறேன். நான் இன்று உங்களுக்கு விதித்த உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளை நீங்கள் கடைபிடித்தால் ஆசீர்வாதமும், உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளைக் கடைபிடிக்காமல், நான் இன்று உங்களுக்கு விதித்த வழிகளிலிருந்து விலகி நடந்து, நீங்கள் அறியாத வேற்றுதெய்வத்தை பின்பற்றினால் சாபமும் உண்டாகும் (இ.ச.11:26-28).

சந்தைக்குப்போனால் உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும் ஊட்டச்சத்துமிக்க உணவு வகைகளும், உயிர்காக்கும் மருந்துகளும் கிடைக்கும். ஆனால் இதே சந்தையின் ஓரமாக

Top

சாராயக்கடையும் இருக்கிறது. இதில் எதை தெரிந்துகொள்ள வேண்டும் என்பது சந்தைக்கு செல்லும் நம்மைச் சார்ந்தது. ஒரு கடைக்கு ஒரு பொருள் வாங்கப் போனால் அது நல்ல பொருளா, நமது தேவையைப் பூர்த்தி செய்யுமா என அறிந்து, ஆராய்ந்து வாங்குவது நம் கையில்தான் இருக்கிறது. நாம் நலமோடு வாழ்வதும் வளம்குன்றி அழிவதும் நம்மைப் பொறுத்திருக்கிறது. ஊதாரியாக வாழ்ந்துவிட்டு கடவுளைக் குறை கூறுவதில் என்ன நியாயமிருக்கிறது? ஒரு பாதை ஒருவருக்கு நல்வழிபோலத் தோன்றலாம். ஆனால், முடிவிலோ அது சாவுக்கு நடத்தும் பாதையாகி விடும் (நீதி.14:12) என்று வேதம் நம்மை எச்சரிக்கின்றது. கடவுளில்லை என்னும் கொள்கை நம் பார்வைக்கு பகுத்தறிவுப் பாதைபோல் தெரியும்;. ஆனால்,அதைப்போன்ற ஆபத்தான பாதை வேறு எதுவுமே இல்லை. பாவம் செய்ய சாத்தான் ஒருவனைத் தூண்டும்போதுதான் அவன் சாத்தான் வசப்பட்டு அந்த பாவத்தைச் செய்துவிடுகிறான். திருடுபவர்கள், திருட்டு ஆவிக்கு அடிமைப் பட்டிருக்கிறார்கள். விபச்சார ஆவிக்கு அடிமைப்பட்டவர்கள், தாங்கள் முயற்சி செய்தாலும் விபச்சார

பாவத்திலிருந்து வெளியே வரமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். பொதுவாக மனிதன் குற்றம் செய்தால் அதன் மொத்த பொறுப்பும் மனிதன்தான் என்று நாம் நினைக்கத்தோன்றும். ஒரு மனிதன் மற்றொருவனை கொலை செய்துவிட்டால் அந்த கொலைகாரனுக்கு தூக்குத்தண்டனை கொடுத்து அவனைக் கொன்றுவிடுகிறது அரசாங்கம். ஆனால், பாவத்தை கட்டுப்படுத்தும் வலிமை இயேசுவின் அன்புக்கு மட்டுமேயுண்டு என்னும் சத்தியத்தை அரசினர் அறிந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்.

ஒருவன் தன் மனைவியோடு மட்டும்தான் வாழவேண்டும். "தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் விபச்சாரம் செய்கிறான்" (லூக்.16:18) என்று பைபிள் எச்சரிக்கிறது. ஆனால், என் கடவுளுக்கு இரண்டு மனைவிகள், ஆதலால் நானும் இரண்டு மனைவிகளை வைத்திருக்கிறேன் என்று கூறுவோரும் நம் பாரத மண்ணிலுண்டு. என் கடவுளுக்கு ஆறாயிரம் கோபியர்கள் உண்டு எனவே நான் எத்தனை பேரிடம் வேண்டுமென்றாலும் சேர்ந்து வாழலாம் என்று மனம் போன

Top

போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் பலருக்கு எயிட்ஸ் என்னும் நோய் இலவச இணைப்பாக தொற்றிக்கொள்ளும். ஒருத்தியை வைத்துக்கொண்டு வாழ்வை சமாளிப்பதே கடினமாக இருக்;கும் குழப்பபடியான இவ்வுலகில், பலரோடு எப்படி நிம்மதியாக வாழமுடியும்? இப்படித்தான் வாழவேண்டும் என்னும் ஒரு வரைமுறையோடு வாழ்வோருக்கு அதிகம் துன்பமில்லை. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்னும் முரண்பாடான வாழ்க்கை வேதனை மிகுந்தது அல்லவா! எயிட்ஸ் நோய் பெரும்பாலும் பாலியல் முறைகேடுகளால் உருவாகிறது. இந்த கொடிய நோய்க்கு எத்தனை பேர் பலியாகிவிட்டார்கள். உலகிலேயே எயிட்ஸ் நோயாளிகள் அதிகமாக இருப்பது இந்தியாவில்தான் என்னும் கசப்பான உண்மையை அண்மையில் ஒரு பத்திரிக்கையில் வாசித்தேன். கடவுள் காட்டிய வரைமுறையை மிஞ்சி வாழ்ந்துவிட்டு கடவுளை குறைசொல்வதில்; என்ன நியாயமிருக்கிறது? மெகாசீரியல்களில் வரும் காட்சிகளைப் பார்த்து, நம் தாய்மார்கள் தொலைக்காட்சி பெட்டியின் முன் உட்கார்ந்து கதறிக்கதறி அழுகிறார்களே! இவர்கள் அழுவதற்கு காரணம் கடவுளா?

Top

பணஆசை, புகழ்ஆசை, பெண்ஆசை எல்லாவற்;றினின்றும் விடுபட ஆசை வேண்டும். அப்போது துன்பமின்றி வாழலாம். ஒரு பிராமணருடைய வீட்டிற்குள் காய்கறி கொண்டு சென்ற ஒரு வியாபாரியை வீட்டிற்குள் அனுமதிக்காமல் வெளியே போகச் சொன்னார்கள் அவ்வாள். ஏனென்றால், அவர் பிராமணர் அல்லாதவராம். வெளியேறிய அந்த வியாபாரி, 'சீ..! என்னை இவ்வளவு கேவலப்படுத்திவிட்டார்களே' என்று ஆதங்கப்படுகிறார். இவர் இவ்வாறு புறக்கணிக்கப்படுவதன் காரணம் கடவுளா? உண்மையாகவே கடவுள் மேல்ஜாதி, கீழ்ஜாதி என்று மக்களைப் பிரித்திருப்பாரா? யோசிக்க வேண்டாமா? கடவுளின் பெயரில் மனிதன் செய்த சதிவேலை அல்லவா! உண்மையான சாந்தீஸ்வரனை தேடினால் நிம்மதி உண்டு. ஒரு குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் வண்டியை ஓட்டக்கூடாது என்று தெரிந்தும் அதிக வேகத்தில் ஓட்டி, விபத்திற்குள்ளாகி, ஒருவர் இறந்துவிட்டால் பழியை கடவுள் மீது போட முடியுமா?

Top

**83.** எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் தானே. இரக்கமுள்ள இறைவன் எப்படி தன் மக்களை நரகத்தில் போடுவார்?

நரகம் மனிதனுக்காக படைக்கப்பட்டதல்ல அது பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் படைக்கப்பட்டது. இயேசு இரக்கமுள்ள கருணாமூர்த்தியாக நம்மை இரட்சிக்க வந்த இரக்கத்தின் பெருங்கடல்தான். எல்லா மனிதரும் மீட்கப்படவும், உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அந்த ஜெகத்துரட்சகன் விரும்புகிறார் (1திமொ.2:4). அனைத்து மக்களுடைய மீட்புக்காகவும்தான் அவர் சிலுவையில் மரித்தார் (1திமொ.2:6, 1யோவா.2:2). ஆனால், தன் போதனைகளை கேட்டு அதன்படி வாழ விருப்பம் இல்லாதவர்களுக்கும், தன் சித்தப்படி வாழ்வோருக்கும் பிரதிபலன் கொடுத்தாக வேண்டும் என்னும் நீதியின்படி பரலோகம், நரகம் என்பது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. கடவுள் எவ்வளவு அன்புள்ளவரோ, அவ்வளவு நீதியுள்ளவர். ஒரு தாய்க்கும் கடவுளுக்கும் உள்ள வித்தியாசங்களில் ஒன்று இது. உலக நீதிமன்றத்தாரின் கண்களுக்கு தப்பித்துவிடும் புத்திசாலி குற்றவாளிகளை

Top

துரத்திப்பிடித்து நீதியான தண்டனையைக் கொடுக்க,முழு உலகத்திற்;கும் பொதுவான ஒரு நீதியுள்ள தெய்வசக்தி இருப்பது தேவையல்லவா!

ஒரு குழந்தையை தண்டிக்க அக்குழந்தையை பிரசவ வேதனைப்பட்டு பெற்றெடுத்த தாய்க்கு மட்டுமே உரிமையுண்டு. அதுபோல, பாவிக்காக தன் உயிரையே கொடுத்தவர்தான், அவரது தியாகத்தை ஏற்றுக்கொள்ளாத பாவியை நரகத்தில் தள்ளவும் தகுதியுள்ளவர்.

தீங்கு புரிவோர் தீங்கு புரிந்து கொண்டே இருக்கட்டும் இழுக்கானவற்றை செய்வோர் இழுக்கானவற்றை செய்து கொண்டே இருக்கட்டும். தூயோர் தூய்மையானவற்றை செய்து கொண்டே இருக்கட்டும். இதோ, நான் விரைவில் வருகிறேன். அவரவர் செயலுக்கு ஏற்ப அவரவருக்கு நான் அளிக்கவிருக்கின்ற கைம்மாறு என்னிடம் உள்ளது (தி.வெ.22:12) என்று இயேசு கூறினார். நம்முடைய மரணத்திற்கு பின் பரலோகம், நரகம் என்னும் இரண்டு இடங்களில் ஏதாவது

Top

ஓரிடத்துக்கு நாம் சென்றடைய வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு வேத பகுதி இதோ.

வானதூதர் அனைவரும் புடைசூழ மானிடமகன் மாட்சியுடன் வரும்போது, தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெள;வேறாக பிரித்து செம்மறியாடுகளை வலப்பக்கத்திலும், வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவதுபோல், அம்மக்களை அவர் வெளவேறாக பிரித்து நிறுத்துவார். பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, “என் தந்தையிடமிருந்து ஆசிபெற்றவர்களே வாருங்கள் உலகம் தோன்றியதுமுதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், நான் பசியாயிருந்தேன், நீங்கள் உணவளித்தீர்கள் தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள் அந்நியனாயிருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு

Top

ஆடையணிவித்தீர்கள் சிறையிலிருந்தேன், என்னைத் தேடிவந்தீர்கள்" என்பார். அதற்கு நேர்மையாளர்கள், "ஆண்டவரே எப்பொழுது உம்மை பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம்? அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராக கண்டு ஏற்றுக்கொண்டோம்? அல்லது ஆடையில்லாதவராக கண்டு ஆடையணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக்கண்டு தேடிவந்தோம்?" என்று கேட்பார்கள்.அதற்கு அரசர், "மிகச்சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்களென உறுதியாய் உங்களுக்கு சொல்லுகிறேன்" எனப் பதிலளிப்பார்.

பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே என்னிடமிருந்து அகன்று போங்கள் சாத்தானுக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில்,நான் பசியாயிருந்தேன், நீங்கள் எனக்கு

Top

உணவளிக்கவில்லை தாகமாய் இருந்தேன் என் தாகத்தைத் தணிக்கவில்லை நான் அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை”என்பார்.அதற்கு அவர்கள், “ஆண்டவரே எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அந்நியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக்கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்?” எனக் கேட்பார்கள். அப்பொழுது அவர், “மிகச்சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” எனப் பதிலளிப்பார். இவர்கள் முடிவில்லா தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நிலைவாழ்வு பெறவும் செல்வார்கள் (மத்.25:31-41). மேற்கண்ட வசனங்களிலிருந்து உலகத்துக்கு ஒரு முடிவு உண்டு என்றும், பாவிகளும், தூயவர்களும் வெள;வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் அறிகிறோம்.

Top

உங்கள் கையோ, காலோ, உங்களை பாவத்தில் விழச்செய்தால் அதை வெட்டி எறிந்துவிடுங்கள். நீங்கள் இருகைகளுடனோ, இருகால்களுடனோ என்றும் அணையாத நெருப்பில் தள்ளப்படுவதைவிட, கைஊனமுற்றோராய் அல்லது கால்ஊனமுற்றோராய் இங்கு வாழ்ந்து நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது (மத்.18:8). கோழைகள், நம்பிக்கை இல்லாதோர், அருவருப்புக்குரியோர், கொலையாளிகள், விபச்சாரத்தில் ஈடுபடுவோர், சூனியக்காரர், சிலைவழிபாட்டினர், பொய்யர்; ஆகிய அனைவருக்கும் நெருப்பும் கந்தகமும் எரியும் ஏரியே உரிய பங்கு ஆகும். இதுவே இரண்டாம் சாவு (தி.வெ.21:8). சில இடங்களில் தன்னுடைய பிள்ளைகள் என்றும், பிசாசின் பிள்ளைகள் என்றும் இயேசு பிரித்து பேசி இருக்கிறார் (யோவா.8:42-44). நேர்மையாக செயல்படாதவரும் தம் சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாத வரும் கடவுளிடமிருந்து வந்தவர்களல்ல. இதனால் ‘கடவுளின் பிள்ளைகள்’ யாரென்றும் ‘சாத்தானின் பிள்ளைகள்’ யாரென்றும் புலப்படும் (1யோவா.3:10). கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று சல்லாபித்து வாழ்ந்த ஒரு பணக்கார பாவி தன் மரணத்திற்கு

Top

பின்பு எங்கு போய் சேர்ந்தான் என்பதை லூக்.16:19-31 என்ற வேதப்பகுதியில் காணலாம்.படிக்கட்டுப் பயணம் பரலோகப் பயணம் என்று சென்னை டவுன் பஸ்ஸில் எழுதியிருந்தனர். அதை வாசித்துவிட்டு படிகட்டில் நின்று பயணம் செய்தால் நரகத்துக்குத் தப்பிவிடலாமென்று தவறாக எண்ணவேண்டாம். ‘படிக்கட்டில் நின்று பயணம் செய்தால் கால்தவறி கீழேவிழுந்து இறந்துவிடுவாய். உள்ளே போனால் பத்திரமாக இருக்கலாம்’ என்பதுதான் அதன் பொருள்.

## 84. முஸ்லீம்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பை ஏற்றுக் கொள்கிறார்களா?

ஆப்பிரிக்க நாடுகள், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தோனேஷியா, இந்தியா மற்றும் வளைகுடா நாடுகளில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் இயேசுவின் அன்பை புரிந்து கொண்டு மீட்கப்படுகிறார்கள். எனக்கு தெரிந்தே ஆயிரக்கணக்கான இஸ்லாமியர் கிறிஸ்துவைப் பின்பற்றிக்

Top

கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களைப் பட்டியலிட வேண்டுமானால் இந்தச் சிறுநூல் போதாது. இஸ்லாத்தைப் புறக்கணித்த பலர், முஸ்லீம் மதவாதிகளால் கொலை செய்யப்பட்டிருப்பதால், அதை வெளியிட விரும்பவில்லை. எனக்குத் தெரிந்த ‘அன்சாரி’ என்ற எனது நண்பர் ஒருவர், தான் கிறிஸ்துவின் கொள்கைகளை பின்பற்றிய ஒரே காரணத்தால் தனக்கு வரவேண்டிய சொத்துரிமை எல்லாவற்றையும் குடும்பத்தார் பறித்துவிட்டனர் என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் மிகவும் வேதனைப்பட்டேன். ஆனாலும் அவருடைய குடும்பத்தார் அவரைக் கொலை செய்யாமல் விட்டுவிட்டது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அநேக இஸ்லாமியர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒரே காரணத்தால் வீட்டைவிட்டே துரத்தப்பட்டிருக்கிறார்கள். பலர் இஸ்லாமிய மதவெறியர்களால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இயேசு கூறினார்: “நீ உன்னை நேசிப்பது போல் பிறரையும் நேசி” (கலா.5:14) “உங்களுக்கு தீமை செய்தவர்களுக்கு நன்மையை செய்யுங்கள் உங்களை சபிக்கிறவர்களை

Top

ஆசீர்வாதம் பண்ணுங்கள் உங்கள் பகைவரிடம் அன்பு காட்டுங்கள் உங்களை துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் மன்றாடுங்கள் இப்படி செய்தால் நீங்கள் விண்ணகத்தந்தையின் மக்கள் ஆவீர்கள்” (மத்.5:44). இந்த அன்புக் கொள்கையை பைபிளைத்தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது.

பைபிளுடைய பழையஏற்பாடு முழுவதும் மக்கள் செய்த தவறுகளுக்கு கடுமையான தண்டனைகள் கொடுக்கப்பட்டன. அவற்றினின்று மக்களைக் காப்பாற்ற இறைவன் தன் குமாரன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர் வந்து மக்களுக்கு அன்பைக் கற்றுக் கொடுத்து ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கினார். அவர் வந்து சுமார் 500 ஆண்டுகளுக்குபின், அந்த அன்புக் கொள்கையை தவறு என்று மக்களுக்கு பரப்ப முகமது முயன்றார். மக்களுடைய பாவங்களுக்காக பரமேஸ்வரனே மனித வடிவத்தில் இறங்கி வந்து, தண்டனையை ஏற்றுக்கொண்டார் என்னும் சத்தியத்தை தவறென்று அவர் போதித்தார். ‘இயேசு இறக்கவே இல்லை’ என்று

Top

பொய்பிரச்சாரம் செய்தார். அவரது கொலைகாரக் கொள்கையை பின்பற்ற பலரை திரட்டினார்.

இஸ்லாம் ஒரு இனிய மார்க்கம் அல்ல கொடிய மார்க்கம் என்றும் அன்பு, பொறுமை, மனிதநேயம், மன்னிப்பு என்ற வார்த்தைகளுக்கு அதில் இடமேயில்லை என்னும் பேருண்மையை பல்லாயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் அறிந்து இஸ்லாத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். தற்பாதுகாப்புக்காக மனமாற்ற விபரங்கள் இரகசியமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஏனென்றால், இஸ்லாத்தை விட்டு ஒருவர் வெளியே வந்தால் அவர் கொலை செய்யப்பட வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது.

## **85.** பழைய ஏற்பாட்டுச் சட்டத்தையும் கடவுள்தானே கொடுத்தார். ஏன் புதிய ஏற்பாட்டை உருவாக்கினார்?

ஒரு நல்ல கேள்வி கேட்டீர்கள். எது பாவம், எது பாவமல்ல என்றும், ஒரு பாவம் செய்தால் அதற்கு தண்டனை என்ன என்றும்

Top

மனிதன் தெரிந்துகொள்ளத்தான் கடவுள் பழைய ஏற்பாட்டுத் திருச்சட்டத்தைக் கொடுத்தார். திருச்சட்டம் வழியாய் அன்றிப் பாவம் என்ன என்று நான் அறிந்திருக்கமாட்டேன். எப்படியெனில், “பிறருக்குரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே” என்று சட்டம் சொல்லாமல் போயிருந்தால், அவ்விருப்பம் என்ன என்றே அறிந்திருக்க மாட்டேன் (உரோ.7:7). திருச்சட்டம் தரப்படுமுன்பும் உலகில் பாவம் இருந்தது ஆனால், சட்டம் இல்லாதபோது அது பாவமாகக் கருதப்படவில்லை (உரோ.5:13). திருச்சட்டம் மூலம் தான் பாவத்தின் விளைவு என்ன என்றும், கடவுள் எவ்வளவு நீதியுள்ளவர் என்றும் மனிதனுக்கு தெரிந்தது. மனிதர்கள் பாவிகள் என்பதை சட்டம் அவர்களுக்கு உணர்த்துகிறது (உரோ.3:20) திருச்சட்டம் இறைவனின் சினத்தை வருவிக்கிறது. சட்டம் இல்லையெனில் அதை மீறவும் இயலாது (உரோ.4:15). திருச்சட்டத்துக்கு உட்பட்ட எவரும் பாவம் செய்தால், அச்சட்டத்தாலேயே தீர்ப்பளிக்கப்படுவர் (உரோ.2:12) என்று பவுல் எழுதுகிறார். மனிதன் பாவம் செய்யும் போதெல்லாம் அவனைக் கட்டுப்படுத்த, பாவத்திற்குத் தக்க தண்டனையைக் கடவுள் அவ்வப்போது கொடுத்ததால்தான்,

Top

தனக்கு மேல் ஒரு நீதியுள்ள சக்தி உண்டு என்னும் பயம் மனிதனுக்கு வந்தது.

ஒரு குழந்தை ஒன்றாம் வகுப்பில் படிக்கும்போது, அந்த குழந்தையிடம் தாயும் தகப்பனும் சில விதிமுறைகளையும் சட்டங்களையும் சொல்லிக் கொடுக்கிறார்கள். அவன் பத்தாம் வகுப்பிற்கு வரும்போது, பழைய சின்னபிள்ளைப் பருவச் சட்டம் மாறி, முதிர்ந்த மாணவனுக்கு பொருத்தமான சட்டங்களை கொடுப்பார்கள். அதே மாணவன் ஒரு வேலையில் சேர்ந்து, பின் திருமணம் செய்கிறான். திருமணமான ஒரு முதிர்ந்த மனிதனிடம் தாயும் தகப்பனும் எப்படி நடந்துகொள்வார்கள்? அவன் குழந்தையாக இருந்த போதைய சட்டங்களை இப்போது நடைமுறைப்படுத்த முடியுமா? குழந்தையிடம் அதன் தகப்பன் கண்டிப்பாக இருப்பார். ஆனால் அவன் வளர்ந்த பின் தகப்பனுடைய எதிர்பார்ப்பை தானே புரிந்து கொண்டு எந்த கட்டாயமும் இல்லாமல் கீழ்ப்படிகிறான்.

அதுபோல பழைய ஏற்பாட்டு சிறுபிள்ளைத்தனமான, கண்டிப்பான சட்டப்படியே இன்று மனிதன் வாழ்வதை கடவுள்

Top

விரும்பவில்லை. மனிதன் கடவுளைப்போல இந்த உலகில் வாழவேண்டும், சக மனிதர்களை கடவுள் பார்ப்பதுபோல பார்க்கவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணத்தில் உருவாக்கினார். கடவுள் தன் சாயலாக மனிதனைப் படைத்தார். ஆனால் பல யுகங்களாகத்தான் அவனுடைய சிந்தையில் முதிர்ச்சி வந்துள்ளது.

தன் அருட்பணியாளர்களை வைத்து மரித்த சடலங்களை உயிரோடு எழுப்பினார். நடுவானில் சூரியனை நிறுத்தினார். தன்னை நம்பி வாழ்ந்த மக்களை, அவர்களைத் துன்புறுத்தியவர்களிடமிருந்து காப்பாற்றி பற்பல அதிசயங்களை செய்தார். பார்வோன் என்னும் ஒரு கொடுங்கோல் அரசனுடைய இரும்பு பிடியினின்று விடுவிக்க ஆண்டவர் செய்த அற்புதங்கள் கண்கொள்ளா காட்சிகளாக இருந்திருக்கும். செங்கடலை இரண்டாகப் பிரித்து அதன் நடுவே வெட்டாந்தரையான சாலையை உருவாக்கி, தன்னை வணங்கும் மக்களை காப்பாற்றினார். தன் மக்கள் பாலைவனத்தில் உணவின்றி வருந்தியபோது அவர்களுக்கு வானத்திலிருந்து தேனிலிட்ட

பணியாரத்தின் சுவையுடைய உணவையும், காடை பறவைகளையும் கொடுத்தார். தண்ணீர் தாகம் வந்தபோது பாலைவன மலையிலிருந்து நீருற்றை உருவாக்கினார். அப்பப்பா...பழைய ஏற்பாட்டின் நாட்களில் ஆண்டவர் செய்த அற்புதங்கள் தான் எத்தனை! சுருக்கமாகச் சொன்னால், கர்த்தர் தன்னை ஒரு சர்வ சக்தீஸ்வரனாக ராஜரீகம் செய்திருக்கிறார். ஆனால், கடவுள் தன் மக்களிடம், எதிர்பார்த்த அன்பு, பொறுமை, முதிர்ச்சி, சாந்தம், மனிதநேயம் எதையுமே அவர்களிடம் காண முடியவில்லை. தன் மக்கள் அவற்றை உடைவர்களாக மாறவேண்டுமானால், கடவுளே மனித உருவில் வரவேண்டும் என்று அவர் தீர்மானித்தார். அந்த தெய்வீகத் தீர்மானத்திற்கு அடிபணிந்து, கடவுளின் வார்த்தையாகிய இறைமைந்தன் இயேசு இந்த உலகிற்கு மனிதவடிவில் வந்து, ‘மனிதன் தன்னை நேசிப்பது போல பிறரையும் நேசிக்க வேண்டும்’ என்னும் உன்னதக் கொள்கையை கற்றுக்கொடுத்து, அதன்படி தானும் வாழ்ந்து, அதை நிரூபிக்க தன் உயிரையே கொடுத்தார். மரித்த மூன்றாம் நாளில் வெற்றித் திருமகனாய் உயிரோடு எழுந்தார். அதன்பின், அன்போடு வாழ பரிசுத்தஆவியின் சக்தியை

Top

மக்களுக்கு கொடுத்தார். பழைய ஏற்பாட்டின் நாட்களில் கடவுளின் மக்களால் முடியாமல் இருந்தது இப்போது சாத்தியமாயிற்று. ஒரு அடிமையைப்போல, கடமைக்காக, பயந்து பயந்து கடவுளை கும்பிடாமல், கடவுள் மீது அன்புவைத்து ஆராதிக்கும் யுகம் ஆரம்பமானது. ஒரு கடுமையான எஜமானின் கீழ் கைகட்டி நிற்கும் வேலைக்காரர்களைப் போல் வாழ்ந்த நம்மை, அன்புள்ள ஒரு அப்பாவின் மடியில் பயமில்லாமல் அமர்ந்திருக்கும் பாசப்புதல்வர்களாக மாற்றவிரும்பினார். இதனால்தான் பவுல் கலாத்திய திருச்சபையாருக்கு கடிதம் எழுதும்போது இனி நீங்கள் அடிமைகளல்ல மகனாக, மகளாக இருக்கின்றீர்கள். கிறிஸ்துமூலம் உரிமைப் பேறுடையவராய் இருக்கிறீர்கள் (கலா.4:6) என்கிறார். பழைய ஏற்பாட்டு நாட்களிலேயே புதியஏற்பாடு உருவாகுமென்று இறைவாக்கு உரைக்கப்பட்டது. இதோ நாட்கள் வருகின்றன. அப்போது நான் இஸ்ரயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதுஉடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வேன் (எரே.31:31) என்று கடவுள் கூறினார்.

Top

ஒரு குழந்தை சிறுவனாயிருக்கும்போதுஇ தன் தந்தை சொன்ன கட்டளைகளுக்கு கீழ்படியாவிட்டால், ‘தந்தை பிரம்பால் அடிப்பார்’ என்னும் பயத்தால் கீழ்படிகிறான். அதுபோலத்தான் கடவுள் தனக்கு கீழ்படியாத மக்களுக்கு உடனே தண்டனை கொடுத்ததால், அந்த தண்டனைக்குப் பயந்து, வேறுவழியின்றி, வேண்டா வெறுப்போடு கீழ்படிந்தனர். ஆனால், குழந்தை முதிர்ந்தபின் அவனுடைய நிலை வேறு. தன்னை பெற்ற தன் தாயும், தந்தையும் தன்னைப் பாதுகாத்து, உணவூட்டி, சீராட்டி, வளர்த்த நன்றி உணர்வால் எந்த கட்டாயமும் இல்லாமல் அவர்களுக்குக் கீழ்படிகிறான்.

அதேபோல், புதிய ஏற்பாட்டு மக்கள் இயேசு தங்களுக்காக அவருடைய உயிரையே கொடுத்ததை நினைத்து, அவருடைய கட்டளைகளுக்கு அவருடைய அன்பின் பொருட்டு கீழ்;படிகின்றனர். பழைய உடன்படிக்கையை விட புதிய உடன்படிக்கை கைக்கொள்ள எளிமையானது. இயேசு கூறினார்: “என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார்.

Top

நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம். என்மீது அன்பு கொண்டிராதவர் நான் சொல்வதைக் கடைபிடிப்பதில்லை" (யோவா.14:23,24).

## 86. பணமே தெய்வம்.

இயேசு ஒருமுறை மக்களை நோக்கி, "எவ்வகை பேராசைக்கும் இடம் கொடாதவாறு, எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது" என்றார். அவர்களுக்கு ஓருவமையைச் சொன்னார். "செல்வனாயிருந்த ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.அவன், 'நான் என்ன செய்வேன் என் விளைபொருட்களை சேர்த்து வைக்க இடமில்லையே என்று எண்ணினான். ஒன்று செய்வேன் என்களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன் அங்கு என் தானியத்தையும் பொருட்களையும் சேர்த்து வைப்பேன் பின்பு, 'என் நெஞ்சமே உனக்கு பல்லாண்டுகளுக்கு வேண்டிய பலவகைப் பொருட்கள்

Top

வைக்கப் பட்டுள்ளன. நீ ஓய்வெடு, உண்டு, குடித்து, மகிழ்ச்சியில் திளைத்திடு’ என சொல்லுவேன் என்று தனக்குள் கூறிக்கொண்டான். ஆனால், கடவுள் அவனிடம், அறிவிலியே, இன்றிரவே உன்னுயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும் அப்போது நீ சேர்த்து வைத்தவை யாருடையவை ஆகும்?” என்று கேட்டார். ஆகவே, நான் உங்களுக்கு சொல்கிறேன், உயிர்வாழ எதை உண்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ கவலை கொள்ளாதீர். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா? காகங்களை கவனியுங்கள் அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, அவற்றுக்குச் சேமிப்பு அறையுமில்லை, களஞ்சியமுமில்லை. கடவுள் அவற்றுக்கும் உணவளிக்கிறார். நீங்கள் பறவைகளைவிட மேலானவர்களல்லவா?” (லூக்.12:16-20, 22-24) என்றார்.

பணமே தெய்வம் என்னும் கொள்கையிலேயே பெரும்பான்மையான பணக்காரர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், பணத்தின் பெருக்கம் எவ்வளவு ஆபத்தானது என்பதை மனிதன் நினைத்துப் பார்ப்பதில்லை.

Top

உலகிலேயே செல்வம் கொழிக்கும் முக்கியமான நாடுகளில் ஒன்று அமெரிக்கா. அதன் முக்கியமான கட்டடங்களில் ஒன்று வர்த்தக மையம் (Trade Centre) என்னும் இரட்டை கோபுரம். 2001-ம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் தேதி அந்த மகா பிரம்மாண்டமான கட்டடம் இஸ்லாமிய தீவிரவாதி ஒசாமா பின்லேடன் என்பவனால் தகர்க்கப்பட்டது. அதில் வேலை பார்த்துக்கொண்டிருந்த கிட்டத்தட்ட 3000 பேர் அந்நாளில் மடிந்து போனார்கள். அந்த கட்டடத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் பல மதம், ஜாதி, மொழியைச் சார்ந்தவர்கள். அவர்கள் பணம் சம்பாதிப்பதற்காகத் தான் அங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். ஆனால், ஒரு நிமிடத்தில் அவர்கள் வாழ்க்கை முடிந்துவிட்டது. கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்துவிட்டு, நிம்மதியில்லாமல் நடைபிணமாய் வாழும் மக்களை நாம் கண்கூடாகப் பார்க்கவில்லையா? “பணம் எல்லாவற்றுக்கும் உதவும்” (ச.உ.10:19) என்று கூறும் வேதாகமம், “பணஆசை எல்லா தீமைகளுக்கும் ஆணிவேராய் இருக்கிறது” (1திமொ.6:10) என்றும் கூறுகிறது.

Top

உலகில் இதுவரை தற்கொலை செய்து கொண்டவர்கள் எல்லாரும் பணமில்லாதவர்களா? பணமில்லாதவனுக்கு நிம்மதியில்லை என்றோ, பணம் உள்ளவனுக்கு நிம்மதியுண்டு என்றோ கூறிவிட முடியாது. இரண்டு லட்சம் ரூபாயை உங்களோடு வைத்துக்கொண்டு, தைரியமாக உங்களால் தூங்கிக்கொண்டே பேருந்தில் பயணம் செய்யமுடியுமா? இன்று தற்கொலை செய்வதில் ஏழைகளைவிட பணக்காரர்களே அதிகம். பணம் வந்தால் மனிதநேயம் வந்துவிடுமா? தீவிரவாதம் ஒழிந்துவிடுமா? வரதட்சணைக் கேட்டு கொடுமைப் படுத்துவது, ஏழைகளுடைய வீட்டைவிட பணக்காரர்களுடைய வீட்டில் தான் அதிகமாக அரங்கேறுகிறது. உலகத்திற்கு நாம் எதையும் கொண்டு வந்ததில்லை உலகத்தை விட்டு எதையும் கொண்டு போகவும் முடியாது. எனவே, உணவும் உடையும் நமக்கு இருந்தால், அவற்றில் நாம் மனநிறைவு கொள்வோம்.

செல்வத்தை சேர்க்க விரும்புகிறவர்கள், சோதனையாகிய கண்ணியில் சிக்கிக் கொள்கிறார்கள் அறிவீனமான, தீமை விளைவிக்கக் கூடிய பல்வேறு தீய நாட்டங்களில்

Top

வீழ்ந்துவிடுகிறார்கள். இவை மனிதரைக் கேட்டிலும் அழிவிலும் ஆழ்த்துபவை (1திமொ.6:6-9) என்று புத்தியுள்ள பவுல் கூறுகிறார். ஒருவன் பணக்காரனாய் மாறிவிட்டால் அவனுடைய குழந்தையைக் கடத்திச் சென்று, அவனை மிரட்டி கோடிக்கணக்கான பணத்தைப் பறித்து விடுகிறார்கள். உடல் நிரம்ப அணிகலன்களை அணிந்து வெளியே செல்லும் ஒரு பெண், பத்திரமாக உயிரோடு வீட்டிற்கு திரும்பும்வரை இதயம் தாறுமாறாக பதைபதைக்கிறது.

பணம் இல்லாமல் இருக்கும்போது, அந்த ஏக்கத்தில் பல உபாய தந்தரங்களின் மூலம் மனிதன் பணத்தை சம்பாதித்துவிடுகிறான். ஆனால், கிராமத்தில் நிம்மதியாக பாயில் தூங்கியவன், பட்டணத்துக்கு வந்து பணத்தை வரம்புமீறி சம்பாதித்தபின் பஞ்சுமெத்தையில் தூங்க முயன்றாலும் தூக்கமின்றி துன்பப்படுகிறானே! ஒரு நிமிடத்தில் பல்லாயிரக்கணக்கில் சம்பாதித்து விடும் திரைப்படத்துறையில் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறதே!

Top

ஒருமுறை ஒரு பெரும்பணக்காரர், இதய நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஒரு குறிப்பிட்ட நாளில் அவருக்கு இதய அறுவைசிகிட்சை செய்தார்கள். ஆனால், என்ன பரிதாபம்! அறுவை சிகிட்சை நடந்து கொண்டிருக்கும்போதே அவரது உயிர்பிரிந்தது, பணம் அவரது கடவுளாயிருந்தால் அவரது உயிரை காப்பாற்றியிருக்க வேண்டுமே! AVM ராஜன் என்னும் முன்னாள் திரைப்பட நடிகர் பணம், பணம் என்று ஓடிக்கொண்டிருந்தார். திடீரென பெரிய கடனுக்குள்ளாகி மீள வழியின்றி தற்கொலை செய்ய தீர்மானித்தார். அந்நிலையில் கிறிஸ்துவின் அன்பை விளக்கும் கருணாமூர்த்தி என்னும் பக்தித் திரைப்படத்தைப் பார்த்து, பணமல்ல கடவுளே கடவுள் என்ற தீர்மானத்தில் உறுதிப்பட்டு, 'இயேசுவே சரணம்' என்று அர்ப்பணித்தார். இப்போது இறையருளால் கடன்கள் எல்லாவற்றையும் தீர்த்து அருட்பணி செய்து கொண்டிருக்கிறார்.

கடவுள்பக்தி இல்லாதவரிடம் கிடைத்த பெருஞ்செல்வம் அவருக்கு தீமையாகவே முடியும். இயேசு ஒருமுறை கூறினார்:

Top

“மண்ணுலகில் உங்களுக்கென செல்வத்தை சேமித்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும், திருடரும் அதைக் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் உங்கள் செல்வத்தை சேமித்து வையுங்கள். அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை திருடரும் கன்னமிட்டு திருடுவதில்லை. உங்கள் செல்வம் எங்குள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும் (மத்.6:19-21).

நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளைய கவலையைப் போக்க நாளை வழிபிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்” (மத்.6:34) என்று நம் குருநாதன் கற்பித்தார். ‘பேராசை பெரும் நஷ்டம்’ என்று பெரியவர்கள் கூறியது சரிதானே. மதிப்புக்குரிய பதவியிலிருக்கும் அதிகாரிகள் பலர், பணஆசையால் லஞ்சம் வாங்கி, தாங்கள் கஷ்டப்பட்டு உருவாக்கிய நற்பெயரைக் கெடுத்துக் கொள்கிறார்கள். குறுக்கு வழியில் சம்பாதித்த கோடிக்கணக்கான பணத்தை மருத்துவனையில் பட்டுவாடா

Top

செய்வது எவ்வளவு பரிதாபமாக உள்ளது! ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கினால், பத்தாயிரம் ரூபாய் இழப்பு வருகிறது.

கர்த்தரை நம்புகிறவன் உண்மையாகவே செழிப்பான் (நீதி.28:25). கடவுள் ஒருவருக்கு பொருள் செல்வமும் நல்வாழ்வும் கொடுத்து, அவற்றை அவர் அநுபவித்து மகிழும் வாய்ப்பையும் அளிப்பாரானால், நன்றியோடு தம் உழைப்பின் பயனை நுகர்ந்து இன்புறலாம். அது அவருக்கு கடவுள் அருளும் நன்கொடை. தம் வாழ்நாள் குறுகியதாய் இருப்பதைப் பற்றி அவர் கவலைப்படமாட்டார். ஏனெனில் கடவுள் அவர் உள்ளத்தை மகிழ்ச்சியோடிருக்கச் செய்கிறார் (ச.உ.5:19,20). ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும் அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம் (நீதி.10:22). பண ஆசை உள்ளவருக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் ஆவல் தீராது. செல்வத்தின் மேல் மிகுந்த ஆசைவைப்பவர் அதனால் பயனடையாமற் போகிறார். சொத்து பெருகினால் அதைச் சுரண்டித் தின்போரின் எண்ணிக்கையும் பெருகும்.செல்வர்களுக்கு தங்கள் சொத்தை கண்ணால் பார்ப்பதைத் தவிர வேறு என்ன பயனுண்டு? வேலை

Top

செய்பவரிடம் போதுமான சாப்பாடு இருக்கலாம். அல்லது இல்லாதிருக்கலாம். ஆனால் அவருக்கு நல்ல தூக்கமாவது இருக்கும். செல்வரது செல்வப்பெருக்கே அவரை தூங்கவிடாது. (ச.உ.5:10-12).

ஒருவர் சேமிக்கும் பணம் அவருக்கு துன்பத்தையே விளைவிக்கும் என்று சாலமோன் என்னும் ஞானி கூறினார். பணம் அதிகம் இல்லாதவன்; நாட்டில் தைரியமாக நடமாடலாம். ஆனால் பணக்காரனால் முடியவில்லையே. இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி என்று பலர் படுகொலை செய்யப்பட்டபோது பணம் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லையே.

## 87. இயேசுவால் என் நோய்களை குணப்படுத்த முடியுமா?

நிச்சயமாக முடியும். நம்மை குணப்படுத்த வைத்தீஷ்வரன் அருளிய உறுதி மொழிகளைப் பார்ப்போம். நீ உன் கடவுளாகிய ஆண்டவரை வழிபட வேண்டும். அவர் உன் உணவு, தண்ணீர்

Top

இவற்றின் மேல் ஆசிவழங்குவார். அவர் உன் நடுவிலிருந்து நோயை அகற்றுவார் (வி.ப.23:25).

உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்கு நீ அக்கரையுடன் செவிசாய்த்து, அவர் பார்வையில் நலமாகத் தோன்றுவதை செய்து அவர் கட்டளைகளைப் பின்பற்றி அவர் சட்டங்கள் அனைத்தையும் கைக்கொண்டால். நான் எகிப்துக்கு வரசெய்த கொள்ளை நோய்களை உன் மேல் வரவிடமாட்டேன். ஏனெனில், நானே உன்னை குணமாக்கும் ஆண்டவர் (வி.ப.15:26) என்று ஆண்டவரே கூறுகிறார்.

கடவுள் தன் வார்த்தையை அனுப்பி நோய்களை குணப்படுத்துவார் (தி.பா.107:20). நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்;றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பிவிடுவார் (யாக்.5:15) என்று புனித யாக்கோபு அறிவுறுத்துகிறார்.

துன்ப வேளையில் என்னை கூப்பிடுங்கள் உங்களை காத்;திடுவேன் அப்பொழுது நீங்கள் என்னை மேன்மைப்படுத்துவீர்கள் (தி.பா.50:15) என்று கர்த்தர்

Top

கூறுகிறார். நாம் கடவுளின்மீது அன்புகூர்ந்தால் கடவுள் நம்மை விடுவிப்பார் (தி.பா.91:14). நமக்கு வாக்களித்தவர் நம்பிக்கைக்கு உரியவர் (எபி.10:23). ஆண்டவர் சொன்னசொல் தவறாத நம்பகமானவர் (2தெச.3:3). இயேசுவின் நாமத்தில் தேவன் கோடிக்கணக்கானவர்களை குணப்படுத்தியிருக்கிறார். இயேசு உங்களை குணமாக்க நீங்கள் செய்யவேண்டியது என்னவென்று கேட்கிறீர்களா? இயேசுவால் குணப்படுத்த முடியுமென்று முழுமையாக நம்பவேண்டும். நம்பிக்கையில்லாமல் எவரும் கடவுளை பிரியப்படுத்த முடியாது (எபி:11:6).

சந்தேகத்தோடு நின்ற மார்த்தாவை பார்த்து “நீ நம்பினால் கடவுளின் மாட்சியை காணமுடியும்” என்று இயேசு கூறினார் (யோவா.11:40). நம்புகிறவனுக்கு எல்லாம் முடியும் (மாற்.9:23). நாம் எந்த நன்மையைக் கேட்டாலும் நம்பிக்கையோடு ஐயப்பாடின்றி கேட்க வேண்டும். ஐயப்பாடு கொள்பவர்கள் காற்றினால் அலைக்கழிக்கப்படும் கடல் அலையைப் போன்றவர்கள் (யாக்.1:6) மொத்தத்தில் உங்கள் நம்பிக்கை உங்களை வாழவைக்கும். கடவுளிடமிருந்து நீங்கள் அற்புதத்தை

Top

பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் உங்களுக்கு தவறு செய்தவர்களை நீங்கள் மனதார மன்னிக்கவேண்டும் (யாக்.5:16).

பல கடவுள்களில் ஒரு கடவுளாக பார்க்காமல், இயேசுவை மட்டுமே நமது இரட்சகரென்று நம்பினால், நிச்சயமாக அவர் உங்களை விடுவிப்பார். வாய்திறந்து எதிர்மறையான வார்த்தைகளைப் பேசாமல் நேர்மறையான வார்த்தைகளை பேசுங்கள்.

## 88. இயேசுவால் என் கடன்களைத் தீர்க்க முடியுமா?

நிச்சயமாக தீர்ப்பார். ஏனென்றால் மனிதன் கடனில்லாமல் வாழவேண்டுமென்று கருணாமூர்த்தி ஆசைப்படுகிறார். பல்வேறு இனத்தாருக்குக் கடன் கொடுப்பாய் கடன் வாங்கமாட்டாய் (இ.ச.28:12) என்று ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார். நாம் வளமோடு வாழவேண்டும் என்பதற்காகத்தான் இயேசு வறியகோலத்தில் இம்மண்ணில்

Top

வந்தார் (2கொரி.8:9). உங்களுடைய கடன் எத்தனை கோடியாக இருந்தாலும் இயேசுவால் அந்த கடன்களை தீர்க்க முடியும்.

நம் கடன்களை கடவுள் தீர்க்க நாம் என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்கிறீர்களா? கடவுள் கூறுகிறார். உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும், உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன (எசா.59:2). ஆண்டவரின் கண்கள் நேர்மையானவர்களை நோக்குகின்றன. அவர் செவிகள் அவர்களது மன்றாட்டைக் கேட்கின்றன. ஆண்டவரின் முகமோ தீமைசெய்வோருக்கு எதிராக இருக்கின்றது (1பேது.3:12). எனவே, நீங்கள் இதுவரை செய்த எல்லா குற்றங்களையும் மன்னிக்க வேண்டுதல் செய்யுங்கள். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பாவம் மன்னிக்கப்பட்ட நிச்சயம் உங்களுக்கு இருக்கவேண்டும்.

அடுத்து, உங்கள் கடனை இயேசுவால் முழுமையாக தீர்க்க முடியுமென்ற நம்பிக்கையோடு இறைவனிடம் மன்றாடுங்கள்

Top

(யோவா.11:40, எபி.11:6, மாற்.9:23, யாக்.1:6, மாற்.11:24). உங்கள் வருமானத்தில் ஒரு நல்ல தொகையை யாருடைய கட்டாயமும் இல்லாமல் முழுமனதோடு, புன்முறுவலோடு ஆண்டவருடைய ஊழியங்களுக்கு கொடுக்க முயலுங்கள் (நீதி.11:25, லூக்.11:42). செல்வம் ஈட்ட ஆற்றல் தருபவர் தெய்வம் (இ.ச.8:18). அவர் உங்களுக்கு அருள் தருவார்.

## 89. எனக்கு பிள்ளைகள் இல்லை. இயேசுவை நம்பினால் குழந்தை கிடைக்குமா?

சர்வ சக்தீஸ்வரனுக்கு இயலாத காரியம் ஒன்றுமேயில்லை. தனிமையில் இருந்த ஆதாமுக்கு ஏவாளை மனைவியாகக் கொடுத்து அவர்களிடம், “பலுகி பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்’ என்று சொன்ன பரமாத்மா நிச்சயமாக உங்களை ஆசீர்வதிப்பார்.அவர் உங்களை ஒரு தந்தையாக, தாயாக மாற்றமுடியும். அவர் தன்னை நம்பும் மக்களுக்கு கொடுத்த உறுதிமொழிகள் பின்வருமாறு: “பேறுகாலத்தை ஏற்படுத்திய

Top

நான் மகப்பேற்றை தடைசெய்வேனா? மகப்பேற்றுக்குக் காரணமான நான் கருப்பையை அடைத்து விடுவேனா?" என்கிறார் கடவுள் (எசா.66:9). "நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பீராக" (தி.பா.128:6). "குறைகாலப் பிள்ளைப்பேறும், மலடும் உன் நாட்டில் இரா, உன் வாழ்நாட்கள் எண்ணிக்கையை நான் நிறைவுசெய்வேன்" (வி.ப.23:26) என்று கர்த்தர் கூறுகிறார். "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசு" (தி.பா.127:3). "உங்களுக்குள்ளும், உங்கள் கால்நடைகளுக்குள்ளும் ஆணிலும் பெண்ணிலும் மலடு இரா (இ.ச.7:14). மலடியை அவள் இல்லத்தில் வாழவைத்து தாய்மைப்பேறு பெற்று மகிழுமாறு அவளுக்கு அருள்கின்றார் (தி.பா.113:9). ஆண்டவருடைய வல்லமையால் குழந்தைப் பேற்றைப் பெற்றுக் கொண்ட இறை நம்பிக்கையாளர்களில் ஒரு சிலருடைய பெயர்களை தருகிறேன். மலடியாயிருந்த சாராளுக்கு ஈசாக்கைக் கொடுத்தார் (தொ.நூ.16:1, 18:10-15, 21:1-3). மலடியாயிருந்த ரெபேக்காள் கர்ப்பம் தரித்து யாக்கோபையும், ஏசாவையும் பெற்றாள் (தொ.நூ.25:21-26). குழந்தை இல்லாதிருந்த ராகேல் கர்ப்பம்

Top

தரித்து யோசேப்பை பெற்றாள் (தொ.நூ.30:2-24).குழந்தையில்லாமல் மன உளைச்சலடைந்த அன்னாள் கர்ப்பவதியாகி சாமுவேலை பெற்றெடுத்தாள் (1சாமு.15:19-20). மலடியாயிருந்த எலிசபெத் யோவானை பெற்றாள் (லூக்.1:7-24). இவர்களெல்லாரும் அற்புதங்களை செய்யும் ஆண்டவர் மேல் வைத்திருந்த நம்பிக்கையால் குழந்தைப் பேற்றைப் பெற்றுக்கொண்டனர். பொறுமையோடு காத்திருந்தால் ஆசீர்வாதங்களை பெற்றெடுப்பீர்கள்.

## **90.** எனக்கு அடிக்கடி கெட்ட கனவு வருகிறது. இயேசு என்னை விடுவிக்க முடியுமா?

கடவுளின் விரோதியான பிசாசுதான் கெட்ட சொப்பனங்களை கொண்டுவருகிறான். அவனுடைய ஆளுகைக்கு உட்பட்டவர்களை விடுவிக்கத்தான் இயேசு இவ்வுலகிற்கு வந்து தன்னுயிரை தந்தார். பிசாசின் செயல்களை அழிக்கும்படி இறைமகன் வெளிப்பட்டார். உங்களுக்காக பிரார்த்தனை செய்ய

Top

உடனே, ஆவியின் அபிஷேகம் பெற்ற ஊழியர் ஒருவரை அணுகி, அவரிடம் உங்கள் பிரச்சனைகளைச் சொல்லுங்கள். அவர் உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கும்போது கெட்ட கனவுகள் அகன்று போகும். நல்ல கனவுகள் வரும். நீங்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யகூடாது என்று கனவுகள் மூலம் கடவுள் பேசுவார்.

**91.** எனக்கு பல ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்கவில்லை. இயேசுவை நம்பினால் வேலை கிடைக்குமா?

சர்வ சக்தீஸ்வரன் கூறுகிறார், "என்னிடம் மன்றாடு உனக்கு நான் செவிசாய்ப்பேன் நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறைபொருள்களையும் உனக்கு நான் விளக்கிக் கூறுவேன்". ஒருமுறை இயேசு தன் சீடர்களைப் பார்த்து, "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள் தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும் ஏனெனில் கேட்போர் எல்லோரும்

Top

பெற்றுக்கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்கு திறக்கப்படும் உங்களுக்குள் எவராவது ஒருவர் அப்பத்தை கேட்கும் தன் பிள்ளைகளுக்கு கல்லைக் கொடுப்பாரா? அல்லது பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகளை அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகிலுள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா? (மத்:7:7-11) என்று கூறினார். உங்கள் தகுதிக்கு ஏற்ற ஒரு வேலையை உங்கள் முயற்சியால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று கவலைப்படாதிருங்கள். அதைவிட பெரிய வேலையைகூட பெற்றுக்கொள்ள முடியும். ஒரே ஒரு நிபந்தனைதான் நம்பிக்கையோடு கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள். இந்தியாவில் வேலை தேடி கொண்டிருக்கும் உங்களுக்கு வெளிநாட்டில்கூட வேலை வாங்கித் தருவது கடவுளுக்கு எளிதான காரியம். எங்களை அணுகினால் எங்களுக்கு தெரிந்த வேலைவாய்ப்பு அலுவலகங்களை அறிமுகப்ப டுத்துகிறோம். நீங்கள் உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்| (தி,பா:128:2)

Top

என்று கடவுள் கூறுகிறார். வேலைசெய்து உண்ண வேண்டும் என்ற உங்கள் உணர்வைப் பாராட்டுகிறேன்.

சிலர் கிடைத்த வேலையை தக்கவைக்க தெரியாமல் இழந்து விடுகிறார்கள். சிலர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை அசட்டை பண்ணி, வேலையை இழந்து, வறுமையில் வாடுகிறார்கள். தங்கள் உயர் அதிகாரிகளுக்கு ஒழுங்காக கீழ்படிந்து வேலை செய்யாமல்; வேலையை இழந்துவிட்டு எல்லாம் என் தலையெழுத்து என்று சொல்வதில் அர்த்தமில்லை. உங்கள் பழைய வாழ்க்கை எவ்வளவு பரிதாபமாக இருந்தாலும் பரவாயில்லை. உங்களுக்கு ஒரு வசந்த காலத்தை கடவுள் தரமுடியும், கவலைப்படாதிருங்கள்.

Top

**92.** வெற்றிலை, புகை, மது, மாது என்று எல்லா பழக்கங்களும் எனக்கு உண்டு. இவற்றிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்குமா?

திருந்த வேண்டுமென்ற உங்கள் ஆர்வத்தை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். இன்று கெட்டபழக்கங்கள் என்னும் சாக்கடையில் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழும் இம்மண்ணில் உங்களைப் போன்ற மனமாற்ற விரும்பிகள் இருப்பதை நினைத்து பரவசமடைகிறேன். வெற்றிலை, புகைப்பழக்கம் என்னும் பழக்கங்கள் மூலம் புற்றுநோய் உருவாகின்றன என்று மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றனர். மதுமானம் அருந்துவதன் மூலம் கல்லீரல் பாதிக்கப்படுகிறது. விபச்சாரத்தின் மூலம் தன்மானம் கெடுவது மட்டுமல்ல, எய்ட்ஸ் போன்ற உயிர்கொல்லி நோய்கள் பரவுகின்றன. இவை எல்லாவற்றின் மூலம் குற்றமனசாட்சி உருவாகி, வாழ்க்கை மீதே வெறுப்பு வந்துவிடுகிறது. இந்த நாற்றம் பிடித்த சேற்றிலிருந்து வெளியே வர நீங்கள் விரும்புவது உங்களுக்கும் நாட்டுக்கும் நல்லது. ‘புகைப்பழக்கம் உடல்

Top

நலத்துக்கு தீங்கானது' என்று சிகரெட் பெட்டியிலே எழுதப்பட்டுள்ளது. ஆனால், அந்த அறிவுரையை படித்து அந்த கெட்டப் பழக்கத்தை விட்டுவிட்டவர்கள் யாருமில்லை. 'புகை நாட்டுக்குப் பகை' என்று தெரிந்தும் சிகரெட், பீடி உருவாக்கும் தொழிலை அரசாங்கம் நிறுத்தவில்லையே. காரணமென்ன? அரசாங்கத்திற்கு அந்த கொடுமையின் மூலம் கிடைக்கும் வருமானம்தான். 'மது நாட்டுக்கு, உயிருக்கு, வீட்டுக்கு கேடு' என்னும் கொள்கை பரபரப்பாக அறியப்பட்டு பேசப்பட்டிருந்தாலும், அரசாங்கமே மதுக்கடைகளை நடத்திக்கொண்டிருக்கிது. இதைத் தடுத்து நிறுத்த பல அமைப்புகள் போராடினாலும், பெரும்பான்மையான மக்கள் இதை எதிர்க்கவில்லையே! அரசாங்கத்திற்கு இந்த மதுக்கடைகள் மூலம் வரும் வருமானம்தான் இந்த சீரழிவுக்கு காரணம். இந்த கெட்டபழக்கங்களால் அழிந்துபோன குடும்பங்கள் தான் எத்தனை ஆயிரங்கள்! இப்பழக்கங்கள் கடவுள் குடியிருக்கும் ஆலயமாகிய நம் உடல்களை தீட்டுப்படுத்தி அழிக்கும் வலிமையுடையவை. ஆதலால் கடவுளும் இவற்றிக்கு எதிராக நிற்கிறார். "ஒருவன் என் ஆலயத்தை கெடுத்தால் நான் அவனை

Top

கெடுப்பேன்” (1கொரி.3:17) என்று கடவுள் ஆதங்கப்படுகிறார். பாவம் செய்பவன் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறான் (யோவா.8:34) என்று வேதம் கூறுகிறது.

கவலைப்பட வேண்டாம். சர்வேஸ்வரனை நம்புங்கள் இயேசுவின் நாமத்தை நம்புங்கள். உங்கள் நம்பிக்கை உங்களுக்கு வெற்றியை கொடுக்கும். தன்னையே நம்பியிருக்கும் பக்தர்களை பரமேஸ்வரன் கைவிட்டதில்லை. “பெரும்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்.11:28) என்று காருண்யேஸ்வரன் அழைக்கிறார். ‘உங்களை தொற்றிக்கொண்டுள்ள இந்த கெட்டபழக்கங்கள் நல்லதல்ல’ என்று அறிவுரை கூற ஆயிரக்கணக்கான மக்களுண்டு. ஆனால், அவர்களால் உங்களை விடுவிக்க முடியாது. தேவகுமாரனாகிய இயேசுவை நீங்கள் பற்றிக்கொண்டால், அவர் உங்களை மெய்யாகவே விடுவிப்பார். கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைத் தூய்மைப்படுத்தும் வலிமையுடையது (1யோவா.1:7). நீங்கள் இதுவரை

சொல்லாலும் செயலாலும், சிந்தனையாலும் செய்த தவறுகள் எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்தில் இறைவனிடம் கூறி மன்னிப்பு கேளுங்கள். அவர் மன்னிப்பார். இனிமேல் பாவம் செய்யாதிருக்க உறுதியான சமதமெடுக்க வேண்டும். உங்கள் வாய் திறந்து இயேசுவிடம் இனி பாவம் செய்யாதிருக்க எனக்கு உம் சக்தியைத் தாரும் என்று சத்தமாக கூறி ஜெபம் செய்யுங்கள். பிரார்த்தனை என்பது யாரோ வேதசாஸ்திரிகள் எழுதிய மந்திரங்களை திரும்ப திரும்ப ஓதுவதல்ல. ஒரு குழந்தை பெற்றதாயிடம் உரிமையாக பேசுவதுபோல, தாயினும் மேலான பாசமுள்ள பரமாத்மாவிடம் மனம்விட்டு பேசுவதே பிரார்த்தனை. அதற்கு ஒரு குறிப்பிட்ட மொழியில் பேசவேண்டுமென்றோ, ஒரு குறிப்பிட்ட திசையைப் பார்த்து பிரார்திக்க வேண்டுமென்றோ சட்டம் கிடையாது. கடவுள் எங்கும் நிறைந்தவர். கண்ணை மூடித்தான் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும் சட்டமில்லை. இயேசுவே வானத்தை அண்ணாந்து பார்த்து கடவுளைப் போற்றினார் என்று மத்.14:19-ல் வாசிக்கிறோம். ஆனால், கண்களை மூடி பிரார்த்தனை செய்வதால் நம் மனதை எளிதில் ஒருமுகப்படுத்த முடியும் என்பது நடைமுறை உண்மை

Top

என்பதால்தான் சபைப்போதகர் கண்களை மூடி ஜெபம் செய்வதை வலியுறுத்துகிறார். உங்கள் மனம் திறந்து இறைவனிடம் பேசுங்கள். இயேசுவின் அன்பையும், அவரது வல்லமையையும் நம்பும் ஒரு திருச்சபையோடு இணைந்து வாழுங்கள். சபை ஊழியக்காரரிடம் உங்கள் பிரச்சனைகளைக் கூறுங்கள். அவரும் உங்களுக்காக ஜெபம் செய்வார். நிச்சயமாக நீங்கள் விடுதலை அடைந்து மறுமலர்ச்சியான புதுவாழ்வு பெறுவீர்கள்.

**93.** என் பிள்ளைகள் படிக்காமல் ஊர் சுற்றுகிறார்கள். கீழ்ப்படியாத இந்த பிள்ளைகள் நிமித்தம் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று நினைக்கிறேன்.

தற்கொலை செய்வது பெரும்பாவம். நான் ஏற்கனவே கூறியதுபோல உங்கள் உடல் உங்களுக்குரியதல்ல உங்களுக்குள் குடியிருக்கும் கடவுளின் திருக்கோயில். அதைக் கெடுப்பதையோ, அழிப்பதையோ அவர் அனுமதிக்கமாட்டார்

Top

(1கொரி.3:16,17 6:19). நீங்கள் தற்கொலை செய்வதை அரசாங்கமும் அனுமதிக்காது. நீங்கள் தற்கொலை செய்வதால் ஒரு பிரச்சனையும் தீர்ந்துவிடாது. தற்கொலை என்பது வாழத்தெரியாதவர்கள் எடுக்கும் கோழைத்தனமான முடிவு.

உங்களைவிட படிப்பில், அந்தஸ்தில், பணவசதியில், தாழ்ந்த நிலையிலுள்ள பலர் வாழ்க்கையில் வரும் சோதனைகளை கடவுளின் துணையோடு தைரியமாய் எதிர்கொண்டு சமாளிக்கிறார்களே! உங்களது பிள்ளைகளை கிறிஸ்து தன் வலிமையால் மாற்றுவார். உங்களால் வளர்க்க முடியாத அளவுக்கு ஒரு கடினமான குழந்தையை கடவுள் உங்களுக்கு தரமாட்டார். மனிதனால் சுமக்க முடியாத அளவுக்கு கடினமான சூழ்நிலைகளை இறைவன் அனுமதிக்கமாட்டார். ஒரு குழந்தையால் சுமக்க முடியாத சுமையை ஒரு தாய் குழந்தையின் தலையில் சுமத்துவாளா? யோசியுங்கள். ஒரு காலத்தில் பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் தாறுமாறாய் வாழ்ந்து கொண்டிருந்த நாங்கள் கீழ்படிதலோடு, பணிவோடு வாழ பரமேஸ்வரன் அருள் தந்திருக்கிறார். அவரால் உங்கள்

Top

பிள்ளைகளை புனிதக் குழந்தைகளாக மாற்றமுடியும். நம்பிக்கை இழந்து விடாதீர்கள். பிள்ளைகளை மாற்ற உங்களால் முடியாமலிருக்கலாம். கடவுளுக்கு எல்லாமே எளிதான காரியம்.

வாய்க்கு வந்தபடி குழந்தைகளைத் திட்டுவதை இன்றே விட்டுவிடுங்கள்.ஒருமுறை தன் மகனைப்பார்த்து ஒருதாய் எய்! எருமை மாடு, இங்கே வா என்று முறைத்துக்கொண்டு சீறினார். ஒரு மனிதனுடைய வயிற்றில் எப்படி எருமைமாடு பிறக்கமுடியும்? தயவுசெய்து தாயே, பிள்ளைகளை காயப்படுத்தும் கூர்மையான வார்த்தைகளால் பழித்துப் பேசாதீர்கள். உங்கள் பிள்ளைகளை கடவுளால் மட்டுமே மாற்றமுடியும் என்னும் முழுநம்பிக்கையோடு அவரிடம் உங்கள் பிள்ளைகளுக்காக முழுமனதோடு மன்றாடுங்கள்.
திக்கற்றவர்களுக்கு கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார் என்பதே நமக்கு கடவுள் தந்த நம்பிக்கை. கடவுளைப் பார்த்து ஒரு பக்தன் உள்ளம் உருகி தெய்வமே, உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன், உம்மை மட்டுமே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனை முழுநிம்மதியுடன் காத்துக் கொள்ளும் (எசா.26:3)

Top

என்று கூறுகிறான். உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவரே கற்றுத்தருவார். உன் பிள்ளைகள் நிறைவாழ்வு பெற்று சிறப்புறுவர் (எசா.54:13) என்று கடவுள் உறுதிமொழியாய் கூறியிருக்கிறார். உங்கள் பிள்ளைகள் உங்களுடைய பிள்ளைகள் அல்ல. இறைவன்உங்களிடம் வளர்க்கக்கொடுத்தஅவருடைய குழந்தைகள்.அவருடைய குழந்தைகளைப் பற்றி அவருக்கு அக்கரை இருக்காதா? உங்கள் குழந்தைகளை அவர் பார்த்துக்கொள்வார். நீங்கள் உங்கள் கவலைகளை அவர்மேல் வைத்துவிடுங்கள். அவர் உங்கள் குடும்பத்தை கட்டி எழுப்புவார். உங்கள் சொந்தங்களும் பந்தங்களும் உங்கள் வீட்டைப்பார்த்து வாயடைத்து போகுமளவுக்கு ஒரு பெரிய மாற்றத்தை கடவுள் உங்களுக்கு தருவார். உங்கள் பிள்ளைகள் நல்ல தரமான படிப்பு படித்து, காலாகாலத்தில் நல்ல வாழ்க்கைத் துணையை அடைந்து, குழந்தைக் குட்டிகளை பெற்று, உங்கள் பெயருக்கு புகழ் சேர்ப்பார்கள்.

Top

அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்று கூறுகிறேன். இயேசுவால் உங்கள் பிள்ளைகளை முழுமையாக மாற்றமுடியும் என்று நம்புங்கள். உடனேயே உங்களுக்காக‘கரிசனையோடு’ பிரார்த்தனை செய்யும் ஒரு கிறிஸ்தவ ஊழியரை அணுகி அவரிடம் உங்களுக்காக ஜெபிக்க சொல்லுங்கள். அவர் உங்களுக்காக ஜெபிப்பார். உங்கள் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கமுள்ள நண்பர்களை அவர் அறிமுகப் படுத்துவார். ‘பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்’. நீங்கள் எப்படி ஜெபிக்கவேண்டும் என்று அந்த போதகர் உங்களுக்கு போதிப்பார். உங்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை ‘நானே உலகிற்கு ஒளி’ என்று திருவாய் மலர்ந்த ஜோதிஸ்வரன் இயேசு அருளிச்செய்வார். அவர்மீது அன்புகூர்ந்து அவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர்க்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுபவர் கடவுள் (இ.ச.5:10).

Top

**94.** எங்கள் மகளுக்கு திருமணம் செய்து கொடுக்க காசு இல்லை. இயேசு எங்களுக்கு உதவி செய்ய முடியுமா?

வானத்துப் பறவைகளை நோக்குங்கள். அவை விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றிற்கும் உணவளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா? கவலைப்படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தை ஒரு முழம் கூட்டமுடியும்? உடைக்காக நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள். காட்டு மலர்ச்செடிகள் எப்படி வளர்கின்றன என்று கவனியுங்கள். அவை உழைப்பதும் இல்லை நூற்பதுமில்லை. இன்றைக்கு இருந்து நாளை அடுப்பில் எறியப்படும் காட்டுப்புல்லுக்கு கடவுள் இவ்வாறு அணிசெய்கிறார் என்றால், உங்களுக்கு இன்னும் அதிகம் செய்யமாட்டாரா? ஆகவே, எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை அணிவோம் என்று கவலைகொள்ளாதீர்கள். அனைத்துக்கும் மேலாக கடவுளுடைய ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்பொழுது, இவை

Top

அனைத்தும் உங்களுக்கு சேர்த்து கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில், நாளைய கவலையைப் போக்க நாளை வழிபிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்" (மத்.6:26-36) என்று இயேசு அறிவுறுத்துகிறார்.

வரதட்சணை கொடுக்க வேண்டுமே என்று நீங்கள் பயப்படாதீர்கள். வரதட்சணை வாங்கப் பேராசைப்படுவர்கள் இந்த உலகில் பலருண்டு. ஆனால், பணஆசை என்பது சிலை வழிபாட்டிற்கு சமமானது என்று வேதம் கூறுகிறது. வரதட்சணை கேட்காமல் உங்கள் மகளைத் திருமணம் செய்ய, ஒரு நல்ல மணமகனை கடவுள் தருவார். வரதட்சணைக் கொடுமையை வெறுக்கும் ஆண்களும் பெண்களும் இம்மண்ணிலுண்டு. ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர். ஆண்டவரே அவர்களது நம்பிக்கை (எரே.17:7) என்று வேதம் கூறுகிறது. நேர்மையற்ற வழியில் செல்வம் சேர்ப்போர், தாம் இடாத முட்டைகளை அடைகாக்கும் கௌதாரி போன்றோர். தம் வாழ்நாட்களின் நடுவிலே அவர்கள் அச்செல்வத்தை இழந்து

Top

விடுவர். இறுதியில் அவமதிப்புக்கு உள்ளாவர் (எரே.17:11). எனவே நேர்மையை மதிக்கும் தன்மானமுள்ள இளைஞன் ஒருவன் உங்கள் மருமகனாக வருவான். கவலைப்படாதிருங்கள் “உங்கள் கவலைகளை எல்லாம் கடவுளிடம் விட்டுவிடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள்மேல் கவலை கொண்டுள்ளார்” (1பேது.5:7) என்று பேதுரு என்னும் திருத்தூதர் கூறுகிறார். ஆதாம் தனிமையாக இருந்தபோது ஆதாமுக்கு ஏற்ற துணையை உருவாக்குவேன் என்று படைத்தவர் கூறினார். அதுபோல, உங்கள் மகளுக்கும் ஏற்றதுணையை கடவுள் உருவாக்குவார். உடனே உங்கள் வீட்டிற்கு அருகிலிருக்கும் ஒரு பொறுப்புள்ள போதகரை அணுகி உங்கள் காரியங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். எதை குறித்தும் கவலைப்படாதீர்கள்.

Top

**95.** நாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்ற தொடங்கியபின் எங்களில் யாராவது இறந்தால் புதைக்க இடம் தருவீர்களா?

நீங்கள் கிறிஸ்துவை உங்கள் சொந்த மீட்பராக ஏற்றுக்கொள்ளும் போது ஒரு நல்ல ஆன்மீக சபையின் அங்கத்தினராக மாறுவதும் முக்கியமானது. ஒரு சபையில் நிரந்தர உறுப்பினராக இருந்தால் அந்தஅந்த சபையின் மூப்பர்களும் தலைவர்களும் உங்களுடைய கிறிஸ்தவ வாழ்வில் பேருதவியாக இருப்பார்கள். அந்த வகையில் உங்கள் வீட்டில் யாராவது இறந்துவிட்டால் அவர்களை புதைக்கும் இடத்தையும் திருச்சபை போதகர் ஒழுங்கு செய்யவேண்டும். இதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். உயிரோடு இருந்து சந்தோஷமாக வாழ்வதைப் பற்றி யோசிப்போம். புதைக்கும் காரியங்களைப் பற்றி பிறகு யோசிப்போம். இந்தியாவில் ஒருவர் இறந்துவிட்டால், அவர் உடல் புதைக்கப்படவோ, எரிக்கப்படவோ அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். ஆனால், அரசு தவறினாலும் திருச்சபை தவறக்கூடாது.

Top

**96.** நாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். எங்கள் பிள்ளைகளுக்கு உயர்வகுப்பிலுள்ள வாழ்க்கைத்துணை கிடைக்குமா?

இந்துத்துவா கொள்கைப்படித்தான் நீங்கள் தாழ்த்தப்பட்டவராகி விட்டீர்கள். ஆனால், மனிதனைப் படைத்த கடவுளுக்கு முன் எல்லா மக்களும் ஒரே ஜாதிதான். அந்த அருட்பிரவாகத்துக்கு முன் கீழ்ஜாதி, மேல்ஜாதி என்ற பாகுபாடுகள் இல்லை. இந்து சனாதன கொள்கைப்படி பிரம்மாவுடைய தலையிலிருந்து தோன்றியவர்கள் பிராமணர்கள். தோள்பட்டையிலிருந்து தோன்றியவர்கள் சத்திரியர்கள்,அவருடைய தொடையிலிருந்து தோன்றியவர்கள் வைஷ்யர்கள் அவருடைய காலிலிருந்து தோன்றியவர்கள் சூத்திரர்கள் என்று மனுதர்மம் என்னும் இந்துமத புத்தகம் கூறுகிறது. ‘சதுர்வர்ணம் மயா சிருஷ்டம்’ என்று கண்ணன் கூறியதாக பகவத்கீதையில் எழுதப்பட்டுள்ளது. ஆக, கடவுளே ஜாதிக்கொள்கையை உருவாக்கினார் என்று இந்துமதம் பிரகடனப் படுத்துகிறது. நீங்கள் இயேசுவை உங்கள் தலைவராக கடவுளாக ஏற்றுக்கொள்ளுங்கள். அவரது

Top

இரத்தத்தின் மூலம் பாவ விமோசனம் பெற்ற சபைக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை, இதற்குள் மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற ஏற்றத்தாழ்வுகள் இல்லை ஆரியன், திராவிடன் என்ற வேறுபாடுகள் இல்லை இந்தியன், வெளிநாட்டுக்காரன் என்றோ பாகுபாடுகள் இல்லை. பரமேஸ்வரனுடைய பார்வையில் நாமெல்லோரும் மனிதர்களாக இருக்கிறோம். இயேசுவின் அன்பை, இரட்சிப்புத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு வாழ்பவர்களை ‘தேவனுடைய பிள்ளைகள்’ என்று வேதாகமம் வித்தியாசப்படுத்தி காட்டுகிறது. அவ்வளவுதான். எனவே, இனிமேல் உங்களை தாழ்த்தப்பட்ட வகுப்பு என்று கூறாதீர்கள். அந்த தாழ்வு மனப்பான்மையிலிருந்து முதலாவது வெளியே வாருங்கள். உங்களை நீங்களே தாழ்த்தப்பட்டவர் புறக்கணிக்கப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர் என்று சொல்லி உங்கள் பிள்ளைகளையும் அந்த சமுதாய சிறைச்சாலைக்குள் அடைத்துவிடாதீர்கள்.

நம்மைப் பார்த்து பிராமணன் என்று கூறுவதோ, தமிழன் என்று கூறுவதோ, இந்தியன் என்று கூறுவதோ நமக்குப் பெருமையாக

Top

இருக்கக் கூடாது. நாம் 'மனிதர்கள்', 'பகுத்தறிவு உள்ளவர்கள்' என்று கூறுவதில் பெருமை கொள்வோம்.

தாழ்த்தப்பட்டவனுடைய இரத்தம் கறுப்பு நிறமா? அல்லது பிராமணனுடைய இரத்தம் பொன் நிறமா? எல்லாருடைய இரத்தமும் சிகப்பு நிறம்தானே! இந்த உலகில் யாரானாலும் உன்னை தாழ்த்தப்பட்டவன் என்று கூறலாம். ஆனால், நீயே உன்னை கீழ்ஜாதி என்று ஏற்றுக்கொண்டால் பரமாத்மாவே உன்னைக் காப்பாற்ற முடியாது. உங்களது இந்த தலைமுறையோடு ஜாதி என்னும் சிறை வாழ்க்கையிலிருந்து நீங்கள் விடுபட வேண்டுமானால் சமுதாய பாகுபாட்டு கொள்கையாகிய இந்துமத ஏற்றத்தாழ்வு வாழ்க்கை கலாச்சாரத்தை விட்டு இயேசு கொடுக்கும் விடுதலை வாழ்வை அனுபவிக்க வாருங்கள். இயேசுவை ஏற்றுக் கொள்ளும் எந்த மனிதனுக்குள்ளும் ஜாதிப் பிரிவினைக் கொள்கை இருக்க முடியாது. அப்படியே ஒரு கிறிஸ்தவன் ஜாதி பார்த்தால், அவன் எவ்வளவு பெரிய கிறிஸ்தவ நிறுவனத்தின் தலைவராக இருந்தாலும் அவன் கிறிஸ்தவனே அல்ல. சர்வேஸ்வரனுக்கு முன் எல்லா மக்களும் ஒருதாய் பிள்ளைகள் தான். எனக்கு மிகவும்

Top

நெருக்கமான தேவஊழியர் அன்புச் சகோதரன் கோவிந்தராஜன் என்ற ஐயங்கார் பிராமணர், ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து இரண்டு குழந்தைகளையும் பெற்று நிம்மதியாக சென்னையில் வாழ்கிறார் முதலியார், செட்டியார், வன்னியர், வெள்ளாளர் என்று எல்லா இனத்தைச் சார்ந்தவர்களும் கிறிஸ்துவை அறிந்து, அவரது இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டு, சமநீதியாய் வாழும் கலையைக் கற்றுக்கொண்டு, எந்த ஜாதி என்றே பார்க்காமல் திருமணம் செய்கிறார்களே!

சென்னை K.K. நகரில் வசிக்கும் தேவஊழியர் மணி என்ற பிராமணர் இயேசுவை தன் வாழ்வின் தலைவராக ஏற்றுக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கும்போது, அவரது சகபிராமண பூசாரிகளும், உறவினர்களும் அவரை மண்ணெண்ணை ஊற்றி கொளுத்த வந்தார்கள். இந்த கொலைகாரர்களை உயர்ந்த ஜாதிமக்கள் என்று உலகம் நினைத்துக்கொண்டிருக்கிறது. ஒருவன் ஏற்றத்தாழ்வு கொள்கையை நிராகரித்ததற்காக அவனை கொலைகூட செய்ய

Top

துணிந்துவிட்ட கொடியவர்களை உயர்வகுப்பினர்கள் என்று எப்படி கூறுகிறீர்கள்? ‘ஜாதிகள் இல்லையடி பாப்பா’ என்னும் பாரதியின் கவிதை ஏட்டளவில்தான் இருக்கிறது. அது வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமானால் அந்த கொள்கையுடைய தெய்வத்தை கடவுளாகத் தொழவேண்டும். உயர்ஜாதி மக்கள் தலித் பெண்களை கற்பழித்து கெடுத்தால் அது பாவமல்ல என்று மனுதர்மம் என்னும் ‘அதர்ம’ புத்தகம் கூறுகிறது. ஏழை தலித் மக்களுடைய குடிசைகளை மேட்டுக் குடியிருப்பு மக்கள் தீக்கிரையாக்கினார்கள். இந்த கொடியவர்களை மகான்கள் என்று கூறுகிறீர்களா? தன்னை காட்டிக்கொடுத்த யூதாசை சிநேகிதனே என்று அழைத்த குழந்தை உள்ளம் கொண்டவர் இயேசு. மூன்றரை ஆண்டுகள் கூடவே வாழ்ந்த பேதுரு, உயிருக்குப் பயந்து இயேசுவைத் தெரியாது என்று மறுதலித்தாலும், அவனையும் நேசித்தார். இந்த அன்பு தெய்வத்தின் அன்புக் கொள்கைகளைப் பற்றி தமிழ்நாட்டுக்கு சொல்ல வந்தார் திருத்தூதர் தோமா. அந்த தோமாவை ஈட்டியால் குத்திக் கொன்றவர்கள்

Top

பிராமணர்கள்.இது உயர்ஜாதி மக்களின் பண்பாடு என்று கூறுகிறீர்களா?

எப்பாடுபட்டாவது பசுவை காப்பாற்ற முயற்சி செய்யும் பிராமணர்கள், கடவுளின் படைப்பில் பசுவைவிட கோடி மடங்கு உயர்ந்த மனிதனை கொலை செய்ய தயங்காமல் காரியத்தை முடித்து விடுகிறார்களே! இந்த மதவாதிகளுக்கு அடிமைவேலை செய்தது போதும். வெளியே வாருங்கள். ஒரு ஆணுக்கு ஒரு பெண். ஒரு அது எந்த ஜாதியாக இருந்தாலென்ன? ஒருமுறை பெரியார் பேசும்போது, மனிதனுக்கும் மிருகத்துக்கும் திருமணம் செய்து வைப்பதுதான் கலப்பு திருமணம் மனிதனுக்கும் மனிதனுக்கும் நடப்பது கலப்புத் திருமணமல்ல என்று கூறினார். ஆதாமுக்கு ஏற்றதுணையாக ஏவாளை கொடுத்த தெய்வம், உங்கள் பிள்ளைக்கும் ஏற்ற துணையைத் தருவார்.

Top

**97.** எங்களுடைய திருமணங்களை நீங்களே நடத்துவீர்களா?

திருச்சபையின் முக்கியமான கடமைகளில் ஒன்று அங்கத்தினரின் வீட்டு திருமணங்களை தேவ ஆசீர்வாதத்தோடு நடத்திவைப்பது ஆகும். அதைப்பற்றிய கவலைகளை விட்டுவிடுங்கள். திருச்சபையின் சக அங்கத்தினர்கள். அதற்கு எல்லா வகையிலும் உதவியாக இருப்பார்கள். கடவுள் உங்களை கைவிடமாட்டார். உங்களுக்கு ஏற்ற துணையைத் தேட சபைத் தலைவர்கள் உதவி செய்வார்கள். ஜாதிப்பெருமை, நிறப்பெருமை, படிப்புப்பெருமை, அந்தஸ்துப்பெருமை என்று வரிந்து கட்டிக்கொண்டிருக்கும் மக்கள் எங்கிருந்தாலும் சீக்கிரம் திருமணம் நடக்காது என்பதையும் குறிப்பிடுகிறேன்.

**98.** என் மகனுக்கும் மகளுக்கும் திருமணம் தடைபடுகிறது. இயேசு தடைகளை அகற்றுவாரா?

மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல (ஆதி.2:18) என்று கூறிய தெய்வம், உங்கள் பிள்ளைகள் ஏற்ற துணைகளைப்

Top

பெற்று கொள்ள உதவுவார். பயப்படவேண்டாம் ஆனால், உங்களிடம் ஆண்டவர் முக்கியமாக ஒரு விஷயத்தை கூற ஆசைப்படுகிறார். அனைத்துக்கும் மேலாக இயேசுவையும் அவருக்கு விருப்பமானவற்றையும் தேடுங்கள். அப்போது இந்த ஆசீர்வாதங்கள் தானாக உங்களை வந்தடையும் (மத்;.6:33). மனிதனால் முடியாதவைகள் கடவுளால் முடியும். ஆண்டவரை நம்புவோர் கைவிடப்படுவதில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு ஆண்டவர் கொடுக்கும் அருள்வாக்கைத் தருகிறேன்.

ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர். உம் இல்லத்தில் உம் துணைவியார் கனிதரும் திராட்சைக்கொடி போலிருப்பார். உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக்கன்றுகள் போல் உம்மை சூழ்ந்திருப்பர். ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் ஆடவர் இத்தகைய ஆசி பெற்றவராய் இருப்பர். நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளை காண்பீர் (தி.பா.128:1-6). நீங்கள் மனதுருகி ஜெபித்தால் மிகவிரைவில் அற்புதம் நடக்கும். நீங்கள் பலவருடங்களாக முயன்று நடக்காத அதிசயம் ஒரே மாதத்தில் நடக்கலாம்.

Top

இறைவனுடைய அருளாசி உங்கள் பிள்ளைகளுக்கு உண்டாகட்டும்.

**99.** எனக்கு மூன்று மனைவிகள். இவர்களிடம் நான் மிகவும் அன்பாக இருக்கிறேன். நாங்கள் நான்குபேரும் இயேசுவை ஏற்றுக்கொள்ள விரும்புகிறோம். என் குடும்ப வாழ்வு இப்படியே மூன்று பேரோடு தொடரலாமா?

ஆதித்திருச்சபையின் நாட்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை உடைய பல யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அந்த காலகட்டத்தில் அவர்கள் விவாகரத்து பண்ணவில்லை. இரட்சிக்கப்பட்ட பிறகும் அந்த மனைவிகளுடனேயே வாழ்ந்தார்கள். திருத்தூதர் பவுல் கொரிந்து சபைக்கு கடிதம் எழுதும்போது, ‘உங்களிடையே விபச்சாரம் உண்டெனக் கேள்விப்படுகிறேன். ஒருவன் தன் தந்தையின் மறுமனைவியை வைத்துக் கொண்டிருக்கிறான்| (1கொரி.5:1) என்று கண்டிக்கிறார். அவனுடைய தந்தைக்கு பல மனைவிகள்

Top

இருந்ததால்தான் அது சாத்தியமானது. தந்தைக்கு ஒரே மனைவி இருந்தால் தன் தந்தையின் மறுமனைவி| என்று எழுதாமல் தன் தாய்| என்று எழுதியிருப்பார், ‘தகப்பனுடைய முன்னாள் மனைவி’ என்று கூறாமல் மறுமனைவி என்று கூறினமையால், ஆரம்பசபையில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை உடைய கணவர்கள் இருந்தார்கள் என்று தெளிவாக அறிகிறோம். மகன் தந்தையின் மறுமனைவியை வைத்துக் கொண்டிருப்பதை கண்டித்த பவுல், அவனுடைய தந்தை மறுமனைவியை வைத்துக்கொண்டிருப்பதை தவறு என்று சுட்டிக்காட்ட வில்லையே! மணமான பெண் ஒருவர் கணவன் உயிரோடு இருக்கும் வரையில்தான் திருமண சட்டத்திற்கு கட்டுப்பட்டிருக்கிறார். கணவன் இறந்துவிட்டால் கணவனோடு வாழவேண்டும் என்கிற சட்டத்திலிருந்து விடுதலை பெறுகிறார். ஆகையால், கணவன் உயிரோடிருக்கும்போது, ஒரு பெண் வேறொருவரோடு வாழ்ந்தால், விபசாரி என்னும் பெயர் கிடைக்கும். ஆனால், கணவன் இறந்துபோனால், அவள் திருமண சட்டத்தினின்று விடுதலை பெற்றவராகிறார். ஆகவே, பின்பு அவர் வேறோருவருக்கு மனைவியானால் விபச்சாரியல்ல

Top

(உரோ.7:2,3). தன்னை மணந்த கணவன் உயிரோடிருக்கும்வரை, மனைவி கணவனை விட்டு விலகத் தேவையில்லை. அப்படி அவன் துரத்தினால், அவள் விபச்சாரியாவதற்கு அவனே பொறுப்பு. “எவரும் தம் மனைவியை விலக்கிவிடக்கூடாது. அப்படி செய்வோர் எவரும் அவரை விபச்சாரத்தில் ஈடுபடச் செய்கின்றனர்” (மத்.5:32).

“வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன்தன் சொந்த மனைவியையும், அவளவள் தன்தன் சொந்த கணவனையும் உடையவர்களாக இருக்க வேண்டும். கணவனுடைய உடலியல் தேவைகளை மனைவியும், மனைவியுடைய உடலியல் தேவைகளை கணவனும் நிறைவேற்ற வேண்டும். கணவனுக்கு ஒரு பெண் மனைவியாயிருப்பதுவரை கணவன் தன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமையை செய்யவேண்டும். மனைவிக்கு தம் உடலின்மேல் அதிகாரமில்லை. கணவனுக்கே அந்த அதிகாரமுண்டு. அப்படியே கணவனுக்கு தம் உடலின்மேல் அதிகாரமில்லை. மனைவிக்கே அந்த அதிகாரமுண்டு. மணவாழ்க்கைக்குரிய உரிமைகளை ஒருவருக்கு ஒருவர்

Top

மறுக்காதீர்கள். இருவரும் ஒத்துக்கொண்டால் இறைவேண்டலில் ஈடுபடுவதற்காக சிறிதுகாலம் பிரிந்து வாழலாம். ஆனால், உணர்ச்சி களை அடக்கமுடியாத நிலையில் சாத்தான் உங்களை சோதிக்காதபடி, பிரிந்த நீங்கள் மீண்டும் கூடிவாழுங்கள்" (1கொரி.7:1-5) என்று பவுல் அறிவுறுத்துகிறார். நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் முன்பே மூன்று மனைவிகளை திருமணம் செய்துவிட்டீர்கள். எனவே, மனைவி கணவனிடமிருந்து பிரிந்து வாழக்கூடாது. கணவனும் மனைவியை விலக்கிவிடக்கூடாது (1கொரி.7:10,11) என்ற ஆலோசனைக்கு கீழ்ப்படியுங்கள். கடவுள் விவாகரத்து கலாச்சாரத்தை வெறுக்கிறார் (மத்.19:8). கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்கக்கூடாது (மத்.19:6). ஆனால், உங்களுடைய மனைவிகள் உங்களது கிறிஸ்தவ விசுவாசத்தை மதிக்காமல், வெறுத்து உங்களை விட்டுவிட தீர்மானித்தால் அவர்கள் போகட்டும் (1கொரி.7:15). உம்மோடு வாழ விரும்பினால் வாழட்டும் (1கொரி.7:12). எனவே, இப்போதைய உங்கள் சூழ்நிலையில் உங்கள் மூன்று மனைவிகளையும் நீங்கள் கடைசி வரை மனைவிகளாக வைத்து கொள்வதுதான் நியாயம். ஆனால்,

Top

பணம் உள்ளவன் எத்தனை மனைவிகளையும் வைத்துக் கொள்ளலாம் என்பது சுத்தமான ஆன்மீகமல்ல. இந்தியாவில் ஏற்கனவே பெண்கள் பற்றாக்குறை என்று மக்கள்தொகை புள்ளியியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்நிலையில் காசில்லாத ஏழைகள் எப்படி திருமணம் செய்வார்கள்? சபையின் பொறுப்பான தலைவர்கள் ஒரே மனைவியை உடையவர்களாக வாழ எதிர்பார்க்கப்படுகிறார்கள். “சபை கண்காணிப்பாளராக இருப்பவர், குறைசொல்லுக்கு ஆளாகாதவராயும், ஒரு மனைவி கொண்டவராயும், அறிவுத்தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல் ஆகியவற்றை உடையவர்களாயும் இருக்கவேண்டும். திருத்தொண்டர்கள் ஒரு மனைவி கொண்டவர் களாயும், பிள்ளைகளையும் சொந்த குடும்பத்தையும் நல்ல முறையில் நடத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும் (1திமொ.3:2-12) என்று திருத்தூதர் பவுல் சபைத்தலைவர்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

ஒரு கணவன் ஒரு மனைவியோடு வாழ்வதே தலைசிறந்த இல்வாழ்க்கை என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆதாமுக்கு

Top

ஒரே மனைவியாக ஏவாளை மட்டும்தான் கடவுள் கொடுத்தார். அதனால், எல்லாருமே அந்த கொள்கையை கடைபிடிக்க வேண்டுமென்று ஆண்டவர் சபைத் தலைவர்களை முன்மாதிரியாக வாழக் கட்டளையிடுகிறார். 'நாமிருவர் நமக்கொருவர்' என்னும் தற்போதைய தமிழ்கொள்கைக்கு நான் ஆதரவாளன்தான். 'நாம் நால்வர் நமக்கு இருபத்து நால்வர்' என்பது குழப்பமல்லவா! ஆனாலும், நீங்கள் இயேசுவை அறிவதற்கு முன்பே திருமணம் செய்து விட்டீர்கள். சமாதானமாய் வாழும் குடும்பத்தை சட்டம் பேசி பிரித்துவிடுவது கிறிஸ்தவ உபதேசமல்ல. இயேசு பாவத்தை பயங்கரமாக கடிந்து கொண்டார் ஏனெனில், மக்கள்மீது அவ்வளவு அன்பு வைத்திருந்தார். இன்று கண்டிக்க ஆட்களுண்டு. அன்பு செய்ய ஆட்கள் இல்லையே! சட்டம்பேச போதகர்களுண்டு. இயேசு பாவிகளை ஏற்றுக்கொள்வதுபோல் ஏற்றுக்கொள்ள மனிதநேயர்கள் இல்லையே! ஒருவர் தன் மூன்று மனைவிகளோடு பல்லாண்டு சேர்ந்து வாழ்ந்தபின், அதில் இருவரை விவாகரத்து செய்துவிட்டாரென்று வைத்துக்கொள்வோம். அப்படி தள்ளிவிடப்பட்டவர்களில்

Top

ஒருத்தியை திருமணம் செய்ய, இதுவரை திருமணமே செய்யாத ஒரு கிறிஸ்தவர் முன்வருவாரா? மனம்திரும்பிய விபச்சாரியை தன் மகளாக இயேசு ஏற்றுக்கொண்டார். இன்று மனம் திரும்பிய முன்னாள் விபச்சாரியை மனைவியாக ஏற்றுக்கொள்ள எத்தனை கிறிஸ்தவர்களால் முடியும்? கடவுள் சபிக்காதவனை நான் எப்படி சபிக்க முடியும்? கர்த்தர் வெறுக்காதவனை நான் எப்படி வெறுக்க முடியும்? (எண்.23:8). கணவனுடைய சரீரத்தின்மேல் அதிகாரமுடைய உங்கள் மனைவிகள் உங்களைவிட்டு போகவேண்டிய தேவையில்லை. இறையரசின் பொருட்டு, முழுமனதோடு தங்களை இறையருளால் அண்ணகர்களாக்கிக் கொள்வது மேன்மையானது. ஆனால், கணவன் இயேசுவை பின்பற்றும் ஒரே காரணத்தால், மனைவி கட்டாயமாக பிரம்மச்சாரியாக்கப்படுவதோ சந்நியாசியாக்கப்படுவதோ இயேசுவின் கொள்கையல்ல. அது கடுமையான பழைய ஏற்பாட்டு மதச்சட்டங்களின் புதுவடிவம். ஆண்டவர் யாரையும் கட்டாயப்படுத்தாத அன்புக் கடவுள். கட்டாயப்படுத்தி நாம் எதையும் செய்யக்கூடாது. கடவுளுக்கு காணிக்கை கொடுப்பதுகூட மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ

Top

கொடுக்க வேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர் (2கொரி.9:7) என்று புனித பவுல் கூறுகிறார். இன்று சிலர் ஏதோ ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு அதன் உள்அர்த்தத்தை அறியாமல் மக்களைக் குழப்புகிறார்கள். வேதாகமத்தின் சாராம்சமே அன்புதானே. பலதாரமணத்தை தங்கள் மதச்சட்டதின் அடிப்படைத் தத்துவமாக வைத்திருக்கும் பல லட்சம் இஸ்லாமியர்கள் மனம் மாறும்போது அவர்களை இன்முகத்தோடு வரவேற்க வேண்டிய கிறிஸ்தவர்கள், அவர்களை வாசலிலேயே வைத்து துரத்தலாமா? காயமடைந்து வரும் புதியவர்களுக்கு மருந்தாய் இருக்க வேண்டிய திருச்சபை, அவர்களை இன்னும் அதிகம் காயப்படுத்தலாமா?

## **100.** இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் பாவி என்றும், உங்கள் சுயசக்தியால் பரமபதவி அடையமுடியாது என்றும் முதலாவது உணரவேண்டும்

Top

(உரோ.3:23). மனிதன் செய்த பாவத்திற்கு தண்டனையாக இயேசு 2000 ஆண்டுகளுக்கு முன் சிலுவையிலே அறையப்பட்டு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழுந்தாரென்று நம்பவேண்டும் (1திமொ.1:15). நீங்கள் இதுவரைச் செய்த எல்லா குற்றங்களையும் வாயினால் அறிக்கையிட்டு இனிச் செய்யாமலிருக்க தீர்மானிக்க வேண்டும் (1யோவா.1:7-9). இவற்றை நீங்கள் மனதார செய்தபின், இயேசு உங்கள் பாவத்தை மன்னித்து இரட்சித்தாரென்று நம்பவேண்டும். இவற்றை நீங்கள் செய்யமுடியுமானால், அன்புள்ள இயேசுவின் பாசமுள்ள முகத்தை கற்பனை செய்து இந்த பிரார்த்தனையை செய்யுங்கள்.

அன்புள்ள சர்வேஸ்வரா, உம் திருமகன் இயேசுவின் நாமத்தில் உம்மிடம் வருகிறேன். நான் சொல்லாலும், செயலாலும், சிந்தையாலும் செய்த எல்லா பாவங்களையும் உம் மகன் இயேசுவின் இரத்தத்தால் மன்னிக்க வேண்டுகிறேன். நீர் எனக்காக உம் மகனை இந்த உலகிற்கு அனுப்பினீர் என்றும், என்னை மீட்பதற்காக அவரை மரணத்திற்கு ஒப்படைத்தீர்

Top

என்றும், அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினீர் என்றும் முழுமனதோடு நம்புகிறேன். இனிமேல் நான் பாவம் செய்யாதிருக்க என்னை உம்மிடம் முழுவதும் ஒப்புடைக்கிறேன் என்று இயேசுவின் மூலம் உம்மை மன்றாடுகிறேன்;.

குறிப்பு: மேற்கண்ட 100 கேள்விகளில் ஏதாவது சந்தேகங்களோ வேறு கேள்விகளோ இருந்தால் எங்களுக்கு எழுதுங்கள். எங்களுக்கு அது பேருதவியாயிருக்கும்.

Top